12415

# தமிழ் மறை

கோவை—எம். நாகலிங்கம் பிள்ளை

நாகலிங்கம் வெளியீடு 1

# தமிழ் மறை

கோவை - எம். நாகலிங்கம் பிள்ளை

உரிமை ஆசிரியருக்கு.
முதற் பதிப்பு - 1956

விலை ரூ. 4 - 0 - 0

கிடைக்குமிடம் :
எம். நாகலிங்கம் பிள்ளை
15/9 பெருமாள் கோவில் வீதி
கோட்டை, கோயமுத்தூர்

நேஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை-18

# தமிழ்ப் பெருமக்களுக்கு வணக்கம்!

உலகம் புதுமையைக் காணும்போது உடனடியாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல: என்ன வென்று ஏறெடுத்துப் பாராமலும் நழுவப் பார்க்கிறது.

யான் இந்நூலின்கண் ஆயும் பொருள்கள் புதுமையான தல்ல: பழமையைத்தான் காணுதிருப்போர்க்குக் காட்ட முயற்சி யெடுத்துள்ளேன். அஃதும் அவர்கட்குப் புதுமை யாகத் தோன்றக் காரணம் யாதோ ?

யாமியற்றிய "தொல்காப்பிய விளக்கம்" "நன்னூல் தொல்காப்பிய விளக்கம்" "திருக்குறள் தொல்காப்பியச் சிறப்பு" "இலக்கணமும் இலக்கியமும்" ஆகிய நூல்களின் கையெழுத்துப் பிரதியைக் கண்ணுற்ற அறிஞர்கள் தத்தம் கருத்துரைகளை வழங்கியதுடன்; அனைத்தையும் ஒன்ருக்கி ஒரு நூலாக வெளியிடின் நன்ரும் என்றுரைத்தனர் (அவ் வாறே 'தமிழ் மறை, என்ற பெயரோடு ஒரு நூலாக்கப் பட்டிருக்கிறது.) அப் பேரறிஞர்களாம் தமிழ்ப் பெருமக்க ளுக்குத் தமிழ் அன்னையின் சார்பில் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்குப் பல்லாற்ருனும் பேருதவி புரிந்த நண்பர்களுக்கும்; சிறப்பாக இந்நூல் வெளிவருவ தற்குப் பெரும்பொருள் உதவிய சென்னை வேளாளத் தேனும்பேட்டை V. C, சுப்பிரமணிய முதலியார் அவர்கட்கும் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன். வணக்கம்.

அன்பன்

எம். நாகலிங்கம்

கோவை
15—3—56

# மதிப்புரைகள்

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**

**ஜெகத் குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.**

*.........பண்டைய தமிழ் நூல்களில் அனேகமாய் எல்லாவற்றிலும் ஒரே முறையாக மறைத்துச் சொல்லப்பட்டிருக்கும் மாந்தர்களுக்கு வேண்டிய ஒழுக்க தத்துவங்களை வெளியிட வேண்டுமென்ற அவா தங்களுக்கு இருப்பதாகத் தெரிகிறது.........சிவபிரான் கிருபையினால் தங்களுக்கு இம் முறையில் ஆர்வம் வளருமாறு ஸ்ரீ மகா சந்நிதானத்தில் அனுக்ரஹிக்கிறார்கள்.*

**பேராசிரியர், A. சிதம்பரநாதன் செட்டியார்** அவர்கள், M. A; Ph. D.

*தமிழ்த் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

*.........அமிழ்தம், பழம், கனி என்ற வடிவில் வழங்கப்படும் பல்வேறு சொற்கள் உருவகப் பொருளில் வழங்கப்படுதலே யன்றி, பிழம் புணர்த்தும் உண்மைப் பொருள்களே என இந் நூலாசிரியர் நம்புகின்றார்.........பல சொற்களைத் தமக்கே உரியவகையில் இயைபு படுத்திக் காட்டப் பெரு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*

**G. சுப்ரமணியம்** அவர்கள் M. A., B. L.,

*தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

*.........திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், கம்பராமாயணம், திவ்விய பிரபந்தங்கள் இன்னும் மற்றுமுள்ள தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து, இந் நூலை யாக்கி யுள்ளார்கள். அவர்களுடைய ஆர்வமும், அறிவின் திறமையும், கல்வியின் பரப்பும் நம்மை வியக்கச் செய்வன வாகும்.*

**S. S. பாரதி** அவர்கள் M. A., B. L., மதுரை.

*.........இலக்கணம் இலக்கியம் இரண்டிலும் தமிழில் தலைக்கணிற்கும் தொல்காப்பியம் திருக்குறள் இரண்டையும் ஆசறக் கற்று நுணுகி மாசறத் துருவி ஆராய்ந்து நுண்பொருள் கண்டு கிளக்கும் தங்கள் மதி நுட்பம் எம்மனோர் அளந்தறியும் தரமன்று. "மதி நுட்பம் நூலோ டுடையார்க்கு அதி நுட்பம் யாவுள முன்னிற்பவை".........*

**ஆசிரியர், புலவரேறு—அ. வரத நஞ்சையனர் அவர்கள்,**
*தோரமங்கலம், சேலம்.*

*.........இவ்வாசிரியர் இவ்வாறே இன்னும் பழந்தமிழ் நூற்களிலுள்ள நுட்பங்களைத் தமது நுண்மாண் நுழைபுலத் திட்பத்தால் எடுத்து விளக்கிப் பல நூல்களை இயற்றித் தமிழன்னையின் திருவடிக்கு அணி வித்து விழுப்புகழெய்திப் பல்லாண்டு வாழத் திருவருள் பாலிக்க வேண்டுமென அம்பலத்தாடும் அறன் கழல் முடியிறைஞ்சி வணங்கு வோம்.*

**சிவக்கவி மணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,**
*பெரியபுராண உரையாசிரியர், வழக்கறிஞர், கோவை.*

*.........இவை போன்ற நூல்கள் பலவற்றை இவர் இயற்றியுமுள்ளார். இவைகளைத் தமிழ் ஆசிரியர்களும் தமிழ் வல்லோர்களும் மனங் கொண்டு ஆராய்ந்து புலப்படுத்திப் பயிலச் செய்து பரப்புவார்களாக. இந் நூலாசிரியரும் எல்லா நலங்களும் பெற்று இனிது நீடுவாழ்வாராக.*

**அ. கி. பரந்தாமனர் அவர்கள் M. A.,**
*தமிழாசிரியர். தியாகராஜர் கல்லூரி, மதுரை.*

*.........திருமந்திரத்தையும் திருவாசகத்தையும் சமய இலக்கிய நூலாக வும், ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்தையும், பொன்னூலாக விளங்கும் நன்னூலையும் இலக்கண நூலாகவும் கொள்ளாமல் ஒன்றை யொன்று அடி யொற்றித் தழுவிச் சிறிதும் மாறுதலின்றி உயர்நிலை அடையும் வழிகாட்டும் நூல்களாகவே இயங்குகின்றன என்னும் உண்மையை முதல் இடை கடை இவற்றைக் குறிக்கும் சொற்களால் ஆராய்ந்து நுண் மாண் நுழை புலத்தால் எடுத்துக்காட்டி யுள்ளார்கள். அவர்கள் கொண்ட குறிக்கோளை விளக்கவே மிகப்பாடுபட்டு விளக் கிய் முள்ளார்கள். மரபு முறைக்கு மாறுபட்டுத் தோன்றினும் நூல் கள் அனைத்தும் ஒரு நோக்குடனே எழுதப்பட்டுள்ளன என்பதைப் பழுதறக் காட்டி யுள்ளது பாராட்டத் தக்கது. அவர்கள் முயற்சி வெல்க.*

**M. SP. சண்முகம் அவர்கள் M. A.,**
*'தமிழ் நாடு' துணைப் பத்திராதிபர், மதுரை.*

*.........அறிஞர் உலகம் இப் பெரியாரது நூலைத் துருவி ஆராய்ந்தால் தமிழ்க் கடலில் புதிய அமிழ்தத்தைக் கண்டு உலகை உய்விக்க வழி யிருக்கிறது என்பதை மட்டும் உய்த்துணருகிறேன்.*

**அ. கந்தசாமி பிள்ளை** அவர்கள்,

தமிழ்ப் பேராசிரியர், கோவை

.........தொல்காப்பியச் சூத்திரங்கள் ஒன்றுக்கொன்று கூறும் உண்மையும் அவை அமைந்த அமைப்பையும் இந் நூல் நன்கு விளக்கும். அங்கங்கு நான் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் ஏற்ற சமாதானமாக ஐயா அவர்கள் மேற்கோளாகக் காட்டும் சூத்திரங்களும் அவற்றின் உட்கிடை இவையெனத் தாம் காட்டும் முடிவுகளும் பெரும் வியப்பைத் தருவனவாக இருந்தன.

**துடிசைக்கிழார் அ. சிதம்பரனுர்** அவர்கள்,

தமிழர் பூர்வ சரித்திர ஆராய்ச்சி சபை அங்கத்தினர், கோவை.

.........தொல்காப்பியர், திருமூலர், நெடுமாறன் வள்ளுவனுர் ஆகிய மூவரும் தவம் கைவந்த ஞானிகளாவார். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் காலத்தில் இருந்தவர்கள். ஆனுலும் அவர்கள் கூறிய உண்மைகள் ஒருமாதிரி ஆனவைகளே, அவ்வுண்மைகளைக் கூற அவர்கள் எடுத்துக்கொண்ட சொற்களும் சொற்ருெடர்களும் ஒரு மாதிரி ஆனவைகளே. அவற்றுள் மாறுபாடு கிடையா. அவையெல்லாம் மரபு மொழிகள் என்று நண்பர் நாகலிங்கம் அவர்கள் மிக விரிவாக கற்ருேரும் மற்ருேரும் மிக எளிதாக உணரும் வண்ணம் தெளிவாக விளக்கியுள்ளார்.........

**ராவ்பகதூர் ம. இராமச்சந்திரன் செட்டியார்** அவர்கள் B. A., B. L.,

கோவை ஜில்லா கல்விச் சங்கத் தலைவர், வழக்கறிஞர், கோவை.

.........தமிழ் மொழியில் எந்த நூலிலும் வீண் சொற்கள் எடுத்தாளப் படுவதில்லை. நன்கு ஆராய்ந்தால் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருளுண்டு. அப் பொருள்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி ஆராய்ச்சி செய்தால், ஓர் நூலின் அடிப்படைப் பொருள் விளங்கும். அந்த முறையில் இந்த நூலாசிரியர் தன்னுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர். ஆகவே இவ்வாசிரியர் எடுத்து ஆண்டிருக்கும் முறை ஒரு புதியமுறையாகையால் தமிழ் மக்கள் இதனை நன்கு பாராட்டிப் பயன் பெறுவார்களாக.

**ம. ரா. போ. குருசாமி** அவர்கள், M. A.,

தமிழ் விரிவுரையாளர், பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி, கோவை.

.........தமிழர்கள் தத்துவச் செல்வம் உடையவர்கள் என்பதை அவர்களே உணர்ந்து கொள்ளாமல் இருக்கிருர்களே என்று சடைத்துக் கொள்வதைக் கேட்கும் போது, தமிழார்வமும் தமிழின் நலமும்

எந்த அளவுக்கு அவரிடம் தோய்ந்து கிடக்கின்றன என்பதை உணர்ந்தேன். இந்த முதிர்ந்த வயதிலும் நூல்களை நினைக்கும்போது இளமை ததும்பப் பேசும் அவரை நினைக்கும்போது, ஏதோ உண்மையான தத்துவக் காட்சியை இவர் கண்டிருக்கிறார் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.........

**புலவர், ப. சுப்பிரமணியம் அவர்கள்,**

*தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோவை.*

.........தமது கருத்துக் கிசைந்த உயர்ந்த முப்பொருள்களை உளத்துக் கொண்டு அவையிற்றைச் சான்றோர் தம் நூல்களினும் காண முயன்றுள்ள உயர்ந்த குறிக்கோளில் யாதேனும் பெறலரும் நுண்மையும் உண்மையும் இருத்தல் வேண்டும். அவை கால முறையில் தக்காங்கு விளக்கம் பெறுவனவாக.

**சுப. அண்ணாமலை அவர்கள், B. O. L. (Hons)**

*தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.*

.........இப் புது நூல் அறிஞருலகத்தின் சிந்தனைக்கு விடப்படுகிறது. அறிஞர்கள் இதன் மதிப்பறிந்து போற்றுவர் என்பது எனது நம்பிக்கை. இந்நூலாசிரியர் நாளும் நலமும் புகழும் பெற்று நீடு வாழத் திருவருள் பாலிக்குமாறு இறைவனைச் சிந்திக்கின்றேன்.

**வித்துவான் ந. இராமநாதன் அவர்கள்.**

*கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.*

.........நூல் முழுதும் வெளிவந்து இதனைப் பலவகையான தமிழ் மக்களும் வாங்கிப் பயில்வார்களானால், இதன் பால் விளக்கப்படும் அரிய கருத்துக்களை உணர்வார் சிலராகலாம், பின்னர்ப் பலராகலாம். இவ்வாறு இந் நூலின் கருத்துக்கள் பரவி நந்தமிழ் நாட்டிடை நல்ல பயனை விளைக்குமென நம்புகின்றேன்.

# உள்ளுறையின் விளக்கம்

1. 'வகுத்துக் காட்டல்' என்பது முதலிடையிறுதி, முன்னிடை பின்னென முப்பொருள்களாய் வகுத்துக் காட்டுவது.

2. 'உற்பவ முணர்த்தல்' என்பது இம் மூன்றும் தமக்குள் தாம் உண்டாக்குவதை எடுத்துக் காட்டுவது.

3. 'எழுத்திலக்க மியம்பல்' என்பது இம் மூன்றுக்கும் எழுத்தாகவும் இலக்கமாகவும் நாமங்கள் உண்டெனக் காட்டுதல்.

4. 'உயிர் மெய்யுணர்த்தல்' என்பது முதலிறுதி எனும் இவற்றிற்கே உயிரெனவும் மெய்யெனவும் நாமங்கள் உண்டெனக் காட்டுதல்.

5. 'சொற் பொருள் விளக்கல்' என்பது இம் முதலிடையிறுதிக்கே சொல்—எழுத்து—பொருள் எனும் நாமங்கள் உண்டென உணர்த்தல்.

6. 'மயங்குதல்' என்பது முதலிடை யிறுதி எனும் இவற்றுள் இடையாயுள்ளது மயங்குந் தன்மை உடையதெனக் காட்டுதல்.

7. 'உலாவுதல்' என்பது முதலும் இறுதியும் திரியாது நிற்கும். இவற்றின் இடை உலாவித் திரியும் எனக் காட்டுவது.

8. 'கருதுதல்' என்பது எதை எதிற் சேர்ப்பது, எதை எதில் சேர்க்கக்கூடாது என்பதை இது இதை உரியதாய்க் கொள்ளும், இது இதை உரியதா யேற்காது என விளக்குதல்.

9. 'அறிந்தணுகல்' என்பது இம் மூன்றுள் எது எதை அறியவும் அணுகவும் முடியும், எது எதை அறியவும் அணுகவும் முடியாது எனக் காட்டுவது.

10. 'திருமந்திரச் செய்தி' தொல்காப்பியம் கூறும் இம் முப்பொருள்களையே திருமந்திரம் விளக்குவதை எடுத்துக் காட்டல்.

11. 'மாறுபட்ட நாமங்கள்' இம் முதலிறுதிக்கே முடி—அடி, புறம்—அகம், முன்னிலை—தன்மை, காமம்—கற்பு, இறப்பு—பிறப்பு எனும் நாமங்கள் உண்டென விளக்குதல்.

12. 'திருவாசகச் செய்தி' தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறும் இம் முப்பொருள்களையே திருவாசகம் உணர்த்துவதை எடுத்துக் காட்டுதல்.

13. 'தெய்வம் எது ?' என்பது திருமந்திரமும் தொல்காப்பியமும் இதுதான் தெய்வமெனச் சுட்டிக் காட்டுவது.

14. 'தில்லை எது' தொல்காப்பியம் திருமந்திரம் திருவாசகம் முதலியவை இதுதான் தில்லையென விளக்குவது.

15. 'இலக்கிய இலக்கணம்' இதுவே இலக்கிய மெனவும் இதுவே இலக்கண மெனவும் விளக்குதல்.

16. 'மணி மந்திர மருந்து' இம் மூன்றின் நாமங்களே மருந்து—மந்திரம்—மணி எனக் காட்டல்.

17. 'ஆழ்வார்களின் கருத்து' இம் மூன்றையே ஆழ்வார்களும் விளக்குவதைக் காட்டல்.

18. 'தமிழ் விபரம்' தமிழ் என்பது இதுவே எனக் காட்டுதல்.

19. 'தவம் எது' தவம் என்பது எதுவென விளக்குதல்.

20. 'திருக்குறள் கருத்து' இம் மூன்றையே திருக்குறளும் விளக்குவதைக் காட்டுதல்.

21. 'பிறப்பறுத்தல்' இம் மூன்றையும் உண்டால்தான் பிறப்பைத் தவிர்க்கலாம் என்பதைக் காட்டல்.

22. 'ஆதி நூல்' தொல்காப்பியம் திருமந்திரம் முதலியவைகளுக்கு ஆதி நூலை எடுத்துக் காட்டுதல்.

# நூற் பெயர் விளக்கம்.

கள் காமம் கொலை பொய் முதலியவற்றைக் கனவிலும் கருதாது, சத்தியம் தயை பொறுமை முதலியவற்றைக் கைக்கொண்டு வாழ்க்கையை நடத்தி நற்கதியை அடைதற்கான மார்க்கத்தையும் நூல்கள் உணர்த்துகின்றன என்பது யாவரும் அறிந்ததே. உலக வாழ்க்கையை ஒழுக்கத்தோடு நடத்தி மனத் தூய்மை பெற நூல்கள் கூறுவதை உரைமுறைகள் வெகு விரிவாய் விளக்குகின்றன. மனத்தூய்மை அடைந்தோர் நற்கதி பெற நூல்கள் உணர்த்தும் விதி விலக்குகளான மற்றோர் கருத்தைச் சிறிது கவனிப்போம்.

1. பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சித்து
   நல்லுணர்வு பெற்ற நலம்

—ஔவை குறள்.

'பல காலம் அரனை வழிபடுவதால் கிட்டும் பயன் நல்லுணர்வைப் பெறுவதே' எனல். இக்குறள் இவ்வாறு உணர்த்துவதால் 'அரனை அன்புடன் அர்ச்சிப்பதால் அடையும் பயன் முத்தியே' என நாம் கற்றும் கேட்டு மிருப்பவை பொய்யா? எனக் கேட்கலாம். இப்போது அவை பொய்யெனத் தோன்றினும் அவற்றை உண்மையென் றெண்ணி அவற்றிற் கேற்ப நடந்ததால் ஏற்படுவ தன்றோ நல்லுணர்வு அதாவது மனத் தூய்மை. நன்மை பயக்கும் பொய்யை மெய்யென் றேற்பது குற்றமாகாது. அடுத்தடுத்துள்ள நிலைகளுக்கு உயர்த்த நம் முன்னோர் கையாண்ட தந்திர மிது. ஆகையால், அரனை வழிபடுவதால் முத்தி கிட்டுமெனக் கூறும் நூல்கள் அவ்வாறு அரனைத் தொழுவதால் வாய்ப்பது மனத் தூய்மையே என்று உணர்த்துவது இதற்கு அடுத்த படிக்கு உயர்த்தவே. இதை ஏற்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

2. நினைப்பு மறப்பற்று நிராகரித்து நின்றால்
   தனக்கொன்று மில்லை பிறப்பு

—ஔவை குறள்.

மனத் தூய்மை வாய்க்க அரனை வழிபடு எனக் கூறும் குறளே இதில் அத்தூய மனத்தையும் நினைத்தல் மறத்தல் எனும் காரியத்தில் ஈடுபடாது செய்ய வேண்டுமென எச்சரிப்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ?

இதையும் முடிவெனக் கருதுதற் கிடமில்லை. எவ்வாறெனில், நினைத்தல் மறத்தலைத் தவிர்க்க உடலபிமானம் இடந்தராது. சிற்சில பழக்கத்தின் காரணமாக அலைவற்றிருப்பதாகத் தோன்றினும் அடுத்து உடலையும் அவ்வுடலுக்கானதையும் சிந்திக்க நேருமன்றோ? ஆகையால், நினைப்பும் மறப்புமற உடலபிமானத்தைப் போக்குவதே சாலச் சிறந்தது. அதைப் போக்க பசி, தாகம், நோய், மரணம் முதலியவற்றை வெல்லுவதைவிட வேறு வழியில்லை என்பதைக் கண்ட நம் முன்னோர், இவற்றை வென்றிட ஒரே தொடர்புள்ள முப்பொருள்களை ஆராய்ந்தறிந்து அனுபவித்து நமக்கும் நூல்களில் உணர்த்துகின்றனர். இவற்றை உண்டு உடலபிமானம் அற்றால் உலகத் தோற்றமும் தானே போம். இவ்விரண்டுமற்ற நிலையை அடைந்தோர் உருவத்தில் நம் போன்றவரெனினும் தன்மையில் மனிதத் தன்மையைக் கடந்தவரன்றோ? இத்தன்மை உடையோரே கடவுளின் தன்மையை அறிதற் குரியவர். இதற்கு உவமானமொன்று காட்டுகிறேன்.

நல்ல தூக்கத்தில் தோன்றுவது அருவம்; இதை அருவமாயிருந்தறிகிறோம். விழித்திருக்கும்போது தோன்றுவது உருவம்; இதை உருவமாயிருந்து அறிகிறோம். கனவில் தோன்றுவதோ உருவமென்றும் அருவமென்றும் கூறமுடியாத உருவாருவம்; இதை உருவாருவமாயிருந்தறிகிறோம். உருவத்தை அருவமாயிருந்தோ அருவத்தை உருவமாயிருந்தோ அறிய முடியாது என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இவற்றால் உருவத்தைக் காண உருவமாகவும் அருவத்தைக் காண அருவமாகவும் உருவாருவத்தைக் காண உருவாருவமாகவும் மாறவேண்டுமென்பதறிக. இதுபோல் கடவுளின் தன்மையைக் காண மனிதத் தன்மை கடந்த இந்நிலையே உகந்ததாம். அசுத்த சகல கேவல மற்ற சுத்த சகல கேவலத்திலும் காண்பான், காட்சி, காட்சிப் பொருள் எனும் மூன்றும் அற்றதும் உற்றதுமாயுள்ள நிலையிது. இந்நிலையை அவசியம் அடையவேண்டுமென்பதற்கும் இதற்கடுத்த நிலையையும் அந்நிலையின் அனுபவத்தையும் கூறவோ கேட்கவோ இடமில்லை என்பதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன்.

3. ஞானகா ரத்தினொடு ஞேயமற்ற
ஞாதுருவு நழுவாம னழுவிநிற்கு
மானலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்
அதுவான லதுவாவார் அதுவே சொல்லும்

—தாயுமானவர்.

பரிசுத்த உள்ளத்தின் நிலையும் அந்நிலையின் அநுபவமும் ஒரு வாறு தெரிந்ததா ? ஆமெனில், உலக நாட்டமுடையோர் எதில் மிகுந்த ஆசை கொண்டுள்ளாரோ அதுவே மரணத் தருவாயில் தோன்றி, அதை அநுபவித்தற்கான உடலைத் தருமென்பது பற்றி ' அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப் பிறப் பீனும் வித்து' எனத் திருக்குறள் எச்சரிக்கின்றதல்லவா ? உடல் நாட்டமும் உலகத் தோற்றமும் அற்ற மேற்காணும் பரிசுத்த உளத்தோர் உயிர் விடும்போது நினைப்பதற்கு ஏதேனுமுண்டா ? எதையும் நினையாத இவர்கட்கு இனிப் பிறப்புண்டா ? என்பது பற்றிச் சிந்தித்துத் தெளிக. இது மாத்திரமல்ல, இந்நிலையை அடைந்தவரே நிட்காம கருமத்தில் வெற்றி பெற்றவராம். 'ஆசை யினால் ஏவப்பட்டு பலனில் ஆசையுடைய காமிய கருமி பந்தத்தில் கட்டுப்படுகிறான், கருமத்தில் பலாபேட்சை விட்டுள்ள நிட்காம கருமி ஆத்தும நிட்டையினா லுண்டாகிற மோட்சத்தை அடை கிறான் ' என்றும் பகவத்கிதையின் கருத்திற்கு இசைந்தது இந்நிலை யன்றோ ? இந்நிலையையே கீதை இவ்வாறு எடுத்துக் காட்டுவதா யேற்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

4. பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பைபூண்டு
உண்டிராக் கிடக்கும்போது உடலுக்கே கரைந்து நைந்து
தண்டுழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி
தொண்டுபூண் டமுதமுண்ணாத் தொழும்பர்சோ றுகக்குமாறே.

—தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை.

'பெண்களிடத்தே சுகமுண்டென் றெண்ணி வயிற்றிற்குண்டு இரவெல்லாம் துன்பத்தில் ஆழ்ந்து உடல்நைந் துழலும் தொழும் பர் தண்டுழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி அமுதத்தை உண்டாரில்லை ' என்பதறிக. இவ்வமுதம் எது? இதை உண்பதால் பயனென்ன? என்பதைச் சிறிது கவனிப்போம்.

5. ஆன கலசத் தமிர்தை அறிந் துண்ணில்
போனகம் வேண்டாமற் போம்

—ஔவை குறள்.

மேற் காண்பதில் ஆழ்வார் கூறும் அமுதத்தையே இதிற் காட்டி, 'அமிர்தை அறிந்து உண்டால் ஆகாரம் தேவையில்லை (அதாவது) பசி அற்றுப்போம்' எனல். இன்னும் இதைச் சிறிது கவனிப்போம்.

நான் கூறி வந்த முப்பொருள்களை ஆதி—இடை—அந்தம் என வகுத்துக் காட்டி, இவற்றிற்கு ஏராள நாமங்களைச் சூட்டி, இப் பெயர்களைக் கொண்டு இவற்றின் செய்திகளை நூல்கள் விளக்கு கின்றன அவ்விபரத்தை இதே நூலில் காணலாம். இதே நூல் 290-II-ல் தொல்காப்பியமும் 342-ல் திருக்குறளும் இடையென் றுணர்த்தும் 'அமுதம்' 'என்பதையே ஒளவையாரும் ஆழ்வாரும் உணர்த்தும் விபரம் காண்க.

இந்நான்கு நூல்களும் கூறும் அமுதம் என்பதையே திருவாசகம் சென்னிப்பத்தில் 'காயத்துள் ளமுதூறவூற நீ கண்டுகொள் ளென்று காட்டிய' எனவும், திருமந்திரம் 2778-வது பாடலில் 'ஒளிக்குள் ளானந்தத் தமுதூறு முள்ளத்தே' எனவும் விளக்குவ தறிக. இவ்வாறு நான் எடுத்துக் காட்டுவது கண்டு திகைப்பும் வியப்பும் உண்டாகலாம். இவற்றின் நாமமாயுள்ள நூற்றுக் கணக்கான சொற்களை ஒன்றையொன்று தழுவி நூல்கள் உணர்த்தி யிருப்பதை அடுத்து இந்த நூலில் காணும் போது இவ்வியப்பும் திகைப்பும் தானே நழுவிவிடும் என்பது திண்ணம்.

கீதை கூறும் பலாபேட்சை விட்ட நிட்காம கருமியின் நிலையை இம் முப்பொருள்களை உண்டே அடையவேண்டும் என்பது ஏற்கத் தக்க தெனினும், கீதைக்கு இசைந்ததே ஆழ்வார் கூறுவதென வடமொழியாளரும், ஆழ்வார் பாடலுக்கு இசைந்ததே கீதையின் கருத் தெனத் தமிழாளரும் ஏற்கச் சிலர் திகைக்கலாம். இவர்களைத் தெளிவிக்க சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுகிறேன். கீதை கூறும் நிலைக்கு இன்றியமையாததென்று ஆழ்வார் கூறும் இம் முப் பொருள்களை வடமொழி நூல்கள் சிறிதும் மாறுதலின்றி விளக்கு வதைக் கண்டால் இவ்விரு பிரிவினரும் 'மொழி வேறுபாடன்றி பொருள் மாறுபடவில்லை, என்பதை முழுமனதோடு ஏற்கலா மன்றோ ? இவர்கள் ஏற்பதோடு கீதையின் கட்டளைப்படி நடந்து பயன்பெற்ற முத்தரே ஆழ்வாரெனவும் இவர் கூறும் முப்பொருள் களை உண்டே ஆகவேண்டு மென்பதைக் கீதை ஏற்றுக்கொண்ட தாகவும் தீர்மானிக்கலாமல்லவா? ஆகையால், அதற்கு இரண்டோர் ஆதாரம் காட்டுகிறேன்.

6\. அறிவின் கண்ணே அருட்சத்தியொடு சிவத்தை
எவர் அறிகிறரோ அவர்க்கே நித்தியமாகிய பேரின்பம்

—கடவல்லியுபநிஷத், மோ. சா. வி. 22

இதே நூலில் 28-ல் முதலே **அகாரம்** இறுதியே **உகாரம்** 57-ல் இடையே **மகாரம்** என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவ தோடு முதலை குறிப்பு 21-ல் **இறைவன்** எனவும் 290-IV-ல் இறுதியை **அயன்** எனவும் உணர்த்துகின்றன. இவற்றையே (மோ. சா. வி. 208-ல்) யோக சூடாமணி உபநிஷத் எடுத்துக் காட்டி 'அகாரம் உகாரம் மகாரங்களெனும் மூன்றும் பிர்மா விஷ்ணு ருத்திரர், பிரம்மா அகாரத்திலும் விஷ்ணு உகாரத்திலும் ருத்திரர் மகாரத்திலும் ஒடுங்குகிறார்கள்' எனக் கூறுகிறது. தொல்காப் பியமும் யோக சூடாமணி உபநிஷத்தும் கூறும் அகாரமெனும் சிவத்தையே 6-ல் கடவல்லி யுபநிஷத் உணர்த்துவது கண்டு அதற் கேற்ப அவ்வுபநிஷத்தின் கருத்தை ஏற்கவேண்டும்.

நிற்க, குறிப்பு 21-ல் முதலே **இறைவன்**, இடையை 193-ல் **அருள்** 231-I-ல் **தாய்**, இறுதியை குறிப்பு 17-ல் **அறிவு** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி தாயைச் சத்தியென உணர்த்தி, 'அந்தமாகிய அறிவுடன் தொடர்பாயுள்ள இடையாகிய அருட் சத்தியையும் ஆதியாகிய சிவத்தையும் அறிபவரே பேரின்பம் அடை வார்' என 6-ல் காணும் உபநிஷத் உணர்த்துவதா யேற்க. இவற்றை ஆதி இடை அந்தமென ஏற்பதெப்படி எனக் கேட்க லாம், அதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன்.

(மோ. சா. வி. 19-ல்) பிரமகிதை முண்டகோபநிஷத் 'அர்க் கன் மதியங்கி மழையாதி மறைநாலு' எனக் கூறுகிறது. இந்த நூலில் 159-ல் ஆதியிடை அந்தமே **ஞாயிறு—திங்கள்—அங்கி** எனத் திருமந்திரம் கூறுவதையே இவ்வுபநிஷத் அருக்கன்—மதி—அங்கி என்பதறிக. நிற்க, ஆதியை 22-ல் **மழை** இடையை 213-ல் **மறை** குறிப்பு 3-ல் **நாலு** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதிற் காட்டி, 'மழை எனும் ஆதியே அருக்கன், இடையாகிய மறை யெனும் நாலே மதி, அந்தமே அங்கி' என இவ்வுபநிஷத் உணர்த் துவதறிக. இதில் மழையே ஆதி என்பதற்கிசைய 6-ல் காணும் உபநிஷத் அறிவே அந்தமென உணர்த்துவதா யேற்க.

இவையெல்லா மிருக்கட்டும், 6-ல் காணும் உபநிஷத் 'சிவன்—அருட்சத்தி—அறிவு எனும் மூன்றையும் அறிந்தவரே பேரின்பம் அடைவார்' என உணர்த்துவது தமிழ் நூல்கள் கூறும் முப்பொருள் களையே என்பது தெரிகிறதல்லவா? இன்னுமிதில் சந்தேகமிருந் தால் அதைக் களைய மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

7. எப்பொருள்களுந் தானாகி யிலங்கிடு மறிவா மீசன்
அப்படி விளங்குகின்ற தறிதலே அவன்றனக்கு
—பிரமகீதை, மோ. சா. வி. 271.

தொல்காப்பியத்திற்கிசைய 6-ல் காணும் உபநிஷத் முதலே **சிவன்** இறுதியே **அறிவு** எனக் கூறுவதையே இதில் உணர்த்துவதறிக. இதிற் காணும் ஈசனைச் சிவனென்றேற்பதற்கு ஆதாரமாவது, திருமந்திரம் 2660-ம் பாடலில் 'சிவனவன் ஈசனென்றுண்மையை யோரார்' (அதாவது) சிவனே அவனெனும் ஈசன் என்று உணர்த்துவதால் 6-ல் சிவன் என உபநிஷத் கூறுவதையே இதில் அவனெனும் ஈசனெனக் காட்டுவதா யேற்க.

சிவனெனும் ஆதியே 'அவன்' அந்தமே 'அறிவு' என இதில் கூறுவதையே காட்டி, தொல்காப்பியம் கற்பியல 6-ல் 'அவனறிவாற்ற அறியுமாகலின்' ஆதியாகிய அவனால் ஆற்றப் பட்ட அந்தமாகிய அறிவு அறியும் என உணர்த்துகிறது. இதையே பிரமகீதை 'ஆதியாகிய ஈசனிடத்தினின்று விளங்கி அறிதல் தன்மையோடு இயங்கிடும் அந்தமே அறிவு' என்பதறிக. அறிவெனும் அந்தத்திற்கே **பொருள்** எனவும் நாமமுண்டெனத் தொல்காப்பியம் இதே நூல் 44-ல் கூறுவதால் அதற்கிசைய இதில் அறிவெனும் அந்தமே பொருளெனவும் உணர்த்தும் விபரம் காண்க.

6-ன் விளக்கத்தில் யோக சூடாமணி உபநிஷத் அந்தமாகிய உகாரமெனும் பிரமா ஆதியாகிய சிவமெனும் அகாரத்தில் ஒடுங்கும் எனக் கூறுகிற தல்லவா? இவ்விபரத்தைச் சிறிது கவனிப்போம். இம் முப்பொருள்களை உண்பதற்கான பக்குவப்படுத்த இவற்றுள் 'எதை எதில் சேர்க்க வேண்டும்' என்பதைத் தமிழ் நூல்கள் 'இதற்கு இது உரியது' என உணர்த்துகின்றன. இவ்வாறு உணர்த்தும் நூல்கள் **உரியது** என்று கூறுமல் 'இது இதற்கே' எனவும் புகட்டுகின்றன. இதையே யோக சூடாமணி உபநிஷத் 'இது இதில் ஒடுங்கும்' என்று உணர்த்துவதா யேற்க. இதற்கு இசைய (அந்தத்திற்கு நாடு எனும் நாமம் உண்டென்பது பற்றியும், ஆதிக்கு உரியது அந்தமே என்பதுபற்றியும்) தொல்காப்பியம் புறத் திணையியல் 5-ல் 'நாடு அவர்க்கு' எனக் கூறுகிறது. இது போலவே மேற்காணும் பிரமகீதை 'அந்தமெனும் அறிவே அறிதல், அவ்விதலே ஆதியாகிய அவன்றனக்கு' என விளக்கும் விபரமறிக. பிரமகீதையும் தொல்காப்பியமும் இம் முப்பொருள்களின் நாமங்களையும் இவற்றின் செய்திகளையும் ஒன்றையொன்று

தழுவி விளக்குவது கண்டு தெளிக. இவ்விரு நூல்களும் கூறுவதில் இவற்றின் பெயர்கள் செய்திகளையும் செய்திகள் பெயர்களையும் நிச்சயிக்கும் நேர்மை கண்டோர் மொழி வேறுபாடுபற்றி வாதிடுவார்களா? இப்போதாவது கீதையும் ஆழ்வாரும் கூறுவதை ஒன்றையொன்று தழுவியதாகவும் ஒன்றுக்கொன்று உகந்ததாகவும் ஏற்கலாமன்றோ?

இம் முப்பொருள்களுக்கு நமது அனுபவத்திலுள்ள பொருள்களின் பெயர்களையே நாமங்களாகச் சூட்டி, 'மனத்தூய்மை அடைந்தோர் மாத்திரம் இவற்றை எளிதில் அறியவும், மற்றோர் அவரவர் கொள்கைக் கிசைய வெவ்வேறாய்க் கருதி மனத்தூய்மைக்கான பாடுபடவும்' ஓர் வகை சூதாகவேதான் நம் முன்னோர் நூல்களை இயற்றியிருக்கின்றனர். இதற்கு ஆதாரம் ஒன்றும் காட்டுகிறேன்.

8. சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே

—அருட்பா, சுத்தசிவநிலை.

பிரபல நூல்கள் இப்படி சூதாகவே அமைந்திருப்பினும் இவற்றை ஊடுருவி ஆராய்ந்து தெளிந்த உரையாசிரியர்கள், **தூய மனம் அடைதற்கும் தூய மனத்தோர் நினைப்பு மறப்பற்ற நிலையைப் பெறுதற்கும்** கூறும் இரு கருத்துக்களையும் அறிந்தவர்களே. ஆனால், ஓர் கருத்தை விளக்கும்போது அதற்கு மாறுபட்ட மற்றோர் கருத்தைக் கலந்து மக்களை மயக்கத்திற்குள்ளாக்க மனமின்றி விட்டிருக்கலாமென்பது என் அபிப்பிராயம். இக்காரணம் பற்றியோ வேறு எதனாலோ இம் முப்பொருள்களின் விளக்கத்தையும் உரையாசிரியர்கள் தாம் விளக்கும் **மனத் தூய்மைக்கான கருத்திற் கிசையவே** புகட்டுகின்றனர். இவ் விளக்கங்களைக் கண்டோர் நூல்களின் கருத்துக்கள் வெவ்வேறாய் இருப்பதாய்க் கருதி, அவரவர் கொள்கைக் கிசைந்ததைப் புகழவும் மற்றதை இகழவும் நேர்ந்தது. அது மாத்திரமல்ல, மாறுபட்ட கருத்துக்களுடைய தமிழ் நூல்களே நம்மையும் நம் நாட்டையும் சீர்குலைப்பதாய்த் தீர்மானித்து அவற்றை ஒன்றன்பின் னொன்றாய் ஒழிக்கவும் முயலுகின்றனர்.

இம்முயற்சியி லீடுபடுவோரும் நூல்களின் உயர்—தாழ்வு பற்றி வாதிடுவோரும் கவனிக்க வேண்டிய ஓர் முக்கியச் செய்தியை இங்கு எடுத்துக் காட்டுகிறேன். தூய மனத்தோருக்கு இன்றியமை

யாத முப்பொருள்களை ஒன்றையொன்று தழுவி சிறிதும் மாறுத லின்றி விளக்கும் தொல்காப்பியம் முதல் இராமலிங்க சுவாமிகள் அருட்பா வரையுள்ள பிரபல நூல்கள் அனைத்துமே, பல்வேறு இயல்புடைய மக்களைப் படிப்படியாக அறநெறியில் புகுத்தி அவரவர் மனதையும் தூய்மைப் படுத்தற்கெனவே பல மார்க்கங் களையும் உணர்த்தும் விபரம் கண்டு உளமகிழ்வோடு தத்தம் கொள்கைகளை மாற்ற முயலுவது நலம்.

மாசுற்ற மனத்தோருக்கும் மாசற்ற மனத்தினருக்கும் அவசிய மான விதிவிலக்குகளான இரு கருத்துக்களையும் ஒன்றில் அமைத் துக் காட்டும் நம் முன்னோர் அற்புதச் செயலை எடுத்துக் காட்டி, (அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பின்னாய்த் தோன்றி யிருப்பினும் ஒருவரை யொருவர் கலந்தே தத்தம் நூல்களை அவ ரவரும் இயற்றியிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கும் விதத்தில் எல்லா நூல்களும் ஒன்றுபட்ட தன்மையில் அமைந்திருப்பது) இவர்களைத் தெய்வ அருள் பெற்றவர்கள்தானென ஏற்க ஆதாரமா யிருப்பதையும் உணர்த்தி, அவரவர் கையாளும் நூல்களை அதது வும் வேதமே எனத் தெளிவுபடுத்துவதுமாக இந்த நூல் அமைந் திருப்பதுபற்றி இதற்குத் 'தமிழ்மறை' எனும் நாமம் சூட்டப்பட் டுள்ள விபரமறிக.

# முன்னுரை

வேதத்தின் மீதுள்ள அன்பும் பயபக்தியும் அதை இயற்றியவர் பாலுள்ள நம்பிக்கையுமே அந்தந்த மதத்தினரையும் தீண்டா மைக்கு இடமின்றி தெய்வச் சிந்தனையோடு உலக வாழ்க்கைக் கின்றியமையாத ஒற்றுமையாய் வாழும்படி செய்வது யாவரும் அறிந்ததே. இது சொல்லளவும் யுக்தியளவுமில்லை, அனுபவத்தில் காண்பது. அப்படியிருக்க, இந்து மதத்தினருக்கு இம்மூன்று தன்மைகளும் வாய்க்க வேண்டுமானால் வேதம் எது? அதை இயற் றியவர் யார்? என்பதை எடுத்துக் காட்டுவதைவிட வேறுவழி யுண்டோ? இதற்கு முயலாமல் எத்தனை பேர் கூடி எவ்வளவு காலம் எத்தகைய பாடுபடினும் எள்ளளவும் பயன்தராமல் மென் மேலும் சச்சரவே மிகும் என்பதைத் தமிழ்நாட்டுத் தற்கால நிலையே எடுத்துக் காட்டுகிறதன்றோ?

இந்து மதம்' என்பது பொருந்தாத சொல்லெனக் கருது வோரும் உண்டு. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, குசராத்தி, வடமொழி முதலிய வழங்கும் நம் கூட்டத்திற் குக் காரணமிருந்தோ காரணமில்லாமலோ நெடுங்காலமாக வழங் கப்பட்டு வரும் இச் சொல்லைப் பற்றி இது சமயம் வாதிட்டுக் காலங் கடத்தப் பிரியமில்லாமல் 'இந்து மதம்' என்றே கூறினேன்.

பிரபல தமிழ் நூல்கள் பக்தி, ஞானம், யோகம், நீதி, இலக் கணம் முதலியவற்றைத் தனித்தனியே புகட்டுவதாக நாம் அனு பவத்தில் காண்கின்றோம். இவை அனைத்தும் நமது அனுபவத்தி லுள்ள இக்கருத்தை உணர்த்துவதோடு ஒப்புயர்வற்ற உயர் நிலை யைப் பெறுவதற்கான ஓர் சிறந்த மார்க்கத்தையும் நமக்கு உணர்த்து கின்றன. இது பெரிதல்ல, இக்கருத்தை நூல்கள் அனைத்துமே ஒன்றையொன்று தழுவி சிறிதும் மாறுதலின்றி விளக்குகின்றன. இதற்கும் நமது அனுபவத்திலுள்ள உரைமுறைகளின் கருத் திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

பசி, தாகம், நோய் முதலியவற்றை வென்று, தான் விரும்பும் காலம் வரை உடல் நிலைத்திருக்கும் வழியைத் தெரிந்து, அவ்வா றிருக்கும் நிலையில் தெய்வத்தால் ஆகும் காரியங்களென நாம்

கருதும் பல அரியவற்றை நமது நன்மைக்காக ஏற்ற சமயங்களில் செய்து முடிக்க வல்லமை பெற்ருேர் 'அப்போது அவர்களுக்கு வாய்த்துள்ள தெய்வ அருளுக்கு ஏற்ற நூதன அறிவிற்கு எட்டும் உயர்நிலையைப்' பெற்றிருக்கின்றனர். இவ்வாறுள்ள இக்கருத்தையும் நமது அனுபவத்திலுள்ள மற்ருேர் கருத்தையும் ஒன்றிலேயே அமைத்துக் காட்ட முடியுமா? எனச் சந்தேகிக்க வேண்டாம். இது என் அபிப்பிராயமல்ல, பல நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் ஓர் நூலில் காணும் ஒரு பாடலை இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

தினமுமண் ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே
  தீம்பண்ட மெதிர் காட்டி
கனமருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற
  கருணையாந் தாய் போல
மனையறங்கள் செய் மகங்கள்செய் நன்றென்று
  மலர்ந்த வாசகங்கள் சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க்க காமிகளிந்த
  நிர்ணயந் தெரியாரே.

—கைவல்லிய நவநீதம்.

ஆகாததை அறியாமையா லுண்டு நோயுற்ற மகன் துயரைத் தவிர்க்கக் கருதும் தாய், தன் ஓர் கையிலுள்ள மருந்தை ஒளித்து வைத்துக்கொண்டு மற்ற கரத்திலுள்ள தின்பண்டங்களைக் காட்டி அழைப்பதுபோல் 'அறம், தவம், யாகாதி கிருத்தியங்களைச் செய்; அடுத்து நன்மை கிட்டும்' எனத் தெரிவிக்கும் நூல்களின் கருத்து வேறொன்றுண்டு எனக் கூறுகிறது. இதற்கிசையவே நூல்களில் நமது அனுபவத்தில் உள்ளதற்கு வேருக மற்ருேர் கருத்தும் அமைந்திருக்கிறது, அதுவே நான் எடுத்துக் காட்டுவது.

ஓர் கையில் உள்ள மருந்தை ஊட்டுவது உண்மை. மற்ருேர் கரத்திலுள்ள தின்பண்டத்தைக் காட்டியது பொய்யே. இது பொய்யெனினும் மருந்தைக் கொடுத்து மகன் துன்பத்தைப் போக்க அவனை அருகில் வரச் செய்ததன்ருே? இதுபோலவே நூல்களில் காணும் உரை முறைகளின் கருத்து பொய்யும் மெய்யும் கலந்திருப்பதோடு ஒரு காலத்தில் கொள்ளத் தக்கதாகவும் மற்ெருரு காலத்தில் தள்ளத் தக்கதாகவும் தோன்றலாம். நான் எடுத்துக் காட்டும் கருத்தோ எவ்வித சந்தேக விபரித சச்சரவுக்கும் இடமில்லாமல் அமைந்திருப்பதோடு எவரும் எக்காலத்திலும் மறுக்க முடியாதபடி எல்லா நூல்களும் ஒன்றையொன்று தழுவி உணர்த்துகின்றன.

இவ்விரு கருத்துக்களில் நான் எடுத்துக் காட்டுவது உயர் நிலையைப் பெறும் மார்க்கத்தைப் புகட்டுவது. மற்ற நமது அனுபவத்திலுள்ளதோ அவ்வுயர் நிலையைப் பெறுதற்கான நிராசை வாய்த்தற்கு இன்றியமையாத ஒழுக்கத்தை உணர்த்துவது. ஆகையால் இவ்விரு கருத்துக்களும் அவசியமே, எதையும் குறைகூற முடியாது. இவ்விரு கருத்துக்களையும் ஒன்றிலேயே அமைத்துக் காட்டும் வல்லமை நம் நாட்டு முக்தர்களுக்கே உண்டு என்பதையும், பிறர் கண்டு பிரமிக்கத்தக்க விதத்தில் நமக்கும் நமது நாட்டிற்கும் தனிப்பெருமையைத் தரத்தக்கது இதைவிட வேறில்லை என்பதையும் எடுத்துக் காட்டி, இவர்கள் உருவத்தில் நம்போன்றவரெனினும் தன்மையில் தெய்வ அருளைப் பெற்றவர்களெனத் தெளிவாய்த் தெரிவதால் இவர்களை நமது மதாசிரியரென்றும் இவர்கள் இயற்றிய நூல்களே நம் வேதமென்றும் விளக்குவதே இந்த நூலின் முக்கிய நோக்கம். இத்தகைய வேதத்திற்குரிய தமிழன் வீரமுரசு முழங்குவதை விட்டு இதுதான் வேதமென்றறியாது தலை கவிழ்ந்து கிடப்பது எவ்வளவு பரிதாபத்திற்கான நிலை என்பதை எண்ணிப் பார்க்கும் காலம் எப்போது அடுக்குமோ.

நான் எடுத்துக் காட்டிய உயர்நிலையைப் பெறுதற்கு இன்றியமையாதவை முப்பொருள்களெனக் கூறி, அவற்றை முதல்-இடை—இறுதி (ஆதி-இடை-அந்தம்) என வகுத்து, அவற்றிற்குச் சொல்லாகவும் எழுத்தாகவும் இலக்கமாகவும் உள்ள ஏராள நாமங்களை உணர்த்தி, அப்பெயர்களைக் கொண்டு இவற்றின் தன்மை உற்பத்திக் கிரமம் முதலியவற்றையும் இவற்றால் விளையும் பயனையும் எல்லா நூல்களும் மாறுதலின்றி உணர்த்துகின்றன. இம் முப்பொருள்களுக்குப் பல நாமங்களைச் சூட்டியிருப்பது பெரிதல்ல, இவற்றிற்கு இல்லாத தன்மைகளை அதாவது இவற்றுள் 'இது நில்லாமல் திரியும் இது திரியாது நிற்கும்' 'இது இதை அறியவும் அணுகவும் முடியும் இது இதை அறியவும் அணுகவும் முடியாது' 'இது மயங்கும் இது மயங்காது' எனவும் நூல்கள் கூறுகின்றன. இதுவும் பெரிதல்ல, இவை ஒன்றை யொன்று உண்டாக்குவதை 'செய்தது, ஆக்கியது' என்று கூறவேண்டிய இடங்களில் இவற்றிற்குப் பதிலாக 'ஓதும், உரைக்கும்' எனவும், ஒன்றையொன்று அறியும் என்று கூறவேண்டிய இடங்களில் 'பயிலும், கற்கும்' எனவும், இவற்றை உண்பதற்குகந்த பக்குவப்படுத்தும்போது இதை இதில் சேர்க்கவேண்டும் என்பதை 'இது இதையே கொள்ளும், இது இதைக் கொள்ளாது' என மாற்றிக்

கூறுவது பெரும் ஏமாற்றமே. இது ஏமாற்றமென இப்போது தோன்றினும் இவ்வாறு உணர்த்துவது நமது நன்மைக்கே என்பது இந்த நூலின் முடிவில் தோன்றும்.

இப்படி இரு கருத்துக்களை ஒன்றில் அமைத்துக் காட்டி மக்களை மயக்கத்திற்குள்ளாக்கும் இவர்களைக் காருண்யமுடையோ ரெனக் கருதலாமா எனக் கேட்கலாம். இம் முப்பொருள்களைக் கொண்டே பசி, தாகம், நோய் முதலியவற்றை வென்று 'வானில் பறத்தல், மண்ணில் நுழைதல், மாண்டாரை எழுப்புதல், மற்றோர் உடலில் புகுதல்' முதலிய அரும்பெருஞ் செயல்களைப் புரிதற்கான சக்தியையும் நம் முன்னோர் அடைந்ததாக நான் எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். சுமார் அறுபது எழுபது வயதில் இறக்கும் நிலையில் உள்ள சில அக்கிரமிகள் செய்யும் கொடுமையைச் சகிக்க முடியாமல் இப் பாவிக்குச் சாவு வராதா? என்றெதிர் பார்த்துக் கண்ணீர் உதிர்க்கும் பலரை இப்போதும் காணலாம். இவன் கெடுத்த பெண்களுக்கும் இவன் சூறையிட்ட பொருள் களுக்கும் இவன் கொளுத்திய வீடுகளுக்கும் அளவில்லையே என் றேங்கித் தவிக்கும் மக்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும். இத்தகைய கொடியருக்கும் தெரியும் விதத்தில் நம் முன்னோர்கள் இவ் வரும்பெரும் பொருள்களை வெளியிட்டிருந்தால் நமது நாட்டின் நிலை என்னவாகும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவும். இத் தகையோர் படிப்படியாக ஒழுக்கமடைய ஓர் கருத்தையும், ஒழுக் கத்தால் உத்தமனான ஒருவன் உடனே பற்றிப் பிடித்துக் கரையேற மற்றோர் கருத்தையும் ஒன்றிலேயே அமைத்துக் காட்டுவது குற்ற மாகுமா?

பிரபல நூல்களின் தன்மை இவ்வாறு இருப்பதாய் நான் கண்டது எப்படி எனக் கேட்கலாம். அதைச் சிறிது தெரிவிக் கிறேன். 'தினமு மண்ணுகர்' எனும் கைவல்லியப் பாடலைக் கண்டது முதல் உரைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு ஒன்றை யொன்று குறைகூறும் விதத்தையும் சிந்தித்து எந்த நூலை எடுத் தாலும் மூலத்தை மாத்திரம் வாசித்து அதில் தெரிந்ததைக் கொண்டு திருப்தியடைவது என் பழக்கம். இம்முறையில் அருட்பா வில் காணும் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்' என்ற பாடலைப் பார்த்தபோது வேறெதுவுமாய் மாற்றவோ ஏற்கவோ இடமின்றி 'வகை யறியேன்' என்று கூறக் கண்டேன். இவ் வகை என்பது என்ன? இதை அறியேனென்று இவர் ஏங்கக் காரணம் என்ன? என்பது பற்றிச் சிந்தித்து நூல்களை ஆராய்ந்ததில் திரு

மந்திரம் 2603-ம் பாடலில் ' வழிதலை செய்யும் வகையுணர்ந்தேனே ' என்று கூறுவது கண்டு, திருமூலர் அறிந்தேன் எனக் கூறும் வகையையே ராமலிங்க சுவாமிகள் இன்னும் அறியாதிருக்கிறேனே எனப் புலம்புவதா யெண்ணி ஓர் விதச் சமாதானம் அடைந்தே னெனினும் இவர்கள் இவ்வளவு பாடுபட்டு இவ் வகையை ஆராய்ந்து அறியக் காரணம் என்ன ? என்பதைத் தெரிய மற்ற நூல்களை ஆராய்ந்தேன். அவ்வாறு ஆராய்ந்ததில் ஔவை குறள் ' மறவாமல் காணும் வகை உணர்வார்க்கு இறவாதிருக்கலுமாம் ' எனக் கூறக் கண்டு இறப்பைத் தவிர்ப்பது இதுவாயிருப்பது பற்றியே இவ் வகையை அறிந்தேன் எனத் திருமூலரும், இவ் வகையை அறியேனே என ராமலிங்க சுவாமிகளும் கூறுவதறிந்து சிறிது தெளிவு ஏற்பட்டது. இத்தகைய பெருமை வாய்ந்த வகையைத் தேடி இவர்கள் அலையும்போது வள்ளுவர் இதை விட்டு நீதியைப் புகட்டக் காரணம் என்னவெனச் சிந்தித்துத் திருக்குறளைக் கவனித்தேன். அவை யறிதல் 3-ல் ' அவையறியார் சொல்லன் மேற்கொள்பவர் சொல்லின் வகை யறியார் வல்லதூஉ மில்' எனும் பாவில் அவை என்பதையும் அவை எனும் சொல் லின் வகையையும் உலகோர் அறியார் எனக் கூறுவது கண்டு சிறிது உற்சாகத்தோடு அடுத்தடுத்து ஆராய்ந்ததில் தெரிந்து வினை யாடல் 4-ல் ' எணை வகையாற்றேறிய கண் ' எனவும் கூறக் கண்டேன். இவ்விரண்டிலும் 'சொல்லின் வகை 'யெனவும், ' அவ்வகையாற் றேறியதே கண் ' எனவும் தொடர்பைக் காட்டு வதோடு இவ் வகை என்பதை உலகோர் அறியாரே என்று ஏங்கு வது கண்டு அம்மூவரும் கூறும் வகையே இதுவெனத் தீர்மானித்து உளம் மகிழ்ந்தேன். இவ்வாறு நான் எடுத்துக்காட்டுவது பற்றிச் சிலருக்கு நகைப்பும் வியப்பும் ஏற்படலாம். அவற்றைச் சிறிது அடக்கிக்கொண்டு குடிமை 3-ல் ' வகையென்னும் வாய்மை ' எனக் கூறி ' வகையே வாய்மை வாய்மையே வகை ' எனவும், வாய்மை 5-ல் 'மனத்தொடு வாய்மை' எனக் கூறி முதலாகிய மனத்தி னுடைய இடையே வாய்மை எனவும் திருக்குறள் உணர்த்தும் விவரம் கண்டு தெளிக. இப்பாக்கள் ஒவ்வொன்றையும் இதே நூலில் விளக்கியிருக்கிறேன்.

இறப்பைத் தவிர்க்கும் இவ் ' வகை ' என்பதை இவர்கள் நால் வரும் கூறும்போது இவர்களுக்கு முன் தோன்றிய தொல்காப்பியர் இதைக் கூறுதிருப்பரோ ? எனச் சந்தேகத்துடனேயே தொல்காப் பியத்தைக் கவனித்தேன். புறத் திணையியல் 24-ல் ' பொய்தலை பெய் தலும் நல்வகையுடைய ' எனக் கூறுவது கண்டு இவ்வகையையும்

தலையையுமே காட்டி திருமந்திரம் 'தலையே வகையைச் செய்யும்' என விளக்குவது கண்டு பெரு மகிழ்வுற்றேன். இது மாத்திர மல்ல, திருக்குறள் வகையை எடுத்துக் காட்டி அவ்வகையே வாய்மை என உணர்த்துவதுபோல் இதில் வகையை 'நல் வகையி னுடைய தலை' என்று எடுத்துக் காட்டும் தொல்காப்பியம் செய்யு ளியல் 234-ல் 'அவ்வகைதானே அழகு எனப்படுமே?' எனக்கூறி 'வகையே அழகு அழகே வகை' எனவும் உணர்த்துவதைக் கண்டேன்.

நல்-தலை என்பவற்றோடு தொடர்புடையதெனக் காட்ட நல் வகையினுடைய தலையென உணர்த்திக்கொண்டு, அத்தகைய வகையே அழகு எனப்படும் என்று தொல்காப்பியமும், வகை என்பது வாய்மை எனத் திருக்குறளும் விளக்கும் விவரம் கண்டபோதே 'அழகு வாய்மை எனும் நாமங்களையுடையதே வகை' எனத் தெரிகிறதன்றோ? ஆமெனில் வகையின் நாமமே அழ கெனும் வாய்மை என்பதை அழகெனும் வாய்மையின் நாமமே வகை என்றேற்க இடமுண்டாம். இவ்வகை வாய்மை அழகு எனும் இவை நாமங்களாயின் இப்பெயர்களுக்கு உரிய பொருள் ஏதேனும் ஒன்று இருக்க வேண்டுமன்றோ? அதுவே இறப்பைத் தவிர்க்கும் பொருளாம். இதுவரை ஆராய்ந்தறிந்த அழகு வகை வாய்மை என்பவை நாம் வழங்கும் சொற்களாயினும் இவை நமது அனுப வத்திலுள்ள எதையும் சுட்டாமல் இறப்பைத் தவிர்க்கும் பொருளையே சுட்டுவதாகத் தெரிகிறதன்றோ?

'வகை' எனும் சொல் காணும் பா, பாட்டல், சூத்திரங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாய் எடுத்துக்காட்டி ஏதேதோ நான் பிதற்றுவதாக வெகு எளிதாய் எண்ணுவோருமுண்டு. 'வகை' எனும் இவ்வொரு சொல்லைக்கொண்டு தொல்காப்பியத்தில் உள்ள எல்லாச் சூத்திரத்தையும் விளக்கலாம். அது மாத்திரமல்ல, இச் சொல்லைக்கொண்டே திருக்குறளில் காணும் பாக்கள் அனைத்தை யும் திருமந்திரத்திலுள்ள எல்லாப் பாடல்களையும் விளக்கலாம். என் அறிவாராய்ச்சியால் நான் இதைக் கண்டதாக நினைத்து அக மமதையுடன் கூறுவதாக எண்ண வேண்டாம். நூல்கள் கூறும் தொடர்பை விடாமல் பின்பற்றியே சென்றால் எவரும் எளிதில் நான் எடுத்துக் காட்டும் கருத்தை அறியும் விதத்தில் நூல்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

'தலையே வகையைச் செய்யும்' எனத் திருமந்திரமும், இத் தலை—வகை என்பவற்றையே 'நல் வகையினுடைய தலை' எனத்

தொல்காப்பியமும் உணர்த்துகிறதன்றோ ? இத் தலை—வகை—நல் என்பவற்றுள் வகையின் நாமங்களே 'அழ்கு' எனத் தொல்காப்பியமும் 'வாய்மை' எனத் திருக்குறளும் உணர்த்தக் கண்டோம். இதுபோலவே தலை—நல் எனும் இவ்விரண்டிற்கும் பல நாமங்கள் உண்டு. ஆக இம் மூன்றுக்கும் எழுத்தாகவும் சொல்லாகவும் இலக்கமாகவும் ஆயிரக்கணக்கான நாமங்கள் இருப்பதாய்த் தெரிகிறது. அவ்வாறு அமைந்துள்ள ஓர் எழுத்திலக்கத்தையோ ஒரு சொல்லையோ எவரும் மாற்றவோ மறுக்கவோ இடமில்லாமல் அந்தந்த நூலே தக்க ஆதாரங்களுடன் விளக்குகிறது. அதில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் மற்ற நூல்கள் ஒன்றையொன்று தழுவி ஐயத்தை அகற்றி அதுதானென நிச்சயிக்கும் நேர்மையை இந்த நூலில் காணலாம்.

நிற்க, 'நல்வகையினுடைய தலை' எனச் சூத்திரம் கூறும்போது நல், வகை என்பவற்றின் தொடர்பில்லாத எதையும் தலையென்றோ, தலை என்பதின் தொடர்பில்லாத எதையும் நல்லென்றோ வகையென்றோ ஏற்க இடமுண்டா ? தொல்காப்பியம் வெகு முக்கியமெனக் கருதி உணர்த்தும் தொடர்பை அவமதித்துத் தள்ளிவிட்டு இடங்காலத்திற்கேற்கச் சூத்திரங்களுக்குக் கூறும் உரைகளை எல்லோருமே ஏற்றாலும் தொல்காப்பியம் ஏற்குமா ? ஏற்காது என்பதற்கு மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

கற்பியல் 22–ல் 'காமத்தின் சிறப்பே' எனவும், செய்யுளியல் 34–ல் 'அடியின் சிறப்பே' எனவும், களவியல் 23-ல் 'சிறப்பின் தோழி' எனவும், களவியல் 30-ல் 'தோழியின் முடி' எனவும், புறத்திணையியல் 1-ல் 'சிறப்பின் சான்றோர்' எனவும் தொடர்பைக் காட்டித் தொல்காப்பியம் உணர்த்துவதைக் கவனித்தீர்களா? சூத்திரங்களினின்று சிதைத் தெடுத்து இவ்வாறு காட்டுவதை ஏற்பதெப்படி என நினைக்கலாம். இவை காணும் அந்தந்த முழுச் சூத்திரமும் இதே நூலில் அடுத்து விளக்கப்படும். அது மாத்திரமல்ல, இங்கெடுத்துக் காட்டும் கருத்து முழுச் சூத்திரங்களை விளக்கும் அங்கும் சிறிதும் மாறாது. நிற்க, இவற்றில் காணும் 'சிறப்பு' என்பதை நமது அநுபவத்தி லுள்ளதாய்க் கருத இடமுண்டா? இலக்கண வரம்பைப் புகட்டும் தொல்காப்பியம் தோழியின் முடியையும் காமத்தின் சிறப்பையும் விரித்துரைப்பதெதற்கு? இவை போகட்டும், தொல்காப்பியர் 'சிறப்பின்தோழி', 'சிறப்பின் சான்றோர்' எனக் கூறுவதை என்னென்றேற்பது? இதெல்லாம் இருக்கட்டும், உவமையியல் 10–ல் 'பெருமையும்

சிறுமையும் சிறப்பின் ' எனத் தொல்காப்பியம் கூறுவதாவது நமது அனுபவத்திற்கு இசைந்திருக்கிறதா ? தொல்காப்பியம் இவ்வளவு பாடுபட்டு விளக்கும் ' சிறப்பு ' என்பது நமது அனுபவத்திலுள்ள தல்ல என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ ? தொல்காப்பியம் உணர்த்தும் தொடர்பை விடாமல் இவ்வைந்தையும் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்த்தால் ' சிறப்பின் முடியடி ஆகிய காமமும் தோழியுமே சிறுமையும் பெருமையும் ' எனத் தீர்மானிக்க இடமிருப்பதறிக. நிற்க, ' சிறப்பே ஐயம் ' எனவும் ' மயக்குற்ற ஐயம் ' எனவும் கூறுகிறது.

இவ்வாறு உணர்த்தும் தொல்காப்பியம் உரியியல் 43-ல் ' பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள ' எனக் கூறுகிறது. மேற் காண்பதில் சிறப்பின் சிறுமை எனக் கூறுவதையே இதில் நோயின் சிறுமை என உணர்த்தி, பெருமை என்பதே பொருள் என விளக்குவதறிக. தொல்காப்பியம் வெகு பாடுபட்டு விளக்கும் இக் காமம்—நோய்—தோழி என்பவற்றை நமக்கு உணர்த்தத் தோன்றிய திருக்குறளின் கதியை என்னென்பது.

காமம் மிஞ்சி கலவிச் சுகத்தைக் கருதித் தவிக்கும் தலைவி தன் காதலன் வராததுபற்றி தோழியிடம் புலம்பும் பரிதாப நிலையையும், காம வெறிகொண்டு நோயுற்ற ஒருவனுக்கு அவன் கருதும் பெண்ணைச் சேர்த்து வைப்பதைவிட மருந்தில்லை என்னும் சிறந்த மார்க்கத்தையும் இன்னும் இதுபோன்ற பலவற்றையும் திருக்குறள் வெகு அழகாக விரித்துக் கூறுவதாகத் தீர்மானித்திருப்பது எவ்வளவு உண்மை என்று இந்த நூல் மூலம் தெரிந்து வள்ளுவர் மீது சுமத்தப்பட்டுள்ள வீண் பழியை அகற்ற வழி தேடுவதே திருக்குறளைப் பெருமைப் படுத்துவதாகும். இப் பெருங்குறை பல அறிஞருளத்தில் படிந்து கிடக்கிறது.

தொல்காப்பியம் கூறுவதைத் திருக்குறள் விளக்குவது இருக்கட்டும். சிறப்பெனும் சொல்லைக் காட்டி ' காமத்தின் சிறப்பு ', ' சிறப்பின் சிறுமை ', ' நோயின் சிறுமை ' என்றெல்லாம் உணர்த்துவது நமது அனுபவத்தில் கொள்பவை அல்ல எனத் தெரிகிறதே அல்லாமல் தொல்காப்பியம் இச் சொற்களால் எவற்றைச் சுட்டிக் காட்டுகிறது எனத் தெரியவில்லையே. அதைத் தெரிந்தாலன்றோ திருக்குறள் அதையே விளக்குவதாய் நிச்சயிக்கலாமெனில், தொல்காப்பியத்தின் கருத்தை இன்னும் சிறிது கவனிப்போம்.

' முன்—என்—கிளவி ', ' மழை—என்—கிளவி ', ' பொன்—என்—கிளவி ', ' வழி—என்—கிளவி ', ' குறை—என்—கிளவி ', ' ஐந்து—என்—கிளவி ', ' முழுது—என்—கிளவி ', ' முன்—அத்து—கிளவி ', ' அவன்—வயின்—கிளவி ', ' பால்—வரை—கிளவி ' எனவும் இன்னும் இதுபோல் பலவும் தொல்காப்பியம் கூறுகிறது. எனினும் இப் பத்தை மாத்திரம் கவனிப்போம்.

இவற்றை இடங் காலத்திற்கிசைய வெவ்வேறாய்க் கொள்வது உரை முறைகளுக்கு இயைந்திருக்கலாம். இவற்றை முதல்—இடை—இறுதி என வகுத்து, ' முதலுக்கே முன், மழை, பொன், வழி, குறை, ஐந்து, முழுது, அவன், பால் எனவும்—இடைக்கே என், வயின், வரை, அத்து எனவும்—இறுதிக்கே கிளவி எனவும் நாமங்கள் உண்டெனச் சூத்திரங்கள் உணர்த்துகின்றன என்பதே நான் கண்ட கருத்து. இதை ஏற்கச் சில ஆதாரங்கள் காட்டுகிறேன்.

I. பொன்னென் கிளவி ஈறுகெடல் முறையின்

—தொ. புள். மயங். 61

| | | |
|---|---|---|
| பொன் | என் | கிளவி |
| கெடல் | முறை | ஈறு |

முறையின் ஈறு என்றபோதே முறையின் முதலுமுண்டு எனத் தெரிகிறதன்றோ? ஆகையால், " இடையாகிய என்னெனும் முறையின் முதலே பொன்னெனும் கெடல் ஈறே கிளவி " என்று உணர்த்துவதா யேற்க. இச்சூத்திரத்தை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் காட்டுகிறேன்.

II. ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆம்அந் நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர்

—நன்னூல் பெயரியல். 26

| | | |
|---|---|---|
| ஆண்மை | முறை | பெண்மை |
| ஆண் | கள் | பெண் |
| ஒருமை | நான் | பன்மை |
| அ | மை | ந் |

மேற்காணும் முறை என்பதை இதிற்காட்டி, " முதலிறுதியாகிய ஆண்மை—பெண்மை எனும் ஒருமை—பன்மையின் இடையாகிய முறைப் பெயரே நான், கள் எனும் சொற்களும் மை எனும் எழுத்துமாம். முதலுக்கு அ இறுதிக்கு ந் எனும் எழுத்துக்கள் நாமங்களா யுண்டு " எனல்.

மேற் காண்பதில் 'முறையின் முதலே கெடல் ஈறே கிளவி' என்றுதான் தொல்காப்பியம் உணர்த்துகிறது என்றேற்க ஆதாரம் முதலிறுதியாகிய ஒருமை—பன்மையின் இடையே முறை என இதில் கூறுவதே போதுமன்றோ? அதில் 'முறையின் முதலீறு' என்றும், இதில் 'ஒருமை—பன்மையின் முறை' என்றும் தொடர் பைக் காட்டுவது எதற்கு?

முறை என்பதின் தொடர்பில்லாத எதையும் பொன்—கிளவி, ஒருமை—பன்மை, ஆண்மை—பெண்மை என்றோ, இவற்றின் தொடர்பில்லாத எதையும் முறை என்றோ ஏற்கலாகாது என்பதை எச்சரிப்பதற்கே 'முறையின் முதலீறு, ஒருமைப் பன்மையின் முறை' எனத் தொடர்பைக் காட்டும் விபரமறிக.

இவ்வாறு எச்சரிப்பது உண்மைதான் என்பதற்கும் இவ்வாறு எச்சரித்தும் விழித்தெழாவிடில் அடுத்தடுத்துள்ள சூத்திரங்களின் கருத்தைக் காண முடியாது என்பதற்கும் ஓர் ஆதாரம் காட்டு கிறேன்.

III. பன்மையும் ஒருமையும் பாலறிவந்தம்

—தொ. பெயரியல். 12

| | |
|---|---|
| ஒருமை | பன்மை |
| | அறிவு |
| பால் | அந்தம் |

II-ல் முதலே ஒருமை இறுதியே பன்மை என நன்னூல் கூறு வதை இதிற்காட்டி, "ஒருமை எனும் முதலே பால், பன்மை எனும் இறுதியே அறிவு எனும் அந்தம்" என உணர்த்தும் விபரம் காண்க.

I—ல் தொல்காப்பியம் இடையெனக் கூறும் 'முறை' என் பதையே II—ல் நன்னூல் முறை என்பது ஒருமைப் பன்மையின் இடையென நிச்சயிப்பதையும், அவ்வொருமைப் பன்மையையே இச் சூத்திரத்தில் காட்டி ஒருமையே பால் பன்மையே அறிவெனும் அந்தம் எனத் தீர்மானிப்பதையும் சிந்தித்துப் பார்க்க. இச் சூத்திரக் கருத்தை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

IV. அவன் அறிவாற்ற அறியு மாகலின்

—தொ. கற்பியல். 6

| | |
|---|---|
| அவன் | அறிவு |

"அவனெனும் முதலால் ஆற்றப்பட்ட (செய்யப்பட்ட) அறிவெனும் அந்தத்திற்கு அறியுந்தன்மை உண்டு" எனல். III-ல் பன்மை எனும் இறுதியே அறிவெனும் அந்தம் எனக் கூறும் தொல்காப்பியம் இதில் அவ்வந்தமெனும் அறிவிற்கு அறியுந்தன்மை உண்டெனவும் அத்தகைய அறியுந்தன்மையுள்ள அறிவைச் செய்தது அவன் எனும் ஆதி எனவும் விளக்கும் விபரம் காண்க. முதலே இடையிறுதியை ஆக்கும் என்பதைப் பல சூத்திரங்களால் அடுத்துக் காணலாம்.

V. முன்னத்தின் உணருங் கிளவி எல்லாம்

—தொ கிள. 57

முன் அத்து கிளவி

உருபியல் 17—ல் 'எல்லாமென்னும் இறுதி' எனக்கூறி இறுதியின் நாமமே எல்லாம் என உணர்த்தும் தொல்காப்பியம் இதில் "முன்—அத்து எனும் முதலிடையின் இறுதியே எல்லாம், அவ்வெல்லாம் என்னும் இறுதி உணருங் கிளவியே" எனல்.

அந்தத்திற்கு அறிவு எனும் நாமமும் அறியுந்தன்மையும் உண்டென III, IV-ல் கூறும் தொல்காப்பியம் அவை காரணம் பற்றி அந்தமாகிய கிளவியை 'உணருங் கிளவி' என உணர்த்தும் விபரம் காண்க. இத்தகைய கிளவி என்பதைச் சொல்லென ஏற்பதெப்படி ?

இடையாகிய 'முறை' என்பதைக் காட்டி முறையின் முதலிறுதியே ஒருமைப் பன்மை எனக் கூறுவதைத் தெரியாவிடில் அப்பன்மையே அறிவெனும் அந்தம், அவ்வந்தமாகிய அறிவு அறியுந்தன்மை உடையது, அறியுந்தன்மையும் அறிவெனும் நாமமும் அந்தத்திற்கு உண்டாகையால் அந்தமெனும் கிளவி உணருங் கிளவியே என ஒன்றையொன்று தழுவி விளக்கும் விபரத்தைக் காண முடியுமா ?

இவ்வளவு பாடுபட்டு ஒன்றையொன்று தழுவி உணர்த்தும் விதத்தில் அமைந்துள்ள பல சூத்திரங்களைக் கொண்டு 'அறியுந்தன்மை யுள்ள அறிவே அந்தம், அவ்வறிவெனும் அந்தம் ஈருகிய உணருங் கிளவியே' என உணர்த்துவதை உதறித் தள்ளுதல் உசிதமா ? மற்றொன்றைக் கவனிப்போம்.

உயிர் மயங்கியல் 85-ல் மழை-என்-கிளவி எனக் கூறி முதலே மழை என்று உணர்த்தும் தொல்காப்பியம், இம்மழைக்குப் பெய்தல் தன்மை உண்டென்பது பற்றி புறத்திணையியல் 24—ல்

'தலைப் பெய்தலும் நல் வகையுடைய' (நல்-வகை எனும் இடையிறுதியின் முதலே தலை அத் தலையே பெய்தல்) எனப் புகட்டுகிறது. மழை என்னும் நாமமும் பெய்தல் தன்மையும் ஆதிக்கு உண்டென்பது பற்றி ஆதியாகிய தலையைப் பெய்தல் என்று உணர்த்தும் விவரம் கண்டும் தெளியாமல் 'தலைப் பெய்தல்' என்பதை 'தலைப்பு எய்துதல்' என்று கொள்வார்களே என்றெண்ணி, செய்யுளியல் 58-ல் 'தலைப் பெயலைந்து மாகும்' ஐந்தெனும் பெயலே தலை என விளக்கும் விவரம் காண்க.

கவனிப்போமென நான் எடுத்துக் காட்டிய பத்துச் சூத்திரங்களில் **மழை-என்-கிளவி** என்பதையும் **ஐந்து-என்-கிளவி** என்பதையும் மேற்காண்பதில் காட்டி, 'முதலெனும் மழையே பெய்தலெனும் தலை' அத்தலையே பெயலைந்து, அவ்வைந்தெனும் தலை நல்-வகை எனும் இடை அந்தத்தின் ஆதி' என விளக்கும் விவரம் காண்க. அப்பத்தில் காணும் **முன்-அத்து-கிளவி** என்பதை V-லும், **அவன்-வயின்-கிளவி** என்பதில் முதலே 'அவன்' எனக் கூறுவதை IV-லும், **பால்-வரை-கிளவி** என்பதில் முதலே 'பால்' எனக் கூறுவதை III-லும், **பொன்-என்-கிளவி** என்பதை I-லும், உணர்த்தி, 'முதலுக்கு பொன், பால், முன், அவன், ஐந்து, மழை' எனும் நாமங்கள் உண்டென்பதறிக. இவற்றைப்போல் முழுது-என் கிளவி, குறை-என்-கிளவி வழி-என்-கிளவி-என இம் மூன்றிலும் காணும் முழுது, குறை, வழி என்பவற்றையும் முதலின் நாமங்களென விளக்கியிருப்பதை இதே நூலில் அடுத்துக் காண்க. சூத்திரங்களைச் சிதைத் தெடுத்துத் தேவையானதை மாத்திரம் காட்டுவதாக நினைப்போர் இவை ஒவ்வொன்றும் முழுதும் இதே நூலில் அடுத்து விளக்கப்படும் என்பதறிக.

இவையெல்லாம் இருக்கட்டும், முதலுக்கு மழை எனும் நாமம் உண்டெனக் காட்டி அம்முதலுக்கு நாமங்களாயுள்ள ஐந்தையும் தலையையும் 'தலையே பெய்தல் பெயலே ஐந்து' என உணர்த்துவதையும், இறுதிக்கு அறிவெனும் நாமம் உண்டெனக் காட்டி அவ்விறுதிக்கு நாமமாயுள்ள கிளவியை உணருங்கிளவி என உணர்த்துவதையும் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்த்தால் தொல்காப்பியம் முதலிடையிறுதி என வகுத்துக்காட்டி இவற்றிற்குப் பல நாமங்களை உணர்த்தும் விவரம் தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இவ்வாறுள்ள முதல்-இடை-இறுதி என்பவற்றின் நாமங்களே காமம்-நோய்-தோழி எனத் தொல்காப்பியம் உணர்த்துவதையே திருக்குறள் விளக்குவதாய்க் கூறினேன். இவ்விவரங்கள் அனைத்தும் இதே

நூலில் அடுத்துப் பல சூத்திரங்களாலும் வேறு நூல்களாலும் விளக்கப்படும்.

இவ்வாறு ஆதி அந்தத்தை உணர்த்தும் தொல்காப்பியம் காட்டுகின்ற என், வரை, வயின், அத்து என்பதை இடையின் நாமங்களென முழு மனதோடு ஏற்கலாமன்றோ ? இவற்றை நன்கு ஆராய்ந்து கண்டு தெளியாவிடில் இவ்வாறு உணர்த்தப்பட்ட நாமங்களைக் கொண்டு இவற்றிற்குள்ள மற்ற பெயர்களைச் சூத்தி ரங்கள் புகட்டுவதைக் காண்பதெப்படி ? அப்படியும் புகட்டு கின்றனவா எனில், அவை இரண்டொன்றையும் காட்டுகிறேன். என், வரை, வயின், அத்து என்பவற்றை இடையின் நாமங்களென உணர்த்துவதாகக் கண்டோமல்லவா ? ஆமெனில், இவற்றுள் ‘ அத்து ’ என்பதை எடுத்துக்காட்டி உருபியல் 13-ல் ‘ அத்தே சாரியை ’ எனவும் புணரியல் 17–ல் ‘ சாரியை மொழியே ’ எனவும் உணர்த்துகிறது.

சூத்திரங்களை நன்கு ஆராய்ந்து ஆதி யிடை அந்தம் என வகுத்துக் காட்டி இடையின் நாமமே ‘ அத்து ’ என்று உணர்த்து வதைக் காணுவிடில் ‘அத்தே சாரியை’ எனவும் ‘சாரியை மொழியே’ எனவும் புகட்டுவதைத் தெரிய முடியுமா ? இவ்விவர மறியாவிடில் அத்து, சாரியை, மொழி எனும் இவற்றை அவரவர் இடங் காலத்திற்கேற்பக் கொள்ள வேண்டியதாகு மன்றோ ?

தொல்காப்பியம் இப்படி ஆதி—அந்தம் என வகுத்துக் காட்டி இவற்றிற்குள்ள ஏராளப் பெயர்களை உணர்த்துவதால் நமக்குக் கிடைக்கும் பயன் என்ன எனக் கேட்கலாம். இவ்வாறு உணர்த்துவது தொல்காப்பியமல்ல, தொல்காப்பியத்திற்கு ஆதியா யுள்ள நூல்களின் ஆசிரியர்கள் இம் முப்பொருளை ஆராய்ந்து கண்டு உண்டு இவற்றின் பயனை அடைந்து இதினும் மிக்க தெதுவுமே இல்லையென்றறிந்த அவர்கள் நூல்களில் கூறுவதைத் தொல்காப்பியம் விளக்குகிறதே அல்லாமல் வேறில்லை. இவ் விவரத்தை இதே நூலில் தெளிவாய்க் காணலாம்.

இம் முப்பொருள்களின் வரலாறு மனத்தூய்மை பெற் றோருக்கே தெரியவேண்டும் என்பது பற்றித்தான் இவற்றிற்கு ஏராள நாமங்களைச் சூட்டி அப்பெயர்களைக் கொண்டு இவற்றின் தன்மை உற்பத்தி முதலியவற்றையும் இவற்றால் ஏற்படும் பயனை யும் நூல்கள் உணர்த்துகின்றன. இக் கருத்தையும் நமது அனுப வத்திலுள்ள மற்றோர் கருத்தையும் ஒன்றில் அமைத்துக்காட்டவே

வசனமாக எழுதாமல் சூத்திரம், பா, பாடல்களாக நூல்களை இயற்றியிருக்கிறார்கள் என்றெண்ண இடமேற்படுகிறது. இவ்வா றிருப்பதால் இவற்றின் பயனை அடைய இம் முப்பொருள்களைத் தெரிய வேண்டும், இதைத்தெரிய இவற்றிற்கு உள்ள நாமங்களைத் தெரியவேண்டும் என்பது பற்றியே தொல்காப்பியர் கருணையோடு இவற்றின் நாமங்களையும் தன்மையையும் வெகு பாடுபட்டுத் தொல் காப்பியத்தில் விளக்கியிருக்கிறார். இவருக்குப் பின் தோன்றிய ஒவ்வொரு முக்தரும் தொல்காப்பியத்தின் மூலமே இவற்றை அறிந்ததாக அவரவர் நூல்கள் தெளிவாய் உணர்த்துவதை இதே நூலில் கண்டு ஆனந்திக்க. ஒவ்வொரு நூலும் இவற்றின் நாமங் களையே வெகு விரிவாய் உணர்த்தி இவற்றின் தன்மை பயன் முதலியவற்றை மிகச் சுருக்கமாக விளக்கும் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்.

நன்னூல் தொல்காப்பியத்தின் தன்மை ஒருவாறு தெரிந்ததா ? இம் முப்பொருள்களின் நாமங்களெனத் தொல்காப்பியம் கூறும் காமம்-நோய்-தோழி என்பவற்றையே திருக்குறள் விளக்குவதாகக் காட்டினேன். இவ்விவரத்தை இதே நூலில் அடுத்துத் தெளிவாய்க் காணலாம்.

மற்ற பிரபல நூல்களின் கருத்தை விளக்கும் திருக்குறளின் கருத்தை மாற்ற மற்றவை இடந் தருமா? அவற்றின் கருத்தை மாற்றத் திருக்குறள் இசையுமா ? இவ்வாறே ஒவ்வொரு பிரபல நூலின் தன்மையும் இருக்கிறதென்பதைக் காட்டவே இந்த நூலை எழுதத் துணிந்தேன். நிற்க, நான் எடுத்துக் காட்டும் கருத்தை நிச்சயிக்க, சில உரை முறைகளின் கருத்தைப் பொருந்தாதென உணர்த்துவது கண்டு, உரைகளையும், உரையாசிரியர்களையும் நான் இகழ்வதாக எண்ணக்கூடாது. உத்தமனுவதற்கு ஓர் கருத்தையும் உத்தமர்க்கு மற்றோர் கருத்தையும் ஆக இரு கருத்துக்களை நூல்கள் கூறுவதாகவும் உத்தமனுவதற்கு ஏற்பட்ட கருத்தை உரை முறைகள் விளக்குவதாகவும் மற்ற கருத்தை நான் எடுத்துக் காட்டுவதாகவும் தெரிவித்திருக்கிறேன், அதை மறக்கவேண்டாம்.

பிரபல நூல்கள் கூறும் இம் முப்பொருள்களை வேர்—மரம்-பழம் எனும் இவற்றிற்கு ஒப்பிடலாம். வேரினின்று மரமும் பழமும் உண்டாவதுபோல், அவற்றின் உற்பத்திக் கிரமம் இருப்ப தாகவும் இவற்றைப் போலவே அவற்றிற்கும் தனித் தனித்

தன்மை, குணம், உருவம் முதலிய இருப்பதாகவும் நூல்கள் கூறுவதால் அவற்றை இவைகளுக்கு ஒப்பிடலாம்.

வேர்-மரம்-பழம் எனும் மூன்றுள் எது முந்தியது எது பிந்தியது எனக் கேட்டால் 'வேர் முந்தியது பழம் பிந்தியது' என்றே எவரும் கூறுவார். அவர்களையே வேர் முந்தியதும் பழம் பிந்தியதுமானால் மரத்தை என்னென்பது? எனக் கேட்டால் 'மரம் இடை' என்ற பதிலே கிட்டும். மரத்திற்கு இடை எனும் நாமம் எக்காலத்திலும் இல்லையெனினும் காரண காரிய வகையில் இடை எனும் நாமம் வாய்த்திருக்கிறதன்றோ? இவ்வாறு கற்பிக்கப்பட்ட முன்-இடை-பின் என்பவற்றைக் காட்டி முன்னே மூலம் இடையே விருட்சம் பின்னே கனி என உணர்த்துவது ஏற்கத் தக்கதே. இது போலவே முன்-இடை-பின் முதல்-இடை-இறுதி என வகுத்துக் காட்டி இதற்கிது பெயரென ஏராள நாமங்களை இம் முப்பொருள்களுக்கு உணர்த்தி இப்பெயர்களால் இவற்றின் செய்திகளை நூல்கள் விளக்குகின்றன. முதலில் தொல்காப்பியக் கருத்தை எடுத்துக் காட்டி அதையே மற்ற நூல்கள் விளக்குவதை இந்த நூலில் கண்டு ஆனந்திக்கவும்.

எம். நாகலிங்கம்,
கோவை.

# குறிப்பு

நமது அனுபவத்தில் உள்ளதற்கு அன்னியமாக மற்றோர் கருத்து தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் உண்டென்பதை ஏற்க இரண்டோர் ஆதாரம் காட்டுகிறேன்.

(1) குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோ டுயர்குணம் இனையவும்
அமைபவ னூலுரை ஆசிரியன்னே

—நன்னூல் பொதுப் பாயிரம். 26

இதிற் காணும் நிறை—கோல் என்பதைப் பொதுப் பாயிரம் 29-ல் நன்னூல் 'நிறை கோற்கே' எனவும், வன்மை—மலை என்பவற்றை நன்னூல் பொதுப் பாயிரம் 28-ல் 'வன்மை மலைக்கே' எனவும், குணம் என்பதை நன்னூல் உரியியல் 2-ல் 'பொருட் குணம் பண்பே' எனவும், தெளிவு என்பதைத் தொல்காப்பியம் இடையியல் 13-ல் 'தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்' எனவும், உலகு—மலர் என்பவற்றைத் தொல்காப்பியம் புறத்திணையியல் 24-ல் 'மலர் தலை உலகத்து' எனவும், அறிவு என்பதைத் தொல்காப்பியம் கற்பியல் 6-ல் 'அவனறிவாற்ற அறியுமாகலின்' எனவும், ஆசிரிய என்பதைத் தொல்காப்பியம் செய்யுளியல் 51-ல் 'ஐவகை அடியும் ஆசிரியக்கு உரிய' எனவும் கூறி இச் சொற்களையும் எழுத்துக்களையும் நான் காட்டும் முப்பொருள்களுக்கு நாமங்களாய் உணர்த்தி, இப்பெயர்களால் இவற்றின் தன்மைகளை இவ்விரு நூல்களும் விளக்குகின்றன. அப்படி விளக்குவதை இதே நூலில் அடுத்துக் காணலாம்.

அப்படியிருக்க, இதிற் காணும் சொற்கள் நமது அனுபவத்திலுள்ள பொருளைச் சுட்டுவதாகக் கருதி 'இத்தகைய தன்மை உடையோரே கற்பிக்கும் ஆசிரியராவார்' என இச் சூத்திரத்திற்கு உரை கூறப்பட்டிருக்கிறது. இவை நாம் வழங்கும் சொற்களாயினும் நமது அனுபவப் பொருள்களைச் சுட்டாமல் இம் முப்பொருள்களையே சுட்டுவதாய் ஏற்கச் சில ஆதாரம் காட்டுகிறேன்.

## I. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐ என் இறுதி

—தொ. உயி. மயங். 86

| | | |
|---|---|---|
| ஐ | என் | இறுதி |
| வேட்கை | மருங்கு | செய்யுள் |

வேற்றுமை மயங்கியல் 4-ல் 'முதல் முன் ஐ' எனக் கூறி முன்னெனும் முதலே ஐ எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. இச் சூத்திரக் கருத்தைத் தெரியாமலும் இயலதிகாரப் பாகுபாடு அறியாமலும் 'முதல் முன் ஐ' என்பதை மாத்திரம் எடுத்துக் காட்டி என் கொள்கையை நிலை நாட்ட முயலுவதாக நினைக்க வேண்டாம். 'முதல் முன் ஐ வரின் கண்ணென் வேற்றுமை' என்பவவையே அடுத்து விளக்கப்படும். நன்னூல் தொல்காப்பியத்தில் ஐ எனும் எழுத்தை எங்கு காணினும் அங்கங்கும் அதை முதலின் நாமமாகவே ஏற்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாகவே மேற்காணும் சூத்திரத்தில் அதே ஐ என்பதை இதிற் காட்டி, "ஐ—என் என்னும் வேட்கை—மருங்கின் இறுதியே செய்யுள்" எனல்.

ஐ—என் என்பவற்றை முதலிடையின் நாமங்களென வகுத்துக் காட்டாதிருந்தால் இதில் 'ஐ—என் என்னும் வேட்கை—மருங்கு' என உணர்த்த இடமுண்டா? இதைக் கொண்டே முதலிடை யிறுதி என வகுத்துக் காட்டி, அவற்றிற்குள்ள நாமங்களையும் உணர்த்தி, அவ்வாறு உணர்த்தப்பட்ட நாமங்களைக்கொண்டே அவற்றிற்குள்ள மற்ற பெயர்களையும் தொல்காப்பியம் புகட்டுவது தெளிவாய்த் தெரிகிறதன்றோ?

முதலெனும் முன்னே ஐ எனத் தொல்காப்பியம் உணர்த்துவதைச் செய்யுளெனும் இறுதியின் முதலென்றே ஏற்க வேண்டும் என்பதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

நன்னூல் தொல்காப்பியத்தில் இலக்கண வரம்பை எடுத்துக் காட்டிய உரையாசிரியரின் அறிவாராய்ச்சி போற்றத்தக்கதே. அவ்வளவு ஆராய்ந்து அக் கருத்தை அறியும் விதத்தில் அமைந்துள்ள சூத்திரங்களில் நான் காட்டும் கருத்தை எவரும் எளிதில் அறியும்படி அடக்கியிருப்பது ஆச்சரியமே. அவ்வாறு இருப்பது பற்றியே அறிவாராய்ச்சி அனுபவம் முதலிய எல்லாவற்றிலும் மிகக் குறைந்த நான் அதை எடுத்துக் காட்டத் துணிந்தேன். ஆனால், ஏதோ ஓர் இயலைக் காட்டி அவ்வியலிலுள்ள சூத்திரங்கள்

அனைத்தையும் அல்லது அதிற் சில சூத்திரங்களை விளக்கினால் ஏற்க இடமுண்டு, அதைவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாய் அதிலும் சூத்திரங்களைச் சிதைத்தெடுத்தும் காட்டுவதை எப்படி ஏற்பது? அப்படியேற்றாலும் அதனால் ஏற்படும் நன்மை என்ன என நினைக்கலாம். இதற்குச் சமாதானம் கூற வேண்டியதே.

இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மிவ்விரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே

—தொ. எச்சவியல். 31

இந்த நூலை வாசித்து முடித்த ஒவ்வொருவரும் இச் சூத்திரத்தில் காணும் ஒவ்வொரு சொல்லையும் பல சூத்திரங்களைக்கொண்டு விளக்கிக் காட்டி, பிறகு இச் சூத்திரக் கருத்தை இதுதானென எவரும் மறுத்தற் கிடமில்லாமல் எல்லோரும் ஏற்கும் விதத்தில் அவரவரே விளக்க முடியுமென்பது திண்ணம்.

இதுபோல் ஒவ்வொரு சூத்திரத்தையும் ஆராய்ந்தறியும் திறமையைத் தரும் இந்த நூல் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் காட்டுவதாகத் தோன்றினும் தொல்காப்பியத்தின் தன்மையை எடுத்துக் காட்டிவிடும் என்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறு நான் கூறுவது உண்மையா? என்பதை ஆராய்ந்தறியவே இச் சூத்திரத்தை இங்கெடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்த நூலை வாசித்து முடித்தபின் ஒவ்வொருவரும் இச் சூத்திரத்தைக் கவனியுங்கள். இயல் அதிகாரங்களுக்கு இசைய சூத்திரங்கள் வெவ்வேறு செய்திகளை உணர்த்துவதாய்க் கருதுவது உரை முறைகளின் கருத்து. நன்னூலும் தொல்காப்பியமும் ஆரம்பம் முதல் முடிவு வரை விளக்குவது இம் முப்பொருள்களையே என்பது நான் காட்டும் கருத்து. ஆகையால், எந்த அதிகாரத்தில் உள்ள எச் சூத்திரத்தையும் சிதைத்தோ முழுதாகவோ எடுத்துக் கொண்டாலும் குற்றமாகாது. இதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

வேற்றுமை மயங்கியல் 4-ல் 'முதல் முன் ஐ வரின் கண்ணென் வேற்றுமை' என்பதில் காணும் 'முதல் முன் ஐ' என்பதை முதலெனும் முன்னே ஐ என்றுதான் கொள்ளவேண்டும் என்றேன் அல்லவா? அதைச் சிறிது கவனிப்போம்.

நூறு ஊர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவி

—தொ. புள். மயங். 97

நூறு ஆயிரம் கிளவி

"நூறு எனும் முதலுக்கும் கிளவி எனும் இறுதிக்கும் இடையே ஆயிரம், அவ்வாயிரம் எனும் இடை ஊர்ந்துவரும்" எனல். இவற்றிற்கு இலக்கங்களாக நாமங்கள் உண்டென்பது தெரிகிறதன்றோ ? சற்று பொறுமையாய்க் கவனிக்க.

நம் ஊர்ந்து வரூஉம் இகரம் ஐகாரமும்

—தொ. பெயரியல். 9

ஐகாரம் இகரம் நம்

"நம்மெனும் இறுதிக்கும் ஊர்ந்து வரும் இகரமெனும் இடைக்கும் முதலே ஐகாரமும்" என்பதறிக. இவற்றிற்கு இலக்கங்களாக நாமமுண்டெனக் காட்டி (ஆயிரமெனும் இடை ஊர்ந்து வருமென உணர்த்தும் தொல்காப்பியம்) இதில் இவற்றிற்கு எழுத்துக்களாக நாமமுண்டெனக் காட்டி 'இகரமெனும் இடை ஊர்ந்து வரும்' என உணர்த்துவதறிக.

இவ்வென மொழிப திரியும் ஆறே

—தொ. புணரியல். 7

... இவ் ...
ஆறு

மேற்காணும் இகரம் என்பதை இதில் ' இவ் ' என உணர்த்தி, மேற் காண்பதில் ஊர்ந்து வரும் என்பதை இதில் ' திரியும் ' எனக் காட்டி " திரியும் இவ்வெனும் இடையே ஆறு " எனல். 'ஆறே திரியும் இவ்வென்று கூறப்படும்' என்பதறிக.

இகரம் எனுமிடை ஊர்ந்து வருமென மேற் காண்பதிலும் இதில் இவ்வெனும் இடை திரியுமெனவும் உணர்த்துவதால் 'இகரமாகிய இவ்வெனும் இடை ஊர்ந்து திரியும்' என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ ? முதலிடை யிறுதி என வகுத்துக் காட்டி, இடைக்கு ஆயிரம் ஆறு எனும் இலக்கங்களும் இகரமாகிய இவ் எனும் எழுத்தும் நாமங்களெனச் சூத்திரங்கள் உணர்த்தியிருக்கும் விபரத்தைக் கண்டாலன்றோ 'இப் பெயர்களையுடைய இடை ஊர்ந்து திரியும்' என விளக்குவதைக் காண முடியும். இன்னும் சிறிது கவனிப்போம்.

சாரியை நிலையாது

—தொ. புள். மயக். 27

... சாரியை ...

'முன்னத்தின் உணருங் கிளவி' என கிளவியாக்கம் 57-ல் கூறி இடையே 'அத்து' என உணர்த்தும் தொல்காப்பியம் உருபியல் 13-ல் 'அத்தே சாரியை' எனப் புகட்டியிருப்பதாக முன்னுரையில் எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். இதில் "அவ்வத்தாகிய சாரியை எனும் இடை நிலையாது" என்பதறிக.

'முறை நில்லாது

—தொ. கிளவி. 44

... முறை ...

'முறை எனும் இடையின் முதலே பொன்—ஈறே கிளவி' எனத் தொல்காப்பியமும் 'ஒருமை—பன்மை எனும் முதலிறுதி யின் இடையே முறை' என நன்னூலும் உணர்த்துவதாக முன் னுரையில் காட்டியிருப்பது ஞாபகமிருக்கலாம். அம்முறையையே இதில் காட்டி "முறையெனும் இடை நில்லாது" எனல்.

சாரியை என்பதும் முறை என்பதும் இடையின் நாமங்க ளெனத் தெரியாவிடில், (முன் காண்பதில் இடை ஊர்ந்து திரியும் என்பதற்கு இசைய) முறையெனும் இடை நில்லாது எனவும் சாரியை எனும் இடை நிலையாது எனவும் புகட்டுவதைக் காண்பது எப்படி? இந்நான்கு சூத்திரங்களிலும் 'இடை நிலைத்து நிற்காமல் ஊர்த்து திரியும்' என விளக்குவது தெரிகிறதன்றோ?

இச்செய்தியை உணர்த்தும் இடையின் நாமங்களாகிய 'ஆயிரம் ஆறு எனும் இலக்கங்களையும், இகரமாகிய இவ்வெனும் எழுத்தையும், சாரியை முறை எனும் சொற்களையும்' வெவ்வேருக ஏற்பதெப்படி? இவ்வாறு ஊர்ந்து திரியும் இடையே இவ்வென்றுணர்த்த இவ்விடை யின் முதலிறுதியே 'ஐ—நம்' எனக் காட்டுவதைக் கவனியாது அவற்றையும் வெவ்வேருய்க் கொள்ளலாமா?

வேற்றுமை மயங்கியல் 4-ல் முன்னெனும் முதலே ஐ எனக் கூறி, புணரியல் 7-ல் ஊர்ந்து திரியும் ஆறே இவ்வெனவும் தனித் தனிச் சூத்திரங்களில் உணர்த்தி, அவ்விரண்டையும் இவ்வோர் சூத்திரத்தில் 'ஐ எனும் முதலின் இடையே ஊர்ந்து திரியும் இகரம்' என்று விளக்குவது கண்டு அவ்விரு சூத்திரங்களின் கருத்தை இச்சூத்திரமும் இச்சூத்திரக் கருத்தை அவையிரண்டும் நிச்சயிக்கும் நேர்மை தெரிந்து மகிழாமல் இயலதிகாரத்திற்கு ஏற்க அதனையும் வெவ்வேருக ஏற்கலாமா?

இந்நாமங்களால் ஊர்ந்து திரியும் என்னும் செய்தியையும் இச் செய்தியால் ஊர்ந்து திரியும் இடையின் நாமங்களையும் நிச்சயித்துக் காட்டும் நேர்மை கண்ட ஒருவன் பிதற்றுபவனா? இவன் கூறு வதைப் பிதற்றலென்று தீர்மானிப்போர் இதே செய்தியைத் தொல்காப்பியம் கூறும் நாமங்களையே காட்டி மற்ற நூல்கள் விளக்குவதைக் காணும்போது இவர்களது தீர்மானம் எவ் வாருகும்? இன்னும் கவனிப்போம்.

வம்பு நிலையின்மை

—தொ. உரியியல். 31

... வ ...
ம்
பு

ஐ—நம் எனும் முதலிறுதியின் இவ்வெனும் இடை ஊர்ந்து திரியும் என்று கூறும் தொல்காப்பியம், இதில் இடைக்கு வ, ம், பு எனும் எழுத்துக்களை நாமங்களெனக் காட்டி "வம்பு எனும் நாமங் களையுடைய இடை நிலையில்லாதது" என்பதறிக.

சாரியை எனும் இடை 'நிலையாது' எனவும், முறை எனும் இடை 'நில்லாது' எனவும் கூறுவதையே இதில் இடை 'நிலை யின்மை' என உணர்த்துவது விளங்கிற்ரு? இவ்வாறு விளக்கும் தொல்காப்பியம் இம்மூன்று எழுத்துக்களையும் இடையின் நாமங்களென்று உணர்த்தாதிருக்குமா? இப்படி இவற்றை இடையின் நாமங்களெனக் காட்ட முதலிடையிறுதியென வகுத் துணர்த்தாவிடில் முடியுமா? 'நிலையின்மை' எனும் செய்தி இம்மூன்று எழுத்துக்களையும் இடையின் நாமங்களென நிச்சயிப்பதறிக.

நிலைத்து நிற்காது ஊர்ந்து திரியும் என்பதற்கு இசைய நிலையின்மை என்று இதில் உணர்த்துவதை ஏற்கவே வேண்டிய தெனினும் 'வம்பு' என்பதை இடைக்கு எழுத்தாயுள்ள நாமங்க ளெனற்கு ஆதாரம் உண்டா? எனில், அதையும் காட்டுகிறேன்.

இசைப்பிசையாகும்

—தொ. உரியியல். 13

... இ ...
சை
ப்
பு
இசை

"இ, சை, ப், பு எனும் நான்கு எழுத்துக்களையும் நாமங்களா வுடைய இடைக்கு இசை எனும் நாமமுண்டு" எனல். இடையின் நாமமென வம்பு என்பதில் காணும் பு என்பதையும், ஊர்ந்து திரியும் இடையே இவ் என்பதையும் இச்சூத்திரம் நிச்சயிப்பதறிக. இதைப்போல் சை, ப் எனும் இரு எழுத்துக்களையும் இடையின் நாமங்களெனச் சூத்திரங்கள் உணர்த்துமென்பதில் சந்தேகிக்க இடமில்லையன்றோ?

அததற்கு நாமங்களாய் ஏற்பட்ட எழுத்துக்களை இரண்டு மூன்று நான்கை ஒன்று சேர்த்து ஓர் சொல்லாக்கி அதற்கே நாம மாய்ச் சூட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறு அமைந்தவையே என், வயின், நுவலின் எனும் நாமங்கள். அதற்கு இணங்க இ, சை என்பவற்றை 'இசை' எனவும் வ, ம், பு என்பவற்றை 'வம்பு' எனவும் உணர்த்துவ தறிக. இதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே.

—தொ. செய். 11

| சீர் | இசை | அசை |
|---|---|---|
| வல்லோர் | ஆறு | |
| வகுத்தனர் | | |

கற்பியல் 9-ல் 'சீருடைப் பெரும் பொருள்' எனக்கூறி முதலைச் சீர் என உணர்த்துவதையும், இவ்வெனும் இடையே திரியும் ஆறு இ, சை, ப், பு எனும் நாமங்களையுடைய இடையே இசை எனத் தனித் தனியே புகட்டும் தொல்காப்பியம் அவற்றையே இதில் முதலிடையின் நாமங்களெனக் காட்டுவதைக் கண்டுதெளிக. முன்னுரை iv-ல் அவனால் ஆற்றப்பட்டதே அறிவு என்பதற்கு இசைய இதில் ஆறெனும் இடையை வல்லோர் எனும் முதல் வகுத்தது என்பதறிக.

'சீருடைப் பெரும் பொருள்' எனக் கூறி முதலைச் சீர் என உணர்த்தும் தொல்காப்பியம், உவமயியல் 6-ல் 'முதலும் சினையு மென் றாயிரு பொருட்கு' எனக் கூறி 'இறுதியாகிய பொருட்கு இடையே இரண்டெனும் சினை முதலே ஆ' என உணர்த்துகிறது.

அகத்திணையியல் 17-ல் 'முதலெனப் படுவது ஆயிருவகைத்தே' எனக் கூறி முதலே ஆ இடையே வகை எனும் இரண்டு என உணர்த்தும் தொல்காப்பியம், அம் முதலெனும் ஆ என்பதையும் இடையெனும் இரண்டையுமே இதிற் காட்டி 'முதலும் சினையும் என்ற ஆ யிரண்டு என்பவை இறுதியெனும் பொருட்கு முதலும்

இடையுமே'' என விளக்குவதறிக. முதலும் சினையும் என்ற ஆயிரண்டு என்பதை ஆயிரண்டு என்ற முதலும்சினையும் என்று ஏற்க இடமுண்டன்றோ? இவ்வாறிருக்க, இம் 'முதல், சினை, ஆ, இரண்டு' எனும் சொல் எழுத்து இலக்கத்தை வெவ்வேறாய் ஏற்பது எப்படி? நிற்க, 'சீருடைப் பெரும் பொருள்' 'பொருட்டு இடையே இரண்டெனும் சினை முதலே ஆ' எனக் கூறி (ஆ சீர் எனும் நாமங்களையுடைய முதலின் இடை பெருஞ்சினை எனுமிரண்டு இறுதி, பொருளே) என விளக்கும் விவரம் தெரிகிறதன்றோ? அன்றியும் 'சீருடைய பொருளென இறுதியையும் அவ்விறுதியாகிய பொருட்கு முதலே ஆ எனும் சீர்' என்றும் தொடர்பைக் காட்டி உணர்த்தும் போது இச்சொல் எழுத்து இலக்கங்களை வெவ்வேறாய் ஏற்பதெப்படி? சீர் என்பதை அறிய இவ்வளவு ஆராய்ந்தோம், இனி அச் சூத்திரக் கருத்தைக் கவனிப்போம்.

''முதலே சீர் இறுதியே அசை, இச்சீரும் அசையும் இடையாகிய இசையுடன் சேர்ந்தவை, இச்சீரெனும் வல்லோர் வகுத்து உணர்த்தும் இடையாகிய இசை ஆறே'' எனல். இவ்விரு சூத்திரங்கள் விளக்கும் விவரம் கண்டு 'வம்பு நிலையின்மை' என்னும் சூத்திரக் கருத்தை நிச்சயிக்க. இன்னும் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரமும் காட்டுகிறேன்.

ஐ வியப்பாகும்

—தொ. உரியியல். 89

| | | |
|---|---|---|
| ஐ. | ப் | வி |
| | பு | ய |

இதிற் காணும் ப், பு என்பவற்றையும் முன் சூத்திரத்தில் காணும் இசை என்பதையுமே 'இசைப் பிசையாகும்' எனும் சூத்திரத்தில் விளக்கும் விவரம் தெரிந்ததா? ஊர்ந்து திரியும் இவ்வெனும் இடையின் முதலே ஐ எனக் கூறும் தொல்காப்பியம் அதையே இதிற் காட்டி ''ஐ எனும் முதலினின்று ப், பு எனும் நாமங்களையுடைய இடையும் வி, ய எனும் நாமங்களையுடைய இறுதியும் ஆகும்'' என்பதறிக. வி, ய என்பவற்றை இறுதியின் நாமங்களெனச் சூத்திரங்கள் விளக்குவதை இதே நூலில் காணலாம்.

இசையாகிய ஆறெனும் இடையை வகுத்தது வல்லோர் எனும் முதலெனக் கூறும் தொல்காப்பியம் அதற்கிசைய இதில் இடையும் இறுதியும் முதலினின்றே ஆகும் என உணர்த்தும் விவரம் காண்க.

ஐ என்பதை முதலின் நாமமென்றே ஏற்கவேண்டும் என்பதற்கு இவ்வளவு ஆதாரம் காட்டினேன். இதுபோலவே 'முதல் முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை' எனும் அச்சூத்திரத்தில் காணும் கண் எது ? வேற்றுமை எது ? என்பதை இதே நூலில் எடுத்துக் காட்டியிருப்பது கண்டு தெளிக. உரியியலில் காணும் சிறு சிறு சூத்திரங்களின் தன்மை தெரிந்ததா ?

இவ்வாறு இடை நிலைத்து நிற்காது ஊர்ந்து திரியும் என உணர்த்தும் தொல்காப்பியம் முதலும் இறுதியும் திரியாது நிற்கும் எனப் புகட்டுவதை இதே நூலில் அடுத்துக் காண்பீர். இதுபோல் பல அரிய செய்திகளுண்டு. தொல்காப்பியம் முதலிடையிறுதி என வகுத்துக் காட்டி, இவற்றிற்கு ஏராள நாமங்களை உணர்த்தி, இப் பெயர்களைக் கொண்டு இவற்றின் அரும்பெருஞ் செய்திகளை விளக்குவதாய் முழு மனதோடு இப்போதேனும் ஏற்கலாமன்றோ? இதை எவரும் மறுக்க இடமில்லாமல் மற்ற நூல்கள் இப்பெயர் களைக் கொண்டே இச்செய்திகளை விளக்கும் விவரத்தை இதே நூலில் காணலாம். எழுத்தாகவும் இலக்கமாகவும் சொல்லாகவும் இவற்றிற்கு ஏற்பட்டுள்ள நாமங்களை அங்கங்கும் அததற்கு நாம மாகவே ஏற்கவேண்டும் என்பதற்கே இதுவரை ஆதாரங்கள் காட்டியதை மறக்கவேண்டாம். இங்கு எடுத்துக் காட்டிய இப் பெயர்கள் அனைத்தும் இந்த நூலில் காணும் நூற்றுக்கணக்கான சூத்திரங்களிலும் அததற்கே நாமமாயமைந்து (இடை நிலைத்து நில்லாது ஊர்ந்து திரியுமென்பதுபோல்) அவ்வச் சூத்திரத்தின் கருத்தை விளக்கும் விவரத்தைச் சோதித்துப் பார்க்கலாம். இது வரை எடுத்துக் காட்டிய ஐ என்பது இன்னும் பல சூத்திரங்களில் முதலின் நாமமாகவே அமைந்து அந்தந்தச் சூத்திரத்தை விளக்கு வதை அடுத்துக் காணலாம். இதை இவ்வளவு ஆராய்ந்தறியா விட்டால் 'அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க' எனத் திருவாசகம் கூறுவதைக் காண முடியுமா ? அணு என்பதைக் கண்டு அவ்வணுத் தரும் தன்மை எதுவெனத் தெரிந்து அத்தன்மை யில் தொடர்பாயுள்ள ஐ எனும் ஐயோனை அறிய வழிகாட்டுவ தன்றோ ஆதி நூலாகிய தொல்காப்பியத்திற்குள்ள பெருமை. தொல்காப்பியம் ஆதியே ஐ என்று கூறுவதைத் திருவாசகம் ஐயோன் என நமக்கு உணர்த்துவதற்கிசைய 'ஐயப்பா சரணம்' எனச் சிறிது காலமாகப் பலர் ஓலமிடுவதையும் உற்றாராய்ந்து தெளிக. செய்யுள் என்பதை இறுதியின் நாமந்தான் என்றேற்க ஆதாரம் காட்டுகிறேன்.

. II. செய்யு ளிறுதி மொழியிடை முதலின்

—ந. பொதுவியல். 66

| முதல் | இடை | இறுதி |
| --- | --- | --- |
| | மொழி | செய்யுள் |

செய்யுள் மருங்கின் முதலே ஐ என்னும் வேட்கை எனத் தொல்காப்பியம் இடையிறுதியைக் காட்டி முதலை விளக்குவது போல் இதில் முதல் என்பதை மாத்திரம் காட்டி "முதலின் இடையே மொழி இறுதியே செய்யுள்" என நன்னூல் விளக்குவ தறிக.

முதலிடையிறுதி என வகுத்துக் காட்டாவிடில் இதில் முதலின் இடையே மொழி இறுதியே செய்யுள் என உணர்த்த இடமுண்டா? நிற்க, முன்னுரை V-ல் இடையின் நாமமே 'அத்து' எனக் கூறும் தொல்காப்பியம் உருபியல் 13-ல். அத்தே சாரியை' எனவும் புணரியல் 17-ல் 'சாரியை மொழியே' எனவும் உணர்த்தி, இடையின் நாமமே மொழி எனத் தொல்காப்பியம் விளக்குவதை இதில் நன்னூல் நிச்சயித்துக் காட்டும் நேர்மை காண்க.

சூத்திரங்கள் முதலிடையிறுதி என்று வகுத்துக் காட்டி அவற்றிற்குப் பல நாமங்களை உணர்த்துகின்றன என்பதை எவ்விதச் சந்தேகமுமில்லாமல் முழுமனதோடு ஏற்க 'இடையே மொழி' என நன்னூலும் தொல்காப்பியமும் ஒன்றையொன்று தழுவி உணர்த்துவது போதாதா? மொழி இடையென்றே கூறி இவ்விரு நூல்களும் உணர்த்துவது பெரிதல்ல, இம்மொழி எனும் இடையின் முதலே ஐ இறுதியே செய்யுள் என்பதையும் ஒன்றையொன்று தழுவிப் புகட்டுவது கண்டும் 'மொழி, செய்யுள்' என்பவற்றை வெவ்வேறாய் ஏற்க எவரும் துணிவரோ? இவ்வாறிருப்பதால் இதற்கிது பெயரெனச் சூத்திரங்கள் உணர்த்துவதை ஆராய்ந்தறிந்து அவை எச் சூத்திரத்தில் காண்கினும் அவற்றைஅததற்குள்ள நாமமாகவே ஏற்க வேண்டுமே அல்லாமல் அங்கங்கும் இதற்கிது நாமமெனக் கூறவில்லையே என்றெண்ணி வெவ்வேறாய்க் கொள்ளலாகாது. இன்னும் சந்தேகமிருந்தால் கீழ் காண்பவற்றால் தெளிக.

முன்னுரையில் மழை எனும் முதலுக்கே தலை எனவும் ஐந் தெனவும் நாமங்கள் உண்டென்பதைக் காட்ட 'தலையே பெய்தல், ஐந்தே பெயல்' என்று உணர்த்தி முதலை ஐந்து என நிச்சயிக்கும் தொல்காப்பியம் இசை எனும் இடையே ஆறு என்பதற் கிணங்க இறுதியை ஏழு என உணர்த்து மன்றோ? அவ்வாறு உணர்த்து

வதை இதே நூலில் அடுத்துக் காணலாம். இவ்வாறு இறுதியை 'ஏழு' எனவும் அகத்திணையியல் 4-ல் முதலெனப்படுவது 'நிலம்' எனவும் கூறும் தொல்காப்பியம் செய்யுளியல் 162-ல் 'எழு நிலத்தெழுந்த செய்யுள்' எனக் கூறி ஏழெனும் இறுதிக்கு முதலாகிய நிலத்தினின்று எழுந்த அவ்வேழெனும் இறுதியே செய்யுள் என உணர்த்துவது கண்டு தெளிக. முன்னுரை IV-ல் அறிவெனும் இறுதியை ஆற்றியது அவனெனும் முதலே என்பதை இதில் நிலமெனும் முதலினின்று எழுந்த ஏழெனும் இறுதியே செய்யுளெனல். 'முதலே நிலம்' எனும் முழுச் சூத்திரம் அடுத்து விளக்கப்படும்.

III. அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே

— தொ. செய். 34

... சிறப்பு அடி
பாட்டு

முன்னுரையில் 'சிறப்பின் தோழி' 'சிறப்பின் சான்றோர்' 'சிறப்பின் சிறுமை பெருமை' எனத் தொல்காப்பியம் கூறுவதைக் கண்டு அனுபவத்திற்குப் பொருந்தாத இவ்வாக்கியங்களை என்னென்று ஏற்பது, இதை உணர்த்துவதெதற்கெனச் சந்தேகித்தோமல்லவா? அச் சிறப்பை இதில் இடையெனக் காட்டி "அடி எனும் இறுதிக்கு இடையாகிய சிறப்பு பாட்டெனப் படுமே" எனல். இடையியல் 7-ல் 'சிறப்பே ஐயம்' இதில் 'சிறப்பே பாட்டு' என்று கூறி இடையே ஐயம், பாட்டு, சிறப்பு என உணர்த்துவதறிக.

'சிறப்பின் தோழி' 'தோழியின் முடி' எனக் கூறி இடையெனும் சிறப்பின் இறுதியே தோழி அத் தோழியின் முதலே முடி என்று உணர்த்தும் தொல்காப்பியம், சிறப்பின் முதலே முடி என்பதற்கிசைய இதில் இறுதியைச் சிறப்பின் அடி எனக் காட்டி, இறுதியாகிய அடியின் இடையாகிய சிறப்பே பாட்டு' என உணர்த்துவதறிக. 'காமத்தின் சிறப்பு' 'சிறப்பின் சான்றோர்' 'சிறப்பின் தோழி' என்றெல்லாம் கூறும் தொல்காப்பியம் 'சிறப்பே பாட்டெனப் படும்' என உணர்த்துவதைக் கவனித்தால் இக் காமம், தோழி, சிறப்பு, பாட்டு என்பவை நமது அனுபவத்திலுள்ளவையல்ல, இம் முப்பொருள்களுக்கே நாமங்களாய் அமைந்திருக்கின்றன என்னும் விபரம் தெரிகிறதன்றோ? ஆமெனில், நமது அனுபவத்திற்கு அன்னியமாகப் பாட்டென்பதை இடையெனக் கூறுவது போல் செய்யுள் என்பதை இறுதியின் நாமமென்று உணர்த்துவதாய் ஏற்க. 'அடியின் சிறப்பே பாட்டு' எனக் கூறுவதால் 'அடி' என்பதையும் சிறிது கவனிப்போம்

## IV. ஐ வகை அடியும் ஆசிரியக்கு உரிய

— தொ. செய். 51

ஐ வகை அடி

ஆசிரிய

முதலே ஐ இறுதியே அடி என நாம் முன் காண்பவற்றில் அறிந்ததையும், முன்னுரையில் பல நூல்களும் விளக்கும் வகையை நல்—தலை எனும் முதலிறுதியின் இடையே வகை எனத் தொல் காப்பியம் உணர்த்துவதையும் இதிற் காட்டி, "ஐ ஆகிய ஆசிரிய எனும் முதலுக்கு உரியது அடி எனும் இறுதியே" எனல்.

இம் மூன்றுள் முதலுக்கு இறுதியும், இறுதிக்கு இடையும், இடைக்கு முதலும் உரியதெனப் பல சூத்திரங்களும் மற்ற நூல் களும் கூறுவதை இதே நூலில் அடுத்துக் காணலாம். அதற் கிசைய முதலைக் கிழவோன் எனவும் இறுதியைக் காலை எனவும் பல சூத்திரங்களைக் கொண்டு விளக்கும் தொல்காப்பியம், கற்பியல் 19-ல் 'காலை கிழவோற் குரித்தே' என உணர்த்துகிறது. இதையே நாமங்களை மாற்றி 'அடி எனும் இறுதி முதலெனும் ஆசிரியக்கு உரியது' எனப் புகட்டும் விபரம் காண்க.

முதலெனப்படுவது நிலம் எனத் தொல்காப்பியம் கூறுதற் கிசைய 'நிலம்—மலை எனும் முதலிறுதியே நிறையும்—கோலும்' என பொதுப்பாயிரம் 26-ல் உணர்த்தும் நன்னூல் 'நிறை எனும் இறுதி கோலெனும் முதலுக்கே உரியது என்பதை பொதுப்பாயிரம் 29-ல் 'நிறை கோற்கே' என விளக்கும் விபரம் காண்க. 'அடி ஆசிரியக்கு உரியது' எனத் தொல் காப்பியம் கூறுவதையே 'நிறை கோற்கே' என்பதறிக. இதில் சந்தேகமிருந்தால் மேற் காண் பதில் நிலமெனும் முதலின் இறுதியே மலை எனக் கூறும் நன்னூல் இடையின் நாமமாகிய வன்மை என்பதையும் காட்டி, பொதுப் பாயிரம் 28-ல் 'வன்மை மலைக்கே' வன்மை எனும் இடை மலை எனும் இறுதிக்கே உரியது என விளக்குவது கண்டு தெளிக. இவ் வாறு பல செய்திகளை உணர்த்தும் சூத்திரங்களில் இம் முதலிடை யிறுதிக்கு நாமங்களாயுள்ள சொற்களை 1-ல் காணும் நன்னூல் சூத்திரம் விளக்குவது தெரிகிறதன்றோ? இச் சொற்கள் நமது அனு பவப் பொருள்களைச் சுட்டுவதாய்க் கருதி 'இத்தகைய தன்மை யுடையோர் கற்பிக்கும் ஆசிரியர்' என உரை முறைகள் தீர்மானித் திருப்பது அக்கருத்திற் கிசைந்திருக்கலாம்.

(2) முதலெனப்படுவது ஆ யிருவகைத்தே

— தொ. அகத்திணையியல். 17

முதல் இரண்டு
ஆ தே
வகை

பல நூல்களும் கூறுவதாய் முன்னுரையில் காட்டப்பட்ட வகை என்பதை இதில் "ஆ எனும் முதலுக்கு இரண்டென்று உணர்த்தி, அவ்விரண்டெனும் வகைக்கு தே எனும் எழுத்தும் நாமம்" எனல். ஆக இடைக்கு வகை எனும் சொல்லும் இரண்டெனும் இலக்கமும் தே எனும் எழுத்தும் நாமங்கள் என்பதறிக. உவமயியல் 6-ல் முதலும் சினையு மென்ற 'ஆ இரண்டு' இவையே.

(3) அதுவே தானும் இரு நால் வகைத் தே

—தொ. புறத்திணையியல். 11

... அது ...
இரண்டு
நாலு
வகை
தே

இடையை 2-ல் இரண்டு, வகை, தே எனக் கூறுவதை இதிற் காட்டி, "இரண்டு எனும் இலக்கமும் வகையெனும் சொல்லும் தே எனும் எழுத்தும் நாமங்களாயுள்ள இடை நாலெனும் அதுவே" எனல்.

2-ல் ஆ எனும் முதலைக் காட்டி அம் முதலின் இடையே இரண்டெனும் வகையெனத் தொல்காப்பியம் உணர்த்தா திருந்தால் இதில் 'இரண்டெனும் வகை நாலெனும் அதுவே' என விளக்க முடியுமா? நிற்க, நாலெனும் அதுவே வகையெனும் இரண்டென இதில் உணர்த்துவதைத் தள்ளிவிட்டு 2-ல் காணும் இரண்டெனும் வகையை வேறேதுவுமாக ஏற்க இட முண்டா? 'அது' எனவும் நாமம் இருக்குமா? எனத் திகைக்க வேண்டாம்.

(4) ஆதியின் இதற்கு இது எனல் பொருளே

—ந. பெயரியல். 40

ஆதி இது
த இ பொருள்

மேல் இரு சூத்திரங்களில் முதலிடைக்கு ஆ—தே எனும் எழுத்துக்களை நாமங்களெனத் தொல்காப்பியம் உணர்த்துவது

போல் இதில் நன்னூல் முதலிடைக்கு த—இ எனும் எழுத்துக் களைக் கூறுவதறிக. " த எனும் ஆதியின் அந்த மாகிய பொருளே அவ்வாதியும் இடையுமாகிய த—இ என்பவைக்கு அந்தமாகிய இது" எனல். 'முதலும் சினையும் பொருட்கு' என்பதைச் சிந்திக்க.

இதிற் காணும் மற்றவை யிருக்கட்டும், 'ஆதியின் பொருளே இது எனல்' என்று கூறும் இச் சூத்திரம் என்ன இலக்கண வரம்பைப் புகட்டுகிறது எனச் சிந்தித்துப் பார்க்கவும். ஆதி என்றபோதே அவ் வாதிக்கு இடையும் அந்தமும் உண்டென்பது முடிவன்றோ? யுக்தியளவில் இதை ஏற்காவிட்டாலும் ஆதியின் பொருளே இது எனக் கூறும்போது இதை அந்த மென் றேற்க மறுக்கலாமா? இதில் அந்த மாகிய பொருளே இது என்பதற் கிசைய 3-ல் இடையே அது என உணர்த்தும் விபரம் காண்க. இவ் விரு சூத்திரங்களின் கருத்தையும் இவ்வாறே ஏற்க வேண்டு மென்பதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

(5) இறைச்சி தானே பொருட் புறத்ததுவே

— தொ. பொருளியல். 35

புறம் அது பொருள்

இறைச்சி

3-ல் இடையே அது 4-ல் இறுதியே பொருள் என்பதை இதில் உணர்த்துவதை முதலில் கவனிக்க. 2-ல் இடையே இரண்டெனும் வகை எனக் கூறி, 3-ல் அவ்விரண்டெனும் வகையே அதுவென உணர்த்தி, இதில் அத்தகைய அதுவே இறைச்சி என விளக்குவது தெரிந்து சூத்திரங்கள் ஒன்றை யொன்று தழுவிப் புகட்டும் நேர்மையைக் காண்க. நிற்க, 3, 4-ல் இடையிறுதி எனக் கூறும் அது—பொருள் என்பவற்றை இதில் காட்டி, இவ் விடையிறுதியின் முதலே புறமென உணர்த்தி, "இம் முதலிறுதி யாகிய பொருட் புறத்து இடை யாகிய அதுவே இறைச்சி" யெனத் தொடர்பைக் காட்டி விளக்குவ தறிக.

'அதுவே இறைச்சி, இறைச்சி தானே பொருட் புறத்து அதுவே' என உணர்த்தும்போது இதிற் காணும் அது, இறைச்சி, புறம், பொருள் என்பவற்றை அவரவர் கொள்கைக் கிசைய இடங் காலத்திற் கேற்க வெவ்வேறாய்க் கொள்ள இடமுண்டா? இவற்றை வெவ்வேறாய்க் கொள்ள முயலுவோர் இச் சொற்களை இது இதற்குப் பெயரென உணர்த்தும் சூத்திரங்கள் ஒவ்வொன் றையும் தாம் கொள்வதற்கு இசைய விளக்கவேண்டி யிருப் பதைச் சிந்தித்துப் பார்க்கவும். இவையெல்லா மிருக்கட்டும்,

'அதுவே இறைச்சி, இறைச்சி தானே பொருட்புறத்து அது' என வெகு பாடுபட்டுத் தொல் காப்பியம் உணர்த்துவதில் என்ன இலக்கண வரம்பு அடங்கி யிருக்கிறது? இலக்கண வரம்பை உணர்த்தும் தொல் காப்பியம் அதற்கு அன்னியமாக மற்றோர் கருத்தையும் புகட்டுகிறதென்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இதில் இன்னும் சந்தேக மிருந்தால் கீழ் காண்பதாற்றெளிக.

(6) இறைச்சியிற் பிறக்கும் பொருளும்

— தொ. பொருளியல் 36

... இறைச்சி பொருள்

5-ல் காணும் இறைச்சி—பொருள் என்பவற்றை இதிற் காட்டி, "இடையெனும் இறைச்சியினின்றே பொருளெனும் இறுதி பிறக்கும்" எனல்.

முதலினின்றே இடையும் இறுதியும் ஆகும், இடையை முதல் வகுத்தது எனத் தொல்காப்பியம் கூறுவது ஞாபகமிருக்கலாம். இவற்றுள் ஆதி இடையையும் அவ்வாறு செய்யப்பட்ட இடை அந்தத்தையும் செய்யுமென நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஒன்றை யொன்று செய்வதை இது இதை ஈனும் இது இதில் பிறக்கும் என்று நூல்கள் மாற்றிக் கூறுகின்றன. அதற்கு இசையவே இதில் இடையினின்று இறுதி பிறக்கும் என விளக்கும் விவரம் காண்க.

ஆ எனும் முதலின் இடையே இரண்டெனும் வகை, அவ் வகையே அது, அதுவே இறைச்சி, அவ்விறைச்சியினின்றே பொருள் பிறக்கும் எனச் சூத்திரங்கள் ஒன்றை யொன்று தழுவி விளக்குவதைக் கவனித்தீர்களா? நிற்க, 3-ல் காணும் சூத்திரம் 'இரண்டெனும் வகையே அது' எனக் கூறுவதை ஆராய்ந்து தெளிந்ததுபோல் அதே சூத்திரம் அவ் வகையெனும் அதுவே நாலு என்றும் உணர்த்துகிற தல்லவா? அந் நாலு என்பதையும் சிறிது ஆராய்வோம். 'சிறப்பின் சான்றோர்' எனத் தொல் காப்பியம் கூறுவதாக நான் எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். அச் சான்றோர் என்பதைச் சான்ற எனக் காட்டி களவியல் 20-ல் 'அருமை சான்ற நாலிரண்டு வகையின்' எனக் கூறி இடையாகிய நாலிரண்டெனும் வகையின் இறுதியே சான்ற எனும் அருமை என்று தொல் காப்பியம் உணர்த்துகிறது. சிறப்பின் சான்றோர் எனக் கூறுவது இதில் 'வகையின் சான்ற' என உணர்த்து

வதையே என்ப தறிக. இடையாகிய நாலெனும் இரண்டே வகை எனவும், இடையாகிய சிறப்பின் இறுதியே சான்றோர் எனவும் தனித் தனியே கூறும் இரு சூத்திரங்களின் கருத்தை ' அருமை சான்ற நாலிரண்டு வகையின் ' எனும் ஓர் சூத்திரம் நிச்சயித்து சான்ற எனும் சான்றோரே அருமை எனவும் உணர்த்தும் நேர்மை தெளிவாகத் தெரிகிறதன்றோ ?

இவ்வாறு இருக்கும்போது இயலதிகாரத்திற்கிசையவே சூத்தி ரங்களை ஏற்க வேண்டும் என்பது பொருந்துமா? இவ்விதி நமது அனுபவத்திலுள்ள உரை முறைகளுக்கு இருக்கலாம், நான் எடுத் துக்காட்டும் கருத்து இவ்வரம்பு கடந்தது. இவற்றின் நாமங்க ளென ஓரிடத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள ஒரு சொல்லையோ எழுத்தையோ அன்றி ஓர் இலக்கத்தையோ சோதித்துப் பார்த்தால் அது இந்த நூலில் காணும் நூற்றுக்கணக்கான சூத்திரங்களிலும் அதற்கே நாமமா யமைந்து அவ்வச் சூத்திரக் கருத்தை விளக்கும். இவ்வற்புதத்தைக் கண்டாலன்றோ நன்னூல் தொல்காப்பியத்தின் பெருமையும் அவற்றின் ஆசிரியர்களது திறமையும் விளங்கும்.

எவரும் எத்தகைய கொள்கைகளையும் இவ்விரு நூல்களிலும் புகுத்தமுடியாதபடி ஒன்றையொன்று விளக்கும் விதத்தில் சூத்திரங்கள் அமைந்திருப்பதையும் அவற்றையே நூல்கள் அனைத்தும் விளக்குவ தையும் அறிந்தால் தானே நன்னூலாரும் தொல்காப்பியரும் தெய்வ அருள் பெற்றவர்கள்தான் என்பது புலப்படும். இவ்வுண்மையைக் கண்டால் நன்னூலும் தொல்காப்பியமும் தற்காலத்திற்கு வேண் டிய இலக்கண வரம்பைக் கூறவில்லை எனத் தீர்மானித்து புது இலக்கண நூல் தேவையென்றெண்ணி அதற்கெவரும் முயற்சிப் பாரா ? இப்போக்குக்கிசைய இவர்கள் எடுத்துக் காட்டும் ' பழை யன கழிதலும் ' எனும் சூத்திரக் கருத்தை இதே நூலில் விளக்கி யிருக்கிறேன். இதுவரை ஆராய்ந்ததில் முதலிடை இறுதியென வகுத்துக்காட்டி அவற்றிற்கு எழுத்தாகவும் சொல்லாகவும் இலக்க மாகவும் நாமங்களை உணர்த்தக் கண்டோம், இவற்றின் உற்பத்தியைக் கவனிப்போம்.

(7) உகர இறுதி அகர இயற்றே

—தொ. உயி. மயங். 52

| | | |
|---|---|---|
| அகரம் | ... | உகரம் |
| | | இறுதி |

" உகரமெனும் இறுதியை இயற்றிய முதலே அகரம் " எனல். 6—ல் இடையினின்று இறுதி பிறக்கும் என்பதற்கிசைய இதில் இறுதியை முதலே இயற்றும் என்பதறிக.

(8) உகரம் வருதல் ஆ வயினான

—தொ. குற். புண. 33

ஆ வயின் உகரம்

2-ல் முதலே ஆ 7-ல் இறுதியே உகரம் என்பதை இதிற்காட்டி "ஆ எனும் முதலினின்று ஆனதே வயின், அவ்வயின் எனும் இடையினின்று வரும் இறுதியே உகரம்" எனல்.

7-ல் உகரமெனும் இறுதியை முதலே இயற்றும் என்பதற் கிசைய இதில் உகரமெனும் இறுதி முதலிடையினின்று வரும் என உணர்த்துவது கண்டு தெளிக.

2-ல் முதலே ஆ எனக் கூறுவிடில் இச் சூத்திரத்தில் ஆ எனும் முதலினின்றே வயின் எனும் இடை ஆனது என உணர்த்த இட முண்டா? அச்சூத்திரக் கருத்தை நான் விளக்கியதே சரியென்று தெரிந்ததா? 7-ல் இறுதியே உகரம் என நான் எடுத்துக் காட்டி யதை இச்சூத்திரம் வயினெனும் இடையினின்றே உகரம் வருத லென நிச்சயிப்பது விளங்கிற்று? இதற்கு இது பெயரென ஓரிடத் தில் கூறியிருப்பது கண்டு அச் சொல்லையோ எழுத்தையோ தொல் காப்பியம் நன்னூலில் எங்குக் காண்கினும் அதுவாகவே ஏற்க வேண்டுமே அல்லாது அங்கங்கும் இது முதல் இது இறுதி எனக் கூறவில்லையே என்றெண்ணக்கூடாது.

சூத்திரங்கள் கூறுவதைத் தள்ளாமலும் இல்லாததைப் புகுத் தாமலும் அவை உணர்த்தும் தொடர்பிற்கு இசைய உள்ளதை உள்ளவாறு நான் எடுத்துக் காட்டுவது உரை முறைகளுக்கு மாறா யிருப்பது கண்டு தொல்காப்பியத்தைச் சீர்குலைப்பதாய்ச் சிலர் நினைக்கலாம். சீர்குலையாமல் தொல்காப்பியத்தைக் காக்கும் அவர் களுக்கு இரண்டோர் செய்திகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமறைகளை இயற்றிய அனைவரையும் தெய்வ அருள் பெற்றவர் களென்று கருதுகின்றோம். அக்கூட்டத்துள் தொல்காப்பியரை யும் பவணந்தி முனிவரையும் சேர்க்கலாமென்றாலோ இவர்கள் எத் திருமறையையும் இயற்றியதாய்த் தெரியவில்லை. ஆகையால், இவர்கள் இருவரும் நம்போன்றவர்களெனத் தெரிகிறதன்றோ? இத்தகைய நம்போன்ற இவர்கள் இயற்றிய இலக்கண வரம்பிற்கு இசையவே தெய்வத்தைக் கண்ட முக்தர்களின் அருள் வாக்கு அமைய வேண்டும் எனத் தீர்மானிப்பது ஏற்கத்தக்கதா? நிற்க. 'என்று கூறுவார்கள் புலவர்கள்' என்பதைப் பல சூத்திரங்களில்

தொல்காப்பியர் உணர்த்தியிருப்பதாக ஒப்புக் கொள்ளும்போது அவர் வெகு நூல்களை ஆராய்ந்துதான் தொல்காப்பியத்தை இயற்றியிருக்கவேண்டுமெனத் தெரிகிறதன்றோ? இவர் கற்ற நூல்களும் அத்துடன் அக்காலத்தில் இருந்த நூல்களும் எங்கே? என்று கேட்டால் அவை வெள்ளப் பெருக்காலும் அன்னியர் படையெடுப்பாலும் நாசமாயிற்றென்று கூறும் சமாதானம் பொருந்துமா? அவை நாசமானபோது தொல்காப்பியம் மாத்திரம் மிஞ்சியதெப்படி? எனக் கேட்டால் என்ன பதில் கூறுவது?

தொல்காப்பியத்திற்கு ஆதாரமாயிருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் இப்போதும் இருக்கின்றன. அவையும் உணர்த்துவது இவ்விரு கருத்துக்களையே. அவ்விரண்டுள் நான் எடுத்துக் காட்டும் கருத்தை ஆராய்ந்தறிந்து அவற்றைத் திருமறையென்று கொள்ளாக் குறையாலேயே அவை அனைத்தும் மங்கி மண்ணாகும் நிலையில் இருக்கின்றன. ஆதார நூல்களுக்கே (நான் எடுத்துக் காட்டும் கருத்தைக் காணாத குற்றத்தால்) இக்கதி நேர்ந்திருக்கும்போது தொல்காப்பியம் திருமந்திரம் திருக்குறள் முதலிய ஆதேய நூல்களுக்கு இதிலும் மோசமான நிலை வாய்க்குமென்றெண்ண இடமேற்படுகிறதன்றோ? நீண்ட நாட்களாக நிலைத்துள்ள இவற்றைப் பற்றி அவ்வாறு சந்தேகிக்க இடமில்லையெனக் கருதுவோர் நெடுங்கால அனுபவத்தில் இருந்த ராமாயணத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கும் நிலையைச் சிறிது சிந்தித்துப் பார்த்தல் நலம். அதற்கிசையவே திருக்குறள் திருமறையா? எனும் ஆராய்ச்சியும் நடைபெற்று வருவதைச் சிந்தித்துத் தெளிக.

இவற்றையெல்லாம் உத்தேசித்து நூலாசிரியர்களின் பெருமையை எடுத்துக்காட்ட நூல்களிலுள்ள மற்றோர் கருத்தை விளக்கும் என்னைக் குறைகூறுவோர் இந்த நூலை முழுதும் வாசித்து முடிந்த பின் குறை கூறட்டும். நான் என் சுயக் கருத்தாய் எதையும் கூறவில்லை, அவ்வளவு அறிவாராய்ச்சியோ அனுபவமோ எனக்கில்லை. நூல்கள் ஒன்றையொன்று விளக்குவதை எடுத்துக் காட்டுபவனே நான். ஆகையால், இந்த நூல் மதிப்புற்றாலும் மிதிக்கப்பட்டு மண்ணானாலும் எனக்கு மனக் கவலையோ மகிழ்ச்சியோ ஏற்பட இடமில்லை. ஆனல், நம் நாட்டிற்கும் நமக்கும் நன்மை பயக்குமென நம்பி நான் இதை எழுதியதால் ஒவ்வொருவரும் இந்த நூலை நன்கு ஆராய்ந்து பார்த்து விட்டுத் தள்ளவும்.

ராமாயணத்தைப் புனித நூலென்றேற்க ஆதாரம் காணச் சிலரும் அவர்களுக்கு எடுத்துக்காட்டத் தக்க ஆதாரம் தேடிச் சிலரும் தமிழ் நாட்டில் தவித்தலைவதைக் காண்கின்றோம். இவ் விரு பிரிவினரும் ஏகமனதாயேற்று மனச் சமாதானம் அடைய ராமாயணச் செய்யுளொன்றில் உள்ள ஓர் வரியை இதே நூலில் விளக்கியிருக்கிறேன். இவ்விரு கூட்டத்தாரும் இதைக் கூர்ந்து கவனித்தாலே இந்த நூல் தள்ளத்தக்கதா ? அன்றி கொள்ளத் தக்கதா ? என்பது தோன்றும். அதைத் தெரிய இந்த நூலை முழு தும் வாசித்தால்தான் முடியும். ஆகையால் சிறிது பொறுமை யுடன் இதை வாசிக்கவும்.

(9) முதற்று அதுவே

—தொ. வேற். மயங். 12

| | |
|---|---|
| முதற் | று |
| | அது |

3-ல் இடையே அது என்பதை இதிற்காட்டி, "முதலின் இடையாகிய அதுவே று" எனல். கிளவியாக்கம் 21-ல் 'கார ணம் முதற்றே' எனக்கூறி முதலின் இறுதிக்குக் காரணம் எனும் சொல்லும் றே எனும் எழுத்தும் நாமங்கள் என உணர்த்துகிறது. முதற்று என இடையையும் முதற்றே என இறுதியையும் விளக் கும் விபரத்தைக் கவனித்தீர்களா ? இதை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

(10) உறு பகை வேந்திடை

—தொ. புறத். 5

| | | |
|---|---|---|
| பகை | று | உ |
| | வேந்து | |
| | இடை | |

8-ல் முதலிடையினின்று வந்த உகரமே இறுதி யெனவும், மேற் காண்பதில் அது எனும் இடையே று எனவும் கூறுவதை இதிற் காட்டி, "உகரமெனும் இறுதிக்கும் று எனும் இடைக்கும் முதலே பகை, அப்பகையின் இடையாகிய று என்பதே வேந்து" எனல். உ என்பதை இறுதியென ஓர் சூத்திரத்திலும் று என்பதை இடை யென மற்றோர் சூத்திரத்திலும் கூறி, அவ்விரண்டையும் இவ் வொரே சூத்திரத்தில் காட்டி இவற்றின் முதலே பகையென விளக்கும் விவரம் காண்க. இப்பகையை அடுத்துத் தெளிவாய்க் காணலாம்.

(11) வேந்துறு தொழிலே யாண்டின தகமே

—தொ. கற்பியல் 48

| | | |
|---|---|---|
| ஆண்டு | று | உ |
| | வேந்து | |
| | தொழில் | அகம் |

10-ல் இடையை று எனும் வேந்து இறுதியே உ என்பதை இதிற்காட்டி, 5-ல் முதலைப் 'புறம்' என்பதற்கிசைய இதில் இறுதியை 'அகம்' என உணர்த்தி, "இடையாகிய று எனும் வேந்தே தொழில், இத்தொழிலெனும் இடையின் முதலே ஆண்டு, அம் முதலெனும் ஆண்டின் இறுதியே உகரமெனும் அகம்" எனல்,

இவ்வாறு நான் எடுத்துக் காட்டுவது வெறுப்பாகவும் வியப்பாகவும் தோன்றலாம். ஒவ்வொரு எழுத்தையும் சொல்லையும் நூற்றுக்கணக்கான ஆதாரங்கள் காட்டி விளக்கலாம். அப்படி விளக்குவதென்றால் எடுத்த செய்தி தடைபடும். ஆகையால், இரண்டோர் முக்கிய ஆதாரங்களை மாத்திரம் காட்டிச் செல்வதறிக. ஆனால், இவை அடுத்தடுத்து விளக்கப்படும். 9, 10, 11 இம்மூன்றிலும் 'அது எனும் இடையே று, அவ்விடையாகிய று என்பதே வேந்து, அவ்வேந்தே தொழில்' என று என்பதைக் காட்டி விளக்கும் விபரமறிக.

(12) நிலந்தீ நீர்வளி விசும்பொடு ஐந்து

—தொ. மரபியல் 90

| | |
|---|---|
| நிலம் | நீர் |
| தீ | வளி |
| ஐந்து | விசும்பு |

2-ல் முதலெனப்படுவது ஆ என்பதுபோல் அகத்திணையியல் 4-ல் 'முதலெனப்படுவது நிலம்' எனக்கூறும் தொல்காப்பியம் அந் நிலம் என்பதை இதிற்காட்டி, "முதலெனப்படும் நிலமே தீ இடையாகிய நீரே வளி (அதாவது காற்று) இவ் வளி எனும் விசும்பின் முதலாகிய தீ எனும் நிலமே ஐந்து" எனல். செய்யுள் எழுந்த நிலம், பெயலே ஐந்து என நாம் அறிந்ததை இச்சூத்திரம் நிச்சயிப்பதறிக.

(13) ஆ வயின் மூன்றொடு

— தொ. பெயரியல் 13.

| | | |
|---|---|---|
| ஆ | வயின் | மூன்று |

2-ல் முதலே ஆ 8-ல் இடையே வயின் என்பதை இதிற்காட்டி, "இறுதியாகிய மூன்றினுடைய இடையே வயின் முதலே ஆ."

2-ல் வகையாகிய இரண்டெனும் இடையின் முதலே ஆ எனக் கூறும் தொல்காப்பியம் இதில் மூன்றெனும் இறுதியின் முதலே ஆ என உணர்த்துவதைக் கவனித்தீர்களா? இவற்றால் முதல்-இடை-இறுதி என வகுத்துக் காட்டி இவைக்கே ஒன்று-இரண்டு-மூன்று எனும் இலக்கங்களையும் நாமங்களாய்ச் சூட்டியிருப்பது தெரிகிறதன்றோ?

2-ல் முதலுக்கு இடையே இரண்டு 13-ல் இறுதியே மூன்று 3-ல் இடையே நான்கு. 12-ல் முதலே ஐந்து என உணர்த்துவதும் கண்டு தெளிக. 5-ல் 'பொருட்புறத்ததுவே', 11-ல் 'ஆண்டின தகமே' 12-ல் 'விசும்பொடு ஐந்து', 13-ல் 'மூன்றொடு ஆவயின்' எனத் தொடர்பை உணர்த்துவது எதற்கெனச் சிந்தித்துத் தெளிக.

(14) வேண்டிய கல்வி ஆண்டு மூன்று இறவாது

—தொ. கற்பியல் 47

ஆண்டு கல்வி மூன்று

'வேண்டிய' என்பதைப் பல சூத்திரங்கள் கொண்டு விளக்க வேண்டும். இங்கு அது அவசியமில்லையென விடப்பட்டது. 11-ல் முதலே ஆண்டு 13-ல் இறுதியே மூன்று என்பதை இதிற் காட்டி, "ஆண்டு—மூன்று எனும் முதலிறுதியின் இடையே இறவாக் கல்வி" எனல். ஆண்டையும் மூன்றையும் முதலிறுதி என உணர்த்துவதை ஆராய்ந்து அறியாவிடில் அவ்வாண்டு மூன்றின் இடையே இறவாக் கல்வி எனப் புகட்டுவதைக் காண்பதெப்படி? நன்னூல் தொல்காப்பியத்தின் தன்மையை ஒரு சிறிது தெரிந்தோம்; இவை கூறுவதையே மற்ற நூல்களும் விளக்குவதாகக் கூறினேன் அல்லவா? அதையும் சிறிது கவனிப்போம்.

(15) சோதித்த பேரொளி மூன்றைந்தென நின்ற
ஆதிக்குள்ளாவ தறிகிலா தார்கள்
நீதிக்க ணீசன் நெடுமால் அயனென்று
பேதித்திவரைப் பிணங்குகின் றார்களே

—திருமந்திரம்

| | | |
|---|---|---|
| ஐந்து | ஒளி | மூன்று |
| ஆதி | | நீதி |
| ஈசன் | நெடுமால் | அயன் |

12-ல் முதலே ஐந்து 13-ல் இறுதியே மூன்று எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஐந்தாகிய ஈசனெனும் ஆதியி

னின்று ஆவதே ஒளியெனும் மாலும் அந்தமாகிய மூன்றெனும் அயனும் என்பதை உலகோர் அறியாது பிணங்குகின்றார்களே" என்பதறிக. தொல்காப்பியம் ஆதியந்தமே ஐந்தும் மூன்றும் எனக் கூறுவதைக் காட்டி மூன்றெனும் அந்தம் ஐந்தெனும் ஆதிக் குள்ளிருந்து ஆவதெனத் திருமந்திரம் விளக்குவதைக் கவனித் தீர்களா ?

இவ்விவரத்தைத் தொல்காப்பியத்தில் கண்டு தெளியாவிடில் இப் பாடலின் கருத்து என்னவென்று தீர்மானிப்பது? தொல்காப் பியம் கூறும் முப்பொருள்களையே திருமந்திரம் விளக்குவதாகவும் திருமந்திரம் விளக்கும் முப்பொருள்களையே தொல்காப்பியம் கூறுவதாகவும் ஏற்க இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமோ ? வேண்டுமெனில் மற்றொன்றும் காட்டுகிறேன்.

(16) நின்றனன் மாலொடு நான்முகன் றானுகி
நின்றனன் றானிலங் கீழொடு மேலென

—திருமந்திரம் 3038

| | | |
|---|---|---|
| நிலம் | மால் | நான்முகன் |
| கீழ் | | மேல் |

தொல்காப்பியத்திற்கிசைய அந்தமும் இடையும் ஐந்தெனும் ஆதிக்குள்ளிருந்து ஆவதென 15-ல் கூறும் திருமந்திரம், 12-ல் ஐந் தெனும் ஆதியே நிலம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே இதிற் காட்டி, "நான்முகன் எனும் அந்தமும் மாலெனும் இடை யும் ஆகிய ஆதி கீழெனும் நிலமாய் நின்றான்" எனல்.

மூன்றெனும் அந்தத்தின் ஆதியே ஐந்தெனவும் அவ்வைந் தெனும் ஆதியே நிலமெனவும் திருமந்திரம் நமக்கு விளக்குவது தொல்காப்பியம் கூறுவதையன்றோ ? இதை மறக்கவேண்டாம்.

தொல்காப்பியம் அகத்திணையில் 4-ல் 'முதலெனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே' எனக் கூறுவதையும், அம் முதலெனும் நிலத்தை முன் 12-ல் 'ஐந்து' எனத் தொல்காப்பியமே உணர்த்துவதையும் ஆராய்ந்தறிந்து நமக்குணர்த்தும் திருமூலர் வாக்கை ஏற்பதா? அல்லது இச் சூத்திரம் நமது அனுபவத்திலுள்ள நிலங் காலத் தியல்பைப் பற்றிக் கூறுவதாக நமக்கு உணர்த்தும் உரைமுறை களின் கருத்தை ஏற்பதா? என்பது பற்றிச் சிறிது சிந்தித்துத் தெளிக. இச்சூத்திரத்தை உரை முறைகளின் கருத்து இவ்வாறு.

உணர்த்துவதோடு விடவில்லை, பல சூத்திரங்களுக்கு ஆதாரமாய் விளங்கும் 2-ல் காணும் 'முதலெனப்படுவது ஆயிருவகைத்தே' என்பதும் இச்சூத்திரக் கருத்தை உடையதே எனத் தீர்மானித்து விட்டது. 'முதலெனப்படுவது நிலம்' எனும் முழுச் சூத்திரத்தை இதே நூலில் அடுத்து விளக்குகிறேன் கண்டு களியுங்கள்.

தொல்காப்பியமும் திருமந்திரமும் ஒன்றையொன்று தழுவி இச் செய்தியையே உணர்த்துவது உண்மையானால் இம் மூன்றையும் சிவன்-மால்-அயன் எனத் திருமந்திரம் கூறுவதுபோல் தொல்காப் பியமும் கூறவேண்டுமே எனில், அதையும் கவனிப்போம்.

(17) அவனறிவாற்ற அறியுமாகலின்

—தொ. கற்பியல் 6

அவன் ... அறிவு

15-ல் முதலே ஈசன் எனக் கூறும் திருமந்திரம் 'சிவனவன் ஈசனென் றுண்மையையோரார்' எனக்கூறி ஈசனெனும் முதலே அவன் என உணர்த்துவது இதில் தொல்காப்பியம் கூறுவதையே "அவ்வெனும் ஆதியால் ஆற்றப்பட்ட அந்தமெனும் அறிவு அறியுந் தன்மை யுடையது" எனல்.

(18) முன்னத்தின் உணருங் கிளவி யெல்லாம்

—தொ. கிளவியாக். 57

முன் அத்து கிளவி எல்லாம்

"முதலே முன் இடையே அத்து இம் முன் அத்து எனும் முதலிடையின் இறுதியே எல்லாம். இவ்வெல்லா மென்னும் இறுதியே உணருங் கிளவி" எனல்.

உவமையியல் 31ல் 'வழக்கத்தான' வழக்கெனும் முதலி னின்று ஆன இடையே அத்து எனக் கூறும் தொல்காப்பியம் மேற் காண்பதில் முன்னத்தின் கிளவி என உணர்த்தும் விவரம் காண்க. இதையும் மேற்காண்பதையும் முன்னுரையில் விளக்கி யிருக்கிறேன்.

(19) அழிவு தலை வந்த சிந்தைக் கண்ணும்

—தொ. களவியல் 30

அழிவு தலை சிந்தை கண்

'நல் வகையினுடைய தலை' எனத் தொல்காப்பியம் கூறுவதாக வும் அத்தலையே வகையைச் செய்யும் எனத் திருமந்திரம் உணர்த்து வதாகவும் முன்னுரையில் காட்டியது ஞாபகம் இருக்கலாம். அத்

தலையையே இதிற் காட்டி, அத்தலைக்கே அழிவு எனும் நாமமும் உண்டெனை உணர்த்தி, "முதலே அழிவெனும் தலை, இடையே சிந்தை, இறுதியே கண். இச்சிந்தையும் கண்ணும் முதலாகிய அழிவெனும் தலையினின்றே வந்தவை" எனல்.

இது வெகு முக்கியச் செய்தி, பல நூல்களும் மன்முடி விளக்குவது இக்கண்ணையே என்பதை அடுத்துக் காண்பீர்.

(20) சிதைவில என்ப முதல்வன் கண்ணே.

—தொ. மரபியல் 107

முதல்வன் கண்

அழிவில்லாதது

முதல் என்பதை முதல்வனென உணர்த்தி, 19-ல் இறுதியே கண்ணென்பதை இதிற் காட்டி, "ஆதியாகிய முதல்வனின் அந்தமாகிய கண் அழிவில்லாதது" எனல்.

5, 11-ல் முதலிறுதிக்கு 'புறம்—அகம்' எனும் நாமங்கள் உண்டென்பதுபோல இவ்விரு சூத்திரங்களிலும் முதலிறுதியை 'அழிவு—அழிவில்லாதது' என உணர்த்துவதறிக. ஆதியந்தத்திற்குப் பெரும்பாகம் எதிர்மறை நாமங்கள் உண்டென்பதை அடுத்தடுத்துக் காணலாம்.

(21) அகத்து இறைவன்

—தொ. புறத். 17

இறைவன் அகம்

20-ல் முதல்வன் எனக்கூறும் ஆதியை இறைவன் என உணர்த்தி, 11-ல் இறுதியே அகம் என்பதை இதிற் காட்டி, "அந்தமாகிய அகத்து ஆதியே இறைவன்" எனல். 11-ல் ஆதியைக் காட்டி அந்தத்தை உணர்த்த 'ஆண்டினதகமே' என்பதுபோல் இதில் அந்தத்தைக் காட்டி ஆதியை உணர்த்த 'அகத்து இறைவன்' என விளக்கும் விவரம் காண்க. மாலையும் அயனையும் தொல்காப்பியம் கூறுவதை அடுத்துக் காணலாம்.

(22) கண்ணவனுகிக் கலந்து நின்முனே.

—திருமந்திரம் 3037

அவன் கண்

17-ல் முதலே அவன் 20-ல் இறுதியே கண்ணெனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "அவனெனும் முதலினின்று ஆகிய கண்ணெனும் இறுதி அம்முதலெனும் அவனோடு கலந்தே நின்றது" எனல்.

கண் நின்றது எனக் கூறுவதை விட்டு 'நின்றான்' என உணர்த்துவது இறுதிக்கு இவன், அயன் எனும் நாமங்கள் உண்டென்பது பற்றியே. இவற்றிற்கு உயிரற்றதாகவும் ஆணாகவும் பெண்ணாகவும் ஒன்றாகவும் பலவாகவும் கருதும் விதத்தில் நாமங்கள் இருப்பதால் நூல்கள் இவற்றை விளக்குவதில் எழுவாயை அஃறிணையாகவும் பயனிலையை உயர்திணையாகவும் பயனிலையை ஒருமையாகவும் எழுவாயைப் பன்மையாகவும் மாற்றிக் கூறுகின்றன.

ஆதியும் அந்தமுமே அவனும் கண்ணும் என்பதைத் திருமூலர் அறிந்தது தொல்காப்பியத்திலன்றோ? தொல்காப்பியத்தின் கருத்து இதுவே எனத் திருமூலர் காட்டும்போது அதைத் தள்ள இடமுண்டா? இன்னும் கவனிப்போம்.

(23) வழி செய்யுமென் கிளவி.

—தொ வினையியல் 38

வழி என் கிளவி

18-ல் இறுதியே கிளவி என்பதை இதிற்காட்டி, "கிளவி எனும் அந்தத்தையும் என்னெனும் இடையையும் செய்யும் ஆதியே வழி" எனல்.

'என்' என்பதை என்ற என்னும் என ஏற்காது இடையின் நாமமெனக் காட்டுவது வியப்பாய்த் தோன்றலாம். இச் சூத்திரக் கருத்து இதுவே என்பதற்கு ஆதாரம் ஒன்று காட்டுகிறேன்.

I. தன் வயின் வருதலும் வகுத்த பண்பே.

—தொ. பொரு. 49

பண்பு வயின் தன்

13-ல் இடையே வயின் என்பதை இதிற்காட்டி, தன் என்பதை இறுதியென உணர்த்தி, "தன்னெனும் இறுதியும் வயினெனும் இடையும் வருவது முதலெனும் பண்பு வகுத்ததாலேயே" எனல்.

இதில் இறுதியே தன் 23-ல் இடையே என் எனக் கூறும் தொல்காப்பியம் முதலே உன் என உணர்த்துவதை அடுத்துக் காணலாம். இவ்வாறிருக்க, என்னென்பதை என்று என ஏற்பதெப்படி?

II. பொருட் குணம் பண்பே.

—ந. உரியியல் 2

பண்பு குணம் பொருள்

மேற் காண்பதில் முதலே பண்பு 6-ல் இறுதியே பொருள் எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, "பொருளெனும் அந்தத்திற்கும் குணமெனும் இடைக்கும் ஆதி பண்பே" எனல்.

பண்பு, பொருள் என்பவற்றை ஆதியந்தமென விளக்கும் இரு சூத்திரக் கருத்தை இச்சூத்திரமும் இச் சூத்திரக் கருத்தை அவையிரண்டும் நிச்சயித்துக் காட்டும் நேர்மை காண்க. இவ்வாறு இருக்க இச்சொற்களை அவரவர் கொள்கைக் கேற்கக் கொள்ளுவது எப்படி? 23-ல் ஔவி எனும் அந்தத்தையும் என்னெனும் இடையையும் வழி எனும் ஆதியே செய்யும் எனத் தெளிவாக உணர்த்துவதை மறக்க வேண்டாம்.

(24) வழி தலை செய்யும் வகை யுணர்ந்தேனே.

—திருமந்திரம் 2603

வழி வகை ...
தலை

முதலை 23-ல் **வழி** 19-ல் **தலை** எனவும், இடையை 2. 3-ல் **வகை** எனவும் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " ஆதியாகிய வழி எனும் தலை செய்யும் இடையே வகை என்று உணர்ந்தேனே " எனல்.

வழி எனும் தலையே முதல் வகையே இடை என்பதையும், இடையிறுதியை வழியெனும் முதலே செய்யுமென 23-லும் தொல்காப்பியம் கூறுவதை அறிந்த இவர் தொல்காப்பியம் கற்றவரா? அன்றி நாமா? தொல்காப்பியம் கூறுவதை வெகு பாடுபட்டுத் தெரிந்து நமக்கும் திருமூலர் உணர்த்தும் 'வகை' என்பதை தொல்காப்பியத்திலேயே வெவ்வேறாய்க் கொண்டால் மற்ற நூல்கள் விளக்குவதைத் தெரிவதெப்படி?

திருக்குறள் தொல்காப்பியம் முதலியவை நாட்டிற்குப் பயன் படுவதுபோல் சிறிதும் பயன்தாராத் திருமந்திரம் இருந்தும் இல்லாததே, இதைக் காலப் போக்குக்குச் சிலர் கையாளுகின்றனர் என்று பெரும் புலவரே ஒருவர் சொல்லக் கேட்டேன். இதற்குக் காரணம் தொல்காப்பியத்தைக் கற்றவர் திருமூலரே என்பதை அறியாததே. அத்தகையோர் இந்த நூலைக் கண்டேனும் தத்தம் கொள்கைகளை மாற்றினும் மாற்றலாம். இன்னும் சிறிது கவனிப்போம்,

(25) போற்றும் பெருந் தெய்வம் தானே பிறரில்லை
காற்றது ஈசன் கலந்து நின்றானே.

—திருமந்திரம் 3009

பிறர் பெருந் தெய்வம் ...
அது
ஈசன் காற்று

15-ல் ஆதியே ஈசன் எனக் கூறும் திருமந்திரம் அதை இதிற் காட்டி, இடையை 3-ல் அது 12-ல் வளி அதாவது காற்று எனத்

தொல்காப்பியம் கூறுவதையே உணர்த்தி, "போற்றத் தகுந்த பெருந்தெய்வம் ஈசனெனும் பிறரில்லை, அவ்வீசனோடு கலந்து (தொடர்பாயுள்ள) இடையாகிய காற்றெனும் அதுவே பெருந் தெய்வம்" எனல்.

தெய்வம் என்பதை இவ்வாறு திருமந்திரம் கூறுவது கண்டு திகைக்கவேண்டாம், இதைத் திருமூலர் கண்டது தொல்காப்பியத் தில்தான், தொல்காப்பியம் இடையே தெய்வமெனக் கூறுவதை இதே நூலில் அடுத்துக் காணலாம்.

(26) காற்றதென்றும் சாகாத கல்வி யென்றும் கண்டு கொண்டேன்.

—அருட்பா பேரண்டக் கண்ணி

... காற்று ...
அது
கல்வி

இடையை 12-ல் வளி 3-ல் அது 14-ல் கல்வி எனத் தொல்காப் பியம் கூறுவதையே இதிற்காட்டி, இதிற் காணும் வளி என்பதை 25-ல் திருமந்திரம் 'காற்று' என உணர்த்துதற் கிசைய "காற்றெ னும் அதுவே சாகாத கல்வி என்று கண்டுகொண்டேன்" எனல்.

இவர் விளக்குவது தொல்காப்பியம் கூறும் இறவாக் கல்வியை யன்றோ? நாம் கற்கும் தொல்காப்பியந்தானே இவரும் கற்றிருக்க வேண்டும். நாம் கையாளும் கருத்தும் ராமலிங்க சுவாமிகள் அறிந்து நமக்கு 'காற்றெனும் அதுவே இறவாக் கல்வி' என உணர்த்தும் மற்றைய கருத்தும் அடங்கியிருப்பது தொல்காப்பியத் தில் என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? ஆமெனில், நமது அனுபவத்தில் உள்ள கருத்து உத்தமனாவதற்கு உகந்தது, அவர் கண்டதோ உத்தமர்க்குதவும் கருத்து என முழுமனதோடேற்க. உத்தமரையும் உத்தமரல்லாதாரையும் மாற்றறிந்து வேறு பிரிக்கத் தக்க உரைகல்லே தொல்காப்பியமெனத் தீர்மானிக்க இடமேற்படு கிறதன்றோ?

தொல்காப்பியத்தை முதல் நூலென்றும் திருமந்திரத்தை இடை நூலென்றும் அருட்பாவைக் கடைசி நூலென்றும் கருதக் கேள்விப்பட்டிருக்கிறேன். இம்மூன்றும் ஒன்றை யொன்று தழுவி உணர்த்துவதை யன்றி வேறெதையும் மற்ற நூல்கள் கூறுமா? ஆகையால், தொல்காப்பியக் கருத்தை முதலில் தெரியவேண்டு மெனத் தெரிகிறதன்றோ? ஆமெனில், சூத்திரங்களின் கருத்தைக் காண அவ்வச் சூத்திரத்திலுள்ள சொற்களை நன்கு ஆராய்ந்து அறியவேண்டு மென்பதை மறக்கவேண்டாம். அதற்கான இரண்

டோர் செய்தியை எடுத்துக் காட்டிக் குறிப்பெனும் இதை முடிக்கிறேன்.

(27) தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்.

—தொ. இடையியல் 13

ஏ சிறப்பு தெளிவு
ஓ

முன்னுரையில் பல சூத்திரங்கள் கூறுவதாக நான் எடுத்துக் காட்டிய சிறப்பு என்பதையும் 1-ல் ஆசிரியரின் தன்மையை உணர்த்துவதாக நாம் கருதும் நன்னூல் சூத்திரத்தில் காணும் தெளிவு என்பதையும் இதிற் காட்டி, "தெளிவெனும் அந்தத்தின் ஆதியாகிய ஏ என்பதே சிறப்பெனும் இடையின் ஓ" எனல். சிறப்பு–தெளிவு எனும் இடையிறுதியின் முதலுக்கு ஏ எனும் எழுத்தும் ஓ எனும் எழுத்தும் நாமங்களென விளக்கவே இவ்வாறு உணர்த்தும் விவரம் காண்க. இத் 'தெளிவு' என்பதை அடுத்துப் பல நூல்கள் விளக்குவதைக் காணலாம்.

(28) சிறப்பின் முதலன மூன்றும்.

—தொ. புறத். 33

முதல் சிறப்பு மூன்று
ல ன

27–ல் இடையே சிறப்பு 13–ல் இறுதியே மூன்று என்பதை இதிற் காட்டி, "இடையாகிய ன எனும் சிறப்பின் முதலே ல, இறுதியே மூன்று" எனல்.

இதில் முதலே 'ல' எனக் கூறும் தொல்காப்பியம் அகத்திணையியல் 4-ல் 'முதலெனப்படுவது நிலம்' எனவும் உணர்த்துகிறது. இவற்றிற்கிசைய நன்னூல் பெயரியல் 19-ல் 'முதல நிலன்' எனக் கூறி முதலுக்கு ல எனும் எழுத்தும் நிலன் எனும் சொல்லும் நாமங்களென விளக்குகிறது. இதை ஆராய்ந்து தெரியாவிடில் திருக்குறள் முதற் பாவில் 'அகர முதல' எனக் கூறுவதை எவ்வாறேற்பது? என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்க.

(29) அந்த மில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்.

—தொ. கற்பியல் 5.

பிறர் சிறப்பு அந்தம்
திறம் இல்
உம்

25-ல் முதலே **பிறர்** எனத் திருமந்திரம் விளக்குவது இதில் காண்பதையே. 27, 28-ல் இடையே சிறப்பு 10-ல் அந்தமே உம் என்பதை இதிற் காட்டி " இடையெனும் சிறப்பின் ஆதியே பிறர் அந்தமே இல், இவையே பிறர்-திறம்-உம் " எனல். பிறர்–சிறப்பு-இல்லே பிறர்-திறம்–உம் என விளக்குவ தறிக.

28-ல் சிறப்பின் முதலே ல எனக் கூறும் தொல்காப்பியம் 28-ல் சிறப்பின் அந்தமே உம் என உணர்த்துவதைக் கவனித்தீர்களா? இவற்ருல், இடையே சிறப்பு இச் சிறப்பிற்கு முதலிறுதியாகிய ஆதியுமந்தமும் லவும் உம்மும்' என உணர்த்துவது தெளிவாகவே தெரிகிறதன்ருே ? முதலிடையிறுதி என வகுத்துக் காட்டி அவற்றிற்கு எழுத்தாகவும் இலக்கமாகவும் சொல்லாகவும் ஏராளப் பெயர்கள் சூட்டப்பட்டிருப்பதால் இப் பெயர்களை முதலில் தெரிய வேண்டியது அவசியம் என்பதறிக. இவ்விவர மறியாவிடில் சூத்திரக் கருத்தையே தெரிய முடியாது என்பதற்கு ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

(30) குணம் தொழில் கல்வி சிறப்பாம்.

—ந. பொதுவியல் 42

குணம்
தொழில்
கல்வி
சிறப்பு

11-ல் **தொழில்** 14-ல் **கல்வி** 27-ல் **சிறப்பு** 23-IIல் **குணம்** எனக் கூறுவதையே இதிற் காட்டி, " இடையாகிய குணம் தொழில் கல்வியே சிறப்பாம் " எனல்.

இவற்றைத் தனித்தனியே இடையின் நாமங்களெனக் கூறும் நான்கு சூத்திரக் கருத்தை இதுவும் இச்சூத்திரக் கருத்தை அவை நான்கும் நிச்சயிக்கும் விவரம் கண்டால் இயலதிகாரங்களுக்கும் இடங்காலத்திற்கும் ஏற்றவாறு சூத்திரக் கருத்தைக் கொள்ளத் துணிவேற்படுமா? நன்னூலும் தொல்காப்பியமும் இறவாக் கல்வியைப் புகட்டத் தோன்றியவை என்பது ஞாபகத்திலிருக்கட்டும். இனி எடுத்துக் காட்டப்போகும் நன்னூல் தொல்காப்பியச் சூத்திரங்களை எவ்விதச் சந்தேகமுமில்லாமல் ஊன்றிக் கவனிக்க ஊக்கமளிக்குமென்றெண்ணியே இக்குறிப்பை எழுதினேன்.

# தமிழ் மறை

## (1) வருத்துக் காட்டல்

1. சுட்டு முதலிறுதி இயல்பாகும்மே

—தொ. உயி. மய. 55

| | | |
|---|---|---|
| முதல் | சுட்டு | இறுதி |
| | | இயல்பு |

" முதலுக்கும் சுட்டெனும் இடைக்கும் இறுதியே இயல்பு " எனல். இச்சூத்திரக் கருத்தை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் அடுத்துக் காணலாம்.

2. இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்

—தொ. வேற். மயங். 20

| | | |
|---|---|---|
| படு | வயின் | பொருள் |
| | வரையார் | நெறி |
| தல் | இடை | நிலவு |
| | உருபு | எல்லாம் |
| | | இறுதி |

இதில் காணும் கீழ் வரி இங்குத் தேவையில்லை எனினும் அடுத்தடுத்து இப்பெயர்கள் இங்குக் காண்பதுபோல் அததற்கே நாமமாயமைந்து அவ்வச் சூத்திரக் கருத்தை விளக்குவதை எடுத்துக் காட்ட ஆதாரமாய் இருக்குமென்றெண்ணி விளக்கியிருக்கிறேன். ஆகையால், மேல் வரியை மாத்திரம் கவனிப்போம்.

உருபியல் 17–ல் ' எல்லா மென்னும் இறுதி ' எனக்கூறி ' இறுதியே எல்லாம், எல்லாமே இறுதி 'யென்று உணர்த்தியிருப்பதால் அவ்வெல்லாம் என்பதையே இதிற்காட்டியதோடு "இறுதியே எல்லாம், இடையே உருபு" எனல்.

இவ்விரு சூத்திரங்களை இவ்வாறு நான் எடுத்துக் காட்டியிருப்பது வியப்பாயும் விளக்கமில்லாதது போலும் தோன்றலாம். சற்றுப் பொறுமையாய்த் தொல்காப்பியத்தின் உரையை வாசிப்பதாகக் கருதாமல் தொல்காப்பியத்தையே படிப்பதா யெண்ணிப் பார்க்கவும். இவ்விரு சூத்திரங்களையும் இவ்வாறே ஏற்க வேண்டும்

என்பதை நானே மற்றெவருமோ சொல்லவேண்டியதில்லை, சூத்திரமே கட்டளையிடுவதை எடுத்துக் காட்டுகிறேன்.

3. சுட்டு முதலிறுதி உருபியல் நிலையும்
—தொ. உயி. மயங். 79

| | | |
|---|---|---|
| முதல் | சுட்டு | இறுதி |
| இயல் | உருபு | நிலை |

1-ல் இடையே சுட்டு 2-ல் இடையே உருபு என்பதை இதிற் காட்டி, "இடையாகிய உருபெனும் சுட்டின் முதலே இயல், இறுதியே நிலை" எனல்.

2-ல் இடையே உருபு எனக் கூறி, 1-ல் இவ்வுருபெனும் இடையே சுட்டென உணர்த்தி, 3-ல் 'அச்சுட்டுருபாகிய இடையின் முதலே இயல் இறுதியே நிலை' எனவும் சூத்திரங்களே ஒன்றையொன்று தழுவி விளக்கும்போது மற்றெதையும் எதிர் பார்க்கஅவசியமில்லையன்றோ?உள்ளதை உணர்த்தவோ உணரவோ எள்ளளவும் இடையூறெதுவும் இல்லாமலே சூத்திரங்கள் அமைந் திருக்கும் அற்புதத்தை அடுத்தடுத்துக் காண்பீர்.

4. முதலெனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே
—தொ. அகத்திணையியல் 4

| | | |
|---|---|---|
| முதல் | பொழுது | இயல்பு |
| நிலம் | | உணர்ந்தோர் |

"முதலெனப்படுவது நிலம், இடையே பொழுது, இவ்விரண் டின் இறுதியே உணர்ந்தோர் என்னும் இயல்பு" எனல்.

4-ல் முதலே நிலம் எனக் கூறும் தொல்காப்பியம் 1-ல் நில மென்பதைக் கூறாமலே முதல் என்பதை மாத்திரம் காட்டி 'முதலின் இறுதியே இயல்பு' என உணர்த்துகிறது. அது போல் 1-ல் இறுதியே இயல்பு எனக் கூறும் தொல்காப்பியம் 4-ல் இறுதியெனக் கூறாமலே இயல்பு என்பதை மாத்திரம் காட்டி, 'இயல்பின் முதலே நிலம்' என உணர்த்துகிறது. இதைச் சீர் தூக்கிச் சிந்தித்துப் பார்த்தாலே 'முதலெனும் நிலத்தின் ளறு தியே இயல்பு, இயல்பெனும் இறுதியின் முதலே நிலம்' என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ ?

அப்படி ஆழ்ந்து சிந்திக்க அவசியமில்லை என்று நினைத்தால் 4-ல் முதலே நிலம், 2—ல் இடையே உருபு, 1—ல் இறுதியே இயல்பு' எனச்

சூத்திரங்களை உணர்த்துவதை எவ்வித ஆராய்ச்சியுமில்லாது அப்படியே ஏற்று, தொல்காப்பியம் முதலிடையிறுதி என வகுத்து இவற்றைக் கொண்டு அததற்குள்ள நாமங்களை உணர்த்துவதாகத் தீர்மானிக்கவும்.

நிற்க, குறிப்பு 17, 18-ல் ஆதியால் ஆற்றப்பட்ட அந்தமே அறியுந்தன்மையுடைய அறிவெனவும், இவ்வாறு அறிவெனும் நாமமும் அறியுந் தன்மையும் அந்தத்திற்குண்டென்பதுபற்றி அந்தமெனும் கிளவியை 'உணருங் கிளவி' எனத் தொல்காப்பியம் கூறுவதாக நான் எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். உணருங் கிளவி எனும் அந்தத்தையே 'உணர்ந்தோர்' என விளக்கும் விபரம் கண்டு இவ்வுணர்ந்தோர் எனும் இறுதியே இயல்பு என்றேற்க.

அறிவெனும் நாமமும் அறியுந் தன்மையும் அந்தத்திற்கு உண்டென்பதுபற்றி அந்தமாகிய கிளவியை உணருங் கிளவி என்பது ஏற்கத்தக்கதே. அவ்வாறில்லாமல் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இயல்பு என்பதையும் உணர்ந்தோர் என்பதையும் 'இயல்பே உணர்ந்தோர்' என்று ஏற்பதெப்படி எனக் கேட்கலாம். அதற்கும் ஆதாரம் காட்டுகிறேன்.

ஆதி இடை அந்தமென வகுத்துக் காட்டும் தொல்காப்பியம் 'ஆதிக்கு உரியது அந்தம், அந்தத்திற்கு உரியது இடை, இடைக்கு உரியது ஆதி' எனவும் 'இது இதற்கு உரியதல்ல' எனவும் உணர்த்துவதோடு இவற்றிற்கு 'உமக்கு—தமக்கு—எமக்கு' எனவும் நாமங்கள் உண்டெனப் புகட்டுகிறது. இவ்விபரம் அனைத்தையும் இதே நூலில் அடுத்துத் தெளிவாய்க் காணலாம். அதற்கு ஆதாரமாக இங்கோர் செய்தியை எடுத்துக் காட்டுகிறேன். இவற்றிற்குள்ள நாமங்களாகிய உமக்கு—தமக்கு—எமக்கு என்பவற்றுள் தமக்கு என்பதையே காட்டி, இடையியல் 1—ல் 'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும் நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே' எனக் கூறுகிறது. இதிற் காணும் மற்றவையிருக்கட்டும், இடையென்பதை விளக்கும் இடையியலின் முதல் சூத்திரத்தில் 'இடையெனப்படும் தமக்கு இயல்பெனும் இறுதி இலவே (உரியதில்லை)' எனப் புகட்டுவதறிக. சூத்திரத்தைச் சிதைத்தெடுத்து இவ்வாறு நான் காட்டுவதாகச் சந்தேகிக்க வேண்டாம். இதை இவ்வாறே ஏற்க வேண்டுமென்பதற்கு ஆதாரமொன்றும் காட்டுகிறேன். கிளவியாக்கம் 4—ல் 'அறியும் அந்தந் தமக்

கிலவே' எனக்கூறி 'அறியுந்தன்மையுள்ள அந்தம் இடையாகிய தமக்கு இலவே' என உணர்த்துவதறிக. இவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால் தெளிவாகவே 'அறியும் அந்தமாகிய இயல்பு இடையாகிய தமக்கு உரியதில்லை' என விளக்குவது தெரிகிறதன்றோ?

இவ்வளவு ஆராய்ந் தெடுத்துக் காட்டுவதையும் வாசித்து மனங்கொள்ளத் தயங்குவோர், 'அறியும் அந்தம் தமக்கிலவே' 'தமக்கியல் பிலவே' என்பவற்றை மாத்திரம் கவனித்தாலே 'தமக்கு அறியும் அந்தமாகிய இயல்பு இலவே' என்பது தெரிகிறதன்றோ? ஆமெனில், அறியுந் தன்மை இறுதிக்கு உண்டென்பது பற்றிக் கிளவி என்னும் இறுதியை 'உணருங் கிளவி' என உணர்த்தும் தொல்காப்பியம் (குறிப்பு 20-ல் முதலே முதல்வன் எனக்கூறுவது போல்) உணரும் இயல்பை 'உணர்ந்தோர்' எனக் காட்டி அவ்வுணர்ந்தோரோ அறியுந் தன்மையுள்ள இயல்பு எனவும் 4-ல் விளக்குவதறிக.

5. அவைதாம் முன்னும் பின்னும்
மொழியடுத்து வருதலும்

—தொ. இடையியல். 3

| முன் | மொழி | பின் |
|---|---|---|
| அவை | | தாம் |

"முன்னும் பின்னும் அவையும் தாமுமே, இவற்றை அடுத்து இடையாய் வருவது மொழி" எனல். செய்யுளிறுதி மொழியிடை முதலின் என்பதைச் சிந்தித்துப் பார்க்க.

'இடையே அத்து அவ்வத்தே சாரியை அச்சாரியை மொழியே' எனத் தொல்காப்பியம் அழுத்தமாய் எச்சரித்து, இதற்கிசைய முன்—பின்னுக் கிடையே மொழி எனவும், முன்—கிளவிக்கு இடையே அத்து எனவும் எடுத்துக் காட்டுவதை அலட்சியமாய்க் கருதி, மொழி அத்து சாரியை எனும் இவற்றை அவரவர் இடங் காலத்திற் கேற்க வெவ்வேறாய்க் கொள்ளலாமா? இன்னுமிதில் சந்தேகமிருந்தால் கீழ் காண்பவற்றாற் றெளிக.

6. முன்னவை கெடுதல் வரைநிலை யின்றே,

—தொ. புள். மயங். 20

| முன் | வரை | நிலை |
|---|---|---|
| அவை | | |
| கெடுதல் | | இன்று |

3-ல் இறுதியே நிலை என்பதை இதிற் காட்டி, " இறுதியாகிய பின்னெனும் நிலையின் இடையே வகை முதலெனும் முன்னாகிய அவையே கெடுதல்" எனல். இடையிறுதி இருக்கட்டும், 5-ல் மொழி எனும் இடையின் முன்னே 'அவை' எனக் காட்டி, இதில் அம்முன்னெனும் அவையே கெடுதல் என உணர்த்துவதறிக. இதை ஆராய்ந்தறியாவிடில் இக்கெடுதலைப் பழுதெனக் காட்டி 'பழுது பயமின்றே' பழுதெனும் முதலே பயமற்றது என்பதைக் காண்பதெப்படி? இதைக் காணவிடில் 'அச்சக் கிளவி' எனக் கூறி இறுதியே அச்சமுடைய கிளவி என்பதை அறிவதெப்படி?

7. தாம் நாமென்னும் அகர இறுதி.

—தொ. உருபியல். 16

| | | |
|---|---|---|
| அகரம் | ... | தாம் |
| | | நாம் |
| | | இறுதி |

குறிப்பு 7-ல் உகரமெனும் இறுதியை இயற்றும் முதலே அகரம் எனக் கூறும் தொல்காப்பியம், அவ்வகரத்தையே இதிற் காட்டி, " அகரமெனும் முதலின் இறுதியே நாமெனும் தாம்" எனல்.

மொழியின் முன்னே அவையெனக் காட்டி, அதைக் கொண்டே முன்னெனும் அவை கெடுதலே என்று உணர்த்துவது போல், குறிப்பு 7-ல் உகரத்தை இயற்றும் முதலே அகரமெனக் காட்டி அதைக் கொண்டே அகரத்தால் இயற்றப்பட்ட உகரமென இறுதியே நாமெனும் தாமென விளக்கும் விபரம் காண்க.

6-ல் கெடுதலெனும் முன்னே அவை, மேற்காண்பதில் நாம் எனும் இறுதியே தாம் என உணர்த்துவதையே 5-ல் காணும் ஒரே சூத்திரத்தில் அமைத்துக் காட்டி 'மொழி எனும் இடையின் முன்-பின் அவை - தாம்' எனப் புகட்டி நிச்சயிக்கும் நேர்மை காண்க. இவ்வா றிருப்பதால் சூத்திரங்களில் காணும் எழுத்துக்களும் சொற்களும் தாம் வழங்குபவைகளா யிருப்பினும் அவற்றை ஆராய்ந்தறிந்த பின்னே சூத்திரக் கருத்தைக் காணமுடியும் என்பதறிக. இன்னும் கவனிப்போம்.

குறிப்பு 28-ல் சிறப்பின் முதலே ல எனக் கூறும் தொல்காப் பியம் பெயரியல் 14ல் 'பல்-ல பல-சில என்னும் பெயரும்' எனக் கூறி சில—பல எனும் முதலிறுதிக்கே ல-பல் என்னும் பெயருண்டு

என உணர்த்துகிறது. இது நான் கூறுவதல்ல, சூத்திரங்களின் கட்டளையே என்பதை இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

8. பல சில எனும் இவை தம் முன்தாம் வரின்

—ந. உயிரிற். 20)

| | | |
|---|---|---|
| முன் | ... | தாம் |
| தம் | | இவை |
| சில | | பல |

ல—பல் என்பதைக் காட்டி இம்முதலிறுதிக்கே 'சில—பல' எனும் பெயருண்டு எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறதன்றோ? அப் 'பல—சில' என்பவற்றையே இதிற் காட்டி "பல—சில எனும் இவை—தம் முன்—தாமே" என்று உணர்த்துவதறிக.

'வரின்' என்று கூறுவது 'முன்னாகிய சில எனும் தம்மி னின்று வரும் பின்னெனும் தாமே பல' என்பதை உணர்த்தற்கே, இச் செய்தி இங்கு தேவையில்லை.

'பல—சில எனும் இவை—தம் முன்—தாமே' எனக் கூறு வதை 'முன்—தாமே தம்—இவை எனும் சில—பல' என்றேற்க இடமுண்டன்றோ? இதற்கிது பெயரென உணர்த்துவது தெரிகிறதா?

மேல் சூத்திரத்திற் காணும் சொற்களோடு 5-ல் முதலெனக் கூறும் 'அவை' என்பதையும் சேர்த்துப் பார்த்தால் முதலிறுதிக்கு '**அவை—இவை, தம்—தாம், முன்—பின், சில—பல**' எனும் நாமங் கள் உண்டெனத் தெரிகிறதன்றோ?

**6-ல் முதலெனும் கெடுதலே அவை 7-ல் நாமெனும் இறுதியே தாம் என்பதைக் காணுவிடில், இடையை இதுவென நிச்சயிக்கும் சூத்திரங்களின் ஆரம்பத்தில் முதல் இறுதியின் நாமங்களாகிய 'அவை—தாம்' என்பவை காட்டப்படுவதை எவ்வாறு அறிவது? இதைத் தெரியாமல் இவற்றை 'மேற் காண்பவைதாம்' என ஏற்க லாமா?** இடங் காலத்திற்கேற்க நூல்களைப் பற்றிப் பேசுவ தால் விளையும் கேட்டைச் சிறிதும் சிந்திக்காதது விசனிக்கத் தக்கதே. இதில் விசனிக்கத் தக்கது என்ன இருக்கிறதெனக் கேட்கலாம்.

இராமலிங்க சுவாமிகளையும் அவர் இயற்றிய அரும்பெரும் அருட்பாவையும் அவர் காலத்தில் இருந்த பதினறு பெரும் புலவர் களுமே ஒன்றுகூடி இகழ்ந்து தூற்றியதற்கு ஆதாரம் இப்

போதும் கிட்டும். இப்போதோ அருட்பாவைப் போற்றிப் புகழாத புலவரொருவர் கிடைப்பது அரிது. அக்காலத்துப் பெரும் புலவர்களால் இகழப்பட்ட அருட்பா இக்காலத்தில் புகழப்படுவதற்குக் காரணம் என்ன? என்று எவரும் கேட்டால் என்ன பதிலைக் கூறுவது, இது விசனிக்கத் தக்கதன்றோ? இதுபோல் கேள்விக் கிடந்தரத் தக்கதும் இது தான் முடிவெனத் தீர்மானிக்கப் படாததுமான பல செய்திகளைத் தெளிவுபடுத்தும் என் நூலை அலட்சியம் செய்யாமல் ஊன்றி ஆராயவும்.

சூத்திரங்களின் கருத்தைக் காண அவ்வச் சூத்திரத்தில் உள்ள சொற்களை ஆராய்ந்தறிதல் அவசியமெனத் தெரிகிறதன்றோ? அதை நிச்சயிக்க நான் எடுத்துக் காட்டும் ஆதாரத்தைக் கூர்ந்து கவனித்து உடனே இவ்வாதாரத்திற்கான ஆதேயத்தையும் பற்றிச் சிந்தித்துத் தெளிந்த பின் அடுத்ததை வாசித்தல் நலம். இவ்வாறு செய்தால்தான் சூத்திரங்கள் ஒன்று ஒன்றை விளக்கும் விதத்தில் அமைந்திருக்கும் அற்புதத்தைக் காணமுடியும்.

'முன்—பின்னே அவை—தாம்' எனக் கூறுவது 6, 7-ல் காணும் இரு சூத்திரங்கள். இத்தகைய 'அவை—தாம் என்பவை மொழி எனும் இடையின் முன் பின்னே' எனக் கூறுவது 5-ல் காணும் சூத்திரம். 'பல்—ல எனும் முன்—பின்னே பல—சில' எனக் கூறுவது பெயரியல் 14-ல் காணும் சூத்திரம். இந் நான்கு தொல் காப்பியச் சூத்திரங்களும் ஒன்றையொன்று தழுவி விளக்குவது 'முன்—பின் எனும் அவை—தாமே சில—பல' என்பவற்றையன்றோ? இதை எவரும் மறுக்க இயலாத விதத்தில் தொல்காப்பியம் கூறும் சில—பல முன்—தாம் என்பவற்றையே காட்டி 8-ல் நன்னூல் 'பல—சில எனும் இவை—தம்மே முன்—தாம்' என உணர்த்துவதைக் காணும்போதே முதலிடையிறுதியென வகுத்துக் காட்டி, இது முதலின் நாமம் இது இடையின் நாமம் இது இறுதியின் நாமம் என்றும் உணர்த்தி, இவ்வாறு உணர்த்தப்பட்ட நாமங்களைக் கொண்டு அததற்குள்ள மற்ற பெயர்களைப் புகட்ட 'பல—சில எனும் இவை—தம்மே முன்—தாம்' எனவும், 'அத்தே சாரியை சாரியை மொழியே' எனவும் உணர்த்தும் விபரம் தெரிகிறதன்றோ? ஆகையால் அத்து, சாரியை, மொழி, சில, பல, இவை, தாம் எனும் சொற்களை இடங் காலத்திற் கேற்க அவரவர் கொள்கைக் கிசையக் கொள்ளக் கூடாதென்பதையும் அததையும் அததற்குரிய நாமமாகவே ஏற்க வேண்டும் என்பதையும் உணர்த்தவே

இவற்றின் தொடர்பை வெகு பாடுபட்டுப் புகட்டுவதை இரண்டோர் சூத்திரங்களில் எடுத்துக் காட்டுகிறேன்.

9. பொன்னென் கிளவி ஈறுகெடல் முறையின்

—தொ. புள். மயங். 61

| | | |
|---|---|---|
| பொன் | என் | கிளவி |
| கெடல் | முறை | ஈறு |

குறிப்பு 23-ல் வழி செய்யும் இடையே என் இறுதியே கிளவி எனக் கூறும் தொல்காப்பியம், அவற்றையே இதில் பொன்—என்—கிளவி என உணர்த்தி, 6–ல் முதலே கெடுதல் என்பதை இதில் கெடல் எனவும் காட்டி, "இடையாகிய என்னெனும் முறையின் முதலே பொன்னெனும் கெடல் ஈறே கிளவி" எனல்.

இவ்வாறு ஆராய்ந்து இறுதியின் நாமமே கிளவி இடையின் நாமமே என்னென மேற் காண்பதிலும் குறிப்பு 29–ல் அந்தமே இல்லெனவும் தொல்காப்பியம் கூறுவதை அறியாவிட்டால் சேது புராணம் 'இல்லமென் கிளவி' என்னெனும் இடையின் இறுதியாகிய கிளவியே இல்லம் என்பதைத் தெரிவதெப்படி? இது கண்டும் தெளியாது இதைப் புராணக் குப்பை என்று தள்ளிவிட்டுத் தொல்காப்பியம் கூறும் 'இல்லென்பதை இல்லை' எனவும் 'கிளவி என்பதைச் சொல்' என்றும்தான் ஏற்க வேண்டுமென்பது உசிதமா?

10. ஆண்மை பெண்மை ஒருமைப் பன்மையின்
ஆம்அந் நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர்

—ந. பெயரியல். 26

| | | |
|---|---|---|
| ஆண்மை | முறை | பெண்மை |
| ஆண் | கள் | பெண் |
| ஒருமை | நான் | பன்மை |
| அ | மை | ந் |

9–ல் இடையே முறை என்பதை இதிற் காட்டி, "ஆண்மை—பெண்மை எனும் ஒருமை—பன்மையின் இடையாகிய முறைப் பெயரே நான், கள் எனும் சொற்களும் மை எனும் எழுத்துமாம்" எனல்.

11. பன்மையும் ஒருமையும் பாலறி வந்தம்

—தொ. பெயரியல். 12

| | |
|---|---|
| ஒருமை | பன்மை |
| | அந்தம் |
| பால் | அறிவு |

10–ல் முதலிறுதியே ஒருமை—பன்மை குறிப்பு 17–ல் இறுதியே அறிவு என்பதை இதிற் காட்டி, "ஒருமை எனும் ஆதியே பால், பன்மை எனும் அந்தமே அறிவு" எனல். முறை எனும் இடையினால் ஆதியந்தமே ஒருமை—பன்மை என்பதை அறியாவிடில், 'ஒருமையே பால் பன்மையே அறிவென' இதில் கூறுவதைக் காண முடியுமா? ஆகையால், சூத்திரங்கள் உணர்த்தும் தொடர்பைக் கவனிப்பது மிக அவசியமென்பதறிக. இது வெகு முக்கியம் என்பதைக் கருதியே இம் மூன்று சூத்திரங்கள் முன் விளக்கப்பட்டிருந்தும் மீண்டும் இங்கெடுத்துக் காட்டியிருக்கிறேன்.

முறையை இடையெனக் காட்டி, முறையின் முதலே ஒருமையென உணர்த்தி, அவ்வொருமையே பால் என விளக்குவதைக் கவனித்தீர்களா? இப் பாலையே காட்டி மற்றோர் நாமத்தைப் புகட்டுவதையும் காட்டுகிறேன்.

12. பால் வரை கிளவியும்
பண்பின் ஆக்கமும்.

—தொ. வேற். மயங். 27

| | | |
|---|---|---|
| பால் | வரை | கிளவி |
| பண்பு | ஆக்கம் | |

11–ல் முதலே **பால்** 6–ல் இடையே **வரை** 9–ல் ஈறே **கிளவி** என்பதை இதிற் காட்டி, "பால் எனும் ஆதியே பண்பு அப்பண்பின் இடையே வரை எனும் ஆக்கம்" எனல்.

முன் முதலிடையென உணர்த்தியுள்ள பால்—வரை என்பவற்றையே இதிற் காட்டி 'பாலே பண்பு அப்பண்பின் வரையே ஆக்கம்' எனத் தொடர்பைக் காட்டி விளக்கும்போது "பால் எனும் பண்பின் தொடர்பில்லாத எதையும் வரை எனும் ஆக்கமென்றோ வரை எனும் ஆக்கத்தின் தொடர்பில்லாத எதையும் பாலெனும் பண்பென்றோ' ஏற்பதெப்படி?

முதலிடையிறுதி முன்னிடைபின் ஆதியிடை அந்தம் என வகுத்துக் காட்டி அவற்றிற்குப் பல நாமங்களை உணர்த்தக் கண்டோமல்லவா? சிற்க இதில் வரை எனக் கூறும் இடையையே 2-ல் **வரையார்** என உணர்த்துவதால் 'உயிரற்றதாகவும் ஆணாகவும் பெண்ணாகவும் கருதும் விதத்தில் இவற்றிற்கு நாமங்கள் சூட்டப்பட்டிருக்கும்' விபரமுமறிக. அடுத்ததைக் கவனிப்போம்.

## (2) உற்பவ முணர்ந்தல்

13. அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே

—தொ. பொரு. 49

| | | |
|---|---|---|
| பண்பு | சிறப்பு | அந்தம் |
| | இன்பம் | இல் |
| | வயின் | தன் |

12-ல் முதலே **பண்பு** இடையை குறிப்பு 13-ல் **வயின்** குறிப்பு 27—ல் **சிறப்பு** எனக் கூறுவதை இதிற் காட்டி, "தன்னெனும் அந்தமும் வயின் எனும் இடையும் வருவது பண்பெனும் ஆதி வகுத்ததாலேயே, இவ்விரண்டையும் ஆதி வகுத்ததெனினும் அந்தமாகிய தன்னெனும் இல்லை ஆக்கியது சிறப்பாகிய இன்பமெனும் இடையே" எனல்.

முறையின் முதலே ஒருமை, அவ்வொருமையே பால், அப்பாலே பண்பு என உணர்த்தி வந்து அப் பண்பே இடையிறுதியை வகுத்தது என இதில் விளக்கும் விபரம் காண்க.

14. வினையிற் றோன்றும் பாலறி கிளவி

—தொ. கிளவி. 11

| | | |
|---|---|---|
| பால் | வினை | கிளவி |

12-ல் முதலிறுதியே **பால்—கிளவி** என்பதை இதிற் காட்டி, "பாலெனும் முதலுக்கு இறுதியாகிய கிளவி வினை எனும் இடையினின்றே தோன்றும்" எனல்.

15. ஆதிப் பல்வினை ஓதல் ஈதல் ஆதிப் பல்குணம்

—ந. பெயரியல். 19

| | | |
|---|---|---|
| ஆதி | வினை | பல் |
| | குணம் | |

குறிப்பு 28-ல் சிறப்பின் முதலே **ல** எனக் கூறும் தொல்காப்பியம், பெயரியல் 14-ல் 'பல்—ல பல—சில' என்று கூறி 'ல எனும் முதலே சில பல்லெனும் இறுதியே பல' என உணர்த்துவ தால் அப் **பல்** என்பதையும் 14-ல் இடையே **வினை என்பதையும்** இதிற் காட்டி, "பல்லெனும் அந்தத்தையும் குணமாகிய **வினை** யெனும் இடையையும் ஓதல் அதாவது ஈதல் ஆதியே" எனல். **13-ல்** இடையும் இறுதியும் வருவது முதலினின்றே என்பதற்

கிசைய இதில் இடையையும் அந்தத்தையும் ஓதல் அதாவது ஈதல் ஆதியே என்பதறிக.

இடையிறுதியை ஈதல் முதலென்று உணர்த்தும் இதில் 'ஓதல்' எனும் சொல்லைக் காட்டக் காரணம் என்ன எனக் கேட்கலாம். 'ஈதல், ஆக்கல், செய்தல், முடித்தல்' என இவற்றின் உற்பத்திக் கிரமத்தை உணர்த்தவேண்டிய இடங்களில் இவற்றிற்குப் பதிலாக பிரபல நூல்கள் 'ஓதல், உரைத்தல், இயம்பல், இசைத்தல், வைத்தல்' என மாற்றிக் கூறும் என்பதை எடுத்துக் காட்டி எச்சரிக்கவே ஓதல் என்பதே ஈதல் என உணர்த்தும் விபரமறிக. இப்படி மாற்றிக் கூறி மயக்கத்தைத் தருவதில் முதல் பரிசு பெறத் தக்கது திருக்குறளே. இப்படி மாற்றியும் நூல்கள் கூறுமா ? எனச் சந்தேகிக்க வேண்டாம். அதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன்.

16. ஓதல் பகையே தூது இவை பிரிவே

—தொ. அகத். 25

| பகை | தூது | இவை |
|---|---|---|
| ஓதல் | | |

குறிப்பு 10-ல் முதலே பகை 8—ல் இறுதியே இவை என்பதை இதிற் காட்டி, இடையைத் தூதெனவுணர்த்தி, "இவை எனும் இறுதியையும் தூதெனும் இடையையும் ஓதல் (செய்தல்) பகை எனும் முதலே" எனல். ஓதல் எனவே ஆதிக்கு நாமமுண்டு, ஓதுவோன் ஆக்கியோன் எனவும் நூல்கள் கூறும்.

குறிப்பு 23-ல் 'வழி செய்யுமென் கிளவி' வழி எனும் முதலே என்னெனும் இடையையும் கிளவி எனும் இறுதியையும் செய்யும் எனக் கூறும் தொல்காப்பியம். இதில் இடையிறுதியை முதல் ஓதல் எனக் கூறுவது கண்டு செய்தல் என்பதையே ஓதலென உணர்த்துவதா யேற்க.

17. உடல் வேந் தடுக்கிய உன்னநிலையும்

—தொ. புறத். 5

| உன் | வேந்து | நிலை |
|---|---|---|
| | ன | உடல் |

இடையை வேந்து எனக் குறிப்பு 10, 11-லும் ன எனக் குறிப்பு 28-லும், இறுதியை 3-ல் திலை எனவும் கூறுவதைத் காட்டி

" இறுதியாகிய உடல் எனும் சிலையையும் இடையாகிய ன எனும் வேந்தையும் அடுக்கிய (செய்த) முதலே உன் " எனல்.

இதில் முதலே **உன்**, 9-ல் இடையே **என்**, 13-ல் இறுதியே **தன்** என உணர்த்தும் விபரம் காண்க. இவற்றையே ' உன்னை, என்னை, தன்னை ' எனவும் நூல்கள் கூறுகின்றன, அதை அடுத்துக் காணலாம்.

18. அவன் வயின் தோன்றிய கிளவி

—தொ. களவியல். 23

அவன் வயின் கிளவி

13-ல் இடையே **வயின்** 9-ல் ஈறே **கிளவி** என்பதை இதிற் காட்டி, " அவனெனும் முதல் வயினெனும் இடை இவற்றி னின்றும் தோன்றும் இறுதியே கிளவி " எனல்.

19. அவள் வயினை

—தொ. களவியல். 38

அவள் வயின் ...

மேற் காணும் **அவன்—வயின்** என்பவற்றை இதில் அவள்—வயின் என்று உணர்த்தி, "அவளெனும் முதலினின்றே வயின் எனும் இடை ஆனது" எனல். இதில் முதலினின்று வயினெனும் இடை ஆனது எனவும் மேற் காண்பதில் இவ்வயினெனும் இடையினின்று இறுதி தோன்றுமென உணர்த்துவதறிக.

20. எல்லை அகத் தவர் வழங்கும்

—தொ. செய். 78

அவர் எல்லை அகம்

18-ல் முதலே **அவன்** குறிப்பு 11-ல் இறுதியே **அகம்** என்பதை இதிற் காட்டி, குறிப்பு 18-ல் இடையே ' அத்து ' என்பதை இதில் ' எல்லை ' என உணர்த்தி, " எல்லை எனும் இடையை வழங்குவது அகமெனும் அந்தத்து ஆதியாகிய அவர் " எனல்.

இம் மூன்றும் தமக்குள் தாமே ஒன்றை யொன்று உண்டாக் கும் விவரம் கண்டோம். இவற்றிற்கு ஏற்பட்டுள்ள சில விசித்திர நாமங்களை எடுத்துக் காட்டுகிறேன்.

21. அறிவும் புலனும் வேறு

—தொ. பொ. 2

வேறு புலன் அறிவு

11-ல் அந்தமே அறிவு என்பதை இதிற் காட்டி, "அறி வெனும் அந்தத்தின் இடையே புலன் முதலே வேறு" எனல்.

22. மழை என்கிளவி வளி இயல்நிலையும்

—தொ. உயிர். மயங். 85

| | | |
|---|---|---|
| மழை | என் | கிளவி |
| இயல் | வளி | நிலை |

3-ல் முதலிறுதியே இயல்—நிலை குறிப்பு 12-ல் இடையே வளி என்பதை இதிற்காட்டி, "இடையாகிய என்னெனும் வளியின் முதலே இயலெனும் மழை இறுதியே நிலை" எனல்.

23. திரிபு வேறு கிளப்பின் ஒற்று மிறுதியும்

—தொ. குற். 27

| | | |
|---|---|---|
| திரிபு | ஒற்று | இறுதி |
| வேறு | | |

21-ல் முதலே வேறு என்பதை இதிற் காட்டி, அதுவே திரி பெனவும் உணர்த்தி, "இறுதியையும் ஒற்றெனும் இடையையும் கிளப்புவது (உண்டாக்குவது) முதலாகிய வேறெனும் திரிபே" எனல். புள்ளி மயங்கியல் 95-ல் 'ஒற்றிடை' எனக் கூறுவதையே இதில் உணர்த்துவதறிக. இறுதி என்று வகுத்துக் காட்டாவிடில் இதில் இறுதியை முதல் கிளப்பும் என விளக்க இடமுண்டா என்பதுபற்றிச் சிந்தித்துப் பார்க்க.

24. பல்வகைப் பண்பு

—ந. உரியியல். 1

| | | |
|---|---|---|
| பண்பு | வகை | பல் |

13-ல் முதலே பண்பு குறிப்பு 3-ல் இடையே வகை 15-ல் இறு தியே பல் என்பதை இதிற் காட்டி, "பண்பின் இடையே வகை இறுதியே பல்" எனல். இனி அடுத்ததைக் கவனிப்போம்.

## (3) எழுத்திலக்கம் இயம்பல்

25. முதல் முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை.

—தொ. வேற். மயங். 4

| | | |
|---|---|---|
| முதல் | எண் | கண் |
| முன் | | |
| ஐ | வேற்றுமை | |

"ஐ எனும் முதலே முன், அதினின்று வரும் என்னெனும் இடையே வேற்றுமை, இறுதியே கண்" எனல். குறிப்பு, 19, 20-ல் முதலெனும் தலையினின்று வந்த இறுதியே கண்ணென்பதை இதில் உணர்த்தல். முதலிடையெனவும் முன்னிடையெனவும் வகுத்துக் காட்டாதிருந்தால் 'முதலெனும் முன்னே ஐ' என இதில் விளக்க இடமுண்டா? குறிப்பில் ஐ என்பதன் விளக்கம் விரிவாகக் காட்டப்பெற்றுள்ளது.

26. ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ் வாறென்ப வேற்றுமை உருபே

—தொ. புணரியல். 11

| | | |
|---|---|---|
| ஐ | ஒடு | கு |
| | இன் | |
| | அது | |
| அவ் | ஆறு | |
| | வேற்றுமை | |
| | உருபு | |

25-ல் முதலிடையிறுதி எனக் கூறும் ஐ-வேற்றுமைக்-கண் என்பவற்றை இதிற் காட்டி, இடையை 3-ல் உருபு என்பதையும் இதில் உணர்த்தி, "ஐ எனும் முதலுக்கும் கண்ணெனும் இறுதிக்கும் இடையாகிய ஒடு என்னும் இன்னே ஆறு, அவ் வாறென்பது வேற்றுமை என்னும் உருபே" எனல்.

27. ஏழாகுவதே கண்ணெனப் பெயர்
இயல் வேற்றுமைக் கிளவி

—தொ. வேற்றுமையியல். 20

| | | |
|---|---|---|
| இயல் | வேற்றுமை | கிளவி |
| | | ஏழு |
| | | கண் |

3-ல் முதலே இயல் 25, 26-ல் இடையே வேற்றுமை இறுதியே கண் என்பதை இதிற் காட்டி, "முதலே இயல், இடையே வேற்றுமை, இவற்றின் இறுதியாகிய கண்ணின் பெயரே ஏழாகும்" எனல்.

குறிப்பில் முதலே ஒன்று, இடையே இரண்டு, இறுதியே மூன்று, இடையே நான்கு, முதலே ஐந்து எனக் கூறுதற்கிசைய 26-ல் இடையே ஆறு, 27-ல் இறுதியே ஏழு என விளக்குவதறிக.

வேற்றுமையையும் உருபையும் இடையின் நாமங்களெனத் தனித் தனிச் சூத்திரங்களில் கூறி, அவ் 'வேற்றுமை எனும் உருபே ஆறு' என 26-ல் உணர்த்தும் தொல்காப்பியம், நலே எனும் முதலினின்று வரும் இறுதியே கண்ணெனவும் அக்கண்ணே சிதைவிலாதது எனவும் குறிப்பு 19, 20-ல் கூறி, மேற்காணும் 27-ல் அக்கண்ணின் பெயரே ஏழு ஆகும் என விளக்கும்போது 'ஏழாம் வேற்றுமை உருபே கண்' என்று ஏற்பதெப்படி ?

இவ்வாறு ஏற்பது உரை முறைகளுக்கு இசைந்திருப்பதாய்த் தோன்றினும் இந்த அழிவிலாக் கண்ணை விளக்கும் மற்ற நூல் களிலும் இப்படியே ஏழாம் வேற்றுமை உருபெனத் தீர்மானித்து விட்டால் இக் கண்ணின் பயனை அடைவதெப்படி ? இவ்விவ ரத்தை அடுத்துத் தெளிவாகக் காணலாம்.

28. அகர உகரம் ஔகாரமாகும்

—தொ. மொழி மரபு. 12

அகரம் ஔகாரம் உகரம்

குறிப்பு 7—ல் 'உகர மெனும் இறுதியை அகரமெனும் முதலே இயற்றும்' எனக் கூறும் தொல்காப்பியம் அவற்றையே இதிற் காட்டி, "அகரம்—உகரம் எனும் முதலிறுதியின் இடையே ஔகாரம்" எனல். இச் சூத்திரக் கருத்தை நிச்சயிக்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

29. அவ்வோ டுவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன

—ந. எழுத்தியல். 49

அவ் வவ் உவ்
ஔ
ஓர்
அன்ன

மேற்காணும் அவ்—ஔ—உவ் என்பதையே இதிற் காட்டி, "அவ்—உவ் எனும் முதலிறுதியின் இடையாகிய ஔ எனும் வவ்வே ஓரெனும் அன்ன" எனல்.

5-ன் விளக்கத்தில் 'அத்தெனும் இடையே சாரியை, சாரியை மொழியே, சாரியை எனும் மொழியே அன்ன' என உணர்த்துவ தாய்க் காட்டியிருக்கிறதன்றே? அவற்றுள் 'அத்து' என்பதைக் குறிப்பு 18-லும் 'மொழி' என்பதை 5-லும் இடையின் நாமமென உணர்த்துவதுபோல் இச் சூத்திரத்தில் 'அன்ன' என்பதை

இடையென விளக்கும் விபரம் காண்க. இவற்ருல் அங்கங்கும் தனித் தனியே இதற்கு இது நாமமெனக் கூறும் முறையில் இடையை அத்ரு சாரியை மொழி அன்ன என உணர்த்தியிருப்பதை நிச்சயித்துக் காட்டவே 'அத்தே சாரியை அன்ன என்பது சாரியை என்னும் மொழியே' எனவும் விளக்கப்பட்டிருக்கிறதா யேற்க. இவ்வாறிருக்கும்போது இவற்றை வெவ்வேருய் இடங் காலத்திற்கு இசையக் கொள்ளுவதெப்படி ?

நிற்க, குறிப்பு 7-ல் முதலிறுதியை அகாரம்—உகாரம் எனக் காட்டி, மேற்காணும் 28-ல் அம்முதலிறுதியாகிய அகாரம்—உகாரம் என்பவற்றின் இடையே ஔ எனத் தொல்காப்பியம் உணர்த்தாவிடில் நன்னூல் அவற்றையே இச்சூத்திரத்திற் காட்டி ஔ எனும் இடையே வவ் எனும் அன்ன என விளக்க முடியுமா ?

அகர—உகரம் என்பவற்றை முதலிறுதியெனக் கூறுவது ஓர் சூத்திரம், அவற்றின் இடையே ஔ என்பது மற்ருேர் சூத்திரம், இவ்விடையையே அன்ன என உணர்த்துவது வேருேர் சூத்திரம் இவை அனைத்தையும் எடுத்துக் காட்டி 'இடையாகிய ஔ எனும் அன்ன என்பதே வவ்' என விளக்குவது ஓர் தனிச் சூத்திரம். சூத்திரங்கள் ஒன்றையொன்று தழுவி விளக்கும் கருத்தை இய லதிகாரத்திற்கிசையக் காட்டவேண்டுமென்று கருத இடமுண்டா? இன்னும் கவனிப்போம்.

30. யாமெ னிறுதியும் அதனேரன்ன

—தொ. உருபியல். 16

| | | |
|---|---|---|
| யாம் | என் | இறுதி |
| | ஓர் | |
| அ | அன்ன | தன் |

மேற்காணும் ஓர் அன்ன என்பவற்றை இதிற் காட்டி, 29-ல் முதலே அ 13-ல் இறுதியே தன் என்பதையும் இதில் உணர்த்தி, "யாம்—தன் எனும் முதலிறுதிக்கு இடையாகிய என்னென்பதே ஓரன்ன" எனல். மேலே காட்டியபடி பல சூத்திரங்களை ஆராய்ந்து இடையெனக் கண்ட ஓரன்ன என்பதை இச்சூத்திரம் நிச்சயிப்பதறிக.

31. ஆ எ ஆகும் யாமெனிறுதி

—தொ. உருபியல். 16

| | | |
|---|---|---|
| ஆ | எ | இறுதி |
| யாம் | என் | |

30-ல் முதலிடை எனக் கூறும் யாம் என் என்பவற்றை இதிற் காட்டி, "யாம் எனும் முதலுக்கு ஆ எனவும் என்னெனும் இடைக்கு எ எனவும் நாமங்கள் உண்டு" எனல்.

7-ல் 'தாம் நாமென்னும் அகர இறுதி' என்பதும் 30-ல் "யாமெனிறுதியும் அதனோரன்ன' என்பதும் மேற்காணும் 31-ல் 'ஆ எ ஆகும் யாமெனிறுதி' என்பதும் தனித் தனியே நான் எடுத்துக் காட்டியிருப்பினும் அவை ஒரே சூத்திரத்தில் காண்பவை. இதை இவ்வாறு தனித் தனியாய்ப் பிரித்துக் காட்டி விளக்கும் எனக்கு இவற்றை ஒன்றிலேயே விளக்க முடியாதா? அப்படி நான் விளக்கினுல் இதைப் பிறாறிய முடியாமல் திகைத்துப் பெருங் குறை கூறவே நேரிடும். அது பற்றியே அங்கங்கும் வேண்டியதை மாத்திரம் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இதைச் சிந்தித்துப் பாராது முழுச் சூத்திரத்தையும் விளக்காமல் சிதைத்தெடுத்து வேண்டியதை மாத்திரம் எடுத்துக் காட்டி என் கொள்கையை நிறைவேற்ற முயலுவதாக என்னைக் குறைகூற இடமுண்டா? நிற்க, குறிப்பு 1-ல் முதலே ஆ 30-ல் முதலே யாம் எனக் கூறுவதையே இதில் முதலின் நாமங்களென உணர்த்தும் போது ஆ என்பதை முதலெனக் கூறும் 'முதலெனப்படுவது ஆயிரு வகைத்தே' என்பதை எவ்வா றேற்கவேண்டும்?

32. ஒருவ னொருத்தி பெயர் மேல் எண்ணில

—ந. பெயரியல். 30

| எண் | ஒருவன்<br>ஒருத்தி<br>இல | மேல் |
|---|---|---|

29; 30-ல் இடையென நன்னூலும் தொல்காப்பியமும் கூறும் 'ஓர்' என்பதை இதில் ஒருவன் ஒருத்தி என உணர்த்தி, "எண்ணெனும் முதல் மேலெனும் இறுதி இவற்றின் இடையாகிய ஒருவனெனும் ஒருத்தியே இல" என்பதறிக. 8-ல் முதலிறுதியே 'சில—பல' என்பதற்கிசைய அதே நன்னூல் இதில் இடையே 'இல' என்று உணர்த்தும் விவரம் காண்க.

33. உம்மை எண்ணின்

—தொ. இடையியல். 43

| எண் | மை | உம் |
|---|---|---|

32-ல் முதலே எண் 10-ல் இடையே மை 29-ல் இறுதியே உம் என நன்னூல் விளக்குவது. இதில் தொல்காப்பியம் "முதலாகிய

எண்ணின் இடையே மை இறுதியே உம்'' எனக் கூறுவதை யன்றோ ?

எண்ணின் மையும் உம்மும் எனத் தொடர்பைக் காட்டுவதைக் கவனித்து எண்ணென்பதோடு தொடர்புள்ளவைகளையே மையென்றும் உம்மென்றும் ஏற்கவேண்டும். நன்னூல் கூறும் மூன்று சூத்திரங்களின் கருத்தை இவ்வோர் தொல்காப்பியச் சூத்திரமும் இச் சூத்திரக் கருத்தை அம் மூன்றும் நிச்சயித்துக் காட்டும்போது இவற்றை வெவ்வேறாய் ஏற்பதெப்படி ?

34. கீழின் முன் வன்மை விகற்பமாகும்.

—ந. மெய்பீற். 4

| | | |
|---|---|---|
| கீழ் | இன் | விகற்பம் |
| முன் | வன்மை | |

26—ல் இடையே இன் என்பதை இதிற் காட்டி, '' இன்னெனும் இடையே வன்மை, இவ்வன்மையின் முன்னெனும் முதலே கீழ் பின்னெனும் இறுதியே விகற்பம், இம்முன்னின் எனும் முதலிடையினின்று விகற்பமெனும் இறுதி ஆகும்'' எனல். 32-ல் இறுதியை **மேல்** எனக் கூறும் நன்னூல் இதில் முதலைக் கீழ் என்பதறிக.

35. இன்னதற் கிதுபயன்

—தொ. வேற். மயங். 29

| | | |
|---|---|---|
| ... | இன் | பயன் |
| | அது | இது |

26-ல் இடையே இன் **அது** குறிப்பு 4-ல் இறுதியே **இது** எனக் கூறுவதை இதிற் காட்டி, ''இன்னாகிய அது எனும் இடையின் இறுதியே பயன் எனும் இது'' எனல்.

அது—இது என்பவற்றைக் குறிப்பு 3, 4-ல் கூறாதிருந்தால் இதில் அதுவே இன்னெனவும் இதுவே பயன் எனவும் விளக்க இடமுண்டா ? இத்தகைய **அது** என்பதை இடையெனக் குறிப்பு 3-ல் உணர்த்துவது வகையெனும் இரண்டைக் காட்டியன்றோ ? ஆமெனில், இவ்வகையெனும் இரண்டை இடையெனப் புகட்டுவது குறிப்பு 1-ல் காணும் ' முதலெனப்படுவது ஆயிருவகைத்தே ' எனும் சூத்திரமன்றோ ? இவ்வாறிருக்க, இச் சூத்திரக் கருத்தை வேறா யேற்பதெப்படி ?

36. தான் இது என்னும் தனி நிலை யின்றே

—தொ. செய். 84.

| | | |
|---|---|---|
| ... | தான் | இது |
| | தனி | நிலை |
| | | இன்று |

இறுதியை 35-ல் இது 3 ல் நிலை என்பதை இதிற் காட்டி, 6-ல் நிலையே இன்று எனக் கூறுவதையும் உணர்த்தி, "தான் தனி எனும் இடையின் இறுதியாகிய இதுவே நிலை எனும் இன்று" எனல்.

இது என்பதை 35-லும் நிலையே இன்றெனா 6-லும் கூறும் தொல்காப்பியம் அவற்றையே இதிற் காட்டி, இடையைத் தானெனும் தனியென்றுணர்த்தி, 'தான்—இது என்னும் இடையிறுதியே தனி—நிலை' என விளக்குவதைச் சிந்தித்துப் பார்த்தாலே முதலிடையிறுதி என வகுத்துக் காட்டி அவற்றிற்கு இதற்கிது பெயரென உணர்த்தி, அப்பெயர்களைக் கொண்டு மற்ற நாமங்களை விளக்கும் விவரம் தெளிவாய்த் தெரிகிறதன்றோ ?

37. கிழக்கிடும் பொருளொடு ஐந்துமாகும்

—தொ. உவமயியல். 5

| | | |
|---|---|---|
| கிழக்கு | ... | பொருள் |
| ஐந்து | | |

குறிப்பு 12-ல் முதலே ஐந்து குறிப்பு 6-ல் இறுதியே பொருள் என்பதை இதிற் காட்டி, "கிழக்கெனும் ஆதி தரும் அந்தமே பொருள், அவ்வந்தமெனும் பொருளினுடைய கிழக்கெனும் ஆதியே ஐந்து" எனல்.

## (4) உயிர்மெய் உணர்த்தல்

38. நின்ற நெறியே உயிர்மெய் முதலீறே

—ந. எழுத். 54

| | | |
|---|---|---|
| உயிர் | ... | மெய் |
| | | ஈறு |
| முதல் | | நெறி |

"முதலே உயிர், ஈறே மெய்யாகிய நெறி" எனல். இவ்வாறு கூறும் நன்னூல் உயிரீற்றுப் புணரியல் 15-ல் 'நின்ற உயிர் முன்' எனக் கூறுகிறது. முதலை நின்ற உயிரெனவும் இறுதியை நெறி

யெனும் நின்ற மெய்யெனவும் விளக்குவதை மறக்காது ஞாபகத்தில் வைக்கவும்.

39. மூன்றே மொழி நிலை தோன்றிய நெறியே

—தொ. மொழிமரபு. 12

| | | |
|---|---|---|
| ... | மொழி | நிலை<br>மூன்று<br>நெறி |

5-ல் இடையே மொழி, இறுதியை 38-ல் நெறி குறிப்பு 13-ல் மூன்று 3-ல் நிலை எனக் கூறும் நான்கு சூத்திரங்களின் கருத்தை இவ்வோர் சூத்திரம் நிச்சயிக்கும் நேர்மை காண்க. "மொழி எனும் இடையினின்று தோன்றும் இறுதி மூன்றே, அம் மூன்று எனும் நிலை நெறியே" எனல்.

இறுதியை 'நிலை' எனவும் 'மூன்று' எனவும் தனித்தனிச் சூத்திரங்களில் காட்டி, அவ்விரண்டையுமே இதிலுணர்த்தி 'நிலை எனும் மூன்றே நெறி' என்பதறிக. இவ்வாறு தொல்காப்பியம் இறுதியென உணர்த்தும் நெறியையே நன்னூல் 38-ல் 'மெய்யெனும் நெறி' என விளக்குவது காண்க.

40. மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே

—தொ. நூன்மரபு. 18

| | | |
|---|---|---|
| வழி<br>உயிர் | ... | நிலை<br>மெய் |

குறிப்பு 23-ல் முதலே வழி 3-ல் இறுதியே நிலை 38-ல் முதலிறுதியே உயிர்-மெய் என்பதை இதிற் காட்டி, "மெய்யின் வழியெனும் முதலே உயிர், அவ்வுயிரெனும் முதலினின்று தோன்றும் மெய்யெனும் இறுதியே நிலை" எனல்.

41. எல்லா மொழிக்கும் உயிர் வருவழியே

—தொ. புள். மயங். 38

| | | |
|---|---|---|
| உயிர்<br>வழி | மொழி | எல்லாம் |

40-ல் முதலே உயிர் வழி 5-ல் இடையே மொழி குறிப்பு 18-ல் இறுதியே எல்லாம் என்பதை இதிற் காட்டி "எல்லாம் எனும் இறுதிக்கும் மொழி எனும் இடைக்கும் முதலே உயிர், இவ்விடையும் இறுதியும் வருவது உயிரெனும் முதலின்றே" எனல்.

42. உயிர் ஒள எஞ்சிய இறுதியாகும்

—தொ. மொழிமரபு. 36

உயிர் ஒள இறுதி
எஞ்சிய

40-ல் முதலே உயிர் 28-ல் இடையே ஒள என்பதை இதிற் காட்டி, "உயிரெனும் முதல் ஒள எனுமிடை இவற்றினின்று எஞ்சிய எனும் இறுதி ஆகும்" எனல்.

'உயிரை' முதலென்றும் 'ஒள' என்பதை இடையென்றும் எடுத்துக் காட்டாதிருந்தால் அவற்றினின்றும் இறுதி ஆகும் எனக் கூற இடமுண்டா? எஞ்சிய என்பது நாமமா? எனில்.

43. எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே

—தொ. விளிமரபு. 27

... இரண்டு எஞ்சிய
இறுதி

குறிப்பு 2-ல் இடையே இரண்டு 42-ல் இறுதியே எஞ்சிய என்பதை இதிற்காட்டி "இடையெனும் இரண்டின் இறுதிப் பெயரே எஞ்சிய" எனல்.

இரண்டென்பதை இடையின் நாமமெனக் கட்டாதிருந்தால் இதில் இரண்டின் இறுதியே எஞ்சிய என உணர்த்த இடமுண்டா? இதில் இறுதியே எஞ்சிய எனக் காட்டி மேற்காண்பதில் முதலிடையினின்று ஆகும் இறுதியே எஞ்சிய என விளக்கும் விவரம்காண்க.

இடைக்கு இரண்டெனும் நாமம் உண்டென்பதை அறியாவிடில் 'இரண்டின் இறுதிப் பெயரே எஞ்சிய' என்பதைக்காண்பதெப்படி? இதைக் காணுவிடில் 'இவ்வெஞ்சிய எனும் இறுதி, ஒள எனுமிடை உயிர் எனும் முதல் இவற்றினின்று ஆகும்' என்பதைத் தெரிய முடியுமா? இதைத் தெரிந்தாலன்றோ 'மெய்யின் உயிரே வழி' என்று ஏற்கலாம்.

இதை ஆராய்தல் கடினமென் றெண்ணிக் களைத்துவிட்டதாய்க் கருதக்கூடாது. நன்னூல் தொல்காப்பியம் எனும் இவ்விரண்டின் அடிப்படையில்தான் திருமூலர் திருவள்ளுவர் முதலியோர் அழியாத் திருக்குறள் திருமந்திரம் எனும் கோட்டைகளைக் கட்டி நம்மிடம் ஒப்பித்திருக்கின்றனர். இவை அமைந்துள்ள அடிப்படையின் மகிமையை அறியாவிடில் அவர்கள் அழியாதெனக் கருதியது வீணு

கும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நன்னூல் தொல்காப்பியத்தின் தன்மையைப் பொறுமையுடன் ஊன்றி நோக்கவும். இம் மூன்றின் நாமங்களையும் இவற்றின் செய்திகளையும் சூத்திரங்கள் ஒன்றையொன்று தழுவி விளக்குவதாக நான் எடுத்துக் காட்டுவதில் சந்தேகம் ஏதேனும் இருக்குமாகில் அதை மற்ற நூல்கள் நிவர்த்திக்கும் விவரத்தை அடுத்துக் காணலாம்.

ஏற்க இடமுண்டா? தெரிந்ததா? விளங்கிற்று? சந்தேகமுண்டா? என நான் எழுதியிருப்பது கண்டு ஆயாசப்பட வேண்டாம். அனைவரையும் அற்பமாய்க் கருதி அறிவாராய்ச்சியில் நிகரற்றவனெனும் அகம்மதை கொண்டு இவ்வாறு எழுதியிருப்பதாக நினைக்கக்கூடாது. நாம் கையாளும் நூல்களில் மற்றோர் கருத்துப் புதைந்து கிடக்கிறது என்பதை எல்லோரும் அறிய வேண்டுமெனும் அவா மிகுதியால் தட்டி எழுப்ப இவ்வாறு கூறுவதே அன்றி வேறில்லை.

44. முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே

—தொ. உரியியல். 28

| | | |
|---|---|---|
| முழுது | என் | கிளவி |
| எஞ்சாதது | | டே |
| | | பொருள் |

9-ல் பொன்-என்-கிளவி என்பதை இதில் முழுது-என்-கிளவி என உணர்த்தி, 37-ல் இறுதியே பொருள் என்பதை இதிற்காட்டி, "முழுது எனும் முதலே எஞ்சாதது" எனல்.

42, 43-ல் இறுதியை எஞ்சியது என்பதற்கிசைய இதில் முதலை எஞ்சாதது என விளக்கும் விபரம் காண்க. முழுதெனவும் நாமம் உண்டா? எனில்.

45. ஆண்மரக் கிளவி அரைமர வியற்றே

—தொ. புள். மய. 9

| | | |
|---|---|---|
| ஆண் | மரம் | கிளவி |
| | அரை | |

10-ல் முதலே ஆண் 6-ல் ஈறே கிளவி என்பதை இதிற்காட்டி, "ஆண் எனும் ஆதியின் அந்தமாகிய கிளவியை இயற்றிய (ஆக்கிய) இடையே அரை எனும் மரம்" எனல்.

46. மெய்யினளவே அரையென மொழிப

—தொ. நூன்மரபு. 11

... அளவு மெய்
அரை

40-ல் இறுதியே மெய் 45-ல் இடையே அரை என்பதை இதிற் காட்டி, "மெய்யெனும் இறுதியின் இடையாகிய அளவே அரை என்று கூறப்படும்" எனல். இடையை அரை என்பதற் கிசைய 44-ல் முதலே முழுது என்பதறிக.

47. அவ்வியல் நிலையும் ஏனைமூன்றே

—தொ. நூன்மரபு. 12

அவ் ... நிலை
இயல்
ஏனை மூன்று

3-ல் முதலிறுதியே இயல்-நிலை, 29-ல் முதலே அவ் 39-ல் இறுதியே மூன்று என்பதை இதிற் காட்டி, "இயலெனும் முதலே ஏனை, நிலை எனும் இறுதியே மூன்று" எனல். செய்யுளியல் 137-ல் 'ஏனை ஒன்றே' எனவும் தொல்காப்பியம் கூறுகிறது.

48. பொய்தலை பெய்தலும் நல் வகையுடைய

—தொ. புறத். 24

பொய் வகை நல்
தலை

குறிப்பு 19-ல் இடையிறுதியைத் தந்த முதலே தலை என்பதையும் குறிப்பு 2-ல் இடையே வகை எனவும்கூறுவதை இதிற்காட்டி "நல்லெனும் இறுதி வகையெனும் இடை இவற்றினுடைய முதலே பொய்யெனும் தலை" எனல்.

இதில் தலையைப் பெய்தலென்று கூறும் தொல்காப்பியம் முதலுக்கு ஐந்தெனும் நாமமும் உண்டென்பது பற்றிச் செய்யுளியல் 88-ல் 'தலைப்பெயலைந்துமாகும்' எனக் கூறுகிறது. இதற்குக் காரணம் என்னவெனில், (அறிவெனும் நாமமும் அறியுந்தன்மையும் இறுதிக்கு உண்டென்பது பற்றிக் கிளவி எனுமிறுதியை 'உணருங் கிளவி' எனக் கூறுவது போல்) 22-ல் முதலே மழை எனக் கூறுவதால் அம் மழை எனும் முதலுக்குப் பெய்யுந் தன்மை உண்டென்பது பற்றி முதலின் நாமங்களாகிய தலையைப் பெய்தலெனவும் ஐந்தைப் பெயலைந்தென்வும்

விளக்கும் விவரம் காண்க. ஆதி-இடை-அந்தம் என வகுத்துக்காட்டி, இவற்றுள் ஆதிக்கு மறை எனும் நாமமுண்டென்பது பற்றி அதற் கேற்பட்ட நாமங்களைத் தலையே பெய்தல் பெயலே ஐந்தெனவும், அந்தத்திற்கு அறிவெனும் நாமமுண்டென்பது பற்றி அந்தமெனும் கிளவியை உணருங் கிளவி எனவும் விளக்குவது தெரிந்ததா?

## (5) சொற்பொருள் விளக்கல்

49. சொல்லிடை யிட்ட பாலை நிலையும்

—தொ. புறத். 24

| | | |
|---|---|---|
| சொல் | இடை | நிலை |
| | | பாலை |

47-ல் இறுதியே நிலை என்பதை இதிற்காட்டி, "சொல் லெனும் முதலின் இடை தந்த இறுதி எனும் நிலையே பாலை" எனல்.

50. வேறு வினைப் பொதுச் சொல் ஒரு வினைகிளவார்

—தொ. கிளவி. 46

| | | |
|---|---|---|
| வேறு | வினை | ... |
| சொல் | பொது | |
| கிளவார் | ஒரு | |

முதலை 23-ல் வேறு 49-ல் சொல், இடையை 14-ல் வினை 30-ல் ஓர் என்பதை இதிற்காட்டி, "வேறெனும் முதலே சொல்லெனும் கிளவார், வினையெனும் இடையே ஓரெனும் பொது" எனல்.

51. சொல்லெ னச்சம் முன்னும் பின்னும்
சொல்லளவல்ல தெஞ்சுத லிலவே

—தொ. எச்சவியல். 45

| | | |
|---|---|---|
| சொல் | என் | எச்சம் |
| முன் | அளவு | பின் |
| | அது | எஞ்சுதல் |

முதலை 50-ல் சொல், இடையை 44-ல் என் 46-ல் அளவு 35-ல் அது, இறுதியை 42-ல் எஞ்சிய என்பதை இதிற் காட்டி, (இது இதற்குப் பெயர் என வகுத்துக் காட்டும் தொல்காப்பியம் அதை நிச்சயிக்க இது இதற்குப் பெயரல்ல எனச் சில சூத்திரங்களில் எச் சரிக்கின்றது, அவற்றுள் இச்சூத்திரம் ஒன்று) "முதலெனும் முன்னே சொல், இடையெனும் என்னே அளவு, இறுதியெனும்

பின்னே எச்சம், சொல்லெனும் முதல் அளவெனும் இடையல்ல, அளவாகிய அது எனும் இடை இறுதியாகிய எச்சமெனும் எஞ்சு தல் இலையே" எனல்.

52. எழுத்தே சாரியை யாயிரு பண்பின்

—தொ. புணரியல். 10

| | | |
|---|---|---|
| யா | இரண்டு | ... |
| | சாரியை | |
| பண்பு | எழுத்து | |

12-ல் முதலே **பண்பு** 43-ல் இடையே இரண்டு என்பதை இதிற் காட்டி, "முதலே பண்பு, அப் பண்பின் இடையாகிய இரண் டெனும் சாரியை எழுத்தே" எனல்.

குறிப்பு 18-ல் இடையே 'அத்து' எனக் கூறும் தொல்காப் பியம் உருபியல் 13-ல் 'அத்தே சாரியை' என உணர்த்துதற்கிசைய இதில் இரண்டெனும் இடையே சாரியை எனக் காட்டி 'சாரியை எழுத்தே' என விளக்கும் விவரம் காண்க. இவ்வாறு உணர்த்து வதோடு 'பண்பின் சாரியை எழுத்தே' எனத் தொடர்பைப் புகட்டு வதையும் கவனிக்க.

53 தம்மியல் கிளப்பின் எல்லா வெழுத்தும்

—தொ. மொழிமரபு. 14

| | | |
|---|---|---|
| தம் | எழுத்து | எல்லாம் |
| இயல் | | |

முதலே 8-ல் **தம்** 3-ல் **இயல்**, இடையை 52-ல் **எழுத்து**, இறுதியை 2-ல் **எல்லாம்** என்பதை இதிற் காட்டி, (23ல் இடை யிறுதியை வேறெனும் முதல் கிளப்பும் என்பதுபோல்) எல்லாம் எனும் இறுதியையும் எழுத்தெனும் இடையையும் கிளப்புவது (உண்டாக்குவது) முதலாகிய தம்மெனும் இயலே" எனல். 49, 50, 51-ல் முதலே **சொல்** 52, 53-ல் இடையே **எழுத்து** 37, 44-ல் இறுதியே **பொருள்** என உணர்த்தி, இம்மூன்றையே சொல்லதி காரம் எழுத்ததிகாரம் பொருளதிகாரம் எனும் மூன்றிலும் விளக்குவதறிக.

53. யா வினை மொழியே இயல்புமாகும்

—தொ. குற். 32

| | | |
|---|---|---|
| யா | யே | இயல்பு |
| வினை | மொழி | |

52-ல் முதலே யர் 5-ல் இடையே மொழி 1-ல் இறுதியே இயல்பு என்பதை இதிற் காட்டி, "யா எனும் முதலே வினை, மொழி எனும் இடையே யே, இம்முதலிடையினின்றே இயல்பு எனும் இறுதி ஆகும்" எனல்.

1-ல் முதலின் இறுதியே இயல்பெனக் காட்டி, இதில் அவ் வியல்பு வினை-மொழி எனும் முதலிடையினின்று ஆனதெனவும் உணர்த்தும் தொல்காப்பியம் 4-ல் இவ்வியல்பை நிலம் பொழுது எனும் முதலிடையின் இறுதி என உணர்த்துவதை நமது அனுப வத்திலுள்ள பூமி காலம் என்பவற்றின் தன்மையைப் பற்றி உணர்த்துவதாய் ஏற்க இடமுண்டா? இதை இவ்வாறு கொள்ளுவ தன்றி 'முதலெனப்படுவது ஆயிருவகைத்தே' என்பதும் இக் கருத் துடையதே எனக் கருதலாமா?

## (6) மயங்குதல்

'மயங்குதல்' 'உலாவுதல்' என்று கூறுவது கண்டு திகைக்க வேண்டாம். முதலினின்றே இடையும் இறுதியும் உண்டாகும் உற்பத்திக் கிரமத்தால் இவற்றிற்கு முன்—இடை—பின் எனும் நாமங்கள் வாய்த்திருப்பது போல் 32, 34-ல் கீழ் - மேல் என ஆதி அந்தத்தைக் கூறுவதால் கீழ்—இடை—மேல் எனும் நாமங்கள் தோற்றக் கிரமத்தால் கற்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு கீழ்-நடு-மேல் எனக் காட்டி 'நடு உலாவி மயங்கும்' என உணர்த்து வந்த நம் தலைக்கு ஒப்பிடலாம். தலையினின்று உண்டாவதே பேனும் சிகையும். இவற்றின் அமைப்பைப் பார்த்தால் சிகையை மேலென்றும் பேனை இடையென்றும் தலையைக் கீழென்றும் கருத இடம் ஏற்படுகிறதன்றோ? தலை - சிகை எனும் மேல் கீழ் இரண் டிற்கும் தனக்குத் தானே நகருந் தன்மை கிடையாது, இடையாகிய பேனுக்கோ 'ஊர்ந்து திரியும் தன்மை இருக்கிறது. இவ்வாறு திரியும் இவை சோர்ந்து மயங்குமன்றோ? இதற்கிசையவே தொல்காப்பியம் 'இம் முப் பொருள்களில் முதலும் இறுதியும் திரியாது நிற்கும் இடை நிற்காது திரிந்து மயங்கும்' என விளக் கும் விபரத்தைக் கவனிப்போம்.

54. ஏனைக் காலம் மயங்குதல் வரையார்

—தொ. வினையியல். 51

| | | |
|---|---|---|
| ஏனை | வரையார் | ... |
| காலம் | மயங்குதல் | |

47-ல் முதலே ஏனை 2-ல் இடையே வரையார் என்பதை இதிற் காட்டி, " ஏனை எனும் முதலே காலம், வரையா ரெனும் இடையே மயங்குதல் " எனல்.

55. மயக்கின் ஆ அ குநவும்

—தொ. எச்சவியல். 53

| | | |
|---|---|---|
| அ | மயக்கு | கு |
| ஆ | | ந |

30, 31-ல் முதலே அ ஆ, இடையே 54-ல் மயங்குதல், இறுதியை 26-ல் கு என்பதை இதிற் காட்டி, மயங்குதல் என்பதை மயக்கு எனக் காட்டி, " இடையெனும் மயக்கின் முதலே அ ஆ இறுதியே கு ந " எனல். இடையே மயங்குதல் எனவும் முதலே அ ஆ, இறுதியே கு எனவும் கூறும் நான்கு சூத்திரக் கருத்தை இச் சூத்திரம் நிச்சயிப்பதறிக.

56. அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்சமிலவே பொருள் வயினான

—தொ. வேற். மயங். 17

| | | |
|---|---|---|
| ஐந்து | இரண்டு | அச்சம் |
| | | எச்சம் |
| | வயின் | கிளவி |
| | | பொருள் |

37-ல் முதலே ஐந்து, 43-ல் இடையே இரண்டு 18-ல் இடையே வயின், இறுதியை 51-ல் எச்சம் 18-ல் கிளவி 44-ல் பொருள் என்பதை இதில் காட்டி, அவ் வாறு சூத்திரங்களின் கருத்தை இவ் வோர் சூத்திரம் நிச்சயித்துக் காட்டும் விவரம் காண்க. அப்பெயர் களையே இதில் உணர்த்தி, (உணருந் தன்மை இறுதிக்கு உண் டென்பது பற்றி 'உணர்ந்தோர்' என இறுதியைக் கூறுவது போலும், மழை எனும் நாமம் ஆதிக்கு உண்டென்பது பற்றி 'பெய்தலே தலை' எனக் கூறுவது போலும்) அச்சமுள்ளதே கிளவி என்பது பற்றி இறுதிக்கு அச்சம் என நாமத்தைச் சூட்டி, " அச்சமெனும் கிளவிக்கு இடையே இரண்டு முதலே ஐந்து. இவை யிரண்டும் எச்சமெனும் இறுதியில்லை, எச்சமென்பது இரண்டாகிய வயினெனும் இடையினின்று ஆன பொருளே " எனல்.

51-ல் சொல்லெனும் முதல் அளவெனும் இடையல்ல, அவ் வளவெனும் அது எஞ்சுதல் எனும் எச்சமில்லை என்பதுபோல் இதிலும் ஐந்து மிரண்டும் எச்சமில்லை என உணர்த்துவதறிக.

57. மம் முன் ப ய வ மயங்கும் என்ப

—ந. எழுத்தியல். 60

| | | |
|---|---|---|
| முன் | ம | ய |
| | ப | |
| | வ | |
| | மயங்கும் | |

29-ல் இடையே வவ் என்பதை இதிற் காட்டி, "முன்னுக்கும் யகரமெனும் பின்னுக்கும் இடையே மயங்கும் வகரம். இதற்கே மகரமெனவும் பகரமெனவும் நாமங்கள் உண்டு" எனல்.

58. ஏனை வகரம் தொழிற் பெயரியற்றே

—தொ. புள். மயங். 87

| | | |
|---|---|---|
| ஏனை | தொழிற் | ... |
| பெயர் | வகரம் | |

முதலை 47-ல் ஏனை இடையை குறிப்பு 11-ல் **தொழிற்** 57-ல் **வகரம்** என்பதை இதிற் காட்டி, "ஆதியாகிய பெயரெனும் ஏனையே இடையாகிய வகரம் எனும் தொழிலை இயற்றியது" எனல்.

59. வல்லென் இளவி தொழிற் பெயரியற்றே.

—தொ. புள். மயங். 78

| | | |
|---|---|---|
| ல் | வ | இளவி |
| | என் | |
| பெயர் | தொழில் | |

58–ல் காணும் **பெயர்-தொழில்** என்பவற்றை இதிற் காட்டி, "பெயரெனும் முதலும் தொழிலெனும் இடையும் இயற்றியதே இளவி எனும் இறுதி" எனல்.

இவ்விரு சூத்திரங்களிலும் இடையே வகரம் எனக் கூறுவதையே 57-ல் காட்டி வகரம் எனும் இடை மயங்கும் என்பது கண்டு இதையே 54, 55-ல் மயக்கு மயங்குதல் எனவும் புகட்டும் விவரம் அறிக.

60. அச்சம் பயமிலி காலம் பெருமை

—தொ. இடையியல். 6

| | | |
|---|---|---|
| பயமிலி | ... | அச்சம் |
| காலம் | | பெருமை |

54-ல் முதலே காலம் 56-ல் இறுதியே அச்சம் என்பதை இதிற் காட்டி, " காலமெனும் முதலே பயமிலி, அச்சமெனும் இறுதியே பெருமை " என்பதறிக. ஆதியை பயமிலாக் காலமெனவும் அந்தத்தை அச்சமுள்ள பெருமை எனவும் உணர்த்துவ தறிக.

61. பூப் பெயர் முன் இனம் மென்மையுந் தோன்றும்

—நன். உயிரீற். 50.

| | | |
|---|---|---|
| பூ | ப் | |
| முன் | இனம் | மென்மை |

முதலிடையெனும் முன்-இனப் பெயரே பூவும், ப்பும், அம் முன்னினம் எனும் முதலிடையினின்று மென்மை எனும் இறுதி தோன்றும் " எனல்.

இவ்வாறு ஆராய்ந்து 'பூ' என்பதை முதலின் நாமமெனவும் 'கிளவி' என்பதை இறுதியின் நாமமெனவும் தெரிந்தாலன்றோ திவாகர நிகண்டு 'பூவும் இதழும் புகலுங் கிளவி' (அதாவது) பூ எனும் முதலும் இதழெனும் இடையும் புகலும் (செய்யும்) இறுதியே கிளவி என்று விளக்குவதை அறிய முடியும்.

62. கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்

—தொ. உரியியல். 24

| | | |
|---|---|---|
| ... | என் | ய |
| | க | கிளவி |
| | | மென்மை |

44-ல் இடையிறுதியே என்-கிளவி என்பதை இதிற் காட்டி, இறுதியை 57-ல் ய-61-ல் மென்மை எனக் கூறுவதையே காட்டி, என்-கிளவி எனும் இடையிறுதிக்கு க-ய எனும் எழுத்துக்கள் நாமமென்பதையும் உணர்த்தி, "என்னெனும் இடையே இறுதியாகிய கிளவி எனும் மென்மையைச் செய்யும் " எனல்.

61-ல் இனமெனும் இடையினின்று தோன்றும் இறுதியே மென்மை என நன்னூல் உணர்த்துவதையே இதில் மென்மை எனும் இறுதியை என்னெனும் இடை செய்யும் என விளக்கும் விவரமறிக. முதலிடைக்கு 'பூ-ப்' எனும் எழுத்துக்களை 61-ல் கூறுதற் கிசைய இதில் இடையிறுதிக்கு 'க—ய' எனும் எழுத்துக்களை நாமங்களென விளக்குவதைக் காண்க

63. தேன் மொழி மெய் வரின் இயல்பு மென்மை

—ந. மெய்யீற். 11

| | | |
|---|---|---|
| ... | தேன் | மெய் |
| | | இயல்பு |
| | மொழி | மென்மை |

5-ல் இடையே மொழி இறுதியை 40-ல் மெய் 53-ல் இயல்பு 61-ல் மென்மை என்பதையே இதிற் காட்டி, " இடையாகிய தேனெனும் மொழியினின்று வரும் மெய்யென்னும் இறுதியே இயல்பெனும் மென்மை " எனல்.

' மெய் ', ' மென்மை ', ' இயல்பு ' என்பவற்றை இறுதியின் நாமங்களென அவ்வச் சூத்திரத்திலும் தனித் தனியே உணர்த்தி, இதில் மொழியினின்று வரும் மெய்யே மென்மை எனும் இயல்பு என விளக்கும்போது இவ்வியல்பை எங்கு காணினும் இறுதி யென்றே ஏற்க வேண்டுமென்பது தெரிகிறதன்றோ? அப்படி யிருக்க, நமது அனுபவத்திலுள்ள நிலம் பொழுது இரண்டின் இயல்பைப் பற்றியோ வேறெதையோ கூறுவதாக ஏற்கலாமா?

64. வாள் ஒளி ஆகும்

—தொ. உரியியல். 69

| | | |
|---|---|---|
| ... | ஒளி | வாள் |

" ஒளியெனும் இடையினின்றே வாளெனும் இறுதி ஆகும் " என்பது காண்க.

I பொச்சாப் பூக்க மத மறம்

—ந. உரியியல். 11

| | | |
|---|---|---|
| பொச்சாப்பு | ... | மதம் |
| அறம் | | ஊக்கம் |

" அறமெனும் முதலே பொச்சாப்பு, மதமெனும் இறுதியே ஊக்கம் " எனல். இவை அடுத்து விளக்கப்படும்.

## (7) உலாவுதல்

65. இவ்வென மொழிய திரியும் ஆறே

—தொ. புணரியல். 7

| | | |
|---|---|---|
| ... | இவ் | ... |
| | ஆறு | |

28-ல் முதலிடையிறுதியை அகாரம்—ஔகாரம்—உகாரம் எனக்கூறும் தொல்காப்பியம், இதில் ஔகாரம் எனும் இடையை

இவ் அதாவது இகரம் எனக் காட்டி, 26-ல் இடையே ஆறு என்பதையும் இதில் உணர்த்தி, "இவ்வெனும் இடை ஆறே, இது திரியும் தன்மை உடையது" எனல். இதை இவ்வாறே ஏற்க ஆதாரம் காட்டுகிறேன்.

66. இவை முதலாகிய இயல் நெறி திரியாது

—தொ. செய். 185

| | | |
|---|---|---|
| முதல் | ... | இவை |
| இயல் | | நெறி |

3-ல் முதலே இயல் இறுதியை 16-ல் இவை 39-ல் நெறி என்பதை இதிற் காட்டி, "இவை-முதல் ஆகிய ஆதியந்தமே இயல்-நெறி என எச்சரித்து இவ்விரண்டும் திரியாத் தன்மையுடையவை" எனல். இதே இயல்-நெறியை 38-ல் உயிரும் மெய்யெனும் நெறியும் எனக் காட்டி, இவை நிற்பவை என விளக்குகிறதன்றோ ? இவற்றைச் சீர் தூக்கிப் பார்த்தால், ஆதியும் அந்தமும் திரியாது நிற்பவை என உணர்த்துவது கண்டு 65-ல் இடை திரியும் எனக் கூறுவதை நிற்காது திரியும் என்றேற்க. இதிற் சந்தேகமிருந்தால் அதையும் களைய ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

67. முறை நில்லாது

—தொ. கிளவி. 44

| | | |
|---|---|---|
| ... | முறை | ... |
| | நில்லாது | |

10-ல் இடையே முறை என்பதை இதிற் காட்டி, "முறை எனும் இடை நில்லாது" எனல். இதில் நில்லாது எனக் கூறும் இடையையே 65-ல் திரியும் என்பதால் நில்லாது திரிவதே இடையென் றேற்க.

68. சாரியை நிலையாது

—தொ. புள். மயங். 27

| | | |
|---|---|---|
| ... | சாரியை | ... |
| | நிலையாது | |

52-ல் இரண்டெனும் இடையே சாரியை என்பதை இதிற் காட்டி, "சாரியை எனுமிடை நிலையாதது" எனல். மேற்காண்பதில் நில்லாதது என்பதையே இதில் நிலையாதது என்பதறிக.

## (8) கருதுதல்

இம்மூன்றுள் எதை எதில் சேர்த்து உண்பதற்கு உகந்த பக்குவப்படுத்துவது என்னும் விவரத்தை 'இது இதை மருவும்' 'இது இதைக் கொள்ளும்' 'இது இதைக் கொள்ளாது' 'இது இதற்கு உரியது' என நூல்கள் உணர்த்துகின்றன. அச்செய்தியைச் சிறிது கவனிப்போம்.

69. மொழி இவர்க்கு உரியர்

—தொ. செய். 205

... மொழி இவர்

5-ல் இடையே மொழி என்பதைக் காட்டி, 18-ல் முதலே 'அவர்' என்பதற்கிசைய இதில் இறுதியை 'இவர்' எனக் காட்டி, "மொழி எனுமிடை இவரெனும் இறுதிக்கே உரியது" எனல். மொழி இவர்க்கு உரியது என்று கூறுமல் உரியர் என்பது கண்டு திகைக்கவேண்டாம். 32-ல் இதே இடைக்கு ஒருவன் ஒருத்தி எனும் நாமங்கள் கூறுவதால் எழுவாயை அஃறிணையாக வும் பயனிலையை உயர்திணையாகவும் கூறுகிறது. இதுபோலவே பல நூல்களும் கூறும்.

70. நிலை மலை நிறை கோல்

—ந. பொதுப்பாயிரம். 26

நிலம் ... மலை
கோல் நிறை

4-ல் முதலே **நிலம்** என்பதை இதிற் காட்டி, "நிலமெனும் முதலே கோல், அம்முதலெனும் கோலுக்கு இறுதியே நிறையெனும் மலை" எனல்.

71. மிகு நிறை கோற்கே

—ந. பொதுப்பாயிரம். 29

கோல் மிகு நிறை

மேற்காண்பதில் முதலிறுதி எனும் **கோல்—நிறை** என்பவற்றை இதிற் காட்டி, இடையை மிகு எனவும் உணர்த்தி. "நிறையெனும் இறுதி முதலெனும் கோற்கே (உரியது) எனல்.

72. பண்பு கொள் கிளவியும்

—தொ. வினையியல். 23

பண்பு ... கிளவி

52-ல் முதலே பண்பு 9-ல் ஈறே கிளவி என்பதை இதிற் காட்டி, " கிளவி எனும் இறுதியையே பண்பெனும் முதல் கொள்ளும் " எனல். இதில் இறுதியை முதலே கொள்ளும் என்பதையே 71-ல் ' நிறை கோற்கே ' என்று உணர்த்துவ தறிக.

73. நாடு அவர்க்கு

—தொ. புறத். 5.

அவர் ... நாடு

18-ல் முதலே அவர் என்பதை இதிற்காட்டி, " நாடெனும் அந்தம் அவனெனும் ஆதிக்கு உரியது " எனல். 72-ல் 'பண்பு கொள் கிளவியும்' என்பதையே இதில் பெயர்களை மாற்றி விளக்குவதறிக.

74. பண்பிற் கியல்பே

—ந. பதவியல். 9

பண்பு ... இயல்பு

52-ல் முதலே பண்பு 53-ல் இறுதியே இயல்பு என்பதை இதிற் காட்டி, " பண்பெனும் முதலுக்கே இயல்பெனும் இறுதி உரியது " எனல். 72-ல் 'பண்பு கொள் கிளவி' என்பதையே இதில் 'பண்பிற் கியல்பே' என உணர்த்துவ தறிக. இதனால் கிளவி எனும் இறுதியே இயல்பு என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ?

75. வன்மை மலைக்கே

—ந. பொதுப்பாயிரம். 28

... வன்மை மலை

34-ல் இடையே வன்மை 70-ல் இறுதியே மலை என்பதை இதிற் காட்டி, " வன்மை எனும் இடை மலை எனும் இறுதிக்கே உரியது " எனல்.

69-முதல் இதுவரை காணும் சூத்திரங்கள் ' ஆதி அந்தத்தையே உரியதாய்க் கொள்ளும், ' அந்தம் இடையையே உரியதாய்க் கொள்ளும் ' என்பதறியவும். இடைக்கு உரியதையும் காட்டுகிறேன்.

76. பிறவும் பார்ப்பார்க்கு உரிய

—தொ. கற்பியல். 36

பிற பார்ப்பார் ...

குறிப்பு 29-ல் முதலே பிறர் என்பதை இதில் பிற எனக் காட்டி, " பிற எனும் முதல் பார்ப்பார் எனும் இடைக்கு உரியது " எனல். பார்ப்பார் என்பது அடுத்து விளக்கப்படும்.

## (9) அறிந்தணுகல்

வேர்—மரம்—பழம் என்பவற்றுள் எது எதை அணுகியும் எது எதை அணுகாமலும் இருக்கிறதென்றால் 'வேர் பழத்தையும் பழம் வேரையும் அணுகவில்லை.' 'மரமெனும் இடையோ வேர்—பழம் எனுமிரண்டையும் அணுகி யிருக்கிறது' எனத் தெரிகிறதன்றோ? அதுபோலவே 'வேருக்குப் பழம் தெரியாது. பழத்திற்கு வேர் தெரியாது' 'மரத்திற்கோ தன்னோடு பொருந்தியுள்ள வேரும் பழமும் தெரியும்'

இவை அனைத்தும் அம்முப்பொருள்களில் அமைந்திருப்பதாகக் கற்பித்து 'இது இதை அறியும், இது இதை அறியாது' 'இது இதை அணுகும், 'இது இதை அணுகாது' என உணர்த்தும் விபரத்தை எடுத்துக் காட்டுகிறேன்.

77. கிழவோனறியா அறிவினள் இவளென

— தொ. களவியல். 26

| | | |
|---|---|---|
| கிழவோன் | ... | அறிவினள் |
| | | இவள் |

குறிப்பு 20-ல் முதலே **முதல்வன்** என்பதைக் காட்டி, களவியல் 48-ல் 'முதல்வன் கிழவனாகும்' எனக் கூறும் தொல்காப்பியம் அதை இதிற் காட்டி, 69-ல் **இவர்** எனக் கூறும் இறுதியை **இவள்** என உணர்த்தி, "கிழவோனெனும் ஆதியை அறியாத அந்தமே அறிவினளெனும் இவள்" எனல். 4-ல் உணர்ந்தோர் எனக் கூறும் இறுதியையே இதில் அறிவினள் என்பதறிக.

78. அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

— தொ. கற்பியல். 51

| | | |
|---|---|---|
| அறம் | சுற்றம் | கிழத்தி |
| கிழவன் | | |

மேற்காணும் **கிழவன்** என்பதை இதிற் காட்டி, "கிழவனெனும் முதலே அறம், அவ்வறம் செய்யும் இடையே சுற்றம், அச் சுற்றத்தினுடைய முதலிறுதியே கிழவனும் கிழத்தியும்" எனல்.

79. காலை கிழவோர்க் குரித்தே

— தொ. கற்பியல். 19

| | | |
|---|---|---|
| கிழவோர் | ... | காலை |

77-ல் முதலே **கிழவோர்** என்பதை இதிற் காட்டி, " காலை எனும் இறுதி கிழவோரெனும் முதலுக்கே உரியது" எனல். இவற்றில் காணும் அறம், காலை, சுற்றம் எனும் சொற்கள் அததற்கே நாமமாய் அமைந்திருப்பதை அடுத்தடுத்துக் காணலாம்.

80. தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப

—தொ. களவியல். 46

| | | |
|---|---|---|
| தந்தை | அத்து | தன்னை |
| முன் | இன் | |

இடையைக் குறிப்பு 18-ல் **அத்து** 26-ல் **இன்**, இறுதியை 30-ல் **தன்** என்பதை இதிற் காட்டி, தன்னென்பதைத் ' தன்னை ' என உணர்த்தி, " தந்தை எனும் முதலையும் தன்னை எனும் இறுதியையும் உணர்வது இடையாகிய இன்னெனும் அத்தே " எனல்.

81. உயிரீருகிய முன்னிலைக் கிளவி

— தொ. தொகைமரபு. 9

| | | |
|---|---|---|
| உயிர் | ... | ஈறு |
| முன்னிலை | | கிளவி |

40-ல் முதலே **உயிர்** 9-ல் ஈறே **கிளவி** என்பதை இதிற் காட்டி, " உயிரெனும் முதலே முன்னிலை ஈறே கிளவி " எனல். இதிற் சந்தேகமிருந்தால் 78-ல் முதலே **அறம்** என்பதையும் இதில் முதலே முன்னிலை என்பதையும் நிச்சயித்துக் காட்ட களவியல் 63-ல் 'முன்னிலை அறனெனப்படுதல்' என உணர்த்துவது கண்டு தெளிக.

82. ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை

— தொ. புள். மயங். 8

| | | |
|---|---|---|
| ஆண் | ... | பெண் |
| அஃறிணை | | இயற்கை |

10-ல் முதலிறுதியே **ஆண்—பெண்** என்பதை இதிற் காட்டி, " ஆண் எனும் முதலே அஃறிணை, பெண்ணெனும் இறுதியே இயற்கை " எனல்.

83. தன்மைச் சொல்லே அஃறிணை கிளவி

— தொ. கிளவி. 43

| | | |
|---|---|---|
| சொல் | ... | தன்மை |
| அஃறிணை | | கிளவி |

முதலை 50-ல் **சொல்** 82-ல் **அஃறிணை** என்பதை இதிற் காட்டி, " சொல்லெனும் முதலே அஃறிணை, கிளவி எனும் இறுதியே தன்மை " எனல்.

84. தோன்று முன்னிலை மொழிக்கே

— தொ. தொகை மரபு. 10

| | | |
|---|---|---|
| தோன்று | மொழி | ... |
| முன்னிலை | | |

81-ல் முதலே முன்னிலை 5-ல் இடையே மொழி என்பதை இதிற் காட்டி, "ஆதியாகிய தோன்றுத எனும் முன்னிலை இடையாகிய மொழிக்கே" (உரியது) எனல். தோன்றுத எனவும் நாமமுண்டா? எனில்.

85. பிறப்பினுக்கம் வேறு வேறியல
திறப்படத் தெரியுங் காட்சியான

— தொ. பிறப்பியல். 1

| | | |
|---|---|---|
| வேறு | திறம் | பிறப்பு |
| இயல் | ஆக்கும் | தெரிதல் |
| அ | ப, ட | காட்சி |

3-ல் முதலே **இயல்**, இடையை குறிப்பு 29-ல் **திறம்** 12-ல் **ஆக்கம்** என்பதை இதிற் காட்டி, "பிறப்பெனும் அந்தத் திடையே ஆக்கம் ஆதியே வேறு, அவ் வேறெனும் இயலும் திறமெனும் ஆக்கமும் (ஆக்குவதால்) ஆன பிறப்பாகிய அந்தமே தெரிதல் எனும் காட்சி" எனல். 84-ல் முதலே 'தோன்றுத' 85-ல் இறுதியே 'தெரிதல்' எனும் விபரமறிக. இதையே 'தோன்று—தோன்றல், காணுமை—காண்பது, தெரியாத—தெரிதல்' என நூல்கள் கூறும். இப்படியும் நாமங்களிருக்குமா? என்று வியப் படையலாம். வியப்பாய் நமக்குத் தோன்றும் இப் பெயர்களை ஆராய்ந்தறிந்தால்தான் நூல்களின் பயனை அடையலாம். இது நான் சொல்லுவதில்லை. பயன் கண்ட நம் முன்னோர் பாடுபட்டு இப் பெயர்களை அறிந்ததை முன்னிட்டே அவரவர் நூலிலும் இவற்றையே பெரும் பாகம் எடுத்துக் காட்டி இவற்றால் விளையும் பயனை வெகு சுருக்கமாய் விளக்குகின்றனர். இதை உண்மையென் றேற்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

86. மலை மலையாங் காட்சி கண் காணுமை ஆதி

— தாயுமானவர் சிதம்பர ரகசியம். 16

| | | |
|---|---|---|
| ஆதி | ...... | மலை |
| காணுமை | | காட்சி |
| | | கண் |

**ஆதியை 84-ல் தோன்றுத** எனவும், அந்தத்தை 70-ல் **மலை** 80-ல் **காட்சி** 26-ல் **கண்** என நன்னூல் தொல்காப்பியம் கூறுவதையே

காட்டி, "அந்தமாகிய மலை எனும் காட்சியே கண், இக் கண்ணெனும் அந்தத்தின் ஆதியே காணுமை" எனல். இது மாத்திரமல்ல, ஒவ்வொரு நூலின் தன்மையும் இதுவே. இவற்றைத் தாயுமானவர் தெரிந்தது நன்னூல் தொல்காப்பியத்திலன்றோ?

87. அவை தாம் முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்

—நன்னூல். வினையியல் 3.

| | | |
|---|---|---|
| அவை | பொது | தாம் |
| பெயர் | வினை | எச்சம் |
| ஒன்று | முற்று | |

முதலை 6-ல் **அவை** 59-ல் **பெயர்** 47-ன் விளக்கத்தில் **ஒன்று**, இடையை 50-ல் **பொது வினை**, இறுதியை 7-ல் **தாம்** 51-ல் **எச்சம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "பெயர்—வினை—எச்சம் ஆகிய முதலிடையிறுதியே அவை—முற்று—தாம், முதலாகிய பெயரவை எனும் ஒன்றே (ஒன்றினின்றே) இவ்வொன்றுக்கு உரிய எச்சமெனும் இறுதியும் முற்று வினை எனும் இடையாகிய பொதுவும் ஆகும்" எனல்.

அந்தம் ஆதிக்கு உரியதென்பதையும் ஆதியினின்றே இடையும் இறுதியும் ஆகும் என்பதையும் இதில் விளக்குவ தறிக. இச் சூத்திரக் கருத்து இதுவே என்பதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன்.

88. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லர்தாகு செய்யுமென் முற்றே

— நன். வினையியல். 8

| | | |
|---|---|---|
| முன்னிலை | படர்க்கை | தன்மை |
| | என் | |
| | முற்று | பல்லோர் |

முதலை 81-ல் **முன்னிலை**, இடையை 44-ல் **என்**, இறுதியை 83-ல் **தன்மை** எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, 87-ல் இடையே **முற்று** எனக் கூறும் நன்னூல் அதையும் 15-ல் **பல்** லெனக் கூறும் இறுதியைப் பல்லோர் எனவும் இதில் உணர்த்தி, "தன்மை எனும் அந்தத்திடம் செல்லாத ஆதியே முன்னிலை, அத் தன்மை எனும் பல்லோரிடம் முன்னிலையைச் செல்லாது செய்வது இடையெனும் முற்றே" எனல். முதலே முன்னிலை இடையே முற்று இறுதியே தன்மை எனத் தனித் தனிச் சூத்திரங்களில் கூறுவதை இச் சூத்திரம் ஓர் முக்கியச் செய்தியோடு **நிச்சயித்துக்** காட்டுவ தறிக.

I. அவையல் கிளவி மறைந்தனர் கிளத்தல்

— தொ. எச்ச. 46

அவை கிளத்தல் கிளவி
ல் ய

முதலை 5-ல் அவை 59-ல் ல் இறுதியை 59-ல் கிளவி 57-ல் ய என்பதை இதிற் காட்டி, "அவை—கிளவி எனும் ஆதியந்தம் (ஒன்றையொன்று அணுகாமலும் அறியாமலும்) மறைப்பது கிளத்த லெனும் இடையே" எனல். இதையே 88-ல் ஆதி அந்தத் திடம் செல்லாமல் செய்வது முற்றே என நன்னூல் விளக்குவ தறிக. 50-ல் முதலே கிளவார் இதில் இடை கிளத்தல் இறுதி கிளவி என்ப தறிக.

## (10) திருமந்திரச் செய்தி

89. அன்பு தலை பிரிந்த கிளவி

— தொ. கற். 38

தலை அன்பு கிளவி

48-ல் முதலே தலை என்பதை இதிற் காட்டி, "தலை எனும் முதல் அன்பெனும் இடை இவற்றினின்று பிரிந்த இறுதியே கிளவி" எனல்.

90. ஆதியி லன்பு பழுக்கின்ற வாறே

—திருமந்திரம். 1977

ஆதி அன்பு ...

89-ல் இடையெனத் தொல்காப்பியம் கூறும் அன்பு என்பதையே இதிற் காட்டி, "ஆதி பழுத்து அதினின்று தோன்றும் இடையே அன்பு" எனல். குறிப்பு 15, 16-ல் காணும் திருமந்திரப் பாடல்களை மீண்டும் ஓர் முறை பார்க்க.

91. பொய் செய் புலனெறி

— திருமந்திரம். 2603

பொய் புலன் நெறி

48-ல் முதலே பொய் 21-ல் இடையே புலன் 39-ல் இறுதியே நெறி எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "நெறி எனும் இறுதியையும் புலன் எனும் இடையையும் பொய் யெனும் முதலே செய்யும்" எனல்.

பொய்—புலன்—நெறி என்பவை நாம் வழங்கும் சொற்களாயிருப்பினும் இவை நமது அனுபவத்திலுள்ளதை சுட்டுவதா யேற்கலாகாதெனத் திருமந்திரம் நிச்சயித்துக் காட்டும் விபர மறிக.

92. அவனுக்கு இவன் இல்லமென் றறிந்து

— திருமந்திரம். 2650

அவன் ... இவன்
இல்லம்

18-ல் முதலே **அவன்** 69—ல் இறுதியே **இவன்** 13—ல் இறுதியே **இல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " ஆதியாகிய அவனுக்கு அந்தமாகிய இவனே இல்லம்" எனல். **தொல்காப்பியம் கூறும் இல் என்பதை** வேறெதுவாகவும் ஏற்கத் **திருமந்திரம் இடந்தராது தொல்காப்பியம் கூறும் அவனிவனையே காட்டி 'அவனுக் கிவன் இல்லம்' என்ப தறிக.**

93. முன்னியல் காலம் முதல்வனுர் நாமத்தைப்
பன்னின ரென்றே பாடறிவீரே

— திருமந்திரம். 2983

முன் நாமம் ...
இயல்
காலம்
முதல்வனுர்

முதலே 5—ல் **முன்** 3—ல் **இயல்** 54—ல் **காலம்** குறிப்பு 20—ல் **முதல்வன்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "நாமமெனும் இடையைப் பன்னிய முதலே முன்னியல் காலமெனும் முதல்வன்" எனல். 'முன்னியல் கலமே முதல்வன்' என உணர்த்துவதால் இவற்றிற்குப் பல நாமங்கள் உண்டென்பது தெரிகிறதன்றோ? இவற்றைத் தனித் தனித் தொல்காப்பியச் சூத்திரத்தில் ஆராய்ந்தறிந்து, அதில் முதல்வன் காலம் இயல் எனக் கூறுவதை முன்னெனும் முதலென்றே ஏற்க வேண்டுமென இதில் திருமந்திரம் எச்சரிப்பது காண்க. திருமந்திரம் விளக்குவதைத் தள்ளிவிட்டு இவற்றை வெவ்வேருய் ஏற்க இடமுண்டா?

94. ஏழும் இரண்டிலும் ஈசன்

— திருமந்திரம். 2000

ஈசன் இரண்டு ஏழு

27—ல் கண்ணெனும் இறுதியே ஏழு எனக் கூறும் தொல்காப்பியம், 18—ல் முதலே **அவன்** எனவும் உணர்த்துகிற தன்றோ? இதை அறிந்த திருமூலர் குறிப்பு 22—ல் அவனெனும் ஆதியால் ஆகிய அந்தமே கண் ணென்று உணர்த்துவதோடு அக் கண்ணேயே ஏழெனவும் இதில் விளக்குவதறிக. இறுதியாகிய கண்ணின் பெயரே ஏழு எனத் திருமந்திரம் விளக்குவது 27-ல் 'ஏழாகுவதே கண்ணெனப் பெயர்' எனத் தொல்காப்பியம் கூறுவதை யன்றோ?

தொல்காப்பியத்தில் இவ் விபரத்தை அறியாவிடினும் திருமந்திரம் விளக்குவது கண்டேனும் விழித்தெழலாமன்றோ? இதிலும் தெளியாது 'ஏழாம் வேற்றுமை உருபே கண்' என்றே ஏற்போம் என்பது உசிதமா என்பது பற்றி யோசித்துப் பார்க்க.

27–ல் இறுதியே ஏழு 43–ல் இடையே இரண்டு குறிப்பு 21–ல், முதலே இறைவன் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "ஏழிரண்டெனும் இடையிறுதியின் முதலே ஈசன்" எனல்.

95. அண்ண லழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனில னாகுமே

—திருமந்திரம். 2660

அவன் ... இவன்
அண்ணல்
அழிவிலாதது
உள்

குறிப்பு 19, 20-ல் 'அவனெனும் ஆதியினின்று வந்த அந்தமே அழிவிலாக் கண்' எனத் தொல்காப்பியம் கூறுவதையே குறிப்பு 22-ல் அவனெனும் ஆதியால் ஆகிய அந்தமே கண்ணெனவும், இதில் அக்கண்ணெனும் அந்தமே அழிவிலா அண்ணல் எனவும் விளக்கும் விபரமறிக. 92-ல் 'அவனின் இவனே இல்லமெனவும்,' குறிப்பு 22-ல் 'அவனின் இவனே கண்ணெனவும்', 'இப் பாடலில் அவனின் இவனே அழிவிலா அண்ணல்' எனவும் விளக்கும் விபரம் காண்க, தொல்காப்பியம் கூறும் இவன் என்பதைக் காட்டியதோடு 20-ல் அந்தமே அகம் எனத்தொல்காப்பியம் கூறுவதை இதில் உள்ளெனவும் உணர்த்தி 'அந்தமாகிய உள்ளாயமர்ந்திடும் இவனே அழிவிலாத அண்ணல் என்பதறிக.

96. வாக்கு மனமு மருவி யொன்றாய் விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறிவாமே

—திருமந்திரம். 1227

மனம் வாக்கு பெருமை

60-ல் இறுதியே பெருமை எனத் தொல்காப்பியம் கூறுவதை காட்டி, "மனமெனும் முதல் வாக்கெனும் இடை இவ்விரண்டும் கூடி அனுப்பிய பெருமை எனும் அந்தத்திற்கு அறியுந்தன்மையுண்டு" எனல்.

அறியுந் தன்மையுள்ள அறிவே அந்தமென குறிப்பு 17-லும் அத்தகைய அந்தமே பெருமை என 70-லும் தொல்காப்பியம் கூறுவதை நமக்கு உணர்த்தவே 'பெருமைக்கு நுண்ணறிவுண்டு'

என்று எச்சரிப்பதறிக. தொல்காப்பியக் கருத்து இவ்வாறிருப் பதைக் காணுவிடில் திருமந்திரம் ' பெருமைக்கு நுண்ணறிவாமே ' என்று கூறுவதை எத்தனை விதமாய்க் கொள்ள நேரிடுமென்பதை யும் அவை அனைத்தும் உண்மைக் கருத்தை உணர்த்த முடியுமா ? என்பதையும் சிந்தித்துப் பார்க்கவும்.

97. எண்ணு மெழுத்தும் இனஞ் செய்யலவ்வழி
பண்ணுந் திறனும் படைத்த பரமனே

—திருமந்திரம் 3041

| | | |
|---|---|---|
| எண் | எழுத்து | பண் |
| வழி | இனம் | |
| பரமன் | திறன் | |

முதலே 33-ல் **எண்** குறிப்பு 23-ல் **வழி** குறிப்பு 21-ன் **இறைவன்** இடையை 52-ல் **எழுத்து** 85-ல் திறம் 61-ல் **இனம்** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய எண்ணெனும் வழி செய்யும் எழுத்தெனும் இடையே இனம், இடையாகிய திறனையும் பண்ணெனும் இறுதியையும் படைத்த வழியே பரமன் " எனல். **பண்** என்பதைக் கவனித்தீர்களா ? பண் என்பதைத் தொல்காப் பியத்தில் அறிந்து நமக்கு உணர்த்துவதைத் தள்ளிவிட்டு இப் பண்ணென்பதை வேறாய்க் கருதலாமா ?

I. ஆதியும் அன்ன நன்றியாகி நின்றானே

—திருமந்திரம். 1542

| | | |
|---|---|---|
| ஆதி | அன்ன | நன்றி |

30-ல் இடையே **அன்ன** எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி " நன்றி எனும் அந்தமும் அன்ன எனும் இடையுமாக நின்றது ஆதி " எனல்.

## (11) மாறுபட்ட நாமங்கள்

98. தொடர்ந்திடும் சொல்லொடு சொற்பொருள் தானும்

—திருமந்திரம். 1369

| | | |
|---|---|---|
| சொல் | தான் | பொருள் |

49-ல் முதலே **சொல்** 36-ல் இடையே **தான்** 37-ல் இறுதியே **பொருள்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " சொல் லெனும் முதலோடு தான்—பொருள் எனும் இடையும் இறுதியும் தொடர்புடையன" எனல்.

97-ல் இடையே எழுத்து எனக் கூறும் திருமந்திரம் இதில் **முதலே சொல் இறுதியே பொருள்** என உணர்த்துவதோடு இவை

தொடர்புடையன எனவும் விளக்குவ தறிக. சொல்—எழுத்து—பொருள் எனத் தொல்காப்பியம் கூறுவது எவற்றை என்பது தெரிந்ததா? இவ்விபரத்தை நான் எடுத்துக் காட்டியது கண்டு நகைப்பும் திகைப்பும் கொண்டோர் இப்போதாவது மனச் சமாதானத்துடன் ஏற்கலா மன்றோ?

99. ஆறு என் கிளவி முதல் நீடும்மே

—தொ. குற். 53

| | | |
|---|---|---|
| முதல் | ஆறு | கிளவி |
| | நீடு | |
| | என் | |
| | ம் | |
| | மே | |

இடையை 25, 26-ல் ஆறு என் என்பதை இதிற் காட்டி, "முதல்—கிளவி எனும் ஆதி அந்தத்தின் இடையாகிய என்னெனும் ஆறே நீடு" எனல்.

100. நிலையான கீழ் நான்கு நீடுருவாகும்

—திருமந்திரம். 1810

| | | |
|---|---|---|
| கீழ் | நான்கு | நிலை |
| | நீடு | |

34-ல் முதலே கீழ், இடையை குறிப்பு 3-ல் நாலு 99-ல் நீடு, இறுதியை 3-ல் நிலை எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "கீழெனும் முதலின் இறுதியாகிய நிலை ஆனது நீடு எனும் நான்கினின்றே" எனல்.

தொல்காப்பியக் கருத்தையே திருமந்திரம் விளக்கும் விபரம் ஒருவாறு தெரிந்ததன்றோ? இதை அறிய தொல்காப்பியச் சூத்திரங்களில் காணும் சொற்களை ஆராய்ந்து தெரியாவிடில் திருமந்திரம் புகட்டுவதைக் காண முடியுமா? ஆகையால் சூத்திரங்களில் காணும் சொற்களை ஆராய்தல் முக்கியமாம். இவற்றிற்குள்ள எதிர்பார்த்தற் கியலாத சில பெயர்களைத் தொல்காப்பியம் உணர்த்துவதையும் காட்டுகிறேன்.

101. பசப்பு நிறனுகும்

—தொ. உரியியல். 10

| | | |
|---|---|---|
| ... | பசப்பு | நிறன் |

78-ல் முதலே அறம் 85-ல் இடையே திறம் என்பதற்கிசைய இதில் இறுதியை நிறன் எனக் காட்டி, "நிறன் எனும் இறுதி பசப்பெனும் இடையிலாகும்" எனல்.

102. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

—தொ. கற்பியல். 11

காமம் ஒழுக்கம் கற்பு
பால் நற்

12-ல் முதலே **பால்** 48-ல் இறுதியே **நல்** என்பதை இதிற் காட்டி, ஒழுக்கமெனும் இடையின் முதலெனும் பாலே காமம் நற்றெனும் இறுதியே கற்பு" எனல்.

கற்பு - ஒழுக்கம் - காமம் என்பவற்றை இவற்றிற்கு நாமங்களாய் அமைத்திருப்பதை யாரும் கனவிலும் கருத இடமுண்டா? இடமில்லாத திருக்கட்டும், இப்பெயர்களைக் கொண்டு இம்முப் பொருள்களை விளக்கும் மற்ற நூல்களின் கதி என்னவாகும். இதிற் சந்தேகமிருந்தால் கீழ் காண்பதாற் றெளிக.

103. கற்பெனப் படுவது கரணமொடு புணர

—தொ. கற். 1

கரணம் ... கற்பு

மேற்காணும் **கற்பு** என்பதை இதிற்காட்டி, (ஆதி அந்தத்தையே கொள்ளும் என்பதை) "கரணமெனும் ஆதி புணர்வது கற்பெனும் அந்தத்தையே" எனல். இச்செய்தியே ஆதியந்தம் காமமும் கற்பும் என நிச்சயிப்ப தறிக.

I. புதுமை சிறுமை பெருமை ஆக்கமொடு

—தொ. மெய்ப். 7

சிறுமை ஆக்கம் பெருமை
புதுமை

12-ல் இடையே **ஆக்கம்** 60-ல் இறுதியே பெருமை என்பதை இதிற் காட்டி "இடையாகிய ஆக்கம் எனும் புதுமையினுடைய முதலே சிறுமை இறுதியே பெருமை" எனல்.

104. பெருகிய காமத்து மிகுதியும் இன்பமும் இடும்பையும்

—தொ. கற்பியல். 6

பெருகல் மிகுதி ...
காமம் இன்பம்
இடும்பை

முதலை 6-ல் **கெடுதல்** 102-ல் *காமம்,* இடையை 71-ல் **மிகு** 13-ல் **இன்பம்** என்பதை இதிற்காட்டி, கெடுதலை இடும்பை என உணர்த்தி, "காமமெனும் இடும்பையே பெருகல்" எனல்.

105. அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே
—தொ. கற்பியல். 21

| | | |
|---|---|---|
| அவர் | இன் | ... |
| காமம் | சிறப்பு | |

104-ல் முதலே **காமம்** இடையை 26-ல் **இன்** 13-ல் **சிறப்பு** என்பதை இதிற் காட்டி, "அவர் எனும் முதலே காமம் அதினின்று தோன்றும் இன்னெனும் இடையே சிறப்பு" எனல்.

13-ல் 'சிறப்பின் அந்தமே இல்' என்பதற்கிசைய அச்சிறப்பை இதில் 'காமத்தின் சிறப்பு' எனக் கூறி முதலிடையிறுதியே 'காமம்—சிறப்பு—இல்' லென விளக்கும் விபரம் காண்க.

106. அருமை சான்ற நாலிரண்டு வகையின்
பெருமை சான்ற இயல் பின் கண்ணும்
—தொ. களவியல். 20

| | | |
|---|---|---|
| இயல் | நாலு | பின் |
| | இரண்டு | கண் |
| | வகை | பெருமை |
| | | அருமை |
| | | சான்ற |

3-ல் முதலே **இயல்**, இடையைக் குறிப்பு 2-ல் **நாலு இரண்டு வகை**, இறுதியை 26-ல் **கண்** 60-ல் பெருமை என்பதை இதிற் காட்டி, "கண்ணெனும் பெருமையே சான்ற எனும் அருமை" எனல்.

குறிப்பு 1-ல் 'முதலெனப்படுவது ஆ யிருவகைத்தே' எனக் காட்டி ஆ எனும் முதலின் இடையே வகையெனும் இரண்டு எனக் கூறி, குறிப்பு 2-ல் அவ்வகை யெனும் இரண்டே நாலு என உணர்த்தி, இதில் இவ்விடையாகிய நாலிரண்டெனும் வகையின் பின்னுகிய அருமை எனும் பெருமையே சான்ற எனும் கண்ணென்பதறிக. இவ்வாறிருக்க, முதலெனப்படுவது ஆயிருவகைத்தே என்பதை வேறெதுவாகவும் கொள்ள இடமுண்டா? அவ்வாறு கொண்டால் இவ்விரு சூத்திரங்களின் கதி என்னவாகும்? சான்ற எனவும் நாமமுண்டா? எனில்.

107. சிறப்பின் சான்ரேர்
—தொ. புறத். 21

| | | |
|---|---|---|
| ... | சிறப்பு | சான்ரேர் |

105-ல் இடையே **சிறப்பு** 106-ல் இறுதியே **சான்ற** என்பதை இதிற் காட்டி, சான்ற என்பதைச் சான்ரேர் என **உணர்த்தி**, "இடையெனும் சிறப்பின் இறுதியே சான்ரேர்" எனல்.

108. புகழ் தகை வரையார் கற்பினுள்ளே

—தொ. பொரு. 34

| | | |
|---|---|---|
| ... | வரையார் | புகழ் |
| | தகை | கற்பு |
| | இன் | உள் |

54-ல் இடையே **வரையார்** 26-ல் இடையே இன், இறுதியை 102-ல் **கற்பு** 20-ல் **அகம்** என்பதையே இதிற் காட்டி, அகமென் பதை உள்ளென உணர்த்தி, " இடையாகிய இன்னெனும் வரை யாரே தகை, இறுதியாகிய உள்ளெனும் கற்பே புகழ் " எனல்.

109. கற்பும் களவும் அவர் வரைவு இன்றே

—தொ. கற்பியல். 21

| | | |
|---|---|---|
| அவர் | களவு | கற்பு |
| | வரை | |
| | வு | இன்று |

105-ல் முதலே **அவர்**, 12-ல் இடையே **வரை** இறுதியை 108-ல் **கற்பு** 36-ல் **இன்று** என்பதை இதிற் காட்டி, " அவர் - எனும் ஆதி யந்தத்தின் இடையாகிய வரையே களவு " எனல்.

கற்பு, காமம், இன்பம், இடும்பை, அருமை, பெருமை என்ப வற்றின் விபரம் ஒருவாறு தெரிந்ததா ?

110. வெறி யறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

—தொ. புறத். 4

| | | |
|---|---|---|
| வெறி | சிறப்பு | ... |
| | வாய் | |
| | வேலன் | |

இடையே **சிறப்பு** என்பதை இதிற் காட்டி, "வெறிஎனும்முதலே அறியும் இடையே சிறப்பு, அச் சிறப்பெனும் இடையே வாய் அதுவே வேலன்; அவ்வேலனெனும் சிறப்பின் முதலே வெறி " எனல். வாய், வேலன் என்பவை அடுத்தடுத்து விளக்கப்படும்.

111. சீருடைப் பெரும் பொருள்

—தொ. கற்பியல். 9

| | | |
|---|---|---|
| சீர் | பெரும் | பொருள் |

44-ல் இறுதியே பொருள் என்பதைக் காட்டி, " சீர் எனும் முதலினுடைய இடையே பெரும் இறுதியே பொருள் " எனல்.

112. அசையும் சீரும் இசையொடு சேர்த்தி

—தொ. செய். 10

| | | |
|---|---|---|
| சீர் | இசை | அசை |

III-ல் காணும் சீர் என்பதை இதிற் காட்டி, "சீரெனும் முதலும் அசை எனும் இறுதியும் இடை எனும் இடையோடு சேர்த்தியாம்" இவ்வாறு இசையோடு சேர்ந்துள்ளவையே சீரும் அசையும் என்று எச்சரிக்கும்போது இவற்றை வெவ்வேறாய் ஏற்ப தெப்படி ?

113. நன்று பெரிதாகும்

—தொ. உரியியல். 45

| ... | பெரிது | நன்று |
|---|---|---|

111-ல் இடையேபெரும் 48-ல் இறுதியே நல் என்பதை இதிற் காட்டி, பெரும் என்பதைப் பெரிது நல்லென்பதை நன்று என உணர்த்தி, "பெரிதெனும் இடையினின்றே நன்றெனும் இறுதி ஆகும்" எனல்.

114. பழுது பயமின்றே

—தொ. உரியியல். 26

| பழுது<br>பயமில்லாதது | ... | ... |
|---|---|---|

56-ல் அச்சமுள்ள கிளவியே இறுதி என்பதற்கிசைய 6-ல் கெடுதல் எனக் கூறும் முதலை இதில் பழுது எனக் காட்டி, "பய மில்லாப் பழுதே ஆதி" என்பதறிக.

115. வினையின் விகுதி

—ந. பதவியல். 13

| விகுதி | வினை | ... |
|---|---|---|

14-ல் இடையே வினை என்பதை இதிற் காட்டி, "இடையெனும் வினையின் முதலே விகுதி" எனல்.

116. பதமுன் விகுதியும் பதமும் உருபும்

—ந. உருபு புணரியல். 4

| முன்<br>விகுதி | உருபு | பதம் |
|---|---|---|

115-ல் முதலே விகுதி 3-ல் இடையே உருபு என்பதை இதிற் காட்டி, "பதமெனும் அந்தத்து ஆதியாகிய முன்னே விகுதி, அவ் விகுதிக்கும் பதத்திற்கும் இடையே உருபு" எனல்.

117. வினையின் தொகுதி

—தொ. எச்ச. 19

| ... | வினை | தொகுதி |
|---|---|---|

115-ல் வினையின் விகுதி என முதலை உணர்த்துவதுபோல் இதில் "இடையெனும் வினையின் இறுதியே தொகுதி" எனல்.

118. பல்லோர் பெயரின் பகுதி

—ந. பெயரியல். 21

பெயர் பகுதி பல்லோர்

87-ல் முதலே பெயர் 88-ல் இறுதியே பல்லார் என்பதை இதிற் காட்டி, "பல்லோரெனும் இறுதி பெயரெனும் முதல் இவற்றின் இடையே பகுதி" எனல்.

இடையெனும் வினையைக் காட்டி 'வினையின் விகுதி, வினையின் தொகுதி' என உணர்த்துவதையும், பெயர்—பல்லோர் என்பவற்றைக் காட்டி 'இப் பல்லோர் பெயரின் இடையே பகுதி' என விளக்குவதையும் காட்டுவது கண்டும் விழித்தெழாது 'சிதைத் தெடுத்தால் சூத்திரக் கருத்துக் கெடும்' என்று குறை கூறலாமா? நிற்க, விகுதி—பகுதி—தொகுதி என்பவை முதலிடையிறுதியின் நாமங்கள் என்பதறிக.

119. வழக்கியல் மருங்கில் குன்றுவ குன்றும்

— தொ. வேற். மயங். 29

வழக்கு மருங்கு குன்றல்
இயல்

106-ல் முதலே இயல் என்பதை இதிற் காட்டி, "இயலெனும் முதலே வழக்கு அவ் வழக்கின் இடையாகிய மருங்கில் குன்றுவ எனும் இறுதி குன்றும் எனல். ஆதி அந்தத்திற்கு எதிர் மறை நாமங்கள் உண்டென்பதற்கிசைய 104-ல் ஆதியைப் 'பெருகல்' எனக் கூறும் தொல்காப்பியம் இதில் அந்தத்தைக் 'குறுகல்' என உணர்த்துவதறிக.

120. நூல் பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்

—ந. பொதுப்பாயிரம். 11

வழக்கு நூல் இயல்பு
நுவலின்

119–ல் முதலே வழக்கு 4–ல் இறுதியே இயல்பு என்பதை இதிற்காட்டி, "அந்தமெனும் இயல்பே நூலெனும் இடையைப் பயிலும் (அறியும்) அவ் விடையாகிய நூல் எனும் நுவலின் வழக் கெனும் ஆதியை அறியும்" எனல்.

110. வெறி எனும் முதலே இடையெனும் சிறப்பு அறியும் என்பதுபோல் இதில் வழக்கெனும் முதலே நூலெனும் இடை அறியுமெனக் கூறும் நன்னூல், அவ் விடையாகிய நூலே இயல் பெனும் இறுதி அறியும் எனக் கூறவேண்டியதை மாற்றிப் 'பயிலும்' என்பதறிக. இம் மூன்றுக்கும் அததற்கு நாமமாக

ஏற்பட்டுள்ள எழுத்துக்களை ஒன்றேடொன்று சேர்த்து ஓர் சொல்லாக்கி அச் சொல்லை அதற்கே நாமமாய்ச் சூட்டப்பட்டிருக்கிறது. இம் முறையில் அமைந்த நாமங்களே இன் வயின் நுவலின் என்பவை. நூல் என்பதை இவ்வாறெடுத்துக் காட்டுதல் கண்டு திகைக்க வேண்டாம், கீழ் காண்பதாற் றெளிக.

121. நூல் பொருள் வழக்கொடு

— க. பொதுப்பாயிரம். 15

வழக்கு நூல் பொருள்

119-ல் முதலே வழக்கு 120-ல் இடையே நூல் 44-ல் இறுதியே பொருள் என்பதை இதிற்காட்டி, (குறிப்பு 13-ல் மூன்றெனும் இறுதியின் இடையே வயின் முதலே ஆ என்று உணர்த்த 'மூன்றெடு ஆ வயின்' என்பதுபோல்) இதில் "ஆதியாகிய வழக்கினுடைய இடையே நூல் இறுதியே பொருள்" என்றுணர்த்த 'வழக்கொடு நூற் பொருள்' என்பது கண்டு சிந்தித்துத் தெளிக. இன்னும் கவனிப்போம்.

122. நூற் பாற் பயிலும்

— தொ. செய். 212

பால் நூல் ...

12-ல் முதலே பால் 121-ல் இடையே நூல் என்பதை இதிற் காட்டி, "பாலெனும் முதலே நூலெனும் இடையே பயிலும் (அறியும்) "எனல்.

120-ல் காணும் 'நூல் பயில் இயல்பு' என்பதை நூலைப் பயலும் தன்மை என்று ஏற்பதாயின் இதைப் 'பாலை நூல் பயிலுமென்றே நூலைப் பால் பயிலுமென்றே' ஏற்கவேண்டும். அவ்வாறு கொள்ள இடமில்லையாகையால், பயிலும் என்பதை 'அறியும்' என்றே கொள்ளவும். இதை இன்னும் சிறிது கவனிப்போம்.

123. வண்ணந் தாமே இவை யென மொழிப

— தொ. செய்யு. 232

... ... இவை
தாம்
வண்ணம்

இறுதியை 66-ல் இவை 5-ல் தாம் என்பதை இதிற்காட்டி, "இவை எனக் கூறப்படும் அந்தமாகிய தாமே வண்ணம்" எனல். வண்ணம் என்பதை இவ்வாறேற்கச் சந்தேகிக்கலாம், அதற்காதாரம் காட்டுகிறேன்.

124. அண்பல் முதலும் அண்ணமு முறையின்

— ந. எழுத்தியல். 28

அண் முறை பல்
அண்ணம்
முதல் உம்

10–ல் ஒருமை—பன்மை எனும் முதிலிறுதியின் இடையே முறை எனத் தொடர்பைக் காட்டி விளக்கும் நன்னூல் அதையே இதிற்காட்டி, இறுதியை 15-ல் **பல்** 29-ல் **உம்** எனக் கூறும் நன்னூல் அவற்றையும் இதிற்காட்டி, "இடையெனும் முறையின் இறுதியே உம்மெனும் பல், முதலே அண்ண" எனல். முறையின் அண்ணமே முதல் உம்மே இறுதி என்பதைக் கவனிக்க.

125. துணிவு காட்டலும் அணி நிலை
வரைத்தலும் கூத்தர் மேன

— தொ. கற்பியல். 27

துணிவு அணி நிலை
மே
ன கூத்தர்

இதிற் காணும் கீழ் வரி யிருக்கட்டும், 114-ல் 'பயமில்லாதது, எனவும் 60-ல் 'பயமிலி' எனவும் கூறும் தொல்காப்பியம், அம் முதலேயே இதில் 'துணிவு' என உணர்த்தி, 3-ல் இறுதியே நிலை என்பதையும் இதிற்காட்டி "அணி எனும் இடையையும் நிலை எனும் இறுதியையும் காட்டுதல் (தோற்றுவித்தல்) துணிவெனும் முதலே" எனல்.

126. சுண்ணம் தானே, பட்டாங்கமைந்த ஈரடி எண்சீர்
**ஒட்டு வழி அறிந்து துணிந்தனர் இயற்றல்**

துணிந்தனர் சுண்ணம் ...

இதிற்காணும் மற்றவை யிருக்கட்டும், 125-ல் துணிவு எனக் கூறும் முதலைத் துணிந்தனர் எனக் காட்டி, "துணிந்தனர் எனும் முதல் இயற்றுவது இடையாகிய சுண்ணத்தைத் தானே" எனல்.

124-ல் முதலே **அண்ணம்** 126–ல் இடையே **சுண்ணம்** 123-ல் இறுதியே **வண்ணம்** என்பதறிக. இன்னும் சிறிது கவனிப்போம்:

127. கதி சாக்கிரம் கனவாதி சுழுத்தி

—திருமந்திரம். 2307

ஆதி கனவு கதி
சுழுத்தி சாக்கிரம்

" கதி எனும் இறுதியே சாக்கிரம் இடையே கனவு ஆதியே சுழுத்தி " எனல்.

128. தூங்கல் ஓசை வஞ் சியாகும்

—தொ. செய். 83

தூங்கல் வஞ்சி ஓசை

இதிற்காணும் தூங்கல் என்பதையே 127-ல் திருமந்திரம் சுழுத்தி என விளக்குவ தறிக. " தூங்கல் எனும் ஆதியின் அந்த மாகிய ஓசை இடையெனும் வஞ்சியினின்ருகும் எனல்.

129. தூங்கல் வண்ணம் வஞ்சிப் பயிலும் .

—தொ. செய். 228

தூங்கல் வஞ்சி வண்ணம்

128-ல் தூங்கம்—வஞ்சி 123–ல் **வண்ணம்** எனக் கூறுவதை இதிற்காட்டி, " தூங்கல் எனும் ஆதியின் இடையாகிய வஞ்சியை வண்ணம் எனும் இறுதியே பயிலும் (அறியும்) எனல்.

கலை என்ருே நூலென்ருே கூறுமாகில் பயிலும் என்பதைக் கற்கும் என்று கூறிவிடலாம், வண்ணம் வஞ்சியைப் பயிலும் என்று உணர்த்தும்போது இதைக் கற்கும் என்றேறபதெப்படி ? **ஆகையால், பயிலும் என்பது அறியும் என்பதையே.** இவ்வளவு விளக்கியும் தெளியாது திகைத்தால், இச் சுண்ணம் வண்ணம் என்பவற்றை இவ்வாறே ஏற்கவேண்டுமென்று மற்ற நூல்கள் நிச்சயித்துக் காட்டுவதை அடுத்துக் காணலாம். அவற்றிற் காதாரம் காட்டவே இவற்றை விளக்கியிருக்கிறேன்.

130. வெளிப்படைக் குறிப்பின் விரிப்பது சொல்லே.

—ந. பெயரியல். 2

வெளி படை குறிப்பு

சொல்

" படை—குறிப்பு எனும் இடையிறுதியின் முதலெனும் சொல்லே வெளி " எனல். 12-ல் ' பண்பிஞுக்கம் ' என்று கூறும் தொல்காப்பியம் எச்சவியல் 36-ல் ' குறிப்பே ஆக்கமொடு வருமே ' எனக் கூறி ' குறிப்பும் ஆக்கமும் பண்பினின்று வரும் ' எனத் தொடர்பைக் காட்டி விளக்கும் விவரமறிந்து அக்குறிப்பையே இதில் நன்னூல் விளக்குவதறிக.

131. மலர் தலை உலகத்து

—தொ. புறத். 24

தலை மலர் உலகம்

48-ல் முதலே **தலை** என்பதை இதிற் காட்டி, " அந்தமாகிய உலகத்து இடையே மலர், முதலே தலை " எனல்.

132. *நிலந்தீ நீர்வளி விசும்பொடு ஐந்துங்*
*கலந்த மயக்கம் உலகமாதலின்*

—தொ. மரபியல். 90

| | | |
|---|---|---|
| ஐந்து | மயக்கம் | உலகம் |

மேல் வரியை குறிப்பு 12-ல் **விளக்கியிருக்கிறேன்**. 56—ல் முதலே *ஐந்து* 54-ல் இடையே **மயக்கு** 131-ல் இறுதியே **உலகம்** என்பதையே இதிற் காட்டி, "முதலெனும் ஐந்தோடு கலந்து உள்ள மயக்க மென்னும் இடையினின்று உலகம் எனும் இறுதி ஆதல்" எனல்.

இதிற் காணும் மேல் வரியைக் குறிப்பில் 12-ல் விளக்கும் போது கீழ் வரியையும் அங்கெடுத்துக் காட்டுவதானால் ' மயக்கம் ' ' உலகம் ' என்பவற்றை அங்கு எடுத்துக் காட்டியே ஆகவேண்டு மன்றோ ? அதற்கான சில சூத்திரங்களை அங்கெடுத்துக் காட்டிக் கொண்டிருந்தால் எடுத்த முக்கியச் செய்தி தடைபடும் என் றெண்ணியே அங்கு மேல் வரியை மாத்திரம் காட்டினேன். இது பற்றி சூத்திரங்களைச் சிதைத்து வேண்டியதை மாத்திரம் எடுத்து விளக்குவதாகக் குறைகூற இடமில்லை என்பதறிக. ' ஐந்தோடு கலந்த மயக்கத்தினின்று உலகம் ஆவது ' என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்க.

133. *அத் திறந்தானே துறையெனப் படுமே.*

—தொ. செய். 107

| | | |
|---|---|---|
| அ | திறம் | ... |
| | துறை | |

85-ல் இடையே **திறம்** என்பதை இதிற் காட்டி, " திறமெனும் இடையே துறை எனப்படும் " எனல்.

134. நாடும் பெருந்துறை நான் கண்டுகொண்டபின்
கூடும் சிவனது கொய் மலர் சேவடி

| | | |
|---|---|---|
| சிவன் | பெருந்துறை | சேவடி |
| | மலர் | நாடு |
| | நான் | பின் |

முதலை குறிப்பு 21-ல் **இறைவன்** இடையை III-ல் பெரும் 133-ல் **துறை** 131-ல் **மலர்** 10-ல் **நான்**, இறுதியை 73-ல் **நாடு** 106-ல் **பின்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " இடையாகிய

நான் எனும் பெருந்துறையைக் கண்டுகொண்ட இறுதியாகிய பின்னே நாடு, அந்நாடெனும் பின்னே சிவனெனும் முதலோடு கூடும் சேவடி எனும் இறுதி" எனல். இடையை இறுதி அறியும் எனவும் முதல் இறுதியையே உரியதாய்க் கொள்ளுமெனவும் தொல்காப்பியம் கூறுவதை இதில் விளக்குவதறிக.

## (12) திருவாசகச் செய்தி

135. அஞ்சோ டச்சம் வினையேனை இருதலையே

—திருவா. நீத்தல். விண். 8

| | | |
|---|---|---|
| அஞ்சு | வினை | அச்சம் |
| ஏனை | | |
| தலை | இரண்டு | |

முதலை 132-ல் **ஐந்து** 54-ல் **ஏனை** 131-ல் **தலை**, இடையை 14-ல் **வினை** 106-ல் இரண்டு, இறுதியை 56-ல் **அச்சம்**, எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய ஏனை எனும் தலையே ஐந்து, அவ்வைந்தின் அந்தமே அச்சம், இடையே இரண்டெனும் வினை" எனல். 'ஆ வயின் மூன்றெடு' எனக் குறிப்பு 13-ல் தொல்காப்பியம் கூறுவதுபோல் அது முதலிறுதியெனக் கூறும் ஐந்து—அச்சம் என்பவற்றையே காட்டி 'அஞ்சோ டச்சம்' எனவும் திருவாசகம் உணர்த்துவதறிக.

திருவாசகப் பாடல்கள் அனைத்துமிருக்கட்டும், தொல்காப்பியச் சூத்திரங்கள் அனைத்தும் இருக்கட்டும். அஞ்சு, ஏனை, தலை, வினை, இரண்டு, அச்சம் எனும் இந்த ஆறு சொற்களால் நமக்குத் திருவாசகம் உணர்த்தும் பக்தியையும், இச்சொற்களால் நமக்குத் தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கண வரம்பையும் சீர்தூக்கிப் பார்த்துத் தெளிக.

136. பழுதே பிறத்தேன் கொண்டுனைப் பணிகேனே

—திருவா. ஆனந்தப் 8

| | | |
|---|---|---|
| பழுது | தேன் | ... |
| பிற | | |

முதலை 114-ல் **பழுது** குறிப்பு 29–ல் **பிறர்**, இடையை 68-ல் **தேன்** என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, (76-ல் பிற எனும் ஆதி பார்ப்பார் எனும் இடைக்கே உரியது எனத் தொல்காப்பியம் கூறுதற் கிசையவே) "பழுதெனும்

முதல்வனே! பிற எனும் உன்னோடு தொடர்பாயுள்ள தேனைக் கண்டு உனைப் பணியாதிருக்கிறேனே " எனல்.

அஞ்சோ டச்சம்' என மேற்காண்பதிலும் 'பிறத்தேன்' என இதிலும் தொல்காப்பியத்தைப்போல் தொடர்பைத் திருவாசகம் உணர்த்தும் விவரம் காண்க. நிற்க, ஆதி இடைக்கு உரியது என மறைவாய்த் தொல்காப்பியம் கூறுவதை இதில் 'இடையை ஆதியோடு சேர்க்க வேண்டும்' எனத் திருவாசகம் விளக்கும் விவரம் காண்க.

இவ்விவரம் தெரிந்தால் தொல்காப்பியத்தைச் சிறந்த நூலெனக் கருதும் சில புலவர்கள் மனந் துணிந்து பிச்சைக்காரர்களுக்கு உதவவே திருவாசகம் அமைந்திருப்பதல்லாமல் மக்களுக்கு எள்ளளவு பயன்தரத்தக்கதில்லை என்று துணிந்து கூறுவார்களா?

137. மெய் நூல் சொன்னவனே

—திருவா. நீத்தல். 43

... நூல் மெய்

40-ல் இறுதியே **மெய்** 122–ல் இடையே **நூல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "மெய்யெனும் அந்தத்தையும் நூலெனும் இடையையும் சொன்ன (செய்த) முதல்வனே" எனல்.

"வினை எனும் இடையிலேயே விளங்கி அதைவிட்டு நீங்கி நிற்கும் அந்தமாகிய அறிவின் ஆதியாகிய முனைவனைக் கண்டது அம்முனைவனெனும் முதலின் இடையாகிய வினை எனும் நூலே" என நன்னூல் தொல்காப்பியம் கூறுவதை 'கடவுள் தந்ததே முதல் நூல்' எனக் கூறுவதாய்த் தீர்மானித்து அதற்கிசைய இப் பாடலின் கருத்தையும் கொள்ளலாம். உலகில் வாழும் கோடிக்கணக்கான மக்களில் நமக்கு மாத்திரம் கடவுளே நேரில் ஓர் நூலைக் கொடுக்கக் காரணம் என்ன? என்பது பற்றி சங்கை எழும்போது முடிவென்ன ஆகும்? அது எப்படியுமிருக்கட்டும், இப்பாடலை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் ஒன்று காட்டுகிறேன்.

138. பொய் தீர் மெய்யனே

—திருவா. ஆனந்தப். 9

பொய் ... மெய்யன்

48–ல் முதலே **பொய்** யெனத் தொல்காப்பியம் கூறுந்தைக் காட்டி, (இடையிறுதியைச் செய்யும் முதலே பொய்யென 91–ல்

திருமந்திரம் விளக்குவதுபோல்) இதில் " பொய்யெனும் ஆதியால் தீர்க்கப்படும் (செய்யப்படும்) அந்தமே மெய்யன் " எனல்.

137-ல் இறுதியெனக் கூறும் மெய்யையே இதில் மெய்யன் எனக் கூறுவதால் இம் மெய்யனையே 137-ல் மெய்யென உணர்த்துவதாய்த் தெரிகின்றதன்றோ ? ஆகையால், அக்கருத்தை நான் விளக்கியவாறேற்க. இன்னும் சந்தேகமிருந்தால் 76-ல் இதையே பார்ப்பார் எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி போற்றித் திருவகவல் 88-ல் 'மெய்தரு வேதியனாகி' மெய்யைத் தரும் இடையே வேதியன் என்று விளக்குவது கண்டு தெளிக.

139. செய்வ தறியாச் சிறுநாயேன் பொற்பாத மலர்காணாப்
பொய்யர்பெறும் பேறத்தனையும் பெறுதற்குரியேன்பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்பாத மேவக்கண்டுங் கேட்டிருந்தும்
பொய்யனே னுண்டுடுத்திங் கிருப்பதானேன் போரேறே

—திருவாசகம் அனுபோக சுத்தி. 2

பொன் மலர் பாதம்
வெறியார்

முதலை 9-ல் **பொன்** 110-ல் வெறி இடையை 131-ல் **மலர்** இறுதியை 116-ல் **பதம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, வரையை வரையார் எனவும் முதலை முதல்வன் எனவும் தொல்காப்பியம் கூறுவதுபோல் மேற்காண்பதில் மெய்யை மெய்யன் என உணர்த்தும் திருவாசகம் இதில் வெறி என்பதை வெறியார் எனக் காட்டி, " பொய்யிலா மெய்யர்கள் வெறியார்—மலர்—பாதம் எனும் இவற்றையே மேவக் கண்டு கேட்டிருந்தும், பொன்—மலர்—பாதம் எனும் இவற்றைக் காணாத பொய்யர் பெறுந் (தீங்கை) பெறுதற்குரியனாகிய நான் உண்டுடுத்தித் திரிவது ஏனோ " எனல். நன்னூல் கூறும் பதம் என்பதையே 134-ல் சேவடி எனத் திருமந்திரமும் இதில் பாதமெனத் திருவாசகமும் விளக்கும் விபரம் காண்க. இதில் சந்தேகமிருந்தால் நீத்தல் விண்ணப்பம் 37-ல் 'பொற் பதம் புயங்கா' எனக் கூறி பொன்—பதம் எனும் முதலிறுதியின் இடையே புயங்கன் என விளக்குவது கண்டு தெளிக.

140. ஆதியே போற்றி அறிவே போற்றி

—திருவா. போற்றித். 107

ஆதி ... அறிவு

ஆதியே அறிவாயின் இரு போற்றிகள் தேவையில்லை. ஆகையால், " ஆதியே போற்றி, அந்தமாகிய அறிவே போற்றி " என்பதாயேற்க. 11-ல் தொல்காப்பியம் கூறும் **அறிவு** இதுவே.

141, ஆதியு மந்தமுமில்லா வருட் பெருஞ் சோதி

—திருவா. திருவெம்பாவை. 1

ஆதி பெரும் அந்தம்
சோதி

இடையை 111-ல் பெரும் 64-ல் ஒளி எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, ஒளி என்பதைச் சோதி என உணர்த்தி, "ஆதியும் அந்தமும் அல்லாத இடையே பெருஞ் சோதி" எனல்.

ஆதியந்தம் அற்றதாய் அகம்புற மில்லாமல் சர்வ வியாபக மாய் எங்கும் நிறைந்துள்ள அரும் பெரும் பொருள் என எதையும் கற்பிக்க இடமில்லாமல் மேற்காணும் 141, 142-ல் ஆதியே போற்றி அந்தமாகிய அறிவே போற்றி என்பதறிக. திருவாசகம் விளக்குவது இம்மூப் பொருள்களையே என்பது விளங்கிற்ரு?

142. வழித் துணையாய் மருந்தா யிருந்தார்முன்

—திருமந்திரம். 297

வழி துணை ...
மருந்து

குறிப்பு 23-ல் தொல்காப்பியம் கூறுவதுபோல் குறிப்பு 24-ல் இடையிறுதியைச் செய்யும் முதலே வழி எனக் கூறும் திருமந்திரம் இதில் "அவ்வழியே மருந்தெனும் முன் அதினின்ருன இடையே துணை" எனல்.

143. பெருந்துறையே என்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து

—திருவாசகம். பண்டாய நான்மறை. 7

மருந்து பெருந்துறை அடி

142-ல் முதலே மருந்து 134-ல் இடையே பெருந்துறை இறுதியே சேவடி எனத் திருமந்திரம் கூறுவதையே காட்டி, "மருந்தெனும் ஆதியையும் அடி எனும் அந்தத்தையும் சிந்தித்து இவற்றின் இடையாகிய பெருந்துறையைக் கொண்டு என் பிறப்பைத் தவிர்த்தே னில்லையே" எனல். பிறப்பைத் தவிர்க்கும் பொருள்கள் இம்மூன்றே என்பதறிக. இதை அடுத்துத் தெளிவாய்க் காணலாம். இதே அடியை பாதமெனவும் பத மெனவும் உணர்த்தும் விபரம் காண்க.

**144.** சினஞ் செய்த நஞ்சுண்ட தேவர் பிரானை

—திருமந்திரம். 41

சினம் ஞ்சு தேவர்
பிரான்

குறிப்பு 15-ல் ஐந்தெனும் ஆதியே ஈசன் எனக் கூறும் திருமந்திரம் அவ்வீசனை இதில் பிரான் எனக் காட்டி, " நஞ்செனும் இடையைச் செய்த சினமெனும் முதலே பிரான், அப்பிரானே இடையாகிய நஞ்சை உண்டவரும் தேவரெனும் அந்தத்திற்கு ஆதியுமான சினம் " எனல்.

**145.** திரிமலந் தீர்ந்து சிவகதியாமே

—திருமந்திரம். 2054

திரி மலம் கதி
சிவம்

127-ல் இறுதியே கதி என்பதை இதிற் காட்டி, " ஆதியாகிய திரி எனும் சிவத்தினின்று தீர்ந்த மலமெனும் இடையினின்றே கதி எனும் இறுதி ஆகும் " எனல்.

இவ்விரு பாடல்களின் கருத்தை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதை வேறு நூல்கள் விளக்குவதை இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

**146.** தேவரு மறியாச் சிவனே

—திருவாச. திருவண்டப் பகுதி. 57

சிவன் ... தேவர்

145-ல் முதலே **சிவம்** 144-ல் இறுதியே **தேவர்** என்பதை இதிற் காட்டி, 77-ல் முதலே இறுதி அறியாது எனத் தொல்காப்பியம் கூறுவதையே இதில் " தேவரெனும் அந்தம் அறியாச் சிவனே ஆதி " எனல்.

**147.** வானோர் அறியா வழி

—திருவா. திருவம்மானை. 16

வழி ... வானோர்

142-ல் மருந்தெனும் முதலே வழி எனத் திருமந்திரம் கூறுவதில் மருந்தை 143-ல் முதலென உணர்த்தும் திருவாசகம், இதில் வழியை முதலெனக் காட்டி மேற் காணும் தேவரை வானோர் எனவும் உணர்த்தி, " வானோர் எனும் அந்தம் அறியா வழியே ஆதி " எனல்.

148. நஞ்சுண் மழை

—திருவா. நீத்தல் விண்ண. 46

மழை நஞ்சு ...

22-ல் முதலே மழை எனத் தொல்காப்பியமும் 144-ல் இடையே நஞ்சு எனத் திருமந்திரமும் கூறுவதையே காட்டி, "இடையாகிய நஞ்சை உண்ட முதலே மழை" எனல்.

144-ல் 'நஞ்சை உண்டபிரான்' எனத் திருமந்திரம் கூறுவதையே இதில் 'நஞ்சை உண்ட மழை' எனத் திருவாசம் விளக்கும் விபரம் தெரிந்ததா? இன்னும் சிறிது கவனிப்போம்.

149. பொய் கழற்

—திருவா. ஆனந்தாதீதம். 9

பொய் ... ...
கழற்

48–ல் முதலே பொய் யெனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, 138-ல் அப் பொய்யே இறுதியாகிய மெய்யனைத் தீர்க்கும் என்று உணர்த்தும் திருவாசகம், அதையே இதிற்காட்டி "பொய் யெனும் முதலே கழற்" எனல்.

150. பெய் கழற் கீழ்

—திருவா. அறிவுறுத்தல். 8

கழற் ... ...
கீழ்
பெய்தல்

(மழை முதலின் நாமமென்பது பற்றி முதலின் நாமமாகிய ஐந்தை 'பெயலைந்து' எனத் தொல்காப்பியம் உணர்த்துவது போல்) 149-ல் பொய் யெனும் முதலே கழற் என விளக்கும் திருவாசகம் (34–ல் முதலே கீழ் என நன்னூல் கூறுவதையே காட்டி) "முதலாகிய கழறெனும் கீழே பெய்தல்" என்பதறிக. இவ்வாறு முதலெனும் கழறைப் பெய்தல் என உணர்த்தக் காரணம் 148-ல் முதலே 'மழை' என திருவாசகமே கூறுவதாலன்றோ.

இவ்வாறு தொல்காப்பியத்திற் கிசைய 'பெய்தலெனும் முதலே கீழ் எனவும் அக் கீழெனும் முதலே மழை யெனவும் காட்டி,' 'அம் மழை நஞ்செனும் இடையை உண்டது' எனத் திருவாசகம் விளக்குவது திருமந்திரம் தொல்காப்பியம் இவற்றின் கருத்தன்றோ? இவர் அவ்விரு நூல்களையும் கற்றவரா? அன்றி நாமா? உருவத்தில் அவரும் நம் போன்றவர் தானே. இவர் மாத்திரம் அவற்றில் இக் கருத்தைக் கண்டது எப்படி? திருவாசகமும் திருமந்

திரமும் தான் நஞ்சுண்டவனை விளக்குகின்றன என்றெண்ண வேண்டாம், மற்றோர் நூலையும் காட்டுகிறேன்.

151. சென்றுண்டுவந்து திரிதரும் உள்ளுடம்பு
என்றும் கெடாத திது

—ஔவை குறள்.

திரி ... உள்
உடம்பு

145-ல் முதலே **திரி** எனத் திருமந்திரமும், இறுதியை 108-ல் **உள்** 17-ல் **உடல்** எனத் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, குறிப்பு 20-ல் தொல்காப்பியமும் 95—ல் திருமந்திரமும் அழிவில்லாததே அந்தம் என்பதற்கிசைய இதில் "இடையை உண்டு வந்த திரி எனும் ஆதி தரும் அந்தமாகிய உள்ளெனும் உடம்பே என்றுங் கெடாதது" எனல். இந்த ஔவையாரைப் பற்றி எழும் சங்கைக்கு அளவுண்டோ?

152. மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனில் புரண்டு வீழ்ந்தலரியும்

—திருவா. கீர்த்தித்திரு. 133, 134

பூதலம் அது
மால்
மயக்கம்

55-ல் இடையே மயக்கு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "பூதலமெனும் முதலினின்று ஆகிய அதுவே மால், அம்மாலெனும் இடை மயக்குற்று வீழ்ந்து புரண் டலரும்" எனல். இடையை புரளும் வீழும் அலரும் என நூல்கள் உணர்த்தும்.

குறிப்பு 25—ல் **அது** என்பதைக் காட்டியே திருமந்திரம் '**அதுவே காற்று**' என்கிறது. குறிப்பு 26—ல் **அது** என்பதைக் காட்டியே அருட்பா '**அதுவே கற்றெனும் கல்வி**' என்கிறது. அது போலவே திருவாசகம் இதில் **அது** என்பதைக் காட்டியே அதுவே மயங்கும் மால் என உணர்த்துகிறது. இத்தகைய '**அது**' என்பதை குறிப்பு 3-ல் தொல்காப்பியம் இடையெனக் காட்டாதிருந்தால் மற்ற நூல்கள் இவ்வாறு விளக்க முடியுமா?

153. செம் பொன்செய் சுண்ணம் இடித்து நாமே

—திருவாசகம். திருப்பொற். 2

பொன் சுண்ணம் ...

9—ல் முதலே **பொன்** 126-ல் இடையே **சுண்ணம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "பொன்னெனும் ஆதி செய்யும்

இடையாகிய சுண்ணத்தை இடிப்போம்" என்பதறிக. தொல் காப்பியம் ஆதியின் நாமங்களெனக் கூறும் 'பொய், பொன்' என்பவற்றையே காட்டி 138-ல் பொய்யால் தீர்க்கப்படும் இறுதியே மெய்யன் எனவும் இதில் பொன்னால் செய்யப்படும் இடையே சுண்ணம் எனவும் விளக்குவதறிக.

I. விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடையவைப் படியோம்

—திருவாச. திருத்தெள்ளேணம். 19

| | | |
|---|---|---|
| மண்ணோர் | விண்ணோர் | அயன் |
| முழுது | வித்து | |
| மருந்து | பால் | பாதாளத்தார்' |
| முதல் | | |

முதலை 44-ல் முழுது 201-ல் மண் 142-ல் மருந்து என்பதை இதிற்காட்டி, "விண்ணோரெனும் மாலே வித்தெனும் இடை, இவ் விடையின் முதலே மண்ணோரெனும் முழுமுதல் மருந்து இறுதியே அயனெனும் பாதாளத்தார்" எனல்.

154. பாரிடை யைந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீ யிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

—திருவாசகம். போற்றித்திரு. 135

| | | |
|---|---|---|
| தீ | நீர் | மூன்று |
| வெளி | வளி | |
| ஒன்று | இரண்டு | |
| ஐந்து | நான்கு | |

குறிப்பு 12-ல் **தீ** 130-ல் **வெளி** 47-ல் **ஒன்று** 132-ல் **ஐந்து,** குறிப்பு 12-ல் **நீர்** 22-ல் **வளி** 43-ல் **இரண்டு** 106-ல் **நான்கு,** 39-ல் **மூன்று** எனத் தொல்காப்பியம் கூறும் முதலிடையிறுதியின் நாமங் களையே காட்டி, "வெளி எனும் ஒன்றாய் விளைந்தாய், வளியெனும் இரண்டாய் மகிழ்ந்தாய், தீயிற்கும் இடைக்கும் இறுதியாகிய மூன்றாய் திகழ்ந்தாய், நீரெனும் நான்காய் நிகழ்ந்தாய், ஐந்தாய் நின்று பாரெனும் இடையாய்ப் பரந்தாய்" எனல். தொல்காப்பியம் கூறும் முப்பொருள்களையே திருவாசகம் விளக்கும் விபரம் இவ் வொரு பாடலைக் கொண்டே தெரிகிறதல்லவா?

## (13) தெய்வம் எது?

155. நிலத்திற் சிந்தையிற் றெளிந்தார்

—திருமந்திரம். 1889

நிலம் சிந்தை தெளிந்தார்

4-ல் முதலே **நிலம்** குறிப்பு 19-ல் இடையே **சிந்தை** குறிப்பு 27-ல் இறுதியே **தெளிவு** என்று தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "நிலம்—சிந்தை எனும் முதலிடையினின்று ஆகிய தெளிவே தெளிந்தார்" எனல்.

156. தெளிவறி யாதார் சிவனை அறியார்

—திருமந்திரம். 1480

சிவன் ... தெளிவு

குறிப்பு 21-ல் முதலே **இறைவன்** குறிப்பு 27-ல் இறுதியே **தெளிவு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி. "தெளிவெனும் அந்தத்தைக் காணுவிடில் சிவனெனும் ஆதியைத் தெரிய முடியாது எனல்.

157. தானே மலை கடல் ஆதியுமாய் நிற்கும்

—திருமந்திரம். மோ. சா. வி. 21

ஆதி கடல் மலை
தானே

"மலை எனும் அந்தமும் கடலெனும் இடையும் ஆகிய ஆதிதானே" என்பதறிக.

158. ஞாயிறு திங்கள் அறிவே நானே
கடலே கானல் விலங்கே மரனே

—தொ. செய். 198

ஞாயிறு திங்கள் அறிவு
கடல்
விலங்கு கானல் நான்
மரம் னே
னே

45-ல் இடையே **மரம்** 11-ல் இறுதியே **அறிவு** என்பதை இதிற் காட்டி, "விலங்கெனும் முதலே ஞாயிறு, மரமெனும் இடையே கடல் கானலெனும் திங்கள், இவற்றின் இறுதியாகிய அறிவே நான்" எனல். இதில் இடையெனக் கூறுவது பற்றியே 157-ல் திருமந்திரம் கடலை இடையென விளக்கும் விபரமறிக.

159. தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்

—1165

ஞாயிறு திங்கள் அங்கி

158—ல் முதலிடையை ' ஞாயிறு—திங்கள் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " இறுதியே அங்கி " எனல். தொல்காப்பியம் கூறும் ஞாயிறு—திங்கள் என்பவற்றைத் திருமந்திரம் மாத்திரம் விளக்குவதாய் நினைக்க வேண்டாம்.

160. சிந்தையில் நின்றநிலை விசும்பிற் சாக்கிரமாம்
சந்திரனிற் றோன்று முணர்வு

—ஒளவை குறள்

| | | |
|---|---|---|
| ... | சிந்தை | நிலை |
| | விசும்பு | சாக்கியம் |
| | சந்திரன் | உணர்வு |

இடையைக் குறிப்பு 19-ல் சிந்தை குறிப்பு 12-ல் விசும்பு 158-ல் திங்கள், இறுதியை 3-ல் நிலை 11—ல் அறிவு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 127—ல் ஆதி—அந்தமே சுழுத்தி—சாக்கிரம் எனத் திருமந்திரம் கூறும் சாக்கிரம் என்பதை இறுதியென உணர்த்தி, " இடையாகிய சிந்தை விசும்பு எனும் சந்திரனில் தோன்றும் உணர்வே சாக்கிரம் எனும் நிலை " எனல். வள்ளுவரின் சகோதரி அல்லாத வேறு ஒளவை இத்தகைய நூலொன்றை இயற்றி யிருப்பதாய் பலர் கூறுவதைச் சிந்தித்துப் பார்க்க. மற்றோர் செய்தியையும் இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

161. நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
உற்றெறங்கும் நிற்கும் சிவன்

—ஒளவை குறள்.

| | | |
|---|---|---|
| சிவம் | தான் | பொருள் |
| நிற்கும் | நடப்பன | நிற்கும் |

குறிப்பு 21—ல் இறைவன் என முதலையும், 36—ல் தான் என இடையையும், 56—ல் பொருள் என இறுதியையும் தொல்காப்பியம் கூறுவதையே இதிற்காட்டி, (முதலும் இறுதியும் திரியாது நிற்கும் இவற்றின் இடை நில்லாது திரியும் எனத் தொல்காப்பியம் 65, 66—ல் கூறுவதையும்) இதில் " நிற்கின்ற அந்தமெனும் பொருளும் நடப்பதாகிய இடையும் ஆகியது. சிவமெனும் ஆதியில், அவ்வாறு ஆகிய சிவமும் நிற்கும் " எனல்.

'இப் பா அமைந்துள்ள நூலை வள்ளுவரின் சகோதரி இயற்ற வில்லை, அவ்வம்மையால் இயற்றப்பட்ட பாக்கள் ஐந்தாறே சங்கத்தில் உண்டு, அன்றியும் ஆறு ஔவைகள் இருந்ததாகத் தெரிகிறது' என்று பலவாறு வாதிடுவோர் இனியேனும் இக் குறளை இயற்றியது எந்த ஔவை எனத் தீர்மானித்துக் கொள்ளட்டும். நன்னூல் தொல்காப்பியம் கூறும் இச் செய்தியை ஔவை குறள் மாத்திரம் விளக்குவதாய் நினைக்க வேண்டாம், மற்ஞேர் நூலையும் காட்டுகிறேன்.

162. நிற்பதுஞ் செல்வது மாஞேன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க

—திருவாசகம் திருவண்டப் பகுதி. 53, 54

கற்பம் செல்வது முடிவு
நிற்பது

(தொல்காப்பியம் கூறுவதை மேற் காண்பதில் ஔவை குறள் விளக்குவது போல்) இதில் "நிற்பதெனும் இறுதியும் செல்வதெனும் இடையும் ஆகியது கற்பமெனும் முதலினின்றே அம் முதல்வனைக் காண்க. அக் கற்பமெனும் முதலையும் நிற்பதெனும் முடிவையும் கண்டோனுகிய செல்வதெனும் இடைய்யக் காண்க" எனல். 'ஆதியும் அந்தமும் நிற்கும், இடை திரியும்' எனத் தொல்காப்பியம் கூறுவதை விளக்குவதோடு 80–ல் 'ஆதியந்தம் இரண்டையும் இடையே அறியும்' எனத் தொல்காப்பியம் கூறு வதையும் இதில் 'கற்பமெனும் முதலையும் நிற்பதெனும் இறுதி யையும் கண்ட இடையே செல்வது' என விளக்குவதறிக.

163. இரவினும் பகலினும் நீ வரல்

—தொ. பொரு. 16

இரவு பகல் நீ

"முதலே இரவு இடையே பகல் இவற்றினின்றும் வருவதே நீ எனும் இறுதி" எனல்.

164. பொழுது தலை வைத்த கை

—தொ. பொரு. 42

தலை பொழுது கை

48–ல் முதலே தலை 4-ல் இடையே பொழுது என்பதை இதிற் காட்டி, "தலை எனும் முதல் பொழுதெனும் இடை இவை வைத்த (ஆக்கிய) இறுதியே கை", எனல்.

165. காலம் உலகம் உடரே உடம்பே
பால் வரை தெய்வம் வினையே பூதம்

—தொ. கிளவி. 58

| | | |
|---|---|---|
| காலம் | வினை | உலகம் |
| உயிர் | வரை | |
| பால் | தெய்வம் | உடம்பே |
| பூதம் | | |

முதலை 54-ல் **காலம்** 42-ல் **உயிர்** 12-ல் **பால்**, இடையை 12-ல் **வரை** 14-ல் **வினை**, இறுதியை 17-ல் **உடல்** 31-ல் **உலகம்** என்பதையே இதிற்காட்டி, "முதலாகிய உயிரே காலம், இடையாகிய வினையே தெய்வம், இறுதியாகிய உடம்பே உலகம்" எனல்.

'இதிற் காணும் ஏழு சொற்களையும் தனித் தனிச் சூத்திரங்களில் இது இதற்குப் பெயரெனக் காட்டி, அவ்வாறு காட்டப் பட்டுள்ள நாமங்களைக்கொண்டே 'காலமெனும் உயிரே முதல், உலகமெனும் உடம்பே இறுதி, வரை எனும் வினையே தெய்வம்' என வெகு அழுத்தமாய் விளக்குவதை ஆராய்ந்து அறியாதது தொல்காப்பியத்தின் குறையா? அன்றி நமது குற்றமா? இப்படி மறைவாய்க் கூறுவதை அறிவது எப்படி? எனில்.

166. சிவனவன் வைத்த தெய்வ நெறியிற்
பவனவன் வைத்த பழ வழி நாடி

—திருமந்திரம். 1650

| | | |
|---|---|---|
| சிவன் | தெய்வம் | நெறி |
| அவன் | பவன் | இல் |
| வழி | நாடி | பழம் |

முதலை குறிப்பு 21-ல் **இறைவன்** 18 ல் **அவன்** குறிப்பு 23-ல் **வழி**, இடையை 165-ல் **தெய்வம்**, இறுதியை 39-ல் **நெறி** 13-ல் **இல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, ஆக்கிய என்பதை 164-ல் 'வைத்த' எனத் தொல்காப்பியம் காட்டுதற்கிசைய இதில் "சிவன் எனும் அவன் வைத்த (ஆக்கியதே) தெய்வ மெனும் இடை, அவ்விடை யாகிய தெய்வமெனும் பவன் வைத்ததே (ஆக்கியதே) இறுதியாகிய இல் லெனும் நெறி, இவற்றிற்கு 'வழி—நாடி—பழம்' எனும் நாமங்கள் **உண்டு**" எனல்.

தொல்காப்பியம் இப்படி மறைவாய்க் கூறலாமா? **எனக்** குறை கூறுவோர் இத் தெய்வத்தைத் திருமூலர் தெரிந்த தெப்படி? என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்க. பிரபல தமிழ்

நூல்களிற் சிறந்த இவ்விரு நூல்களும் இதுதான் தெய்வமென நிச்சயித்துக் காட்டுவதை அறியாதது பெரிதல்ல, இதுதான் தெய்வமென நிச்சயிக்க இடமின்றித் தமிழ் நூல்கள் எல்லாமே ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்தை உணர்த்துவதாய்த் தீர்மானித்திருப்பதை என்னென்பது. இத் தெய்வத்தின் பெயரால் விளையும் சச்சரவுக்கு அளவுண்டோ ?

## (14) தில்லை எது

167\. ஙவும் சஞவும் டணவும் முதலிடை

—ந. எழுத்தியல். 64

ங க ...
ச ஞ
ண ட
முதல் இடை

"முதலின் நாமங்களே ங ச ண எனும் எழுத்துக்கள், இடையின் நாமங்களே க ஞ ட என்பவை" எனல்.

168\. ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை

—தொ. மொழி மரபு. 40

ஏ ஞகாரம் ...
ஓ
உயிர் தில்லை

குறிப்பு 27-ல் முதலே ஏ ஓ 41-ல் முதலே உயிர், 167-ல் இடையே ஞ என்பதை இதிற்காட்டி, "ஏ ஓ எனும் முதலே உயிர், ஞாகாரமெனும் இடையே தில்லை" எனல்.

169\. எண்ணிணைச் சென்றணுகாம வெனப்படும்
அண்ணலைச் சென்றகாப் பசுபாசமே

—திருமந்திரம். 1436

எண் ... அண்ணல்
பசு பாசம்

தொல்காப்பியத்திற்கிசைய 95, 97-ல் முதலே எண் இறுதியே அண்ணல் எனக் காட்டி, அண்ணலே அழிவிலாதென விளக்கும் திருமந்திரம் அவற்றையே இதிற்காட்டி, அவற்றைப் பசு - பாசம் எனவும் உணர்த்தி, 88-ல் ஆதி அந்தத் திடம் செல்லாது என நன்னூல் கூறுதற்கிசைய இதில் "எண்ணெனும் பசு அண்ண

லெனும் பாசத்தை அணுகாது, அப் பாசமும் பசுவை அணுகாது" என்பதறிக. இவற்றால் பதி என்பது இடையெனத் தெரிகிற தன்றோ.

170. பொற்பதிக் கூத்தன் பொற்றில்லைக் கூத்தன்

—திருமந்திரம். 2723

பொன் பதி கூத்தன்
தில்லை

9-ல் முதலே பொன் 168-ல் இடையே தில்லை 125-ல் இறுதியே கூத்தர் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, மேல் 169-ல் முதலிறுதியைப் 'பசு-பாசம்' என்பதற்கிசைய இதில் இடையைப் 'பதி' எனவும் உணர்த்தி, "பொற்-கூத்தன் எனும் ஆதியந்தத் திடையாகிய பதியே தில்லை" எனல்.

171. ஈசனே நீ யல்ல தில்லை யிங்குமங்கும்
என்பதும் பேசினேன்

—திருவா. ஆனந்தத் தழுத்தல். 8

ஈசன் தில்லை நீ

குறிப்பு 21-ல் முதலே இறைவன் 168-ல் இடையே தில்லை 163-ல் இறுதியே நீ எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஈசனெனும் ஆதி நீ எனும் அந்தமல்ல, இடையாகிய தில்லையோ இங்குமங்கும் (செல்வது) என்று கூறினேன்" எனல். 162-ல் இடை 'செல்வது' எனக் கூறுவதையே இதில் இங்குமங்கும் செல்லுமெனக் கூறினேன் என்பதறிக. தில்லை விளங்கிற்றா? இலக்கிய இலக்கண நூல்களின் தன்மை இவ்வாறு இருப்பது சரி, இலக்கியம் என்பதும் இலக்கணம் என்பதும்தான் என்ன? எனக் கேட்கலாம், அதையும் கவனிப்போம். அதற்கான சில சூத்திரங் களை முதலில் கவனித்துக் கொண்டு பின் அதை ஆராய்வோம்.

172. அண் பல் அடி நா முடி உறத் த ந வரும்

—ந. எழுத். 25

| | | |
|---|---|---|
| அண் | நா | பல் |
| முடி | | அடி |
| ற | | உ |
| த | | ந |

124-ல் முதலிறுதியே அண்-பல் எனக் கூறும் நன்னூல் அவற் றையே இதிற் காட்டி, 5-ல் முன்பின்னை அடுத்து இடையில் மொழிவரும் எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல் "அண்-பல்

எனும் முதலிறுதியாகிய முடி - அடக்கு இடையில் நா வரும்' எனல். இதை நிச்சயிக்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

173. அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே

தொ. செய்யு. 34

... சிறப்பு அடி
பாட்டு

குறிப்பு 30-ல் குணம் தொழிலெனும் இடையே **சிறப்பு** எனவும் 172-ல் பல்லெனும் இறுதியே **அடி** எனவும் நன்னூல் விளக்குவது இதில் காண்பதையே. அவற்றையே இதிற் காட்டி, "அந்தமாகிய அடியின் இடையாகிய சிறப்பே பாட்டு எனப்படும்" எனல்.

174. உடம்பும் உயிரும் வாடியக் காலும்

—தொ. பொரு. 9

உயிர் வாடிய உடம்பு
கால்

165–ல் முதலிறுதியே **உயிர்–உடல்** 54-ல் இடையே **மயங்குதல்** என்பதையே இதிற் காட்டி, "உயிரும் உடலும் முதலும் இறுதியுமே, இவற்றின் இடையே வாடிய கால்" எனல்.

175. வினை எஞ்சுகிளவி வேறு பல்க் குரிய

—தொ. எச்ச. 61

வேறு வினை எஞ்சும்
கிளவி, பல்

60-ல் முதலே **வேறு**, இடையே **வினை**, இறுதியை 42-ல் எஞ்சிய 172-ல் **பல்** என்பதை இதிற்காட்டி, "வேறு–பல்லெனும் ஆதியந்தத்திற்கு உரியதே வினை எனும் இடை" எனல்.

176. ஆ வயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே

—தொ. எச்ச. 36

ஆ வயிறு குறிப்பு
ஆக்கம்

31–ல் முதலே **ஆ**, 12-ல் இடையே **ஆக்கம்** 130-ல் இறுதியே **குறிப்பு** என்பதை இதிற் காட்டி, "ஆ எனும் முதலினின்று ஆக்கமாகிய வயிறெனும் இடையோடு வரும் இறுதி குறிப்பே" எனல். குறிப்பு 1-ல் முதலெனப்படுவது ஆ என்பதை வேறு யேற்க இடமுண்டா?

177. தலை அடுத்த மடலின் கண்ணும்

—தொ. களவியல். 20

| | | |
|---|---|---|
| தலை | மடல் | கண் |

குறிப்பு 19-ல் முதலே தலை இறுதியே கண் என்பதை இதிற் காட்டி, "ஆதியாகிய தலையை அடுத்துள்ள இடையே மடல் இறுதியே கண்" எனல்.

178. தோடே மடலே

—தொ. மரபியல். 87

| | |
|---|---|
| மடல் | ... |
| தோடு | |

மேற்காணும் மடல் என்பதை இதிற் காட்டி "இடையாகிய மடலே தோடு, தோடே மடல்" எனல்.

179. உயிரீறாகிய உயர் திணைப் பெயரே

—தொ. தொகை மரபு. 11

| | | |
|---|---|---|
| உயிர் | ... | ஈறு |
| திணை | | உயர் |

81-ல் 'முதலீறே முன்னிலை-இளவி' எனும் தொல்காப்பியம் இதில் முதலீறே திணையும் உயரும்" என்பதறிக. 82-ல் முதலே அஃறிணை எனும் தொல்காப்பியம் இதில் இறுதியை உயர் எனவும் முதலையே திணை எனவும் உணர்த்துவதறிக. திணை என்பதை இவ்வாறு நான் எடுத்துக் காட்டுவதில் சந்தேகமிருந்தால் கீழ் காண்பவற்றாற் றெளிக.

180, திணையே பால் இடம் பொழுது வினை இறை
மரபாம் ஏழு மயங்கின் ஆம் வழுவே

—ந. பொதுவியல். 24

| | | |
|---|---|---|
| திணை | பொழுது | மரபு |
| பால் | இடம் | ஏழு |
| வினை | மயக்கும் | |
| இறை | | |
| வழு | | |

முதலை 179-ல் திணை 165-ல் பால் 53-Iல் வினை குறிப்பு 21-ல் இறைவன் 6-ல் கெடுதல், இடையை 4-ல் பொழுது 54-ல் மயங்குதல், இறுதியை 27-ல் ஏழு என்பதையே காட்டி, "பொழுதெனும் இடையே இடமெனும் மயங்கும், அம்மயங்கின் ஆதியாகிய திணை யெனும்பாலே வினை எனும் இறை, அந்தமாகிய ஏழு மரபாம்"

எனல். முதலிடையிறுதியென வகுத்து, அவற்றுள் இதற்கிது பெய ரெனக் காட்டி, அப் பெயர்களைக்கொண்டு மற்ற நாமங்களை விளக்கும் ஓர் முக்கியச் சூத்திரமிது.

181. காலை திணைக்குரிப் பொருளே

—தொ. அகத். 14.

| | | |
|---|---|---|
| திணை | ... | காலை<br>பொருள் |

179-ல் முதலே திணை, இறுதியை 79-ல் **காலை** 44-ல் **பொருள்** என்பதை இதிற் காட்டி, 79-ல் 'அந்தமாகிய காலை கிழவோன் எனும் ஆதிக்கு உரியதே' என்பது போல், இதில் "திணை எனும் ஆதிக்கு உரிய அந்தமெனும் காலை பொருளே" எனல்.

182. குற்றம் சான்ற பொருளெடுத்துரைப்பினும்

—தொ. கற்பியல் 5

| | | |
|---|---|---|
| குற்றம் | ... | சான்ற<br>பொருள் |

6-ல் முதலே கெடுதல் இறுதியை 106-ல் **சான்ற** 44-ல் **பொருள்** என்பதையே காட்டி, "அந்தமாகிய சான்ற எனும் பொருளை உரைப்பது (செய்வது) குற்றமேனும் முதலே" எனல்.

179-ல் **திணை** 165-ல் **பால்** எனத் தொல்காப்பியம் கூறுவதை 'திணையே பால்', 53-Iல் **விஞ** குறிப்பு 21-ல் **இறைவன்** எனத் தொல்காப்பியம் கூறுவதை 'இறையே விஞ', 4-ல் **பொழுது** 54-ல் **மயங்குதல்** எனத் தொல்காப்பியம் கூறுவதை 'பொழுதெனும் மயங்குதலே இடம்', 27-ல் **ஏழு** எனத் தொல்காப்பியம் கூறுவதை 'ஏழே மரபாம்' 182-ல் **குற்றம்** எனத் தொல்காப்பியம் கூறுவதை 'வழுவே' என மிகக் கருணையோடு நமக்குத் தொல்காப்பியத்தின் மறைப்பை 180-ல் விளக்கும் நன்னூலை மிகக் கேவலமாகப் பேசி தொல்காப்பியத்திற்கு நிகரான ஓர் புது இலக்கண நூல் தற் காலம் தேவையே என்போர் சிலருமுண்டு. இதற்கு ஆதாரம், அவர்களுக்குத்தான் தெரியும். மற்றோர் செய்தியைக் காட்டுகிறேன்.

183. அழியா மரபினது வழி நூலாகும்

—நன். பொதுப்பாயிரம் 7.

| | | |
|---|---|---|
| வழி | அது<br>நூல் | மரபு<br>அழிவிலாதது |

குறிப்பு 23-ல் இடையிறுதியைச் செய்யும் முதலே **வழி**, குறிப்பு 3-ல் இடையாகிய இரண்டெனும் வகையே **அது**, 122-ல்

பாலெனும் முதலை அறியும் இடையே நூல், குறிப்பு 20-ல் கண்ணெனும் இறுதியே அழிவிலாதது எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "அந்தமாகிய அழிவிலா மரபின் இடையாகிய அதுவே முதலாகிய வழியின் இடையாகிய நூலாகும்" எனல்.

அழிவிலாக் கண்ணெனத் தொல்காப்பியம் குறிப்பு 20-ல் கூறுவதையே இதில் அழிவிலா மரபென நமக்கு உணர்த்த (27-ல் இந்த அழியாக் கண்ணையே ஏழு எனத் தொல்காப்பியம் கூறுவது போல் 183-ல் அழியா மரபெனக் கூறுவதையே) நன்னூல் 180-ல் 'ஏழே மரபாம்' எனும் விவரம் காண்க. இவ்வாறு நன்னூலும் தொல்காப்பியமும் ஒன்றையொன்று தழுவி 'அந்தமாகிய அழியாக் கண்ணெனும் மரபே ஏழு' என விளக்கும்போது ஏழாம் வேற்றுமை உருபே கண்ணென் றேற்க ஆதாரம் எங்குளதோ? இலக்கிய இலக்கணத்தைக் கவனிப்போம்.

## (15) இலக்கிய இலக்கணம்

184. வழக்கினுகிய உயர் சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல

—தொ, கிளவி. 27

| | | |
|---|---|---|
| வழக்கு | மருங்கு | உயர் |
| | இன் | கிளவி |
| சொல் | ஆறு | இலக்கணம் |

முதலை 119-ல் **வழக்கு** 49-ல் **சொல்**, இடையை 119-ல் **மருங்கு** 26-ல் **இன்** 65-ல் **ஆறு**, இறுதியை 179-ல் **உயர்** 89-ல் **கிளவி** என்பதையே காட்டி, (51-ல் 'சொல்லெனும் ஆதி அளவும் எஞ்சுதலும் அல்ல' என்பது போல்) சொல்லெனும் முதல் இடையாகிய ஆறல்ல, எனல். "சொல்லெனும் வழக்கே முதல், இன்னுகிய மருங்கெனும் இடையே ஆறு, இம்முதலிடையினின்று ஆகிய கிளவி யாகிய உயரெனும் இலக்கணமே இறுதி" எனல்.

184-ல் முதலே **வழக்கு** இறுதியை 173-ல் **அடி** 164-ல் **கை** எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, இடையைக் கணக்கு என உணர்த்தி, திருநாவுக்கரசு 'கை தொழுது நாமேத்திக் காணுமடி கணக்கு வழக்குக் கடந்தவடி' என்பது கண்டு வழக்கு எதுவெனத் தீர்மானிக்க.

சொல்லே முதல் மருங்கே இடை என அங்கங்கும் கூறியிருப்பதை இதிற் காட்டி, 'சொல் மருங்கில் இலக்கணம்; இலக்கண மருங்கில் சொல்' எனத் தொடர்பைக் காட்டி, இறுதியே இலக்கண

மென உணர்த்தி, 'அவ்விலக்கண மருங்கின் முதலாகிய சொல் ஆறெனும் இடையல்ல' எனவும் எச்சரிக்கும் விபரம் காண்க. செய்யுளியல் 240-ல் 'இழைபின் இலக்கணம்' 'பின்னெனும் இழையே இலக்கணம்' என்பதும் கண்டு தெளிக.

185. இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலில்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப் பெயர் அல் பெயர்க் கிடைநிலை எனலே

—ந. பதவியல். 14.

| | | |
|---|---|---|
| அல் | இடை | நிலை |
| பெயர் | வினை | |
| விகுதி | பகுதி | |
| | இலக்கியம் | இலக்கணம் |

முதலை 163–ல் **அல்** 118-ல் பெயர் 116-ல் விகுதி, இடையை 115-ல் **வினை** 118-ல் **பகுதி**, இறுதியை 3-ல் **நிலை** 184-ல் **இலக்கணம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (இடை ஆதியையும் அந்தத்தையும் அறியுமென 80–ல் தொல்காப்பியம் கூறுதற்கிசைய) "அல்லாகிய விகுதி எனும் முதலைக் கண்ட இலக்கியமெனும் பகுதியே வினை, அவ்வினை இறுதியை முதலுக்கே உரியதென்பது பற்றி இயம்புவதில் (செய்வதில்) முதலிறுதியைப் பகுத்து இடையாய் நின்றது, முதலாகிய விகுதி எனும் பெயர்க்கு இடையே இலக்கியம் இறுதியாகிய நிலை எனலே இலக்கணம்" என்பதறிக.

ஆதிக்காக அந்தத்தை இடை உண்டாக்கும் விபரத்தைப் பல நூல்கள் விளக்குவதை இதே நூலில் அடுத்துக் காண்க. இச் சூத்திர மூன்று வரிகளிலும் முதலில் இடையின் நாமங்களாகிய **வினை**, பகுதி, இலக்கியம் என்பவற்றையே எடுத்துக் காட்டியிருப்பதறிக.

186. பாசம் தனிக்கும் அவன் சத்தே

—திருமந்திரம். 2049

| | | |
|---|---|---|
| அவன் | தனி | பாசம் |
| சத்து | | |

169-ல் அந்தமே **பாசம்** என்று கூறும் திருமந்திரம் முதலே 18–ல் **அவன்** இடையே 36-ல் **தனி** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி, "பாசமெனும் அந்தத்திற்கும் தனி எனும் இடைக்கும் ஆதியாகிய அவன் சத்தே" எனல்.

187. *சத்தாதியிற் சுட்டும் இலக்கணாதீதம் சொரூபமே*

—திருமந்திரம், 2566

| | | |
|---|---|---|
| *சத்து* | *சுட்டு* | *இலக்கணம்* |
| *ஆதி* | | *அதீதம்* |
| | | *சொரூபம்* |

186-ல் முதலே *சத்து* என்பதை இதிற் காட்டி, தொல்காப்பியம் 3-ல் இடையே *சுட்டு* 184-ல் இறுதியே **இலக்கணம்** என்பதையும் இதில் உணர்த்தி, ''சத்தெனும் ஆதியினின்று இடையாகிய சுட்டும் இறுதியாகிய அதீதச் சொரூபமெனும் இலக்கணமும் தோன்றும்'' எனல்.

188. *நாடி இழைத்த இலக்கணம் பிழைத்தன*

—தொ. செய். 141

| | | |
|---|---|---|
| ... | *நாடி* | *இலக்கணம்* |
| | | *பிழைத்தது* |

166-ல் இடையே *நாடி* என உணர்த்தும் திருமந்திரம் இதைத் தெரிந்து நமக்கு உணர்த்துவதறிக. குறிப்பு 6-ல் இடையினின்றே இறுதி பிறக்குமெனவும் அது காரணம் பற்றி இறுதிக்குப் பிறப்பு எனவும் நாமுண்டென 85-ல் உணர்த்தும் தொல்காப்பியம் அவற்றிற்கிசைய இதில் இறுதியைப் 'பிழைத்தது' என்பதறிக. ''இடையாகிய நாடி செய்த இறுதியே பிழைத்தன எனும் இலக்கணம்'' எனல். இலக்கியமும் இலக்கணமும் இடையிறுதியின் நாமங்கள் என்பதில் சந்தேகமில்லை யன்றே? 'பிழைத்தது' என்பதைச் சிறிது கவனிப்போம்.

189. *இல்லெனமொழிப் பிறவகை நிகழ்ச்சி*

—தொ. மரபியல். 72

| | | |
|---|---|---|
| *பிற* | *வகை* | *நிகழ்ச்சி* |
| | | *இல்* |

76-ல் முதலே **பிற** 48-ல் இடையே **வகை** 13-ல் இறுதியே **இல்** என்பதை இதிற்காட்டி ''பிற எனும் முதலுக்கும் வகை எனும் இடைக்கும் இறுதியாகிய நிகழ்ச்சியே இல்லென்று கூறப்படும்'' எனல். இப்போதாவது இறுதியின் நாமமே இல் என்று ஏற்கலாமன்றே ?

72-ல் ஆதியே அந்தத்தைத் தனக்கு உரியதாய்க் கொள்ளும் எனக் கூறும் தொல்காப்பியம், 78-ல் ஆதியந்தமே 'கிழவன்—

கிழத்தி' என உணர்த்தி, பொருளியல் 9-ல் 'கிழவோர் சேர்தல் கிழத்திக்கில்லை' கிழவோரெனும் ஆதியைக் கிழத்தி எனும் அந்தம் தனக்குரியதாய்ச் சேர்வதில்லை எனப் புகட்டுகிறது. கிடையாது என்பதை 'இல்லை' எனத் தெளிவாய்க் கூறும் தொல்காப்பியம் 'இல்' என்று 189-ல் கூறுவது பற்றிச் சிந்தித்துத் தெளிக.

190. இறந்த காலம் தரும் தொழில் இடை நிலை

—ந. பதவியல். 15

| | | |
|---|---|---|
| இறந்த | தொழில் | நிலை |
| காலம் | இடை | |

54-ல் முதலே **காலம்** குறிப்பு 11-ல் இடையே **தொழில்** 3-ல் இறுதியே **நிலை** எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, "ஆதியாகிய இறந்த எனும் காலம் தரும் இடையே தொழில் இறுதியே" **நிலை** எனல். இதிற் காணும் 'இடை நிலை' என்பவற்றையே 185-ல் இடையே இலக்கியம் நிலை எனும் இறுதியே இலக்கணம் என நன்னூல் விளக்கும் விபரம் காண்க.

191. தலை தாள் கழறு அறம் எதிர் பொழுது

—தொ. பொரு. 41

| | | |
|---|---|---|
| தலை | பொழுது | தாள் |
| அறம் | எதிர் | கழறு |

முதலை 48-ல் **தலை** 78-ல் **அறம்**, இடையை 4-ல் **பொழுது**, இறுதியை 173-ல் **அடி** என்பதையே காட்டி "ஆதியந்தமாகிய தலை—தாள் என்பவற்றின் இடையாகிய பொழுதே எதிர்" எனல்.

190-ல் முதலே **இறந்தது** 191-ல் இடையே **எதிர்** 189-ல் இறுதியே **நிகழ்ச்சி** என நன்னூலும் தொல்காப்பியமும் உணர்த்தும் விவரம் காண்க. 4-ல் நிலமெனும் முதலின் இடையே பொழுது என்பதை அறியாவிடில் 191-ல் பொழுதே எதிர் என்பதைக் காண்பதெப்படி? இப்போது அச் சூத்திரக் கருத்தை நிச்சயிக்க.

192. செல்வம் புலனே புணர்வு விளையாட்டே

—தொ. மெய்ப்பாட். 11

| | | |
|---|---|---|
| ... | புலன் | செல்வம் |
| | வு | புணர் |
| | விளையாட்டு | |

21-ல் இடையே **புலன்** என்பதை இதிற்காட்டி, "இடையாகிய புலனே விளையாட்டு, இறுதியாகிய புணரே செல்வம்" எனல்.

193. நடுவு அருளல் தன்மை

—தொ. மெய்ப்பாட். 12

அல் நடு தன்மை
வு
அருள்

185-ல் முதலே **அல்** 83-ல் இறுதியே **தன்மை** என்பதை இதிற் காட்டி "அல்—தன்மை எனும் ஆதியந்தத்தின் நடுவே அருள்" எனல். இவ்விரு சூத்திரக் கருத்தைத் திருமந்திரம் ஓர் பாட்டில் நிச்சயிப்பதைக் காட்டுகிறேன்.

194. பிரானருள் உண்டெனிற் உண்டுநற் செல்வம்

—திருமந்திரம். 1645

பிரான் அருள் நற்
செல்வம்

குறிப்பு 21–ல் முதலே இறைவன், 193–ல் இடையே **அருள்**, இறுதியை 102-ல் **நற்** 192–ல் **செல்வம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதிப் பிரானிடமிருந்து அருளெனும் இடை உண்டாயின் அவ்வருளினின்று அந்தமாகிய நற் செல்வம் உண்டாகும்" எனல்.

195. செல்வமெனும் அல்லலிற் பிழைத்தது

—திருவாசகம். போற்றித். 39

அல்லல் ... செல்வம்
பிழைத்தது

முதலே 6–ல் **கெடுதல்** 182-ல் குற்றம் 104-ல் இடும்பை, இறுதியை 192-ல் **செல்வம்** 188–ல் **பிழைத்தது** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய அல்லலிற் றோன்றிய செல்வ மென்னும் அந்தமே பிழைத்தது" எனல், 'அல்லலிற் பிழைத்ததே செல்வம்' என்பதை இவர் அறிந்தது நாம் கற்கும் தொல்காப்பியத்திலன்றோ? 192-ல் இறுதியே செல்வம் எனக் கூறும் தொல்காப்பியம் 188-ல் 'இறுதியே பிழைத்தது எனும் இலக்கணம் என்பதால் 'இறுதியாகிய பிழைத்த இலக்கணமே செல்வம்' எனத் தெரிகிறதன்றோ? அதையே பிழைத்த செல்வம் எனத் திருவாசகம் விளக்குவதறிக

186-ல் முதலேசத்து எனத் திருமந்திரம் கூறுதற்கிசைய இடையிறுதிக்கு சித்து ஆனந்தம் எனும் நாமங்களுண்டு. அதுபற்றி கைவல்லியம் 237-111ல் 'சச்சிதானந்தமெனும் இலக்கணம் அறிகிலேன்' என்பதறிக.

196. முழுவது மிறந்த முதல்வா போற்றி

—திருவாசகம். பேற்றத். 134

முழுது ... ...
இறந்த
முதல்வன்

முதலே 44-ல் முழுது 190-ல் இறந்த குறிப்பு 20—ல் முதல்வன் என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, "முழுதெனும் இறந்த முதல்வா போற்றி" எனல்.

இதில் 'இறந்த முதல்வா' என்றும் 195-ல் 'அல்லலிற் பிழைத்ததே செல்வம்' எனவும் நமக்கு இவர் உணர்த்துவதையும் இவ்வாறு இவர் உணர்த்த ஆதாரமான தொல்காப்பியத்தையும் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்க. தொல்காப்பியச் சூத்திரங்களை அவரவர் கொள்கைக்கு இசையக் கொள்ளத் திருவாசகம் இடந் தருகிறதா? பிழைத்த செல்வத்தையே பிழைத்த இலக்கணம் எனத் தொல்காப்பியம் விளக்குவதா யேற்க. இறந்த—எதிர்—நிகழ் என்பவை முதலிடையிறுதியின் நாமங்களெனத் தொல்காப்பியம் கூறுவதாக நமக்குத் திருவாசகம் உணர்த்துவ தறிக.

## (16) மணி மந்திர மருந்து

197. சேயென் மரப்பெயரொடு மரவியற்றே

—தொ. உயி. மய. 76

பெயர் மரம் சேய்

185-ல் முதலே பெயர் 45—ல் இடையே மரம் என்பதை இதிற் காட்டி, "இடையெனும் மரமும் அம் மரத்தால் இயற்றப்பட்ட சேயெனும் இறுதியும் பெயரெனும் ஆதியினுடைய இடையும் அந்தமுமே" எனல்.

198. அவ்வகை தானே அழகு எனப்படுமே

—தொ. செய். 234

அவ் வகை ...
அழகு

48-ல் இடையே வகை என்பதை இதிற்காட்டி, "இடையாகிய வகைதானே அழகு எனப்படும்" என்பதறிக.

199. கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு

—தொ. வேற். மயங். 1

| அல் | கருமம் | கிளவி |
|---|---|---|
| | சார்பு | |
| | என் | |

193-ல் முதலே **அல்** இடையை 14-ல் வினை 9-ல் **என்** என்பதை இதிற்காட்டி, வினையைக் கருமம் என்று உணர்த்தி, " அல்லெனும் முதலாலாகும் சார்பெனும் கருமமே. இடை, இக் கருமமும் அல்லும் கிளவி எனும் இறுதிக்கு முதலும் இடையுமே " எனல்.

200. *சுட்டு முதலாகிய காரணக் கிளவி*

—தொ. கிளவி. 40

| முதல் | சுட்டு | கிளவி |
|---|---|---|
| | | காரணம் |

" சுட்டு, முதல் எனும் இவற்றால் ஆகிய கிளவி எனும் இறுதியே காரணம் " என்பதறிக.

201. *மண்ணும் மங்கலமும் பரிசில்*

—தொ. புறத். 36

| மண் | பரிசு | மங்கலம் |
|---|---|---|

" இடையாகிய பரிசில் முதலிறுதியா யுள்ளவையே மண்ணும் மங்கலமும் " என்பதறிக.

202. *அரை சேயறியாச் சிறியேன்*

—திருவாச. நீத்தல் வீண். 37

| ... | அரை | சேய் |
|---|---|---|

45-ல் இடையே **அரை** 197-ல் இறுதியே **சேய்** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, " இடை இறுதியாகிய அரையையும் சேயையும் அறியாதிருக்கின்றேனே நான் சிறியேன் " எனல்.

203. *அருளிடும் பெருமை போற்றி*

—திருவாச. காருண்யத். 9

| ... | அருள் | பெருமை |
|---|---|---|

193-ல் இடையே **அருள்** 106-ல் இறுதியே **பெருமை** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " இடையாகிய அருள் தரும் அந்தமாகிய பெருமையே போற்றி " எனல்.

**அருள்** என்பதை 193, 194-ல் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதை ஆராய்ந்தறியாவிட்டாலும் அவ்விரு நூல்களும் 96, 106-ல் அந்தமெனக் கூறும் **பெருமை** என்பதையும் காட்டி

' அருள் தரும் அந்தமே பெருமை' எனத் திருவாசகம் உணர்த்துவது கண்டேனும் தெளியலாமன்றோ ?

204. பெருமையில் ஈசன் காண்க

—திருவாச. திருவண்டம். 6

ஈசன் ... பெருமை

அருள் தரும் அந்தமே பெருமை என்று 203-ல் கூறும் திருவாசகம் இதில் " அவ்வந்தமாகிய பெருமையில் அதற்கு ஆதியாகிய ஈசனைக் காண்க " எனல். அரை, சேய், அருள், பெருமை எனத் தொல்காப்பியம் கூறுவதைத் திருவாசகம் விளக்குவதை ஏற்பதா? தள்ளுவதா?

94-ல் இடையிறுதியாகிய ஏழிரண்டில் ஈசன் எனத் திருமந்திரம் கூறுவது போல் இதில் பெருமையில் ஈசனைக் காண்க எனத் திருவாசகம் புகட்டுவதறிக. இவர் நமக்குணர்த்தும் பெருமை எது ? என்பதைச் சிறிது சிந்திக்க. இன்னும் கவனிப்போம்.

205. தெரிவரிதாகிய தெளிவே போற்றி

—திருவாச. போற்றித். 196

... ... தெளிவு

குறிப்பு 27-ல் தொல்காப்பியமும் 156-ல் திருமந்திரமும் அந்தமெனக் கூறும் தெளிவு என்பதையே இதிற்காட்டி, " தெரிதற்கரிதான தெளிவே போற்றி " எனல்.

'தெளிவு, பெருமை.' என்பவை நாம் வழங்கும் சொற்களாயினும் இவை சுட்டுவதாகத் திருவாசகம் திருமந்திரம் தொல்காப்பியம் முதலியவை நமக்கு எச்சரித்துக் காட்டும் பொருள்கள் நமதனுபவத்தில் உள்ளவையல்ல எனத் தெரிகிறதன்றோ?

206. போற்றிசெய் கதிர்முடித்திடு நெடுமாலன்
அடிமுடி யறியும் ஆதாரந் தன்னில்

—திருவாசகம். போற்றித். 4, 5

கதிர் நெடுமாலன் அடி
முடி ஆதாரம்

158, 159-ல் திருமந்திரமும் தொல்காப்பியமும் ஞாயிறு எனக் கூறும் முதலை கதிர் எனக் காட்டி, 172-ல் முதலிறுதியே முடி-அடி என நன்னூல் கூறுவதையும் உணர்த்தி, " முடி—அடி எனும் முதலிறுதிக்கு இடையாகிய ஆதாரமே நெடுமாலன், அவ்வடிமுடி எனும் ஆதியந்தத்தை அறியும் நெடுமாலனை முதலாகிய முடி எனும் கதிரே முடித்திடும் " எனல்.

162-ல் 'கற்பமெனும் ஆதியையும் நிற்பதெனும் அந்தத்தையும் கண்ட இடையே செல்வது' என்று கூறும் திருவாசகம் இதில் அதே செய்தியை 'கற்பமெனும் முடியையும் நிற்பதெனும் அடியையும் கண்ட செல்வதெனும் இடையே ஆதாரமெனும் நெடுமாலன் என்று உணர்த்துவதறிக.

207. நாள் முன் தோன்றும் தொழில் நிலைக் கிளவிக்கு

—தொ. உயி. மயங். 60

| | | |
|---|---|---|
| முன் | நாள் | நிலை |
| | தொழில் | கிளவி |

190-ல் தொழில்—நிலை இடையிறுதி என்பதை இதிற்காட்டி, "கிளவி எனும் இறுதிக்கு இடையே தொழிலெனும் நாள், இந் நாளெனும் இடை முன்னெனும் முதலினின்று தோன்றும்" எனல்.

208. ஆதி நாளாருமே

—திருமந்திரம். 1939

| | | |
|---|---|---|
| ஆதி | நாள் | ... |
| | ஆறு | |

இடையை 207-ல் **நாள்** 65-ல் **ஆறு** என்று தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியினின்று ஆகிய இடை நாளெனும் ஆறே" எனல். இது 207-ல் தொல்காப்பியம் கூறும் நாளன்றோ?

209. வண்ணத்தின் வடிவின் அளவிற்

—தொ. எச்ச. 20

| | | |
|---|---|---|
| ... | வடிவு | இற் |
| | அளவு | வண்ணம் |

46-ல் இடையே **அளவு** இறுதியை 13-ல் இல் 123-ல் **வண்ணம்** என்பதை இதிற்காட்டி, "வண்ணத்தின் இடையே வடிவு வடிவின் இறுதியே வண்ணம், வடிவே அளவு வண்ணமே இல்" எனல்.

I அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்
உறவாகி வந்தென் உளம் புகுந்தானே

—திருமந்திரம். 1803

| | | |
|---|---|---|
| அறம் | வாழி | அந்தணன் |
| ஆதி | பராபரன் | |
| | உறவு | |
| | உளம் | |

78-ல் ஆதியே **அறம்** எனத் தொல்காப்பியம் கூறுவதை இதிற் காட்டி, "அறமெனும் ஆதிக்கு இடையாகிய பராபரன் எனும்

உளத்தில் அந்தணனெனும் அந்தம் புகுந்திருந்தானே" எனல். இடையே வாழி என்பதை அடுத்துக் காண்க.

**210.** மன்றே இவனும் அவன் வடிவாமே
—திருமந்திரம். 1390

அவன் மன்று இவன்
வடிவு

18–ல் முதலே அவன், 209-ல் இடையே வடிவு 69-ல் இறுதியே இவன் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "அவன்—இவன் எனும் ஆதியந்தத்தின் இடையாகிய மன்றே வடிவு" எனல்.

**211.** மன்றி லாடும் மணியது வாகும்
—திருமந்திம். 1390

... மன்று மணி

மேற்காணும் மன்று என்பதை இதிற் காட்டி, இடை யில்லாது திரியும் என்பதற்கிசைய "இடையாகிய ஆடும் மன்றினின்று ஆகும் இறுதியே மணி" எனல்.

**212.** மந்திர மாவதும் மாமருந் தாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே
—திருமந்திரம். 1604

மருந்து மந்திரம் அடி
பிரான் மா

142-ல் முதலே மருந்து 211-ல் இறுதியே மணி எனக் கூறும் திருமந்திரம் இதில் இடையை மந்திரம் என உணர்த்தி, "இம் மருந்து மந்திரம் எனும் இவற்றால் ஆகும் இறுதியே அடி" எனல்.

**213.** மறையென மொழிப மறையோர் ஆறே
—தொ. செய். 184

... மறை ...
மறையோர்
ஆறு

இடையை 65-ல் ஆறு என்பதை இதிற் காட்டி, "இடையாகிய ஆறே மறையோர் எனும் மறை" எனல்.

**214.** மறைமொழி தானே மந்திரம் என்ப
—தொ. செய். 176

... மறை ...
மொழி
மந்திரம்

இடையை 5-ல் மொழி 213-ல் மறை என்பதை இதிற் காட்டி, "இடையாகிய மறை எனும் மொழியே மந்திரம் எனப்படும்" எனல். இம் மந்திரத்தையன்றோ 212-ல் திருமந்திரம் விளக்குவது.

143-ல் முதலே மருந்து எனத் திருவாசகமும் 214-ல் இடையே மந்திரம் எனத் தொல்காப்பியமும் கூறுவதையே 212-ல் காட்டி, இவற்றின் இறுதியே மணி என 211-ல் திருமந்திரம் விளக்கும் விபரம் காண்க.

215. ஆதிப்பிரானும் மணி மணி வண்ணனும்
ஆதிக் காலத் தலர்மிசை ஆயனும்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனுர்
பேதித் துலகம் பிணங்குகின் றூர்களே

—திருமந்திரம் மோ. சா. வி. 230

| | | |
|---|---|---|
| ஆதி | ஆயன் | கமலம் |
| பிரான் | | மணி |
| அலர் | | வண்ணன் |

105-ல் முதலே **அலர்** 209-ல் இறுதியே **வண்ணம்** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, வண்ணம் என்பதையே **வண்ணன்** என உணர்த்தி, "ஆதிப் பிரானே அலர், அவ்வலருக்குமேல் இடையாயுள்ளதே ஆயன் இவற்றின் அந்தமே மணிவண்ணன், சோதித்துப் பார்த்தால் இவை மூன்றும் ஒரே தொடர்பாயிருப்பதை அறியாது பிணங்குகின்றூர்களே" எனல். இவற்றிற்கே மருந்து—மந்திரம்—மணி அண்ணம்—சுண்ணம்—வண்ணம் எனும் நாமங்களைக் கூறி இவற்றில் இறுதிக்கு நாமங்களாயுள்ள மணியையும் வண்ணத்தையுமே ஒன்று சேர்த்து 'மணிவண்ணன்' என்று நூல்கள் உணர்த்தும்போது அனுபவத்தில் மாலின் நாமமாய் ஏற்கப்படுவதற்கு ஆதாரம் எங்குளதோ? ஆதிக்கு உரியது அந்தம் என்பதுபற்றி 'ஆதிப்பிரான் அணியும் மணிவண்ணன்' என்பது கண்டு தெளிக.

## (17) ஆழ்வார்களின் கருத்து

216. வண்ணன் படைத்த மயக்கு,

—பொய்கை ஆழ்வார் இயற்பா.

| | | |
|---|---|---|
| ... | மயக்கு | வண்ணன் |

55-ல் இடையே மயக்கு 209-ல் இறுதியே **வண்ணம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "வண்ணன் எனும் அந்தத்தைப் படைத்த இடையே மயக்கு" எனல்.

எழுவாய் பயனிலை செயப்படுபொருள் மூன்றும் அமைந்துள்ள ஓர் சிறு வாக்கியமே இது. இதை அறிய இத்துடன் சேர்ந்த முழுப் பாடலை ஆராயவேண்டிய அவசியம் சிறிதுமில்லை. இவர் நமக்குணர்த்தும் இச் சிறுவரியே இப்பெரியார் தொல்காப்பியம் திருமந்திரம் முதலியவற்றின் கருத்தைக் கண்டு பயனையும் பெற்ற வர் எனத் தீர்மானிக்கப் போதுமான ஆதாரமன்றோ ?

217. ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுனின்ற
நன்றென நலஞ் செய்வ தவனிடை நம் மிடைநாளே

—திருவாய்மொழி.

| | | |
|---|---|---|
| ஒன்று | வடிவு | பல |
| | நாள் | நன்று |
| அவன் | இடை | நம் |

முதலை 87-ல் **ஒன்று** 18-ல் **அவன்,** இடையை 209-ல் **வடிவு** 208-ல் **நாள்,** இறுதியை 8-ல் **பல** 113-ல் **நன்று** 172-ல் **நம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, இவற்றிற்குச் சொல்லாக நாமங்கள் இருப்பதோடு இலக்கமாகவும் எழுத்தாகவும் நாமங்கள் உண்டென்பதைக் காட்ட முதலை **ஒன்று** எனவும் இறுதியை **ந** எனவும் உணர்த்துவ தறிக.

இவ்வா றெடுத்துக்காட்டி "ஒன்றெனும் முதலுக்கும் பல எனும் இறுதிக்கும் இடையாகிய வடிவெனும் நாளே அவன்—நம் எனும் முதலிறுதியின் இடையுமாம், அந்நாளே ஒன்று—பல எனும் ஆதியந்தத்தைஅறிவதும் பலவாகிய நன்றெனும் நலத்தைச் செய்வதும்" எனல்.

மூடத்தனமாய் நாமங்களைப் போட்டுக்கொண்டு கைகோர்த் துக் கூத்தாடிச் சுண்டல் தின்பதற்கு ஏற்பட்டதே திருவாய்மொழி என்று இழிவாய்ப் பெரும் புலவர்களே பேசக் கேட்டிருக்கிறேன். நிற்க, நடக்காத ராமாயணத்தை நடந்ததாகப் பரப்ப முயலும் கூட்டமே இவர்கள் எனவும் நகைக்கக் கண்டிருக்கிறேன். இத் தகையோர் வாயடங்க இப்பாடல் ஒன்று போருதா?

218. என் மணி வண்ணன் இலங்கு
பொற்றோட்டின் மேல்

—பெரியாழ்வார்.

| | | |
|---|---|---|
| பொன் | தோடு | மணிவண்ணன் |

9-ல் முதலே **பொன்** 178-ல் இடையே **தோடு** எனத் தொல்காப் பியமும் **மணிவண்ணன்** என 215-ல் திருமந்திரமும் கூறுவதையே

காட்டி, "பொன்னெனும் முதலுக்கும் தோடெனும் இடைக்கும் மேலே இறுதியாய் இயங்குவது மணிவண்ணனே" எனல்.

மணிவண்ணன் என்று நூல்கள் கூறுவதற்கு மாறுக நமது அனுபவத்தில் கொள்கின்றேம் என்பதை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிக. மற்றோர் விசித்திரப் பாடலை ஆராய இரண்டோர் ஆதாரங்களைக் கவனிப்போம்.

219. தீமையின் முடிக்கும் பொருள்.

—தொ. கற்பியல் 6

தீமை இன் பொருள்

26—ல் இடையே இன் 2-ல் இறுதியே பொருள் என்பதை இதிற் காட்டி, "தீமை எனும் முன்னும் இன்னெனும் இடையும் முடிக்கும் பின்னே பொருள்" எனல். 6—ல் கெடுதல் 182-ல் குற்றம் 104-ல் இடும்பை எனக் கூறும் ஆதியையே இதில் தீமை என இவற்றின் நாமங்களை வெகு சாக்கிரதையாய் விளக்குவதறிக.

220. வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியி லொளியா யுறும்

—ஔவை குறள்

வெளி ஒளி கனி
விளைவு

130-ல் முதலே வெளி 64—ல் இடையே ஒளி எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இறுதியை 166-ல் பழம் எனத் திருமந்திரம் கூறுவதையும் இதிற்காட்டி, (90-ல் ஆதி பழுத்து அதினின்றும் அன்பு எனும் இடை தோன்றும் எனத் திருமந்திரம் கூறுதற்கிசைய) இதில் "ஆதியாகிய வெளியினின்று விளைந்த இடையே விளைவு, இவ்விளைவெனும் ஒளியினின்று தோன்றும் அந்தமாகிய கனி இடையாகிய ஒளியினும் பிரகாசமுடையது" எனல்.

221. வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்

—தொ. வினையியல். 1

காலம் வினை காலை
வேற்றுமை

54-ல் முதலே காலம், இடையை 165-ல் வினை 25-ல் வேற்றுமை, இறுதியை 181-ல் காலை என்பதை இதிற் காட்டுவதறிக (69—லும் 72-லும் இடை அந்தத்திற்கும் அந்தம் ஆதிக்குமே உரியது எனக் கூறுவதோடு இடையைஅந்தமும்அந்தத்தைஆதியும் கொள்ளுமென

வும் உணர்த்துகிறது) இவ்வாறு உணர்த்தும் தொல்காப்பியம் இது இதைக் கொள்ளாது எனவும் கூறுவதை 4-ன் விளக்கத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இவ்வாறிருப்பதால் ஆதி தான் கொள்ளுதற்குரிய அந்தத்தையும் அந்தம் தான் கொள்ளுதற்குரிய இடையையும் நினைத்துப் பாராட்டும் எனவும் நூல்கள் கூறும். இதற்கிசைய இச்சூத்திரம் " தான் உரியதாய்க் கொள்ளாத அந்தமாகிய காலையையும் தான் தனக்கு உரியதெனக் கொள்ள நினைக்கும் ஆதியாகிய காலத்தையும் சேர்ந்து இவற்றின் இடையாய்த் தோன்றும் வேற்றுமையே வினையெனப்படுவது " எனல்.

'கொள்ளாது நினையும்' என்பவற்றை நீக்கிப் பார்த்தால் 'வினையெனப்படுவது வேற்றுமையே, அவ்வினை எனும் வேற்றுமை காலம்—காலை எனும் முதலிறுதியோடு (தொடர்பாய்த்)தோன்றும், என்பதே. வினையையும் வேற்றுமையையும் வெவ்வேறு சூத்திரங்களில் இடையெனக் கூறியிருக்கும் தொல்காப்பியம் அவ்விரண்டையும் மேற்காணும் ஒரே சூத்திரத்தில் அமைத்துக் காட்டி 'வினையெனப்படுவது வேற்றுமை' என உணர்த்தும்போது இவற்றை வெவ்வேறாய்க் கொள்ள இடமுண்டா? என்பது பற்றி சிறிது சிந்திக்க. நிற்க, 'கொள்ளாது நினையும்' என்பது பற்றி நான் எடுத்துக் காட்டியிருப்பது பூரண திருப்தி யளிக்காதிருக்கலாம், இச் செய்தியை நூல்கள் சில விளக்குவதை அடுத்துக் காணலாம். அதற்காதாரம் சிலவற்றைக் கவனிப்போம்.

222. முறைமை சுட்டாம் மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்

—தொ. பெயரியல். 9

| | | |
|---|---|---|
| ... | முறை | மகள் |
| | மை | மகன் |
| | சுட்டு | மக்கள் |
| | மாந்தர் | |

இடையை 10-ல் முறை மை 3-ல் சுட்டு என்பதை இதிற்காட்டி " இடையாகிய முறை மை எனும் சுட்டால் ஆகும் இறுதியே மகனெனும் மகள், அச்சுட்டெனும் இடைக்கு மாந்தர் எனவும் மகள் மகன் எனும் இறுதிக்கு மக்கள் எனவும் பெயர்கள் உண்டு " எனல்.

223. பண்டெங்களீசன் நெடுமால் பிரமனைக்
கண்டங் கிருக்கும் கருத்தறிவா ரில்லை

—திருமந்திரம் 2964.

| | | |
|---|---|---|
| ஈசன் | நெடுமால் | பிரமன் |
| | | கருத்து |

"முதலிடையிறுதியாய் அமைந்துள்ள ஈசன்-மால்-அயன் எனும் இவற்றைக் கண்டு இவற்றுள் அயன் என்னும் அந்தமே கருத்தென அமர்ந்திருப்பதை அறியாதிருக்கின்றனரே" எனல்.

I ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாக ஒளித்துவளர
தரிக்கிலனாகித் தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்த கஞ்சன் வயிற்றில்

—ஆண்டாள் திருப்பாவை

| | | |
|---|---|---|
| கஞ்சன் | ஓர் | மகன் |
| தீங்கு | ஒருத்தி | |
| இரவு | வயிறு | கருத்து |
| | தான் | |

முதலை 219-ல் **தீமை** 163-ல் **இரவு**, இடையை 30-ல் **ஓர்** 32-ல் **ஒருத்தி** 176-ல் **வயிறு** 36-ல் **தான்**, இறுதியை 222-ல் **மகன்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, இறுதியைக் **கருத்து** எனத் திருமந்திரம் கூறுவதையும் உணர்த்தியுள்ளதை முதலில் கவனிக்க.

குறிப்பு 6—ல் இடையினின்றே இறுதி பிறக்கும் எனவும் 188-ல் அவ்வாறு பிறந்த இறுதியைப் பிழைத்தது எனவும், 65, 67, 68-ல் இடை நில்லாது திரியும் எனவும் தொல்காப்பியம் கூறுவதை இதில் விளக்கும் விவரம் காண்க.

ஆதிக்காக அந்தத்தை இடை செய்ததாக நன்னூல்185-ல் கூறுவதையும் இதில் விளக்கும் விவரம் காண்க. நிற்க, 2-ல் இறுதியை நிலவு எனத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய 220-ல் ஔவை குறள் ஒளியெனும் இடையினின்று தோன்றும் இறுதியை ஒளியில் ஒளிப்பது என உணர்த்துகிறது. அதைத் தழுவியே முதலை இரவெனக் கூறும் திருப்பாவை இறுதியை நிலவெனக் கூறாமலே உணர்த்த பிரகாசத்தோடு வளர்ந்த மகன் என்பதறிக.

"ஓர்—இரவு எனும் முதலிடையில் பிறந்து பிரகாசத்தோடு வளர்ந்த இறுதியே மகன், இம்மகனே கஞ்சன்வயிறு - என்னும் முதலிடையால் பிழைத்த கருத்து, இக்கருத்தைத் தீங்கெனும் முதலுக்காகப் பிழைப்பித்ததரிக்கிலனாய இடைதான்எனும் ஒருத்தியே, அவ்விடையாகிய தான் பிழைப்பித்த கருத்தை ஒருத்தியால் பிறந்த மகனென்றறிக" எனல்.

224. நெய்யரி அன்னர் தலை இடை மாணுக்கர்

—ந. பொதுப் பாயிரம் 38.

| | | |
|---|---|---|
| தலை | இடை | நெய் |
| | அன்னர் | |
| | அரி | மாணுக்கர் |

குறிப்பு 19-ல் முதலே **தலை** 30-ல் இடையே **அன்ன** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, அன்ன என்பதை அன்னர் என உணர்த்தி, "முதலே தலை, இடையே அன்னரெனும் அரி, இறுதி எனும் நெய்யே மாணுக்கர்" எனல்.

225. வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்

—ஆண்டாள் திருப்பாவை

| | | |
|---|---|---|
| பாவை | கடல் | நம் |
| பால் | நாள் | உள் |
| துயின்ற | கால் | அடி |
| பரமன் | நீர் | நெய் |
| | மை | |
| | மலர் | |

முதலை 12-ல் **பால்** 128-ல் **தூங்கல்** 97-ல் **பரமன்**, இடையை 158-ல் **கடல்** 207-ல் **நாள்** 174-ல் **கால்** குறிப்பு 12-ல் **நீர்** 33-ல் **மை** 131-ல் **மலர்**, இறுதியை 172-ல் **நம்** 108-ல் **உள்** 173-ல் **அடி** 224-ல் **நெய்** என நன்னூல் தொல்காப்பியம் கூறுபவையே இதிற் காண்பவை. ஆதியே மூடம் என்பது பற்றி அந்தத்தை 'மூட நெய்' என திருப் பாவை 27-ல் கூறுகிறது. மூடம் என்பதை அடுத்துக் காணலாம்.

"வையத்தில் வாழ்வோரே! நாம் 'நம்—பாவை' எனும் ஆதியந் தத்திற்குச் செய்யும் கிரிசைகளைக் கேளீரோ, இவ்வாதி அந்தமே பால்—உள் எனும் பரமனும் அடியும், இவற்றைப் பாடிப் பணிந்து இவற்றின் இடையாகிய கடல் நாள் கால் எனும் நாமங்களையுடைய நீரைக் கொண்டு நீராட்டுவித்து ஆதியந்தமாகிய பாலையும் நெய்யை யும் உண்ணுதிருக்கின்றோம். அவற்றிற்கு இடையாகிய மையை இட்டறியோம், மலரெனும் இடையைச் சூடி அவற்றிற்கு முடித் தோமில்லையே" எனல். 175-ல் வேறு—பல் எனும் ஆதியந்தம் இரண்டிற்கும் உரியதே இடையெனத் தொல்காப்பியம் கூறு

வதையே இதில் ' நீராடி மையிட்டு மலர்சூடி பரமனையும் அடியை யும் பணிந்தறியோமே' என்பதறிக.

'பழுதே பிறத்தேன் கொண்டுனைப் பணிகேனே' எனத் திருவாசகம் கூறுதற்குக் காரணம் இதுவே. நிற்க, முதலை குறிப்பு 14-ல் ஆண்டு இறுதியை 24-ல் பல் குறிப்பு 1—I-ல் முதலை நூறு இடையே ஆயிரம் எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. இறுதியே கோடி என்பதை அடுத்துக் காணலாம். இது பற்றியே பெரியாழ்வார் 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு, பல்கோடி நூறுயிரம்' என்று விளக்கும் விபரம் காண்க.

## (18) தமிழ் விவரம்

226. மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்

—தொ. கற்பியல். 5

| மாலை | பெண்டிர் | மக்கள் |
|---|---|---|

222-ல் இறுதியே **மக்கள்** என்பதை இதிற்காட்டி, 181-ல் இறுதியே **காலை** என்பதற்கிசைய இதில் முதலை **மாலை** என உணர்த்தி, "மாலை எனும் முதல் ஏந்திய பெண்டிரே இடை மக்களே இறுதி" எனல்.

227. ஆக்கம் தானே காரண முதற்றே

—தொ. கிளவி. 21

| முதற் | ஆக்கம் | காரணம் |
|---|---|---|
| | | றே |

12-ல் இடையே **ஆக்கம்** 200-ல் இறுதியே **காரணம்** என்பதை இதிற்காட்டி, "முதலின் இடையே ஆக்கம் இறுதியே றே எனும் காரணம்" எனல்.

228. நீத்த கணவற் றீர்த்த வேலிற்

—தொ. புறத். 24

| கணவர் | வேல் | இற் |
|---|---|---|
| ற் | | நீத்த |

13-ல் இறுதியே **இற்** 110-ல் இடையே **வேலன்** என்பதை இதிற் காட்டி, " கணவர் எனும் ஆதி தீர்த்த (செய்த) இடையே வேல் இறுதியே நீத்த எனும் இல் " எனல்.

இதில் முதலை **ற், குறிப்பு 9**-ல் இடையை **று, 227**-ல் இறுதியை **றே** என **உணர்த்த 'கணவ எனும் ற்' 'முதற் று'** ' முதற் றே ' எனக் கூறும் விவரம் காண்க.

229. மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை

—தொ. கற்பியல். 24

| | | |
|---|---|---|
| கிழவோன் | கொடுமை | தாள் |
| தலை | | மனைவி |

முதலை 191-ல் **தலை** 77—ல் **கிழவோன்**, இறுதியை 191-ல் **தாள்** என்பதை இதிற்காட்டி, "ஆதியாகிய கிழவோன் எனும் தலைக் கிடையே கொடுமை அந்தமே தாளெனும் மனைவி" எனல்.

230. மனைவிக்குறுதி உள் வழி உண்டே

—தொ. கற்பியல். 25

| | | |
|---|---|---|
| உறுதி | உண்டு | மனைவி |
| வழி | | உள் |

குறிப்பு 23-ல் முதலே **வழி** 108—ல் இறுதியே **உள்** என்பதை இதிற்காட்டி, 229—ல் இறுதி எனக் கூறும் **மனைவி** என்பதையும் இதில் உணர்த்தி, " உண்டெனும் இடையின் முதலே வழி எனும் உறுதி, இறுதியே உள்ளெனும் மனைவி" எனல்.

231. சிறப்பின் தோழி

—தொ. களவியல் 23

| | | |
|---|---|---|
| ... | சிறப்பு | தோழி |

13-ல் இடையே சிறப்பு என்பதை இதிற்காட்டி, "இடையெனும் சிறப்பின் இறுதியே தோழி" எனல்.

I. தாயெனப்படுவோள் செவிலி யாகும்

—தொ. களவியல். 33

| | | |
|---|---|---|
| ... | தாய் | ... |
| | செவிலி | |

"இடையெனும் தாயே செவிலி" எனல்.

232. தோழி தானே செவிலி மகளே

—தொ. களவியல். 34

| | | |
|---|---|---|
| ... | செவிலி | தோழி |
| | | மகள் |

இறுதியை 331-ல் **தோழி** 222-ல் **மகள்** என்பதை இதிற்காட்டி, "செவிலி எனும் இடையின் இறுதியாகிய மகளே தோழி" எனல். 80-ல் 'முதலே தந்தை' மேற் காண்பதில் 'இடையே தாய்' என்பதற் கிசைய இதில் 'இறுதியே மகள்' என்பதறிக.

233. பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி

—தொ. செய். 187

| | | |
|---|---|---|
| ... | செவிலி | தோழி |
| | பார்ப்பான் | பாங்கன் |

232-ல் காணும் செவிலி—தோழி என்பவற்றை இதிற்காட்டி, "இடையெனும் செவிலியே பார்ப்பான் இறுதியெனும் தோழியே பாஙகன்" எனல்.

234. பாங்கன் நிமித்தன் பன்னிரெண்டென்ப

—தொ. களவியல். 13

| | | |
|---|---|---|
| ... | ... | பாங்கன் |
| | | நிமித்தன் |
| | | பனிரெண்டு |

மேற்காணும் பாங்கன் என்பதை இதிற்காட்டி, "பாங்கன் எனும் இறுதியே நிமித்தன் எனும் பனிரெண்டு" எனல்.

235. அவ்வழி பன்னீ ருயிரும் தந்நிலை திரியா

—தொ. பிறப்பியல். 2

| | |
|---|---|
| அவ் | உம் |
| வழி | நிலை |
| உயிர் | பனிரெண்டு |
| த | ந் |

29–ல் முதலிறுதியே அவ்—உவ் 40–ல் முதலிறுதியே உயிர்—நிலை 330-ல் முதலே வழி 334–ல் இறுதியே பனிரெண்டு 172-ல் முதலே த 10-ல் இறுதியே ந் என்பதை இதிற்காட்டி, "அவ் வெனும் முதலே. உயிரெனும் வழி, உம்மெனும் இறுதியே நிலை எனும் பனிரெண்டு, இம் முதலிறுதிக்கே த—ந் எனும் எழுத்துக் கள் நாமமாயுண்டு, இவ் வழி உயிரெனும்ஆதியும் நிலை பனிரெண் டெனும் அந்தமும் திரியாது நிற்கும்" எனல். 66-ல் இயல்—நெறி எனும் ஆதியும் அந்தமும் திரியாது என்பதையே இதில் உயிர்—பனி ரெண்டு எனும் ஆதியும் அந்தமும் திரியாதென விளக்கும் விபரம் காண்க. மேல் சூத்திரங்கள் கூறும் பனிரெண்டைக் கவனிப்போம்.

236. செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்து

—தொ. எச்சவியல். 4

| | | |
|---|---|---|
| நிலம் | தமிழ் | பன்னிரெண்டு |
| செ | | ந் |

4–ல் முதலே நிலம் 335-ல் இறுதியே பனிரெண்டு என்பதை இதிற்காட்டி, "முதலெனும் நிலத்து இடையே தமிழ், அத் தமிழைச் சேர்ந்துள்ள இறுதியே பனிரெண்டு" எனல்.

237. தமிழென் கிளவி அதனோ ரற்றே.

—தொ. புள். மயக். 90

| | | |
|---|---|---|
| அ. | தமிழ் | தன் |
| | ஓர் | |
| | அற்று | கிளவி |

30-ல் அ—ஓர்—தன் என்பதை இதிற்காட்டி, குறிப்பு 18-ல் அத்தென்பதை இதில் அற்று என உணர்த்தி, "அ—தன் எனும் ஆதியந்தத் திடையாகிய அற்றே தமிழ்" எனல். தமிழ் என்பது இடையின் நாமமெனத் தெரிகிறதன்றோ? இத் தமிழை மற்ற நூல்களும் கூறுவதைக் காட்டுகிறேன்.

238. என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

—திருமந்திரம். 91

| | | |
|---|---|---|
| இறைவன் | என்னை | தன்னை |
| | தமிழ் | |
| | ஆறு | |

குறிப்பு 21-ல் முதலே இறைவன், இடையை 44-ல் என் 237-ல் தமிழ் 65—ல் ஆறு, இறுதியை 80-ல் தன்னை எனத் தொல்காப்பியம் கூறுவதையே இதிற்காட்டி, என் என்பதை என்னை எனவும் உணர்த்தி, "அந்தமாகிய தன்னைச் செய்தது தமிழெனும் ஆறே, அத் தமிழெனும் என்னைப் படைத்தது இறைவனெனும் ஆதியே" எனல்.

239. கோட்டம் தீர்க்கு நூல் மாண்பு

—நன். பொதுப். வெண்பா.

| | | |
|---|---|---|
| கோட்டம் | நூல் | மாண்பு |

183-ல் இடையே நூல் எனக் கூறும் நன்னூல் அதையே இதிற்காட்டி, "மாண்பு எனும் இறுதியையும் நூலெனும் இடையையும் தீர்க்கும் (செய்து முடிக்கும்) ஆதியே கோட்டம்" எனல்.

240. நிலந்தரும் திருவிற் பாண்டியன் அவையத்து

—தொ. சிறப்புப்பாயிரம்.

| | | |
|---|---|---|
| நிலம் | திரு | பாண்டியன் |
| அவை | அத்து | |

முதலே 4-ல் நிலம் 5-ல் அவை, இடையை 198-ல் அழகு குறிப்பு 18-ல் அத்து என்பதை இதிற்காட்டி, "ஆதியாகிய அவை எனும்-

நிலம் தரும் இடையாகிய அத்தெனும் திருவிற்றேன்றும் அந்தயே பாண்டியன்" எனல்.

'முதலெனப் படுவது நிலம்' என்பதை நமது அனுபவத்திலுள்ள பூமி எனக் கொள்வோமாஞல் '236-ல் தமிழைச் சேர்ந்துள்ள ஆதியாகிய நிலத்து அந்தமே பனிரெண்டு எனவும் 240-ல் நிலம் தரும் திருவில் பாண்டியன்' எனவும் கூறுவது எந்த நிலத்தை எனச் சிந்தித்துப் பார்க்கவும். நிற்க, 239, 240-ல் காணும் சூத்திரங்களின் கருத்தைத் திருவாசகம் கீழ்காண்பதில் நிச்சயிப்பதறிக.

241. மண்ணுளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றுனை
தண்ணூர் தமிழளிக்குந் தண் பாண்டி நாட்டானை
—திருவாச. திருவம்மானை 10

| | | |
|---|---|---|
| மண் | தமிழ் | பாண்டி |
| தண் | | நாட்டான் |
| தண்ணூர் | மன்னவன் | மாண்பு |

201—ல் முதலே **மண்**, 236-ல் இடையே **தமிழ்**, இறுதியை 240-ல் **பாண்டியன்** 73-ல் **நாடு** 239-ல் **மாண்பு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, பாண்டியன் நாடு என்பதைப் பாண்டி நாட்டான் என உணர்த்தி, 17-ல் இடையே **வேந்து** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதில் மன்னவன் எனப் புகட்டும் விபரம் காண்க. இவற்றைக் காட்டி, "மண்ணெனும் முதலை ஆளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்ற பாண்டி நாட்டான் எனும் அந்தத்தை அளிப்பது அம் மன்னவனெனும் தமிழே" எனல். இதைத் தெளிவு படுத்தும் இரண்டொன்றைக் காட்டுகிறேன்.

242. மன்னவரே எங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே
—திருவாச. திருவம் பாவை 9

| | | |
|---|---|---|
| கணவர் | மன்னவர் | ... |
| அவர் | எவ் | |
| | பரிசு | |

முதலை 228-ல் **கணவர்** 18-ல் **அவன்**, இடையை 17 ல் **வேந்து** 31-ல் எ 201-ல் **பரிசு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய கணவரெனும் அவர் உகந்து சொன்ன (செய்த) இடையெனும் மன்னவரே பரிசு" எனல். இம் மன்னவரே மேற் காண்பது.

243. பாவகம் பலபல காட்டிய பரிசு

—திருவாச. கீர்த்தித்திரு. 82

| | | |
|---|---|---|
| ... | பரிசு | பாவகம் |
| | | பல |

242-ல் கூறும் பரிசு என்பதை இதிற்காட்டி 8-ல் இறுதியே பல என நன்னூல் கூறுவதை உணர்த்தி, "பல எனும் இறுதியே பாவகம், அப் பல என்பதைக் காட்டிய (தோற்றுவித்த) இடையே பரிசு" எனல். 242-ல் அவரெனும் ஆதியால் செய்யப்பட்ட இடையே பரிசெனவும் இதில் அப் பரிசு செய்து காட்டும் இறுதியே பாவகம் எனவும் உணர்த்தும் விபரம் காண்க.

244. படியுறப் பயின்ற பாவக போற்றி

—திருவா. போற்றித். 211

| | | |
|---|---|---|
| ற | படி | உ |
| | ப் | பாவகம் |

172-ல் முதலிறுதியை ற—உ, இடையை ப் என 61-லும் நன்னூல் கூறுவதையே காட்டி, "படி எனும் இடையைப் பயின்ற (அறிந்த) பாவகமே போற்றி" எனல்.

பயிலும் என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதை அறியும் என்றே கொள்ளவேண்டுமென நான் எடுத்துக் காட்டியது இது போன்ற நூல்கள் எச்சரிப்பதைத் தெரிந்தே என்பதை இப்போதேனும் காண்க. இத்தகைய பாவகம் என்பதைக் காட்டிய இடையே பரிசென 243-ல் கூறும் திருவாசகம், 242-ல் இப்பரிசே மன்னவர் என உணர்த்தி அம் மன்னவனேயே தமிழ் என 241-ல் புகட்டும் நேர்மை காண்க. இன்னும் சந்தேகமிருந்தால் ' அத்தமிழ் எனும் இடை அளிக்கும் பாண்டி நாட்டான்' என அதில் கூறுகிற தல்லவா ? அதையும் சிறிது கவனிப்போம்.

245. இன்பமும் துன்பமும் நாட்டாரிடத்துள

—திருமந்திரம். 1657

| | | |
|---|---|---|
| துன்பம் | இன்பம் | நாட்டார் |

104-ல் முதலே இடும்பை இடையே இன்பம் 73–ல் இறுதியே நாடு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "நாட்டாரெனும் அந்தத்தின் இடையும் ஆதியுமே இன்பமும் துன்பமும்" எனல். இதே நாட்டாரைத்தான் 241–ல் திருவாசகம் விளக்குவதறிக. இத் திருவாசகம் நமக்கு உணர்த்தும் ஓர் முக்கியச் செய்தியையும் இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

246. துறந்த ஒழுக்கம் பழித் தன்றாகலின்

—தொ. பொரு. 21

| | | |
|---|---|---|
| அன்று | ஒழுக்கம் | துறந்த |
| த் | பழி | து |

109-ல் இறுதியை இன்று என்பதற்கிசைய இதில் முதலே அன்று எனல். 228-ல் நீத்த என்பதை இதில் துறந்த எனல். "துறந்த எனும் அந்தமும் இடையாகிய பழி எனும் ஒழுக்கமும் அன்றெனும் ஆதியில் ஆகும்" எனல்.

247. நூறு ஊர்ந்து வரூஉம் ஆயிரக்கிளவி

—தொ. புள். மய. 97

| | | |
|---|---|---|
| நூறு | ஆயிரம் | கிளவி |
| ஊ | | உம் |

"ஆதியே ஊ எனும் நூறு அந்தமே உம்மெனும் கிளவி, இவற்றின் இடை ஊர்ந்து வரும், அதற்கு ஆயிரமெனும் நாமமுண்டு" எனல். 5-ல் முன்பின்னே அடுத்து இடையாய் 'வருதலே' மொழி எனக் கூறும் தொல்காப்பியம் இதில் 'வரூஉம்' என்று கூறுவது ஊ—உம் என்பவைக்கு இடையாய் வரும் என்று உணர்த்தற்கே.

248. மொழி முதற்காரணம் ஆம் அணுத்திரள் ஒலி
எழுத்தது முதல் சார்பென இருவகைத்தே

—ந. எழுத்தியல், 3

| | | |
|---|---|---|
| முதல் | மொழி | காரணம் |
| | திரள் | |
| அணு | எழுத்து | ஒலி |
| | அது | |
| | சார்பு | |
| | இரண்டு | |
| | வகை | |
| | தே | |

இடையை 5-ல் மொழி 52-ல் எழுத்து 26-ல் அது 199—ல் சார்பு குறிப்பு 3—ல் இரண்டு வகை தே, இறுதியை 200—ல் காரணம் 128-ல் ஓசை எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "மொழி எனும் இடையின் முதலே அணு இறுதியே காரணமெனும் ஒலி, அம்மொழிக்கு திரள் எழுத்து அது சார்பு வகை எனும் சொற்களும் இரண்டு எனும் இலக்கமும் தே எனும் எழுத்தும் நாமங்கள்" எனல். இதைத் திருவாசகம் விளக்குவதை எடுத்துக் காட்டுகிறேன்.

249. அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க
—திருவாச. திருவண்டப். 45

| | | |
|---|---|---|
| அணு | ... | தன்மை |
| ஐயோன் | | |

248-ல் முதலே **அணு** குறிப்பு 1-Iல் முதலே **ஐ** 83-ல் இறுதியே **தன்மை** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "அணு எனும் ஆதி தரும் அந்தமாகிய தன்மையில் அவ்வணுவாகிய ஐயோனைக் காண்க" எனல்.

250. ஒலி தரு கைலை யுயர் கிழவோனே
—திருவாச. கீர்த்தித்திரு. 146

| | | |
|---|---|---|
| கைலை | ... | ஒலி |
| கிழவோன் | | உயர் |

77-ல் முதலே **கிழவோன்** இறுதியை 248-ல் **ஒலி** 184–ல் **உயர்** என நன்னூல் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "கிழவோன் எனும் கைலையே அந்தமாகிய உயரெனும் ஒலியைத் தரும்" எனல்.

ஆதியே அணுவாகிய ஐயோனெனும் கிழவன், அந்தமே தன்மையாகிய உயரெனும் ஒலி எனவும், இவ்வந்தம் ஆதியினின்றே வரும் எனவும் மணிவாசகர் கண்டது நன்னூல் தொல்காப்பியத்திலன்றோ? 204-ல் 'பெருமையில் ஈசனைக் காண்க' என்று கூறும் திருவாசகம் 249-ல் அதையே 'தன்மையில் ஐயோனைக் காண்க' எனல். முதலே ஐ எனத் தொல்காப்பியம் கூறுவதைத் தெரியாவிடில் **ஐயோன்** என இதில் கூறுவதைக் காணமுடியுமா?

251. அந்தமில் பெருமை அருளுடையண்ணல்
—திருவாச, கீர்த்தித். 101

| | | |
|---|---|---|
| ... | அருள் | பெருமை |
| | | இல் |
| | | அண்ணல் |
| | | அந்தம் |

193, 194-ல் திருமந்திரமும் தொல்காப்பியமும் இடையே **அருள்,** அந்தத்தை 106-ல் **பெருமை** 13–ல் **இல்** 95-ல் **அண்ணல்** எனத் திருமந்திரமும் தொல்காப்பியமுமே கூறுகிறது. இதற்கிசைய 203–ல் 'அருள் தரும் பெருமையே போற்றி' எனக் கூறும் திருவாசகம் இதில் "இடையெனும் அருளினுடைய அந்தமெனும் அண்ணலே இல்லெனும் பெருமை" என விளக்குவது கண்டு இத் திருவாசகம் தொல்காப்பியம் திருமந்திரம் மூன்றையும் பக்தி நூல் ஞான நூல் இலக்கண நூல் என்று பிரிப்பதெப்படி?

252. ஆதித்திறம் பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம் மை வளர்த் தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம் பாடி யாடேலோ ரெம்பாவாய்

—திருவாச. திருவெம்பாவை. 14

| | | |
|---|---|---|
| ஆதி | திறம் | பாதம் |
| வளை | மை | நம் |
| பாவாய் | எம் | தன், மா, அந்தம் |

தொல்காப்பியத்திற்கிசைய 148, 150-ல் 'மழை எனும் முதலே பெய்யும் கழற்' என உணர்த்தும் திருவாசகம், இதில் அதை பெய்யும் வளை எனப் புகட்டி, இடையை 85-ல் திறம் 33–ல் மை 31-ல் எம், இறுதியை 172-ல் நம் 237-ல் தன் 116-ல் பதம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதி யந்தத்தின் இடையே திறம், அத்திறமெனும் மையையும் அந்தமாகிய நம் மென்பதையும் வளர்த்த ஆதியே பெய்யும் வளை, அவ்வளையே எம் எனும் இடையின் ஆதியாகிய பாவாய்" எனல்.

ஆதித் திறமே பாதமெனும் அந்தத் திறம், அத்திறமே மை எனத் திருவாசகம் நமக்கு உணர்த்துவது தொல்காப்பியக் கருத்தையன்றோ? தொல்காப்பியத்தின் கருத்தைப் பல நூல்களும் உணர்த்தக் கண்டோம். ஆயினும், ஓர் முக்கியச் செய்தியை இங்கு எடுத்துக் காட்டி விட்டு அடுத்ததைக் கவனிப்போம்.

I புல்லும் உருபின் பின்னர் உம்மே

—ந. உருபு புணரியல். 7

| | | |
|---|---|---|
| ... | புல் | உம் |
| | உருபு | பின்னர் |

26-ல் இடையே உருபு 33–ல் இறுதியே உம் என்பதை இதிற் காட்டி, "இடையாகிய உருபெனும் புல்லின் இறுதியே உம்மெனும் பின்னர்" எனல். உருபின் பின்னர் என்பதால் உருபின் முன்னர் உண்டு.

253. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை

—தொ. உருபியல் 23

| | | |
|---|---|---|
| ற் | இன் | கு |
| இயல் | என் | உகரம் |
| முன்னர் | சாரியை | இறுதி |

முதலை 228-ல் ற் 3-ல் இயல் 51-ல் முன், இடையை 25, 26-ல் என் இன் 68-ல் சாரியை, இறுதியை 55-ல் கு 28-ல் உகரம் என்பதை

இதிற் காட்டி, முதலே முதல்வன் என்பதுபோல் முன்னை 'முன்னர்' என உணர்த்தி, "இறுதியாகிய கு எனும் உகரத்து முதலே இயலாகிய ற் றெனும் முன்னர், அம் முன்னர் முற்ற (முதிர்ச்சியடைந்து) தோன்றும் இடையே இன்னென் எனும் சாரியை" எனல். 252-Iல் இறுதியைப் பின்னர் என்பதற்கிசைய இதில் முதலே முன்னர் 'என்புதறிக.

254. எல்லா மென்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்

—தொ. உருபியல். 17

| முன்னர் | சாரியை | இறுதி |
|---|---|---|
| | என் | |
| ற் | வ | எல்லாம் |

253-ல் காணும் ற் முன்னர் என்பவற்றையும், என் சாரியை என்பவற்றையும் இதிற் காட்டி, 59-ல் இடையே வ குறிப்பு 18-ல் இறுதியே எல்லாம் என்பதையும் இதில் உணர்த்தி, "முன்னரெனும் முதலின் இடையாகிய என்னெனும் சாரியை முற்ற (முதிர்ச்சியடைந்து) அதினின்றும் எல்லாமென்னும் இறுதி தோன்றும்" எனல்.

இவ்விரண்டிலும் முதல் முற்றி சாரியையும், அச்சாரியை முற்றி இறுதியும் தோன்றுமென உணர்த்துவ தறிக. குறிப்பு 18-ல் இடையே அத்து எனக் கூறி உருபியல் 13-ல் அத்தே சாரியை எனவும் உணர்த்தும் தொல்காப்பியம் இவ்விரு சூத்திரங்களிலும் அச்சாரியை உண்டாவதையும் அச்சாரியையில் உண்டாவதையும் விளக்கும் விபரமறிக.

90-ல் ஆதி பழுத்து அன்பெனும் இடை தோன்றுமெனத் திருமந்திரமும், 220-ல் வெளியெனும் முதலில் விளைந்த இடையே விளைவு என்று ஔவை குறளும் விளக்குவது மேற்காண்பதில் முதல் முற்றி இடையும் இடை முற்றி இறுதியும் தோன்றுமெனத் தொல்காப்பியம் கூறுவதையன்றோ? இவை மாத்திரமென்றெண்ணவேண்டாம்.

255. விரி கடலுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி

—திருவாச. போற்றித்திரு 125, 126.

| ... | கடல் | உலகு |
|---|---|---|
| | விளைவு | |
| | எளிய | அருமை |
| | அழகு | |

இடையை 158-ல் கடல் 198-ல் அழகு, இறுதியை 165-ல் உலகு 106-ல் அருமை எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (இடையை 89-ல் 'அன்பு' 26-ல் 'ஆறு' எனத் தொல்காப்பியம் கூறுவதையே உணர்த்தி உருபியல் 11-ல் நன்னூல் 'ஆறன் பெளிமை' ஆறெனும் அன்பே எளிமை எனப் புகட்டுகிறது.) அவ் வெளிமை என்பதையே இதில் எளிய எனவும் 220-ல் இடையே விளைவு என ஔவை குறள் கூறுவதையும் காட்டி, "அந்தமாகிய உலகின் இடையாகிய கடலெனும் விளைவே போற்றி, அவ்வுல கெனும் அருமையில் விளைவாயுள்ள எளிய எனும் அழகே போற்றி' என்பதறிக. இவ்வாறு இவர்கள் 'பழுத்துத் தோன்றும்' 'விளைவாய் விளையும்' என்று விளக்குவது ஒன்றிலொன்று முற்றித் தோன்றுமெனத் தொல்காப்பியம் கூறுவதையே.

256. கண்முதற் புலனாற் காட்சியுமில்லோன்
விண் முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்

—திருவாச. திருவண்டப் 113, 114

| | | |
|---|---|---|
| முதல் | புலன் | காட்சி |
| பூதம் | விண் | கண் |
| வெளி | ப, ட | இல்லோன் |

முதலை 165-ல் பூதம் 130-ல் வெளி, இடையை 21-ல் புலன் 85-ல் பட, இறுதியை 85-ல் காட்சி 26-ல் கண் 13-ல் இல் எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய பூதவெளி வகுத்த இடையே விண்ணெனும் புலன், அப்புலனால் ஆகிய அந்தமாகிய இல்லோனே கண்ணெனும் காட்சி" எனல். 106-ல் பெருமை எனக் கூறும் தொல்காப்பியம் அப்பெருமையை 13-ல் பெருமையெனும் அந்தமே இல் என்பதுபோல் 251-ல் அருளின் அந்தமாகிய இல்லே பெருமை என உணர்த்தும் திருவாசகம் இதில் புலனெனும் இடையால் ஆன இல்லோன் என்று (இல்லை இல்லோன் என) விளக்கும் விபரம் காண்க. இதில் இறுதியே கண் இடையே விண் என்பதற் கிசைய 241-ல் முதலை மண் என உணர்த்துவதறிக. இக்கண்ணை விளக்குபவை தொல்காப்பியம் திருமந்திரம் திருவாசகம் மாத்திரமல்ல.

257. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்

—தொ. மொழிமரபு. 17

| | | |
|---|---|---|
| கோடல் | நெடுமை | குறுமை |
| | அளவு | இல் |

51-ல் இடையே அளவு 13-ல் இறுதியே இல் என்பதையும் 119-ல் இறுதியே குன்றல் என்பதையும் இதிற் காட்டி, "கோட லெனும் ஆதியில் அளவெனும் இடையே நெடுமை இல்லெனும் இறுதியே குறுமை" எனல்.

மெய்ப்பாட்டியல் 16—ல் 'கொடுப்பவை கோடல்' அதாவது இடையிறுதியைக் கொடுப்பவை கோடலே எனக் கூறி இதில் அக் கோடலின் இறுதியே இல்லென்பதறிக.

258. நெடிய விசும் பொடு கண்ணே போற்றி

—திருநாவுக்கரசு. ஸ்ரீகயிலாயம். 10

... நெடிய கண்
விசும்பு

இடையை 257-ல் நெடுமை குறிப்பு 12-ல் **விசும்பு**, இறுதியை 26-ல் **கண்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, குறிப்பு 12-ல் முதலே 'விசும்பொடைந்து' எனத் தொல்காப்பியம் கூறுவது போல் இதில் இறுதியை 'விசும்பொடுகண்' என்பதறிக.

"இடையாகிய நெடும் விசும்பின் இறுதியாகிய கண்ணே போற்றி" எனல் காண்க. தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலியவை வெகு பாடுபட்டு விளக்குவது தொல்காப்பியம் இறுதி யென் றுணர்த்தும் அழிவிலாக் கண்ணையன்றோ? ஆமெனில், தொல்காப்பியத்தில் அக் கண்ணை ஏழாம் வேற்றுமை உருபெனத் தீர்மானித்து அவ்வாறே மற்ற நூல்களில் காணும் கண்ணையும் கொள்ளும் நமது அனுபவத்தைப் பற்றிச் சிறிது சிந்திக்க. இடையே தமிழ் என்பதறிந்தோம், இனி அடுத்ததைக் கவனிப்போம்.

# 19. தவம் எது

259. அவனை யொழிய அமரருமில்லை
அவனன்றி செய்யு மருந்தவமில்லை

—திருமந்திரம்

அவன் அமரர் ...
தவம்

தொல்காப்பியத்திற் கிசைய 166-ல் முதலே **அவன்** எனக் கூறும் திருமந்திரம் அதை இதில் காட்டி, "இடையாகிய அமர ரெனும் தவத்தைச்செய்ய அவனெனும் ஆதியை அன்றி வேறெவரு மில்லை." எனல். அமரர் எனவும் நாமம் உண்டா? எனில்.

260. அமரர் கண் முடியும்

—தொ. புறத். 26

முடி அமரர் கண்

172-ல் முதலே முடி 26-ல் இறுதியே கண் என்பதை இதிற் காட்டி, "முதலிறுதியாகிய முடி—கண் என்பவற்றின் இடையே அமரர்" எனல். அமரரைத் தொல்காப்பியம் உணர்த்துவதையும் இதால் முடி—கண் என்பவற்றை முதலிறுதியென நிச்சயிக்கும் நேர்மை காண்க.

261. வானகத் தமரர் தாயே போற்றி

—திருவாசகம். போற்றித். 136

வான் அமரர் அகம்
தாய்

இடையை 260-ல் **அமரர்** 231-I-ல் **தாய்**, இறுதியை குறிப்பு 21-ல் **அகம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (ஆதியை அகத்து இறைவனெனத் தொல்காப்பியம் கூறுவதுபோல்) இதில் "ஆதி யந்தமாகிய வான்—அகத்து இடையாகிய அமரரெனும் தாயே போற்றி" எனல். இதில் திருவாசகமும் 259-ல் திருமந்திரமும் இடையை 'அமரர்' என்பது 260-ல் தொல்காப்பியம் கூறுவதை யன்றோ? இடையை 231-Iல் **தாய்** 260-ல் **அமரர்** எனத் தொல்காப்பியம் கூறுவதைத் தெரியாவிடில் இதில் 'தாயே அமரர்' எனத் திருவாசகம் விளக்குவதைக் காண்பது எப்படி?

262. இறப்புப் பிறப்பு மிருமையு நீங்கித்
துறக்கும் தவம் கண்டசோதிப் பிரானை

—திருமந்திரம். 1614

இறப்பு இரண்டு பிறப்பு
மை
பிரான் சோதி துறந்த
தவம்

180-ல் முதலே **இறத்தல்** 85-ல் இறுதியே **பிறப்பு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி 246-ல் இறுதியே **துறந்த** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் உணர்த்தி, "துறந்த பிறப்பெனும் அந்தத்தின் இடையாகிய தவம் கண்ட ஆதியே இறந்த பிரான்" எனல். 'இலக்கியம் எனும் இடை கண்ட முதலே விகுதி' என 185-ல் நன்னூல் கூறுவதையே இதில் 'தவங்கண்ட பிரான்' எனத் திருமந்திரம் விளக்குவதறிக.

263. பண்டைப் பிறவிப் பயனுந் தவத்தினால்
கண்டறங் குணர்வு பெறல்

—ஔவை குறள்

| | | |
|---|---|---|
| பண்டு | தவம் | பயன் |
| | | உணர்வு |
| | | பிறவி |

இறுதியை 11-ல் **அறிவு** 85-ல் **பிறப்பு** 35-ல் **பயன்,** இடையை 262-ல் **தவம்** எனத் திருமந்திரமும் தொல்காப்பியமும் கூறுவதைக் காட்டி, "இடையெனும் தவத்தினால் ஆகும் அந்தமாகிய பயனே அறிவு எனக் கண்டு பெறல்" என்பதறிக.

264. ஆதியோ டொன்று மறிவைப் பெறுவது தான்
நீதியார் செய்த தவம்

—ஔவை குறள்

| | | |
|---|---|---|
| ஆதி | தவம் | நீதியார் |
| | தான் | அறிவு |

இடையை 36—ல் **தான்** 11-ல் இறுதியே **அறிவு** எனத் தொல்காப்பியமும், இடையை 262-ல் **தவம்** குறிப்பு 15-ல் **நீதி** எனத் திருமந்திரமும் கூறுவதைக் காட்டி, (குறிப்பு 6—ல் இடையில் இறுதி பிறக்கும் எனத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய) "ஆதிக்கு உரியதென்பது பற்றி அதோடு சேரும் அறிவு எனும் அந்தத்தைப் பெறுவது (ஈன்றெடுப்பது) தானெனும் இடையே, இதைத் தானெனும் தவம் செய்த நீதியார் என்றேற்க" எனல் 259, 262-ல் இடையே தவம் எனத் திருமந்திரம் கூறுவதற்கிசைய இவ்விரு பாக்களிலும் ஔவை குறள் இடையே **தவம்** என விளக்குவதறிக. இனித் திருக்குறளை ஆராய அதற்கு ஆதாரமாயுள்ள சில சூத்திரங்களை முதலில் கவனிப்போம்.

265. ஒன்றுமுதலாகிய பத்தூர் கிளவி

—தொ. குற். 70

| | | |
|---|---|---|
| ஒன்று | பத்து | கிளவி |
| முதல் | ஊர் | |

"ஒன்றெனும் ஆதியே முதல், இடையே பத்தெனும் ஊர் இறுதியே கிளவி" எனல்.

266. ஊணுறக்கம் இன்ப துன்பம் பேருாதி

—தாயுமானவர், சிதம்பரரகசியம். 17

| | | |
|---|---|---|
| உறக்கம் | ஊன் | |
| துன்பம் | இன்பம் | |
| ஆதி | ஊர் | பேர் |

முதலை 128-ல் **தூங்கல்** 104-ல் இடும்பை, இடையை குறிப்பு 6-ல் இறைச்சி 104-ல் **இன்பம்** 268-ல் **ஊர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, ''பேர் எனும் அந்தத்திடையே ஊரெனும் இன்பம் ஆதியே உறக்கமெனும் துன்பம்'' எனல்.

267. ஒன்றுமுதல் ஈரைந் தாயிரம் கோடி

—ந. உயிரீற். 47

| | | |
|---|---|---|
| ஒன்று | பத்து | கோடி |
| முதல் | ஆயிரம் | |

265-ல் முதலை **ஒன்று**, இடையை 265-ல் **பத்து** 247-ல் **ஆயிரம்** எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, ''ஒன்றெனும் முதலுக்கிடையே பத்தெனும் ஆயிரம் அந்தமே கோடி'' எனல்.

268. தன்மைத் திரி பெயர் உறுப்பின் கிளவியும்
காதற் சிறப்பே

—தொ. கிளவி. 57

| | | |
|---|---|---|
| திரி | காதல் | தன்மை |
| உறுப்பு | சிறப்பு | கிளவி |

முதலை 145-ல் **திரி** எனத் திருமந்திரமும் இடையைச் **சிறப்பு** என 13-ல் இறுதியை **தன்மை** என 83-ல் தொல்காப்பியமும் கூறுவதைக் காட்டி, ''காதற் சிறப்பின் முதலே உறுப்பெனும் திரி இறுதியே தன்மை'' எனல்.

269. உறுப்பறை குடிகோள்

—தொ. மெய்ப். 10

| | | |
|---|---|---|
| உறுப்பு | ... | குடி |
| அறை | | கோள் |

மேற்காணும் **உறுப்பு** என்பதை இதிற்காட்டி, ''உறுப்பெனும் முதலே அறை, குடி எனுமிறுதியே கோள்'' எனல்.

270. குறை யென்கிளவி முன்வரு காலை

—தொ. தொகை மரபு. 24

| | | |
|---|---|---|
| குறை | என் | கிளவி |
| முன் | | காலை |

44-ல் முழுது—என்—கிளவி என்பதை இதில் குறை—என்—கிளவி எனக் காட்டி, 79-ல் இறுதியே **காலை** என்பதையு முணர்த்தி,

"முதலாகிய முன்னெனும் குறையினின்றே என்னெனும் இடையும் காலை யெனும் இறுதியும் வரும்" எனல்.

271. ஒருபாற் கிளவியும் எனைப் பாற் கண்ணும்

—தொ. பொரு. 28

| | | |
|---|---|---|
| பாற் | ஒரு | கிளவி |
| | எனை | கண் |

முதலை 12-ல் **பால்** இடையை 50-ல் **ஒரு** இறுதியை 26-ல் **கண்** என்பதை இதிற் காட்டி, "பால்—கண் எனும் ஆதியந்தத் திடையாகிய ஒரு எனையே" எனல்.

272. வென்றி காலத்து விளங்கித் தோன்றும்

—தொ. கற்பியல். 45

| | | |
|---|---|---|
| காலம் | ... | வென்றி |

54-ல் முதலே **காலம்** என்பதைக் காட்டி, "காலத்தில் விளங் கும் இறுதியே வெற்றி" எனல்.

273. அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே

—தொ. பிறப்பியல். 20

| | | |
|---|---|---|
| அ | ள | |
| கோடல் | வில் | அந்தணர் |

257-ல் முதலே **கோடல்** என்பதை இதிற் காட்டி, "கோடல் எனும் ஆதியையும் அந்தணர் எனும் அந்தத்தையும் மறைப்பது வில்லெனும் இடையே" எனல்.

85-I-ல் ஆதியந்தத்தின் இடையா யிருந்து அவற்றை மறைப்பது 'களத்தல்' எனக் கூறும் தொல்காப்பியம் அக் களத் தலையே இதில் 'வில்' லென்பதறிக.

274. வாயில் கட்கு உரிய

—தொ. கற்பியல். 11

| | | |
|---|---|---|
| ... | வாய் | கு |
| | கட் | இல் |

110-ல் இடையே **வாய்** இறுதியை 13—ல் **இல்** 55—ல் **கு** என்பதை இதிற் காட்டி, "வாய் ஆகிய கட்டெனும் இடை இல் லெனும் அந்தத்திற்கு உரியது" எனல்.

275. உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே

—தொ. எழுத்தியல். 23

| | | |
|---|---|---|
| ஊ | ஔ | உ |
| ஓ | இதழ் | ஒ |

குறிப்பு 27-ல் முதலே ஓ 247-ல் முதலே **ஊ**, 29-ல் இடையே ஔ, இறுதியே உவ் என்பதை இதிற்காட்டி, " ஊ ஓ எனும் முதலுக்கும் உ ஓ எனும் இறுதிக்கும் இடையாகிய ஔ இதழே, இவை தொடர்புடையன " எனல்.

276. *தொடர் அல் இறுதி தம்முன் தாம் வரின்*

... —தொ. உயி. மயங். 12

| | | |
|---|---|---|
| அல் | தொடர் | தாம் |
| தம் | | |
| முன் | | இறுதி |

193 ல் முதலே **அல்** 8-ல் முதலிறுதியே **தம்—தாம்** என்பவற்றை இதிற் காட்டி, " அல் தம் எனும் முதலினின்று வரும் இடையே தொடர் இறுதியே தாம் " எனல்.

277. *கூற்றிடை வைத்த குறிப்பினுன*

—தொ. செய். 163

| | | |
|---|---|---|
| கூற்று | இடை | குறிப்பு |
| ஆ | ன | |

குறிப்பு 2-ல் முதலே **ஆ** 130–ல் இறுதியே குறிப்பு என்பதை இதிற்காட்டி, " அந்தமாகிய குறிப்பின் முதலே கூற்று, அக் கூற்றும் இடையும் வைத்த (ஆக்கிய) இறுதியே குறிப்பு " எனல்.

I *வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே*

—தொ. செய். 10

| | | |
|---|---|---|
| வகுத்தனர் | ஆறு | ... |
| வல்லோர் | | |

26-ல் இடையே **ஆறு** என்பதை இதிற்காட்டி, " ஆறெனும் இடையை வகுத் துணர்த்தும் முதலே வல்லோர் " எனல்.

278. *அவனவளது வெனு மவைமூவினை மையிற்*
*ருேற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதா*
*மந்தமாதி என்மனுர் புலவர்*

—சிவஞான போதம்.

| | | |
|---|---|---|
| அவன் | அது | தாம் |
| அவள் | வினை | |
| அவை | மலம் | அந்தம் |
| ஆதி | ... | திதி |
| என்மனுர் | மை | புலவர் |

தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறும் சொற்களையே இதிற் காட்டி, " அவை எனும் ஆதியே என்மனார் தாமெனும் அந்தமே புலவர் " எனல்.

279. மெய் யொடுங் கெடுதல் என்மனுர் புலவர்

—தொ. உயி. மயங். 86

| | | |
|---|---|---|
| கெடுதல் | ... | மெய் |
| என்மனுர் | | புலவர் |

6-ல் முதலே கெடுதல் 40-ல் இறுதியே மெய் என்பதை இதிற்காட்டி, " கெடுதல் எனும் முதலே என்மனுர் மெய்யெனும் இறுதியே புலவர் " எனல். இதிற் தொல்காப்பியம் கூறும் என்மனுரையும் புலவரையுமே சிவஞான போதம் விளக்குவதறிக.

280. சொல்லோ ரனையர் என்மனுர் புலவர்

—தொ. வினையியல். 24

| | | |
|---|---|---|
| சொல்லோர் | ... | அனையர் |
| என்மனுர் | | புலவர் |

49-ல் முதலே சொல் குறிப்பு 18-ல் இறுதியே எல்லாம் என்பதை இதிற்காட்டி, இவற்றுள் சொல்லை சொல்லோர் எனவும் எல்லாமென்பதை அனையர் எனவும் உணர்த்தி, " சொல்லோரெனும் முதலே என்மனுர் அனையரெனும் இறுதியே புலவர் " எனல்.

ஆதியந்தத்தின் நாமங்களே என்மனுர்—புலவர் எனத் தொல்காப்பியம் கூறுவதை நாம் அறியாவிட்டாலும் சிவஞான போதம் உணர்த்துவது கண்டும் தெளிந்தோமில்லை. இதை 'என்று கூறுவார்கள் புலவர்கள்' என்பதற்கு ஆதாரம் எங்குளதோ ?

281. யாப் பியல் வகையின்

—தொ. செய். 1

| | | |
|---|---|---|
| இயல் | வகை | யாப்பு |

3-ல் முதலே இயல் குறிப்பு 3-ல் இடையே வகை என்பதை இதிற்காட்டி, " இயல்—வகை எனும் முதலிடையின் இறுதியே யாப்பு " எனல்.

282. யாப்பறி புலவர்

—தொ. செய். 18

| | | |
|---|---|---|
| ... | ... | யாப்பு |
| | | புலவர் |

14-ல் கிளவியை (அறி கிளவி அறியுங் கிளவி என்பது போல்) 281-ல் காணும் யாப்பு என்பதை இதிற்காட்டி, "யாப்பெனும் இறுதியே அறியும் புலவர்" எனல்.

283. அவை நிகழும் என்மனார் புலவர்

—தொ. களவியல். 10

| | | |
|---|---|---|
| அவை | ... | புலவர் |
| என்மனார் | | நிகழும் |

5-ல் முதலே **அவை** 189-ல் இறுதியே **நிகழ்ச்சி** என்பதை இதிற்காட்டி, "அவை எனும் ஆதியே என்மனார் நிகழும் எனும் அந்தமே புலவர்" எனல்.

I மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்

—தொ. பிறப். 18

| | | |
|---|---|---|
| மூக்கு | வளி | யாப்பு |
| ற | இசை | உ |

172—ல் முதலிறுதியே ற—உ, இடையை 22-ல் **வளி** 113-ல் **இசை**, இறுதியை 282-ல் **யாப்பு** என்பதை இதிற்காட்டி, "மூக்கெனும் முதலினின்றே இடையாகிய வளி எனும் இசையும் யாப்பெனும் இறுதியும் தோன்றும்" எனல்.

284. கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்

—தொ. குற். 27

| | | |
|---|---|---|
| கெடுதல் | ... | வேண்டும் |
| என்மனார் | | புலவர் |

294-ல் முதலே **கெடுதல்** என்பதை இதில் என்மனார் எனக் காட்டி, "புலவரெனும் அந்தமே வேண்டும்" எனல். 281-ல் முதலே 'இயல்' 112-ல் இடையே 'இசை' 73—ல் இறுதியே 'நாடு' குறிப்பு 21-ல் இறுதியே 'அகம்' என்பதால் முதலிடையிறுதியே இயல்—இசை—நாடகம் என்பதறிக. வேண்டாமை முதலின் நாமம்.

285. மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்

—தொ. செய். 185

| | | |
|---|---|---|
| ... | ஊடல் | உணர்வு |
| | மலிவு | புலவி |

11-ல் அந்தமே அறிவு என்பதை இதிற் உணர்வு எனக் காட்டி, "அந்தமெனும் உணர்வே புலவி இடையெனும் மலிவே ஊடல்" எனல். மேற்காணும் புலவரையே இதில் புலவி என்பதறிக.

286. பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே

—தொ. இடையியல். 22

| | | |
|---|---|---|
| முடி | வினை | பலர் |
| | எழுத்து | |

172-ல் முதலே **முடி**, இடையை 14-ல் **வினை** 52-ல் **எழுத்து**, 8-ல் இறுதியே **பல** என்பதை இதிற்காட்டி, பல என்பதைப் பலர் என உணர்த்தி, "பலர் எனும் இறுதிக்கு உரிய எழுத்தெனும் இடையே வினை, அவ்வினையினுடைய முதலே முடி" எனல்.

287. ஓம் படைக் கிளவி பாங்கின் கண்ணும்

—தொ. களவியல். 23

| | | |
|---|---|---|
| ... | ஓம் | கிளவி |
| | படை | |
| | பாங்கு | கண் |

130-ல் இடையே **படை** 26-ல் இறுதியே **கண்** என்பதை இதிற் காட்டி, "இடையாகிய படையெனும் பாங்கே ஓம், இறுதியே கண்" எனல்.

288. உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர் தீர் சிறப்பின்

—தொ. பொரு. 7

| | | |
|---|---|---|
| உயிர் | மடன் | நாண் |
| | சிறப்பு | செயிர் |
| | என்று | இவை |

40-ல் முலே **உயிர்** இடையை 13-ல் **சிறப்பு** 178-ல் **மடன்** இறுதியை 8-ல் **இவை** என்பதை இதிற்காட்டி, 246-ல் முதலே **அன்று** 36-ல் இறுதியே **இன்று** என்பதற்கிசைய இதில் இடையே **என்று** என உணர்த்தி, "இறுதியாகிய நாணெனும் செயிரைத் தீர்க்கும் (முடிக்கும்) இடையாகிய மடனே சிறப்பு, அச் சிறப்பின் முதலே உயிர்" எனல்.

289. நடைமருங் கின்றே பொருள் வயினான

—தொ. குற். 34

| | | |
|---|---|---|
| நடை | மருங்கு | இன்று |
| | வயின் | பொருள் |

இடையை 119-ல் **மருங்கு** 18-ல் **வயின்**, இறுதியை 36-ல் **இன்று** 2-ல் **பொருள்** என்பதையே இதிற்காட்டி, "நடை எனும் முதலினின்றே இடையாகிய மருங்கெனும் வயினும் இறுதியாகிய இன்றெனும் பொருளும் ஆனது" எனல்.

290. பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி

—தொ. களவியல். 23

| | | |
|---|---|---|
| இறப்பு | சிறப்பு | பிறப்பு |
| அ | | நோக்கி |

முதலே 190-ல் **இறந்த**, இடையை 13-ல் **சிறப்பு**, இறுதியை 85-ல் **பிறப்பு** என்பதை இதிற்காட்டி, "இறப்பெனும் முதலின் இடையே சிறப்பு இறுதியே பிறப்பு" எனல்.

I. கலை யென் காட்சியும் உழைக்கு உரித்தே

—தொ. மரபியல். 46

| | | |
|---|---|---|
| உழை | கலை | காட்சி |
| | என் | |

85-ல் இறுதியே **காட்சி** என்பதை இதிற்காட்டி, குறிப்பு 14-ல் இடையே **கல்வி** என்பதை இதில் 'கலை' எனக் காட்டி, 72-ல் ஆதி அந்தத்தைக் கொள்ளும் என்பதற்கிசைய இதில் "கலை எனும் இடையின் அந்தமாகிய காட்சி எனும் இறுதி உழை எனும் ஆதிக்கு உரியதே" எனல்.

II. வானோர் அமுதம் புரையும்

—தொ. கற்பியல். 5

| | | |
|---|---|---|
| புரை | அமுதம் | வானோர் |

"முதலே புரை, இடையே அமுதம், இறுதியே வானோர்" எனல். 144-ல் திருமந்திரம் **தேவர்** எனவும் 147-ல் திருவாசகம் **வானோர்** எனவும் விளக்குவது இதிற் காண்பதை யன்றோ?

III. தாம் இனிது பிறக்கும் தகாரம் நகாரம்

—தொ. பிறப்பியல். 11

| | | |
|---|---|---|
| தகாரம் | ... | நகாரம் |
| | | தாம் |
| | | இனிது |

172-ல் முதலே **தகாரம்** இறுதியே **நகர்ம்** என்பதையும் 5-ல் இறுதியே **தாம்** என்பதையும் இதிற்காட்டி, "தகாரம் எனும் முதலினின்றே நகாரமாகிய தாமெனும் இறுதி பிறக்கும்" எனல்.

IV. அயனெடி தாயின் இயற்கை யாகும்

—தொ. விளிமரபு. 28

| | | |
|---|---|---|
| ஆ | இன் | இயற்கை |
| | நெடிது | அயன் |

குறிப்பு 2-ல் முதலெனப்படுவது **ஆ**, இடையை 35-ல் **இன் அது** எனவும் 257-ல் கோடலின் நெடுமை எனவும், இறுதியை 82-ல்

பெண்ணே இயற்கை எனவும் கூறுவதை இதிற்காட்டி, "அயன்—நெடிது—ஆ எனும் முதலிடை இறுதியே ஆ—இன்—இயற்கை" எனல். ஆ, இன், நெடிது, இயற்கை எனும் நான்கு சொற்கள் அமைந்துள்ள நான்கு சூத்திரங்கள் இச் சூத்திரக் கருத்தையும் இச் சூத்திரம் அந்நான்கின் கருத்தையும் நிச்சயிக்கும் நேர்மை கண்டால் இவ்வைந்து சூத்திரங்களை அவரவர் கொள்கைக்கேற்கக் கொள்ளத் துணிவரோ? ஆதியை இறைவன் எனக் குறிப்பு 21-லும் இச் சூத்திரத்தில் அந்தத்தை அயன் எனவும் கூறும் தொல்காப்பியம் இடையை மால் என உணர்த்தாதிருக்குமா?

## (20) திருக்குறள் கருத்து

அயல் நாட்டினரும் அவரவர் மொழி பெயர்த்துப் போற்றிப் புகழும் திருக்குறள் நம் நாட்டின் தற்கால ஆராய்ச்சி வன்மையால் பலருளத்திலும் பாய்ந்து பயனளிக்கும் பாக்களைப் பரப்புவது போற்றத் தக்கதே. ஆயினும், நான்கு அதிகாரங்கள் கொண்ட பாயிரத்தையே அகற்றச் சிலரும், வள்ளுவர் உபயோகித்திருக்கும் வடசொற்களை அகற்றச் சிலரும், முன்பின் கருத்துக்களுக்கு மாறுகத் திருக்குறளில் புகுத்தப்பட்டிருக்கும் ஆரியக் கொள்கைகளை அடியோடு களையச் சிலரும், பிற்காலத்தில் சிலரால் புகுத்தப் பட்ட பாக்களே திருக்குறளைச் சீர்குலைப்பதாகச் சிலரும் கருதி வாதிடுகின்றனர். இவர்கள் மீதும் குறைகூற முடியாது. நமது அனுபவத்தில் உள்ளவையே திருக்குறளின் கருத்தென்று நாம் கட்டிய முடிவு இத்தகைய சந்தேக விபரீதங்களுக்கு ஏதுவாயிற்று. நான் எடுத்துக் காட்டும் திருக்குறளின் மற்றோர் கருத்து இச் சந்தேக விபரீத சச்சரவுகளை அடியோடொழிக்கும் என்பது திண்ணம்.

16-ல் முதலே **பகை** 12-ல் முதலே **பண்பு** 48-ல் முதலே **தலை** 37-ல் முதலே **கிழக்கு** எனத் தொல்காப்பியம் கூறுகிறது. திருக்குறளோ இவற்றைப் பகைதிறந்தெரிதல் 1-ல் 'பகை எனும் பண்பு' கண்ணோட்டம் 9-ல் 'பண்பே தலை' காலமறிதல் 8-ல் 'கிழக்காந்தலை' எனக் கூறுவதைச் சீர்தூக்கிப் பார்த்தால் 'பகையே பண்பு, பண்பே தலை, தலையே கிழக்கு' என உணர்த்துவதாகத் தெரிகின்றதன்றோ? அன்றியும் இப் பெயர்களைத் தொல்காப்பியம் கூறுவது போலவே முதலின் நாமமாய்ப் பல பாக்களில் அமைத்து அந்தந்த பாவையும் விளக்குவதை இந்த நூலில் அடுத்

துக் காணலாம். தொல்காப்பியம் கூறுவதையே திருக்குறள் விளக்குவதா யேற்க இந்த ஆதாரம் போருதா?

நிற்க, 16-ல் முதலே **பகை** 133-ல் இடையே **திறம்** 85-ல் இறுதியே **தெரிதல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே 'பகை திறந் தெரிதல்' எனவும், குறிப்பு 12:ல் முதலே **தீ** 14-ல் இடையே **வினை** 56-ல் இறுதியே **அச்சம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே 'தீ வினை யச்சம்' எனவும் அதிகார நாமங்களாய் அமைத்துக் காட்டும் திருக்குறள் விளக்குவது தொல்காப்பியம் கூறும் இம் முப்பொருள்களைவிட வேருயிருக்க இடமுண்டா? இன்னும் சந்தேகமிருந்தால் சில பாக்களை எடுத்துக் காட்டுகிறேன்.

291. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்

—திருக். அவையறிதல். 2

| | | |
|---|---|---|
| சொல் | இடை | நன்கு |
| நடை | | தெரிதல் |
| அவர் | | நன்மை |

முதலே 49-ல் **சொல்** 291-ல் **நடை** 18-ல் **அவர்**, இறுதியை 113-ல் **நன்று** 85-ல் **தெரிதல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "சொல்லின் இடையைத் தெரிந்து இறுதி யெனும் நன்கை உணர்ந்து, இவ் விடையின் முதலெனும் சொல்லே நடையெனும் அவர்—நன்கெனும் இறுதியே தெரிந்த எனும் நன்மை என்று சொல்லுக" என இதில் எச்சரிப்பதறிக.

இவ்வைந்து சொற்களையும் இக் குறட்பாக்கெனத் தொல்காப்பியம் வகுத்துக் காட்டவில்லை. முதலும் இறுதியும் இல்லாவிடில் இடையெனும் சொல்லுக்கு இடமே இல்லை, இடையென்ற போதே இவ்விடைக்கு முதலும் இறுதியும் உண்டென்பது முடிவாம். ஆகையால், 'இடையைத் தெரிந்து அவ்விடையின் நன்கெனும் இறுதியை உணர்ந்து இவ் விறுதியும் இடையும் சொல்லெனும் முதலினுடையவை எனச் சொல்லுக' என நமக்கு எச்சரித்து எடுத்துக் காட்டுவது தொல்காப்பியத்தின் கருத்தையே என்பது 'அது வகுத்துக் காட்டும் நாமங்களையே இப்பாவில் முதலிறுதிக்குத் திருக்குறள் அமைத்துக் காட்டுவதைக் கொண்டே' தெளிவாய்த் தெரிகிறதன்ருே?

'சொல்லின் இடையைத் தெரிந்து நன்கை உணர்ந்து சொல்லுக' எனும் இவ் வாக்கியத்தைக் கண்டதும் 'சொல்லுக்கு இடை

யிறுதி என்பவை எவை? எந்த நன்கை உணர்வது?' என்பது பற்றி சிந்தித்தல் அவசியமன்றோ? எதையும் சிந்திக்க வேண்டிய தில்லை எனத் தீர்மானித்து இப்பா 'அவையறிதல்' எனும் அதி காரத்தில் காண்பதால் சபையில் பேசுவதைப் பற்றி இப்பா சில வரம்புகளை விதிப்பதாய்க் கருதப்படலாம். 'அவை' என்பது சபை தானா? என்பதைச் சிறிது கவனிப்போம்.

292. பகை அகத்துச் சாவா ரெளிய ரரியர்
அவை யகத்து அஞ்சா தவர்

—திருக். அவையஞ்சாமை. 3

| | | |
|---|---|---|
| பகை | எளியர் | அரியர் |
| சாவார் | | |
| அவை | | அகம் |
| அஞ்சாதவர் | | |

முதலே 16-ல் பகை 292-ல் இறப்பு 5-ல் அவை 126-ல் துணிந் தனர் 60-ல் பயமிலி, இடையை 255-ல் எளிய, இறுதியை 106-ல் அருமை குறிப்பு 21-ல் அகம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, இறப்பு என்பதைச் 'சாவார்' பயமிலி எனும் துணிந் தனரை 'அஞ்சாதவர்' அருமையை 'அரியர்' என உணர்த்தி, (20-ல் அவரெனும் ஆதியை 'அகத்தவர்' எனத் தொல்காப்பியம் அந்தத்தைக் காட்டி உணர்த்துவது போல்) இதில் "அந்தமாகிய அகத்தின் ஆதியாகிய அவை எனும் பகையே சாவார் எனும் அஞ் சாதவர், இடையே எளியர், அகமெனும் அந்தமே அரியர்" எனல்.

இதிற்காணும் மற்றவை யிருக்கட்டும், 'அகத்துப் பகையே அகத்து அவை' 'பகை எனும் சாவாரே அவை எனும் அஞ்சாத வர்' என உணர்த்துவ தெதற்கு? எனச் சிந்திக்க வேண்டாமா? அவை யஞ்சாமை எனும் அதிகாரத்தில் இப்பா காண்பதால் 'சபையைக் கண்டு அஞ்சலாகாது' என்பதை விளக்குவதாக எளி தாய்த் தீர்மானிக்காமல் இப்பாவில் முதலின் நாமங்களெனக் காட்டும் 'அவை, யஞ்சாதவர்' என்பதையே 'அவை யஞ்சாமை' என்று அதிகார நாமம் சூட்டியிருப்பதைச் சிந்திக்க.

293. நன்றின் பாலுய்ப்ப தறிவு

—தொ. அறிவுடைமை. 2

| | | |
|---|---|---|
| பால் | ... | நன்று |
| | | அறிவு |

12-ல் முதலே பால், இறுதியை 113-ல் நன்று 11-ல் அறிவு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "அந்தமாகிய

நன்றின் ஆதியாகிய பால் அனுப்புவதே நன்றெனும் அறிவு" எனல். 'அகத்துப் பகை' என மேல் 292-ல் கூறுவது போல் இதில் 'நன்றின் பால்' என அந்தத்தைக் காட்டி ஆதியைப் பாலென விளக்குவதறிக. இப் 'பாலும், நன்றும், அறிவும்' எப் பாவிலும் இங்கு காண்பது போல் ஆதியந்தத்தின் நாமங்களாகவே அமைந்திருக்கும்.

இப் பாவை முழுவதும் விளக்காமல் சிதைத்தெடுத்துக் காட்டுவதை ஏற்பதெப்படி? என நினைக்க வேண்டாம். ஆதாரமாய்க் காட்டும் ஒவ்வொன்றையும் விளக்க முடியாதென்பதில்லை. ஒவ்வோர் முழுப் பாவின் கருத்தைக் காண அவ்வப் பாவிலுள்ள சொற்களை ஆராயந்தறிதல் அவசியமென்பது பற்றி அதையே இப்போது எடுத்துக் காட்டுகிறேன். ஆகையால், ஆரம்பத்தில் சிலவற்றை இவ்வாறு காட்டி பாக்களிற் காணும் சொற்களை நிச்சயிக்க வேண்டும். ஆனால், இவ்வாறு சிதைத்தெடுத்துக் காட்டப்படும் ஒவ்வொன்றும் அந்தந்த முழுப் பாவை விளக்கும் போதும் இக் கருத்து சிறிதும் மாறாது.

294. பிற் பயக்கு நற் பாலவை

—திருக். வினைத்தூய்மை. 9

| | | |
|---|---|---|
| பால் | ... | பிற் |
| அவை | | நற் |

முதலை 14-ல் பால் 5-ல் அவை இறுதியை 5—ல் பின் 102-ல் நற் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " அந்தமாகிய நற்றெனும் பின்னைப் பயக்கும் முன்னெனும் முதலே பாலெனும் அவை" எனல். 293-ல் 'நன்றின் பால்' எனக் கூறுவதையே இதில் 'நற் பால்' என உணர்த்துவ தறிக.

இவ்விரு பாக்களும் ஒன்றையொன்று தழுவி 'அந்தமாகிய நன்றெனும் அறிவைச் செய்தனுப்பும் ஆதியே பாலெனும் அவை' என உணர்த்துவது தெரிகிறதல்லவா? இதில் அவை எனக் கூறுவது எதை? இதுதானென்றெடுத்துக் காட்டும் அவை பாலெனும் நாமத்தையும் ஏற்கவேண்டும். ஏனெனில், 293-ல் பின்னாகிய நன்றெனும் அறிவை அனுப்பும் முன்னெனும் முதலே பால் எனக் கூறும் திருக்குறள், இதில் அப் 'பாலே அவை' என உணர்த்துவதால் 'அவையே பால் பாலே அவை' என்றேற்க வேண்டுமன்றோ? எத்தனையோ பாக்கள் இதே அவை என்பதை முதலின் நாமமெனக் கூறுவதை அடுத்தடுத்துக் காணலாம். இப் போதாவது 292-ல் 'அந்தமெனும் அகத்தின் ஆதியே அவை' எனத்

திருக்குறள் விளக்குவதாய் ஏற்கலா மன்றோ? இன்னும் சந்தேக மிருந்தால் 291-ல் 'இடை தெரிந்து நன்குணர்ந்து' எனக் கூறும் நன்கையே 293-ல் நன்றெனக் காட்டி அந்நன்றின் முதலே பாலென உணர்த்தி 294-ல் அப்பாலே அவை என விளக்கும் விபரம் கண்டு ஆதியின் நாமமே அவை என்றேற்க. 291-ல் இடை தெரிந்து சொல்லுக என்று எச்சரிக்கக் காரணம் என்னவெனச் சிறிது கவனிப்போம்.

295. அறம் பொருளின்பம் உயிரச்ச நான்கின்
திறந் தெரிந்து தேறப்படும்

—திருக். தெரிந்து தெளிதல். 1

| | | |
|---|---|---|
| அறம் | நான்கு | பொருள் |
| உயிர் | திறம் | அச்சம் |
| | இன்பம் | |

முதலே 78-ல் **அறம்** 42-ல் **உயிர்**, இடையை குறிப்பு 3-ல் **நான்கு** 133-ல் திறம் 13-ல் இன்பம், இறுதியை 181-ல் **பொருள்** 56-ல் **அச்சம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி " இடையாகிய இன்பமென்னும் நான்கின் முதலிறுதியே அறம்—பொருள் எனும் உயிர்—அச்சம், இவற்றின் இடையாகிய இன்பமென்னும் திறத்தைத் தெரிந்தால் தேறலாம் " எனல்.

60-ல் பயமிலி—அச்சமே முதலிறுதியெனத் தொல்காப்பியம் கூறுவதையே திருக்குறள் 'அச்சம்' என்பதை இறுதியென இப் பாவிலும் 292-ல் 'அஞ்சாதவர்' என முதலேயும் விளக்கும் விபரம் காண்க. 291-ல் இடையைத் தெரிந்து சொல்லுக என்பதற்கிசைய இதில் திறமெனும் இடையைத் தெரிந்தால் தேறலாம் என்பதறிக.

இவற்றிற்கு தொல்காப்பியம் கூறும் நாமங்களையே திருக் குறள் அதிகார நாமமாய்ச் சூட்டியிருப்பதாக 'அவை யஞ்சாமை' என்பதை நான் எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். அவ்வாறு சூட்டியிருப்பதோடு தொல்காப்பியத்தைப் போல் அந்தந்தப் பெயரைக் கொண்டு அந்தந்தப் பாவையும் திருக்குறள் விளக்குவதற்கு ஆதாரம் இங்கு காட்டுகிறேன். '**பகை திறந்தெரிதல் எனும் அதிகார நாமத்திற் கிசைய 292—ல் முதலே பகை 295-ல் இடையே திறம் 291—ல் இறுதியே தெரிதல் என உணர்த்தி அந்தந்தப் பாவையும் விளக்கும் விபரம் காண்க.**

இவ்வாறிருக்க, 295-ல் காணும் 'அறம் பொருளின்பம் உயிரச்சம்' எனும் பா அமைச்சர் முதலியோரை ஆராய்ந்து

அரசன் தெளிதற்கானதெனக் கருதப்படுகிறது. அரசன் என்று திருக்குறள் விளக்குவது யாரை? என்பதுபற்றி சிறிது கவனிப்போம்.

296. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்

—திருக். செங்கோன்மை. 3

| | | |
|---|---|---|
| அறம் | நூல் | அந்தணர் |
| ஆதி | | |
| கோல் | மன்னவன் | இல் |

முதலே 78-ல் **அறம்** 70-ல் **கோல்**, இடையை 122-ல் **நூல்** 17-ல் **வேந்து**, இறுதியை 273-ல் **அந்தணர்** 13-ல் **இல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (ஆதியை 390-I ல் 'அகத்தவர்' எனவும், அந்தத்தை 227-ல் 'காலத்து வென்றி' எனவும் தொல்காப்பியம் கூறுவது போல்) 292-ல் ஆதியை 'அகத்து அவை' 193-ல் 'நன்றின் பால்' என உணத்தும் திருக்குறள், இதில் 'அந்தணர் நூலென' அந்தத்தைக் காட்டி இடையையும் 'அறத்து இற்' என ஆதியைக் காட்டி அந்தத்தையும் உணர்த்தி, "அந்தணரின் நூலெனும் இடைக்கும் அறத்து இல்லெனும் அந்தத்திற்கும் ஆதியாய் நிற்பது இடையாகிய மன்னனுக்காதியாகிய கோலே" எனல். 295-ல் முதலிறுதியை அறம்—பொருள் எனக் கூறும் திருக்குறள் 'அவ்வறமே கோல் அப்பொருளே இல்' என இதில் விளக்குவதறிக.

தொல்காப்பியத்தை ஆராய்ந்து அந்தமே அந்தணன் என்பதை அறியாவிட்டாலும் திருமந்திரம் அறம்—வாழி எனும் ஆதியிடையின் அந்தமே அந்தணன் என 209-I ல் அழுத்தமாய் உணர்த்துவது கண்டேனும் தெளியலாமன்றோ? அதிற்றெளியாததும் பெரிதல்ல, தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறும் அந்தணன் இல்லெனும் அந்தந்தான் என்று திருக்குறள் இப்பாவில் புகட்டுவது கண்டேனும் விழித்தெழலாமன்றோ? இது கண்டும் திகைப்போரைத் திருவாசகம் தெளிவுபடுத்துவதைக் கீழ்காண்க.

297. வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனை
வளிவந்த வந்தணனைப் பாடுதுங்காணம் மானாய்

—திருவாசகம். திருவம்மானை. 18

| | | |
|---|---|---|
| **வெளி** | **வளி** | **அந்தணன்** |
| **வித்தகன்** | **மால்** | **அயன்** |

130-ல் முதலே வெளி 22-ல் இடையே வளி எனத் தொல் காப்பியம் கூறுவதையே (154-ல் வெளியே ஒன்று வளியே இரண்டு என உணர்த்தும் திருவாசகம் அவற்றை இதிலும் காட்டி) 273-ல் இறுதியே அந்தணன் எனத் தொல்காப்பியம் கூறுவதையு முணர்த்தி, "வெளியெனும் ஆதியினின்று வந்த இடையெனும் மாலே வளி, அவ் வளியினின்று வந்த அயனெனும் அந்தமே அந்தணன்" எனல். இதில் காணும் அந்தணன் திருமந்திரம் திருக்குறள் தொல்காப்பியம் கூறுவதுதான் என்பதை நிச்சயிக்க.

தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் மண்—மன்னவன்—மாண்பு என்பவற்றையே 241-ல் எடுத்துக் காட்டி 'மண்ணெனும் ஆதியை ஆளும் மன்னவன் தந்த மாண்பே அந்தம்' என விளக்கும் திருவாசகம், தொல்காப்பியம் கூறும் நாமங்களைக் கொண்டே 'வெளியினின்று வந்ததே வளி அவ் வளியினின்று வந்ததே அந்தணன்' என விளக்குவதைக் கவனித்தீர்களா? திருமந்திரம் தொல் காப்பியம் முதலிய உணர்த்தும் இம் மன்னனையும் அந்தணனையும் வள்ளுவர் அறிந்தவரா அறியாதவரா? இம் மூவரும் உணர்த்து வதை ஆராய்ந்தறிந்து அவற்றையே நமக்கு மணிவாசகர் புகட்டுவ தறிக, பிரபல நூல்கள் ஒன்றையொன்று தழுவி இதுவே அந்தண னென விளக்கியிருக்கும் விபரமறியாது இவ் வந்தணன் எனும் சொல்லைப்பற்றி எழும் சச்சரவுக்கு அளவுண்டோ? 296-ல் அந்தண னெனும் அந்தமே இல்லெனத் திருக்குறள் கூறுவதாக நான் எடுத்துக் காட்டியிருப்பதை ஏற்கத் தயங்கினால் அதற்கோர் ஆதாரம் கட்டுகிறேன்.

298. அற்றே பசப்பு

—திருக். பசப்புறு. 7

... அற்று ...
பசப்பு

இடையை 237-ல் அற்று 101-ல் பசப்பு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "இடையாகிய அற்றே பசப்பு" எனல்.

299. பசப்பூர்வது

—திருக். பசப்புறு. 5

... பசப்பு ...
ஊர்வது

மேற்காண்பதில் அற்றே பசப்பு எனத் தொல்காப்பியம் கூறு வதை உணர்த்தும் திருக்குறள், (65, 66-ல் 'முதலும் இறுதியும் திரியாது நிற்கும் இடைநில்லாது திரியும்' எனக் கூறும் தொல்

காப்பியம் 247-ல் நில்லாது திரியும் இடையை ஊர்ந்து வரும் எனக் கூறுவதையும்) இதில் " அற்றாகிய பசப்பெனும் இடை ஊர்வது " என விளக்குவ தறிக.

300. ஊர்ந்தானிடை

—திருக். அறன்வலி. 7

... ஊர்ந்தான் ...
இடை

இதில் இடையே ஊர்ந்தான் எனக் காட்டி, 299-ல் இவ் வூர்ந்தானெனும் இடையே ஊர்வது எனும் பசப்பென உணர்த்தி, 298-ல் இப் பசப்பு அற்றே என விளக்குவ தறிக.

இடையை 161-ல் நடப்பது என ஔவை குறளும் 162-ல் செல்வது எனத் திருவாசகமும் விளக்குவது இதில் இடையை ஊர்ந்தான் எனத் திருக்குறள் உணர்த்துவதையே எனச் சந்தேகமின்றி ஏற்க.

பாக்களில் வேண்டியதைச் சிதைத்தெடுத்துக் காட்டுவது பெரும் பிழையெனக் குறை கூறுவோர் தொல்காப்பியத்திற் கிசைய 'அற்று என்பதை இடையின் நாமமெனவும், அவ்வற்றிற் கேற்பட்ட மற்ற நாமங்களையும், அதற்கு ஊர்ந்து திரியும் தன்மை உண்டென்பதையும், இத்தகைய தன்மை இருப்பதுபற்றி இதற்கு ஊர்ந்தான் என்ற நாமமும் உண்டென்பதையும் பாக்களினின்று சிதைத்தெடுக்கப்பட்ட இரு சொற்களே மேற்காண்பதில் விளக்கும்போது முழுப் பாக்கள் எதற்கு? ஆயினும் ' அற்று ' எனும் இச் சொல் அமைந்துள்ள பா ஒன்றை முழுதும் விளக்கிக் காட்டுகிறேன்.

301. உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லார்
உடைய துடையரோ மற்று

—திருக். ஊக்கமுடைமை. 1

... அது இல்லார்
உடையது
உடையர்
ஓம்
அற்று ஊக்கம்

இடையை குறிப்பு 3-ல் அது 237-ல் அற்று 302-ல் ஓம், இறுதியை 64-I ல் ஊக்கம் 13-ல் இல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, இல்லை இல்லார் என உணர்த்தி, 26-ல் இடையெனத் தொல்காப்பியம் கூறும் ' ஒடு ' என்பதை இதில் ' உடை

யது ' எனக் காட்டி, " உடையரெனப்படுவது அந்தமாகிய ஊக்க மெனும் இல்லாரின் இடையாகிய உடையதே, உடையது எனும் இடைக்கு அற்றெனவும் அது எனவும் ஓமெனவும் நாமங்கள் உண்டு " எனல். இதிற் காணும் மற்றவை யிருக்கட்டும், ' உடையதெனும் உடையரே ஓமெனும் அற்று ' என விளக்குவது தெளிவாய்த் தெரிகிற தன்றோ ?

298, 299, 300 இம் மூன்றிலும் திருக்குறள் விளக்குவது ' ஊர்ந்து திரியும் ஊர்வானெனும் பசப்பே அற்று ' எனத் தொல் காப்பியம் கூறுவதை யன்றோ? அப்படி விளக்கியதோடு அவ்வற்று என்பதை இதிற் காட்டி, தொல்காப்பியம் இடையின் நாமமெனக் கூறும் ஓம் என்பதையும் ' ஓமற்று ' எனப்புகட்டுவ தறிக. இவ்வோர் செய்தியை சிந்தித்துப் பார்த்தாலே திருக்குறள் விளக்குவது தொல் காப்பியம் கூறுவதையே என்று எவ்வித சந்தேகமுமின்றி ஏற்க லாமன்றோ ? தொல்காப்பியம் கூறும் ஓடு என்பதையே இதில் திருக்குறள் ' உடையது ' என விளக்குகின்றது என்பதை பாக் களைக் கொண்டே விளக்கலாம். அவ்வாறு அதனையும் அங்கங்கு விளக்க எனக்கும் மிக ஆவலுண்டு. ஆனால், அப்படிக் காட்டு வதால் எடுத்த செய்தி தடைபடுவதோடு வாசிப்போரும் ஒன்றை யொன்று பற்றிச் செல்வதை பொறுமையுடன் ஆராயத் தயங்கித் திகைக்க நேரிடும். ஆகையால், ' ஓடு ' என்பதைத் திருக்குறள் விளக்குவதை அடுத்துக் காட்டுகிறேன். ஓம் என்னும் பிரணவத்தைத் திருக்குறளும் தொல்காப்பியமும் புகட்டும் விபரமறிக.

302. செல்லான் கிழவ னிருப்பி னிலம் புலந்
இல்லாளி னூடி விடும்

—திருக். உழவு. 9

| | | |
|---|---|---|
| செல்லான் | புலன் | இல்லாள் |
| கிழவன் | ஊடி | |
| நிலம் | | |

முதலை 77-ல் கிழவன் 4-ல் நிலம், இடையை 21-ல் புலன் 300-ல் ஊடல், இறுதியை 13-ல் இல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (300-ல் இடையை ' ஊர்ந்தான் ' எனக் கூறும் திருக்குறள் இதில் ஆதியைச் ' செல்லான் ' என உணர்த்தி) தொல்காப்பியம் கூறும் ' ஊடலை ஊடி ' எனவும் ' இல்லை இல் லாள் ' எனவும் காட்டி " ஆதியாகிய செல்லாக் கிழவன் இருப்பே நிலம், இடையே புலன், இப்புலனெனும் ஊடியே இல்லாள் எனும் இறுதியை அனுப்பும் " எனல்.

முதலே 4-ல் **நிலம்** 12-ல் இடையை **வரை** 108-ல் இறுதியே **புகழ்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி புகழ் 4-ல் 'நில வரை நீள் புகழாற்றிற்' நில—வரை எனும் முதலும் இடையும் புகழேனும் இறுதியை ஆற்றின் என உணர்த்துகிறது. அதே நிலத்தைத்தான் 302-ல் கிழவனிருப்பு என உணர்த்துவதறிக. நிலம் எனும் சொல் திருக்குறளில் எங்கு காணினும் முதலின் நாமமாகவே அமைந்து அந்தந்தப் பாவையும் திருக்குறள் விளக்கும் அற்புதத்தைக் காணலாம். 'பகை எனும் பண்பு, பண்பேதலே' என உணர்த்தும் திருக்குறள் உழவு 1-ல் 'உழவேதலே' என்று கூறுவதறிந்தால் உழவு எனும் அதிகார நாமமும் அதிற்காணும் பாவிலுள்ள நிலம் என்பதும் நமது அனுப வத்திலுள்ளவை அல்ல என்பது விளக்கும். ஆதியைச் செல்லான் என்றேற்க ஆதாரம் காட்டுகிறேன்.

303. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை

—திருக். ஊக்கமுடைமை. 4

| | | |
|---|---|---|
| உழை | உடையான் | ஊக்கம் |
| | ஆக்கம் | அசைவிலாதது |

'அதர்வினுய்' என்பவை இவற்றிற்கு எழுத்தாயுள்ள நாமங்கள், இங்கவை தேவையில்லை. முதலே 289-I ல் **உழை** இடையை 26-ல் ஒடு இறுதியை 64-I-ல் **ஊக்கம்** இடையை 12-ல் **ஆக்கம்** என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, 'ஒடு' என்பதை 'உடையான்' என உணர்த்தி, "உழை எனும் முதலின் இடையாகிய உடையான் எனும் ஆக்கத்தினின்று செல்லும் இறுதியே அசைவிலா ஊக்கம்" எனல்.

இடையை 12-ல் **ஆக்கம்** 113-ல் **பெரிது**, இறுதியை 113-ல் **நன்று**, எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, கொல்லாமை 8-ல் 'நன்றாகு மாக்கம் பெரிதெனினும்' இறுதியெனும் நன்றாகின்ற ஆக்கமெனும் இடை பெரிதெனினும் எனத் திருக்குறள் உணர்த்துகிறது. இவ்வாக்க மன்றோ 303-ல் காண்பது. நிற்க, 12-ல் இடையே **ஆக்கம்** 8-ல் இறுதியே **பல** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி இடனறிதல் 2-ல் 'ஆக்கம் பலவுந் தரும்' பல எனும் இறுதியை ஆக்கமெனும் இடையே தரும் எனத் திருக்குறள் உணர்த்துவது 303-ல் கூறும் ஆக்கத்தை யன்றோ? 301-ல் உடைய துடையரே இடை என்பதற்கிசைய மேற்காண்பதில் உழை—ஊக்கத்து இடையே உடையான் என்றுணர்த்துவ தறிக.

இவையெல்லா மிருக்கட்டும், ஊக்கத்தை அதி ஊக்கம் குறையா ஊக்கம் மிக ஊக்கம் முழு ஊக்கம் என்று உணர்த்து வதைவிட்டு அசைவிலா ஊக்கம் என்று கூறவேண்டியதுமில்லை, கூறினும் பொருந்தாததே. ஆகையால், ஊக்கம் என்பது நாம் வழங்குவதா யிருப்பினும் இச்சொல் நமது அனுபவத்திலுள்ள ஊக்கத்தைச் சுட்டவில்லை என்ப தறிக.

இடை ஊர்ந்து திரியும் என உணர்த்தும் தொல்காப்பியம் முதலும் இறுதியும் திரியாது நிற்குமென 65, 66-ல் கூறுகிற தல்லவா? அச்செய்தியையே உணர்த்தும் திருக்குறள் 298, 299 300-ல் இடை ஊர்ந்து திரியும் என விளக்குவது போல் முதலையும் இறுதியையும் 'திரியாது' என விளக்கவேண்டியதற்காகவே 302-ல் **செல்லான்** என ஆதியையும் 303-ல் **அசைவிலாதது** என அந்தத்தையும் புகட்டும் விபரம் காண்க.

அசைவிலா ஊக்கமே இறுதியென மேற்காண்பதில் கூறும் திருக்குறள், 301-ல் இவ்வூக்க மெனும் இறுதியே **இல்லார்** எனவும் 302-ல் செல்லான் எனும் ஆதியின் அந்தமே **இல்லான்** எனவும் உணத்துவதைத் தள்ள முடியுமா? முடியா தாகையால் 296-ல் அந்தணர் எனும் அந்தமே 'இல்' எனக் கூறும் திருக்குறள், அவ்வந்தமெனும் இல்லையே 'இல்லார்' எனவும் 'இல்லாள்' எனவும் உணர்த்தும் விபரம் காண்க. 50-ல் இடையெனக் கூறும் ஒரு என்பதை 32-ல் ஒருவ ஞெருத்தி எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல் திருக்குறள் 'இல்லை இல்லார் இல்லாள்' என உணர்த்துவ தறிக.

நிற்க, 92-ல் அவனெனும் ஆதியின் அந்தமாகிய இவனே இல்லம் எனத் திருமந்திரமும், 189-ல் பிற—வகை எனும் முதலிடையின் இறுதியாகிய நிகழ்ச்சியே இல்லென்று கூறப்படும் எனத் தொல்காப்பியமும் கூறுவதையே எடுத்துக் காட்டி இவ்வந்தமாகிய இல்லுக்கே இல்லாளெனவும் இல்லாரெனவும் நாமங்கள் உண்டெனத் திருக்குறள் விளக்குவ தறிக.

இவ்வாறிருக்க அறம் பொருள் இன்பம் மூன்றையும் கூறும் வள்ளுவர் வீட்டைக் கூறவில்லை எனத் தீர்மானித்து, கூறாதது பற்றிப் புகழ்ந்து சிலரும் இகழ்ந்து சிலரும் வாதாடுவதற்கு ஆதாரம் எங்குளதோ.

296-ல் அந்தணர் என்பதைக் காட்டி இல்லை இறுதியெனத் திருக்குறள் உணர்த்துவதை ஆராய்ந்து பார்த்து இறுதியே

இல்லெனத் தீர்மானித்தோமல்லவா? அதைச் சந்தேகமின்றி ஏற்க அந்தணர் எனும் இல்லுக்கு ஆதி அறமென அப் பாவில் நான் எடுத்துக் காட்டியிருப்பதற்கும் ஆதாரம் காட்டுகிறேன்.

304. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

—திருக். அறன்வலி. 9

| | | |
|---|---|---|
| அறம் | இன்பம் | எல்லாம் |
| ற் | ம | உம் |
| புறம் | இல | புகழ் |

முதலே 78-ல் **அறம்** 5-ல் **புறம்**, இடையை 13-ல் **இன்பம்** 32-ல் **இல**, இறுதியை 254-ல் **எல்லாம்** 108-ல் **புகழ்**, முதலே 228-ல் **ற்** இடையை 57-ல் **ம** இறுதியை 33-ல் **உம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " ஆதியாகிய அறத்தால் வரும் இடையே இன்பம் அந்தமே எல்லாம், இவற்றையே ஆதியாகிய புறத்து இடையே இல இறுதியே புகழ் என்றும் அறிக " எனல். 292-ல் ' அகத்துப் பகை ' என அந்தத்தால் ஆதியை உணர்த்துவதுபோல் இதில் புறத்ததே புகழ் என ஆதியால் அந்தத்தை உணர்த்துவதறிக.

அறமே புறம் இப்புறமெனும் அறத்தால் வருவதே எல்லாமென்னும் புகழ் என இதில் திருக்குறள் கூறுவதா யேற்க. இப் புகழ் என்பதை மீண்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

305. அருமை காலத்துப் பெருமை காட்டிய
எண்மை காலத்து இரக்கத் தானும்

—தொ. கற்பியல். 9

| | | |
|---|---|---|
| காலம் | மை | அருமை |
| | | பெருமை |
| எண் | | இரத்தல் |

முதலே 165-ல் **காலம்** 33-ல் **எண்**, இடையை 33-ல் **மை**, இறுதியை 106-ல் **அருமை பெருமை** என்பதை இதிற் காட்டி, " ஆதியாகிய எண்ணெனும் காலத்து மை எனும் இடை செய்து காட்டிய அந்தமாகிய அருமை எனும் பெருமை இரத்தலே " எனல்.

306. உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க் கொன்
றீவார்மே னிற்கும் புகழ்

—திருக். புகழ். 2

| | | |
|---|---|---|
| உரைப்பார் | உரைப்பவை | எல்லாம் |
| | | புகழ் |
| ஒன்று | | இரப்பார் |
| | | மேல் |

265-ல் முதலே **ஒன்று**, இறுதியை 254-ல் **எல்லாம்** 108-ல் **புகழ்** 309-ல் **இரத்தல்**, 32-ல் **மேல்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (செய்வது என்பதை உரைப்பது என மாற்றி நூல்கள் கூறக் கண்டோமல்லவா? அதற்கிசைய 277–I ல் வகுத்தனர் எனத் தொல்காப்பியம் கூறும் முதலை 'உரைப்பார்' எனவும் 69-ல் 'இறுதி இடையையே கொள்ளும்' எனவும் தொல்காப்பியம் கூறுதற்கிசைய) இதில் "உரைப்பார் அதாவது செய்வது ஒன்றெனும் முதலே, அம் முதலினால் உரைக்கப்படுவது (செய்யப்படுவது) இடையே, இவ்வாறு ஒன்றெனும் முதல் இடையைச் செய்வது இறுதியாகிய எல்லாமெனும் இரப்பார்க்காகவே, அவ் விரப்பாரெனும் புகழ் நிற்பது ஒன்றெனும் முதல் தந்த இடைக்கு மேலாகவே" எனல். மேல் 304-ல் எல்லாமென்னும் இறுதியே புகழ் எனக் கூறும் திருக்குறள் இதில் அப் புகழெனும் எல்லாமே இரப்பார் என இதில் உணர்த்துவ தறிக. இதிற் சந்தேகமிருந்தால் இதிலேயே காணும் முதலிறுதியாகிய 'ஒன்று—இரப்பார்' என்பவற்றையே உழவு 5-ல் காட்டி 'இரவாரிரப்பார்க் கொன்றீவர்' எனக் கூறி ஒன்றெனும் ஆதியாகிய இரவாரே இரப்பாரெனும் அந்தத்திற்கு இடையை ஈவர் என்பதறிக. ஆதியந்தத்திற்கு எதிர் மறை நாமங்கள் உண்டென்பது பற்றி அவற்றை இரவார்—இரப்பார் என உணர்த்தி, இரப்பாரெனும் அந்தத்திற்காக இடையை ஈவது இரவாரெனும் ஒன்றே என இவ்விரு பாக்களிலும் விளக்கும் விபரம் கண்டும் சந்தேகிக்கலாமா?

**இடை ஊர்ந்து திரியும் என்பதற்கிசைய முதலும் இறுதியும் திரியாது நிற்கும் என்பதை உணர்த்த 'ஆதியாகிய கிழவனைச் செல்லான் எனவும்' 'அந்தமாகிய ஊக்கத்தை அசைவிலாதது எனவும்' கூறுவதாக எடுத்துக் காட்டியது ஞாபகமிருக்கலாம். அச் செய்தியைத் தெளிவுபடுத்தவே 306-ல் அந்தமெனும் புகழை 'நிற்கும் புகழ்' எனவும் 296-ல் ஆதியாகிய கோலை 'நின்றது கோல்' எனவும் உணர்த்தும் விபரம் காண்க.**

இரப்பாரெனும் அந்தத்திற்காகவே ஆதி, இடையை உண்டாக்கியதாய் நான் எடுத்துக் காட்டியிருப்பதற்கு ஆதாரம் காட்டுகிறேன்.

307. ஏ முற்ற வரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகை கொள்பவன்

—திருக். பகைதிறந் தெரிதல். 3

ஏ ஏழை பல்லார்
பகை தமியன்

முதலெ குறிப்பு 27-ல் ஏ 16-ல் பகை, இடையை 255-ல் எளிய 36-ல் தனி, இறுதியை 88-ல் பல்லோர் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, தனியன் என்பதைத் தமியன் என உணர்த்தி, "ஏ எனும் முதல் முற்றி (முதிர்ந்து) ஏழை யாகிய தமியனெனும் இடைவரினும் அம் முதலாகிய ஏ எனும் பகை கொள்வது பல்லோரெனும் இறுதியையே" எனல்.

72-ல் (ஆதி அந்தத்தையே கொள்ளும் என்பதை) 'பண்பு கொள் கிளவியும்' எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல் அதே செய்தியை "பல்லாரைப் பகையே கொள்பவன்" என திருக்குறள் விளக்குவ தறிக. 253-ல் முதல் முற்றி இடை தோன்றுமெனத் தொல்காப்பியம் கூறுவதையே திருக்குறள் இதில் விளக்கும் விபரமறிக.

308. கண் களவு கொள்ளும்

—திருக். குறிப்பறிதல். 2

... களவு கண்

109-ல் இடையே களவு 26-ல் இறுதியே கண் எனத் தொல் காப்பியம் கூறுவதையே இதிற்காட்டி, "கண்ணெனும் அந்தம் களவெனும் இடையையே கொள்ளும்" எனல். இதில் 'இடையை இறுதி கொள்ளும்' என்பதற் கிசையவே 306-ல் இரப்பாரெனும் இறுதிக்காகவே இடையை ஒன்றெனும் முதல் தந்ததெனக் கூறு வது கண்டு தெளிக. 306-ல் இரவாரெனும் ஆதி இரப்பாரெனும் அந்தத்திற்காக இடையைத் தரும் எனத் திருக்குறள் கூறுவதை இப்பா ஙிச்சயிக்கும் நேர்மை காண்க.

309. அவை யறியார் சொல்லன் மேற்கொள்பவர் சொல்லின்
வகை யறியார் வல்ல தூ உமில்

—திருக். அவை யறிதல். 3

அவை வகை மேல்
சொல்
சொல்லன் இல்
வல்லது
ஊ உம்

முதலே 5-ல் அவை 46-ல் சொல் 280-ல் சொல்லோர் 277-I ல் வல்லோர், இடையை குறிப்பு 3-ல் வகை, இறுதியை 32-ல் மேல் 13-ல் இல், முதலிறுதியை 247-ல் ஊ—உம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, சொல்லையே சொல்லன் என உணர்த்தி, "மேலெனும் இறுதியைக் கொள்ளும் சொல்லெனும் முதலே அவையென்றறியார், அச் சொல்லின் இடையே வகை என்பதையும் அறியார், அவ் வகை ஊ—உம் எனும் வல்லது—இல் என்பவைக்கு இடையே" எனல். (307-ல் பல்லாரெனும் இறுதியைக் கொள்ளும் முதலே பகை என்பதையே) 'மேல் எனும் இறுதியைக் கொள்ளும் சொல்லனெனும் முதலே அவை என்பதை அறியார்' என இதில் உணர்த்தும் போது இந்த அவை என்பதைச் சபை என்றேற்ப தெப்படி?

307-ல் பல்லாரெனும் இறுதியைப் பகையெனும் முதல் கொள்ளுமெனவும் 309-ல் மேல் எனும் இறுதியை அவை எனும் முதல் கொள்ளுமெனவும் கூறுவதால் 'மேலாகிய பல்லாரெனும் இறுதியை பகையாகிய அவை எனும் முதல் கொள்ளும்' என்பது தெளிவாய்த் தெரிகின்றதன்றோ? இவ்விரு பாக்களில் முதலெனக் கூறும் பகை அவை எனும் இவ்விரண்டையுமே 292-ல் காட்டி, 'அகத்துப் பகையே சாவார், அகத்து அவையே அஞ்சாதவர்' என உணர்த்துவதால் 'அகமெனும் அந்தத்தின் ஆதிக்கே பகை, அவை, சாவார், அஞ்சாதவர்' எனும் நாமங்கள் உண்டென்றேற்க மறுப்பாருமுண்டோ?

309-ல் 'சொல்லெனும் முதலே அவை' என்பதை உலகோர் அறியாரே எனத் திருக்குறள் இரக்கத்துடன் எச்சரிக்கக் காரணம் தெரிந்ததா? அவ்வாறு எச்சரிப்பது கண்டு சொல்லெனும் முதலே அவை என்று அறியாவிடில் 'அவையே பகை, இப் பகை அவையே சாவாரெனும் அஞ்சாதவர்' என 292-ல் விளக்குவதைக் காணமுடியுமா? நிற்க, இச் சொல்லையே 291-ல் காட்டி 'சொல்லெனும் முதலே நடை எனும் அவர்' என விளக்குவதைத் தெரிய முடியுமா?

309-லேயே சொல்லின் இடையென உணர்த்துவதோடு ஊ—உம் எனும் வல்லது—இல் என்பவைக்கும் இடையாகிய வகையை அறியாரே எனத் திருக்குறள் புலம்புகின்றதன்றோ? அவ் வகையைச் சிறுது கவனிப்போம்.

310. எனை வகையாற் றேறிய கண்ணும் வினை வகையான்
வேறாகு மாந்தர் பலர்

—திருக். தெரிந்து வினையாடல். 4

| | | |
|---|---|---|
| வேறு | எனை | கண் |
| | வினை | |
| | வகை | |
| | வகையான் | |
| | மாந்தர் | பலர் |

முதலை 50-ல் **வேறு**, இடையை 271-ல் **எனை** 14-ல் **வினை** குறிப்பு 3-ல் **வகை** 222-ல் **மாந்தர்**, இறுதியை 26-ல் **கண்** 286-ல் **பலர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "முதலெனும் வேறாலாகும் இடையே மாந்தர் இறுதியே பலர், இம் மாந்தரெனும் இடையே எனை வினை யாகிய வகை யெனும் வகையான், இவ் வகையான் எனும் வகையாற் றேறிய கண்ணெனும் இறுதியே பலர்" எனல். 'மாந்தர்' என்பது எதுவா யமைந்திருக்கிறது கவனித்தீர்களா?

309-ல் 'வகையை அறியாரே' என வள்ளுவர் ஏங்கக் காரணம் அதை ஆராய்ந்து இடையே வகையெனத் தெரியாவிடில் அவ் வகை யாற் றேறியதே கண்ணென இதிற் கூறுவதைக் காண முடியுமா? நிற்க, 309-ல் முதலே சொல்லெனக் காட்டி அச் சொல்லே சொல் லன் என அதிலேயே உணர்த்துவது போல் மேற் காண்பதில் இடையே வகையெனக் காட்டி அவ்வகையே வகையான் என உணர்த்தும் விபரம் காண்க. சூத்திரங்களும் பாடல்களும் கூறு வதைத் தெரிய அவற்றில் காணும் சொற்களை முதலில் தெரிய வேண்டு மென்பது இப்போதாவது தெளிவாய்த் தெரிகிற தன்றோ?

இறுதியை 288-ல் **நாண்** இடையை 26-ல் ஒடு 222-ல் **மாந்தர்** 13-ல் **சிறப்பு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, ஒடு என்பதை உடைமை என உணர்த்தி, நாணுடைமை 2-ல் 'நாணு டைமை மாந்தர் சிறப்பு' (அதாவது) நாணெனும் இறுதியின் இடையாகிய உடைமையே மாந்தரெனும் சிறப்பு என விளக்கும் திருக்குறள் இச் சிறப்பெனும் மாந்தரையே 310-ல் **வினை வகை** எனும் மாந்தரென உணர்த்துவ தறிக.

நிற்க, 5-ல் இடையே **மொழி** எனவும் 26-ல் இடையே **ஆறு** எனவும் கூறும் தொல்காப்பியம் செய்யுளியல் 184-ல் 'மறையென மொழிதல் மறையோர் ஆறே' எனக் கூறி 'இடையாகிய ஆறே மறையோர், அம் மறையோரெனும் ஆறே மறை

யென்று கூறப்படும்' என உணர்த்துவ தறிக. இவ்வாறு உணர்த்தும் தொல்காப்பியம் 'நிலம்—மலை எனும் முதலிறுதியே கோல்—நிறை' எனப் பொதுப்பாயிரம் 26-ல் நன்னூல் விளக்குதற்கிசைய செய்யுளியல் 176-ல் 'நிறை மொழி மாந்தர் ஆணையின் கிளந்த, மறை மொழிதானே மந்திரம் என்ப' எனக் கூறி (அதாவது) முதலாகிய ஆணையின் அந்தமே நிறை இவற்றின் இடையாகிய மறை மொழி எனும் மாந்தரே மந்திரம் எனப்படும் எனத் தொல் காப்பியம் கூறுகிறது. 222-ல் இடையே மாந்தர் செய்யுளியல் 184-ல் இடையெனும் ஆறே மறை 5-ல் இடையே மொழி எனக் கூறும் தொல்காப்பியம் இச் சூத்திரத்தில் ஆணை—நிறை எனும் ஆதியந்தத்து இடையே மறை மொழி எனும் மாந்தரெனக் காட்டி அம் மாந்தரெனும் மறை மொழியே மந்திரம் என உணர்த்துவ தறிக.

இவ்வாறு தொல்காப்பியம் கூறுவதையும் 4-ல் முதலே நிலம் 106-ல் இறுதியே பெருமை எனத் தொல்காப்பியமே உணர்த்து வதையும் காட்டித் திருக்குறள் நீர்த்தார் பெருமை 8—ல் 'நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும்' (அதாவது) முதலெனும் நிலத்து இறுதியே நிறை எனும் பெருமை, அப் பெருமை எனும் இறுதியை இடையாகிய மாந்தரெனும் மறை மொழியே காட்டிவிடும் என விளக்குவ தறிக. இவ்வாறு திருக்குறள் விளக்குவது தொல்காப்பியம் கூறுவதையே என்பதில் சந்தேக மில்லையன்றோ? இப்படி இரு நூல்களும் உணர்த்தும் மாந்தரையே 310-ல் 'வினை வகை எனும் மாந்தர்' என்று திருக் குறள் உணர்த்துவதாய்ச் சந்தேகமின்றி ஏற்க. நிற்க, 302—ல் செல்லானிருப்பே நிலம் எனக் கூறும் திருக்குறள் இதில் அந் நிலத்து அந்தமே நிறை எனும் பெருமை என்று நிச்சயித்துக் காட்டும் நேர்மை காண்க.

291-ல் முதலெனும் சொல்லின் இடையைத் தெரிந்தால் இறுதி யாகிய நன்கை உணரலாம் எனவும், 295-ல் திறமெனும் இடையைத் தெரிந்தால் தேறலாம் எனவும் திருக்குறள் எச்சரிப்பதற்கிசைய இதில் இடையாகிய மாந்தரெனும் மறை மொழியே பெருமையைக் காட்டும் என உணர்த்தும் விபரம் கண்டு தெளிக.

இடையை 54-ல் மயங்குதல் எனவும் 214-ல் மறை எனவும் தொல்காப்பியம் கூறுதற்கிசைய புல்லறிவாண்மை 7-ல் 'அருமறை சோரும்' மறை எனும் இடை சோர்ந்திடும் என உணர்த்துகிறது.

இவ்விரு நூல்களும் விளக்குவது இம்முறையை யன்றோ. இப் பாவும் 338-ன் விளக்கத்தில் தெளிவாய்க் காட்டப்பட்டுள்ளது.

292-ல் 'அகத்துப் பகை' எனக் கூறி அந்தத்தைக் காட்டி ஆதியைப் பகை என உணர்த்துவதுபோல் மேற் காண்பதில் 'நிலத்துப் பெருமை' எனக் கூறி ஆதியைக் காட்டி அந்தத்தைப் பெருமை என உணர்த்துவ தறிக. 310-ல் வகை எனும் இடையே மாந்தர் எனத் திருக்குறள் கூறுவதை நிச்சயிக்க இவ்வளவு ஆதாரம் காட்டினேன். அப் பாவில் மாந்தரெனும் இடையே 'வினை' எனக் கூறுகிறதல்லவா ? அதையும் சிறிது கவனிப்போம்.

311. வினைக்கண் வினைக்கெடலோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு

—திருக். ஆள்வினையுடைமை. 2

| | | |
|---|---|---|
| கெடல் | வினை | கண் |
| அன்று | | |
| குறை | | உலகு |

முதலை 273-ல் குறை 9-ல் கெடல் 246-ல் அன்று, இடையை 14-ல் வினை, இறுதியை 26-ல் கண் 165-ல் உலகு எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, 307-ல் 'பல்லார் பகை கொள் பவன்' எனக் கூறும் திருக்குறள் அதிற்காணும் 'கொளல்' என்பதை இதில் 'ஓம்பல்' என உணர்த்தி, "இடையெனும் வினையின் கெடலெனும் முதல் ஓம்பலே அவ் வினையின் கண் ணெனும் இறுதியை, அக்கெடலெனும் குறையில் தீர்ந்த (முடிந்த) வினையில் தீர்ந்த (முடிந்த) கண்ணென்பது அன்றெனும் முதலுக்கு இறுதியாகிய உலகே" எனல்.

வினையின் முதலே கெடல் என்பதையும், வினையின் இறுதியே கண் என்பதையும், இக் கெடல்—வினை—கண்ணே குறை—வினை—உலகு என்பதையும் எவ்வித சந்தேகமுமின்றாது ஏற்பதற்காகவே இதில் 'வினை' எனும் சொல் மும்முறை கூறப்பட்டிருக்கும் விபரம் கண்டு தெளிக. ஆதியந்தத்திற்கு எதிர் மறை நாமங்கள் உண் டென்பது பற்றி 'நிறைமொழி மாந்தர்' எனும் பாவில் இறுதியே நிறை எனக் கூறும் திருக்குறள் 311-ல் முதலே குறை என்பது கண்டு தெளிக.

வினை என்பதை இவ்வாறு எடுத்துக் காட்டி 'குறை தீர்த்தது வினையை, அவ் வினை தீர்த்தது உலகை' எனவும் உணர்த்தி, இவ் வினையின் கெடலே வினையின் கண்ணை ஓம்பல் என விளக்கும் இவ்

வோர் பாவே தொல்காப்பியக் கருத்தைத் திருக்குறள் உணர்த்துவதாய் ஏற்கப் போருதா? 308-ல் 'கண் களவைக் கொள்ளும்' எனத் திருக்குறள் உணர்த்துவது இக் கண்ணே யன்றே? அவ்வாறு உணர்த்தும் திருக்குறள் அக் கண்ணேயே கெடலெனும் ஆதி ஓம்பல் என விளக்குவதைக் கவனித்தீர்களா? பாக்கள் ஒன்றையொன்று தழுவி ஒன்றை யொன்று விளக்கும் அற்புதத்தை அறிந்தோர் இயலதிகாரத்திற் கேற்க வெவ்வேருய்க் கொள்ளத் துணிவரோ? மற்ருென்றையும் இங்கெடுத்துக் காட்டுகிறேன்.

312. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு

—திருக். அறிவுடைமை. 6

| | | |
|---|---|---|
| அவ் | எவ் | உலகு |
| | | அறிவு |

47–ல் முதலே அவ், இடையே எவ், இறுதியை 165-ல் உலகு 11-ல் அறிவு எனத் தொல்காப்பிம் கூறுவதையே காட்டி, "எவ்வெனும் இடையோ டுறைந்துள்ள அந்தமெனும் உலகே அதே உலகத்தின் ஆதியாகிய அவ்வோ டுறைந்துள்ள அறிவு" எனல். 307-ல் முதலே ஏ எனக் கூறும் திருக்குறள் இதில் முதலே அவ் இடையே எவ் வென உணர்த்துவது கண்டு தொல்காப்பியம் கூறும் எழுத்தாயுள்ள நாமங்களேயும் திருக்குறள் விளக்கும் விபரமறிக.

293, 294-ல் ஆதியாகிய பாலெனும் அவையால் அனுப்பப்பட்ட அந்தமே 'அறிவு' எனவும், 311-ல் விணே யெனும் இடையால் தீர்ந்த அந்தமே 'உலகு' எனவும் கூறும் திருக்குறள், இதில் அவ்—எவ் எனும் முதலிடையோ டுறைந்துள்ள 'அந்தமே அறிவு எனும் உலகு' என விளக்குவ தறிக. அவ்விரு பாக்களின் கருத்தை இப் பாவும் இப் பாவின் கருத்தை அவை யிரு பாக்களும் நிச்சயிக்கும் நேர்மை காண்க. உலகு என்பதை இன்னும் கவனிப்போம்.

313. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு

—திருக். பண்புடைமை. 4

| | | |
|---|---|---|
| பண்பு | உடையார் | நயன் |
| | | நன்றி |
| | | பயன் |
| | ஒடு | உலகு |

12-ல் முதலே **பண்பு,** 26-ல் இடையே ஒடு, இறுதியை 113-ல் **நன்று** 35-ல் **பயன்** 165-ல் **உலகு** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, 291-ல் இறுதியை 'நன்மை நன்கு' எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதில் 'நயன் நன்றி' என உணர்த்தி, "பயனாகிய நன்றி எனும் நயனைச் செய்த இடையே ஒடு எனும் உடையார், இவ்வுடையாரெனும் இடையின் பண்பெனும் முதலால் பாராட்டப்படும் உலகெனும் இறுதியே பயன் எனும் நன்றி" எனல். 'நயனில் ஒடுவே பயனின் உடையார்' என உணர்த்துவ தறிக. தொல்காப்பியம் கூறும் ஒடு என்பதையே இதில் உடையார் என உணர்த்தி, 301-ல் இவ் வுடையாரை உடைய தெனும் உடையரெனக் காட்டி அதுவே அற்றெனவிளக்குவ தறிக.

ஆதி கொள்வது அந்தத்தை யென 307, 309-ல் கூறுதற் கிசைய 'பண்பெனும் முதலால் பாராட்டப்படும் இறுதியே உலகு' என உணர்த்துகிறது. ஆதியால் அந்தம் பாராட்டப்படுவது அந்தத்தை ஆதி கொள்ளற்கே. இப்பாவின் கருத்து இதுவே என்றேற்க ஆதாரம் காட்டுகிறேன்.

314. தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது

—திருக். தூது. 5

| | | |
|---|---|---|
| ... | தூது | நன்றி |

இதிற் காணும் மேல் வரி இவற்றிற்கு எழுத்தாயுள்ள நாமங்களை வகுத்துக் காட்டுதல், அவை இங்கு தேவையில்லை. மேற் காணும் **நன்றி** என்பதை இதிற் காட்டி, 16-ல் இடையே **தூது** எனத் தொல்காப்பியம் கூறுவதையே உணர்த்தி, "நன்றி எனும் இறுதியைப் பயப்பது தூதெனும் இடையே" எனல். இதே 'நன்றி'யன்றோ மேலே காண்பது. இதில் சந்தேகமிருந்தால் தெளிய ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

I நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்

—திருக். ஒழுக்க. 8

| | | |
|---|---|---|
| தீ | வித்து | நன்றி |
| இடும்பை | ஒழுக்கம் | நல் |
| | என்றும் | |

முதலை குறிப்பு 12-ல் **தீ** 104-ல் **இடும்பை,** இடையை 102-ல் **ஒழுக்கம்** 153-I ல் **வித்து,** இறுதியை **நன்றி** என 97-I லும் **நல்**

லென 48-லும் தொல்காப்பியம் முதலிய கூறுவதைக் காட்டி, " அந்தமாகிய நல்லெனும் நன்றிக்கு வித்தாகிய இடையே ஒழுக்கம், அவ்வொழுக்கமாகிய என்று எனும் இடையைத் தீ யாகிய இடும்பை எனும் முதலே தரும் " எனல்.

313, 314-ல் இறுதி எனக் கூறுவது இதிற் காணும் நன்றி என்பதையே, நிற்க, முதலிறுதிக்கு அன்று—இன்று எனும் நாமங்களைக் கூறும் தொல்காப்பியம் இடையை என்று எனக் கூறுதிருக்குமா? அதையே இப்பாவில் திருக்குறள் உணர்த்து வதறிக.

315. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு

—திருக். தூது. 1

பண்பு தூது
உடைமை

மேல் வரியில் ' இடையே அன்பெனும் வேந்து இறுதியே குடி எனும் பிறத்தல் என விளக்குவது,' அவை இங்கு தேவை யில்லை. 313-ல் முதலிடையை ' பண்பு—உடையார் ' எனக் கூறும் திருக் குறள் அவற்றையே இதில் ' பண்பு—உடைமை ' என உணர்த்தி 314-ல் இடையே தூது எனக் கூறும் திருக்குறள் அதையே இதிற் காட்டி, " உடைமை யாகிய தூதெனும் இடையை உரைப்பது (செய்வது) பண்பெனும் முதலே " எனல்.

313, 314-ல் முதலிடையிறுதியை பண்பு—தூது—நன்றி எனக் காட்டி, 314-ல் ' நன்றியைப் பயப்பது தூது ' எனக் கூறும் திருக் குறள், மேற் காண்பதில் ' அத் தூதைப் பயப்பது பண்பு ' எனக் கூறவேண்டியதை விட்டு ' தூதை உரைப்பது பண்பு ' என உணர்த் தக் காரணம் பயப்பது செய்வது என்பவற்றை ஓதுவது உரைப்பது என நூல்கள் கூறும் 'என்பதை விளக்குதற்கே. நிற்க, 315-ல் முதலெனும் பண்பே இடையாகிய தூதைப் பயக்கு மெனவும், 314-ல் இத் தூதே நன்றி எனும் இறுதியைப் பயக்கும் எனவும் கூறும் திருக்குறள், இவற்றில் காணும் ' பண்பு—நன்றி ' என்ப வற்றையே 313-ல் காட்டி அந் நன்றியை உலகெனவும் உணர்த்தி ' பண்பால் பாராட்டப்படுவது உலகே ' எனவும் விளக்கும் விபரம் காண்க. இவ்வளவு ஆதாரங்கள் காட்டி இதை விளக்கக் காரணம் பண்பால் பாராட்டப்படும் இவ்வுலகையே 312-ல் ' அவ்—எவ் என்பவற்றோடு உறைந்துள்ள உலகு ' என உணர்த்துவதா

யேற்கவே. இவ்வுலகை அப் பாவில் அறிவென நான் எடுத்துக் காட்டியிருக்கிறேனல்லவா? அதையும் நிச்சயிக்க மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

316. அன்பறிவாராய்ந்த சொல் வன்மை தூதுரைப்பார்க்
கின்றியமையாத மூன்று

—திருக். தூது. 2

| | | |
|---|---|---|
| சொல் | அன்பு | அறிவு |
| | வன்மை | |
| | தூது | மூன்று |

முதலே 49-ல் **சொல்**, இடையை 89-ல் **அன்பு** 75-ல் **வன்மை** 16-ல் **தூது**, இறுதியை 11-ல் **அறிவு** 39-ல் **மூன்று** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, "அன்பாகிய வன்மை எனும் தூதின் அறிவெனும் அந்தத்தைத் தேடியதும் அத் தூதெனும் இடையை உரைப்பதும் (செய்வதும்) ஆகிய சொல்லெனும் ஆதிக்கு இன்றியமையாத அறிவெனும் அந்தமே மூன்று" எனல்.

ஆதிக்கு அந்தமும் அந்தத்திற்கு இடையும் இடைக்கு ஆதியும் உரியதாய்க் கொள்ளுமென்றிருப்பதால் இவை ஒவ்வொன்றும் தனக்கு உரியதை 'எண்ணிக்கொண்டிருக்கும், தேடி எதிர் பார்க்கும், நினைத்திருக்கும், என நூல்கள் கூறும். அது பற்றியே இதில் 'சொல்லெனும் ஆதி தேடியதும் அதற்கு இன்றியமை யாததும் அறிவாகிய மூன்றெனும் அந்தமே' என விளக்குவ தறிக. இச் செய்தியை அடுத்தடுத்துத் தெளிவாய்க் காணலாம். நிற்க, 315-ல் தூதை உரைப்பது (செய்வது) பண்பெனக் கூறும் திருக் குறள் இதில் தூதை உரைப்பது (செய்வது) சொல்லென உணர்த்துவது கண்டு பண்பெனும் முதலுக்கே சொல்லெனவும் நாமமுண்டென் றேற்க. இதில் இன்னும் சந்தேக மிருந்தால் 313-ல் 'பண்பு பாராட்டு முலகு' என்பதையே 316-ல் சொல் லுக்கு இன்றியமையாத அறிவே மூன்று என் றுணர்த்தி 'அந்த மாகிய உலகெனும் மூன்றே அறிவு இவ் வந்தத்தை இன்றியமை யாத தெனத் தேடிப் பாராட்டும் முதலே பண்பெனும் சொல் லென' **விளக்குவது கண்டு** தெளிக.

316-ல் 'சொல்லெனும் ஆதிக்கு இன்றியமையாத அறிவே அந்தம்' எனவும் 313-ல் 'பண்பு எனும் ஆதியால் பாராட்டப் படும் உலகே அந்தம்' எனவும் கூறும் திருக்குறள் இவ்விரண்டிலும் அந்தமென்று கூறப்படும் **உலகு அறிவு** என்பவற்றையே 312-ல்

அவ் எவ்வோ டுறையும் அறிவெனும் உலகு என்று உணர்த்தும் விபரம் காண்க.

பாக்களிலும் பாடல்களிலும் சூத்திரங்களிலும் காணும் சொற்களும் எழுத்துக்களும் இலக்கங்களும் அங்கங்கும் அததற்கே நாமமாய் அமைந்திருப்பது பெரிதல்ல, அவ்வாறு அமைந்துள்ள நாமங்களைக் கொண்டு உணர்த்தும் செய்திகளும் அச் செய்திகளை அப் பெயர்களும் நிச்சயித்துக் காட்டும் நேர்மையைக் காண்க.

313-ல் பண்பெனும் ஆதியால் பாராட்டப்படும் அந்தமே உலகு என்பதையும் அவ்வுலகே நன்றி என்பதையும் ஆராய்ந்து அந்தத்தின் நாமங்களே நன்றியும் உலகும் எனக் கண்டோம். அவ்வுலகெனும் நன்றியே 'பயன்' என அப் பா கூறுகிறதே அதையும் சிறிது கவனிப்போம்.

**317.** முடிவுமிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயன் பார்த்துச் செயல்

—திருக். வினைசெயல்வகை. 7

| | | |
|---|---|---|
| இடையூறு | ... | முடிவு |
| படு | | பயன் |

முதலை 104-ல் இடும்பை 6-ல் கெடுதல் 219-ல் தீமை எனத் தொல்காப்பியம் கூறுவதையே இதில் 'இடையூறு' எனக் காட்டி, 35-ல் இறுதியே பயன் 2-ல் முதலே படு எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதில் உணர்த்தி, "இடையூறு எனும் முதல் முற்றி (முதிர்ந்து) எய்தும் பயனெனும் முடிவைத் தெரிந்து செய்க" எனல். தெரிந்து செய்க என்றெச்சரிப்பது இவற்றைப் பக்குவப் படுத்தும்போது கவனிக்க வேண்டியது.

307-ல் பகை எனும் முதல் முற்றி இடை வரும் எனக் கூறும் திருக்குறள், இதில் அப் பகையை இடையூறு எனக் காட்டி அவ் விடையூறு முதிர்ந்தால்தான் பயனெனும் முடிவும் எய்துமென விளக்கும் விபரம் காண்க. 'முதல் முதிர்ந்து உண்டாகும் பயனே முடிவென' இதில் தெரிவிக்கும் திருக்குறள் இப் பயனையே 313-ல் 'பண்பால் பாராட்டப்படும் பயன்' என விளக்கும் விபரம் காண்க. இன்னும் இதில் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரமும் காட்டுகிறேன்.

318. பயன் மரமுள்ளூர் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடையான் கட்படின்

—திருக். ஒப்புரவறிதல். 6

| | | |
|---|---|---|
| ... | மரம் | பயன் |
| | ஊர் | |
| | அற்று | உள் |
| | உடையான் | செல்வம் |
| | கட் | நயன் |

இடையை 45-ல் மரம் 268-ல் ஊர் 237-ல் அற்று 274-ல் கட், இறுதியை 35-ல் பயன் 108-ல் உள் 192-ல் செல்வம் எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, இடையை 301-ல் உடையரெனும் அற்று இறுதியை 313-ல் நயன் எனத் திருக்குறள் கூறுவதையும் இதில் உணர்த்தி, (90-ல் ஆதி பழுத்து அதினின்று இடை தோன்றுமெனத் திருமந்திரம் கூறுவது போல்) "இடையாகிய அற்றாலான செல்வமெனும் இறுதியே (ஊர் மரமெனும் இடை பழுத்துத் தோன்றும்) உள்ளெனும் பயன், இப் பயனெனும் நயன் இடையாகிய கட்டெனும் உடையானினின்று தோன்றல்" எனல்.

I. மருந்தாகித் தப்பா மரத் தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

—திருக். ஒப்புரவறிதல். 7

| | | |
|---|---|---|
| மருந்து | மரம் | செல்வம் |
| | அற்று | |

மேல் 318-ல் காண்பதையே இதில் உணர்த்தி, 142-ல் முதலே மருந்து 277-ல் முதலே கூற்று எனத் திருமந்திரமும் தொல் காப்பியமும் கூறுவதை மருந்து 10-ல் 'கூற்றே மருந்து' என்று உணர்த்தும் திருக்குறள் இதில் "செல்வமெனும் இறுதியைப் பழுத்துத் தோற்றுவித்த இடையாகிய மரமெனும் அற்று ஆகியது மருந்தெனும் முதலினின்றே' என்பதறிக.

253, 254-ல் முதல் முற்றி இடையும் இடைமுற்றி இறுதியும் தோன்றுமெனத் தொல்காப்பியம் கூறுவது போல், 307-லும் 317-லும் முதல் முற்றியே முடிவெனும் பயன் தோன்றுமென விளக்கும் திருக்குறள், அப்பயனையே 318-ல் எடுத்துக் காட்டி அப் பயனே ஊரெனும் இடை பழுத்துத் தோன்றும் செல்வ மெனவும் விளக்கும் விபரம் காண்க.

இவ்விரு பாக்களிலும் மருந்தெனும் முதலாலாகிய மரமெனும் ஊரே அற்று, இவ்வற்றெனும் இடையினின்று பழுத்துத் தோன்றிய இறுதியே பயன் எனும் செல்வம் என ஒன்றை யொன்று தழுவி விளக்குவ தறிக. நிற்க, இவ்விரு பாக்களிலும் கட், பெருத்தகையான் எனக் கூறுவது இடையின் நாமங்களே. இவைகளைத் திருக்குறளில் எங்கும் சோதித்துப் பார்க்கலாம். இவ்வாறு திருக்குறள் இவ்விரு பாக்களில் விளக்குவது 'பசப்பே அற்று' என 298, 299-ல் உணர்த்துவதை யன்றோ? அவ்வாறு அதில் பசப்பே அற்று எனக் கூறுவது போல் 318-ல் அற்றே ஊர் எனத் திருக்குறள் விளக்குகிறதன்றோ? இவ்வூரைத் திருக் குறளே விளக்குவதைத் தெளிவாய்க் காட்டுகிறேன். அதைக் கண்டேனும், 'இடையாகிய அற்றே பசப்பு அப் பசப்பெனும் அற்றே ஊர்' என்றேற்க.

319. மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்த திவ்வூர்

—திரு. அலரறிவுறுத்தல். 2

| | | |
|---|---|---|
| அலர் | மலர் | கண்ணான் |
| | அன்ன | அருமை |
| | இவ் | எமக்கு |
| | ஊர் | |

முதலை 10-ல் தொல்காப்பியமும் 215-ல் திருமந்திரமும் **அலர்** எனவும், இடையை 131-ல் **மலர்** 30-ல் **அன்ன** 65-ல் **இவ்** 265-ல் **ஊர்**, இறுதியை 26-ல் **கண்** 106-ல் **அருமை** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, கண்ணைக் கண்ணளென உணர்த்தி, (4-ன் விளக்கத்தில் இவற்றிற்கு உமக்கு—தமக்கு—எனக்கு எனும் நாமங்கள் உண்டெனத் தொல்காப்பியம் உணர்த்துதற்கிசைய) இதில் இறுதியை எமக்கு எனக் காட்டி, "மலராகிய அன்ன எனும் இடையின் அந்தமாகிய கண்ணளெனும் அருமையால் அறியமுடியாத அலரெனும் ஆதி, கண்ணளெனும் தமக்காகத் தந்ததே இடையாகிய இவ்வூர்" எனல். 308-ல் களவெனும் இடையைக் கண்ணெனும் இறுதி கொள்ளுமெனவும், 306-ல் இரவார் இடையை ஈவது இரப்பாரெனும் அந்தத்திற்கே எனவும் கூறுவதை இப்பா நிச்சயிப்பதறிக.

இதில் 'அலரெனும் ஆதி தந்த இடையே ஊர்' எனக் கூறி, 318-ல் இவ்விடையாகிய ஊர் பழுத்து இதினின்று தோன்றும் அந்தமே பயன் என விளக்கும் போது இவற்றை அவரவர்

கைக் கேற்கலாமா ? 292-ல் அகமெனும் அந்தமே 'அறியர்' எனத் திருக்குறள் உணர்த்துவது இதில் காணும் 'அருமையையே' கூர்ந்து கவனித்துத் தெளிக. 77-ல் ஆதியை அந்தம் அறியா தெனத் தொல்காப்பியம் கூறுவதையே இதில் திருக்குறள் விளக்குவ தறிக. இது போன்ற பலவற்றை திருக்குறள் விளக்கு வதை அடுத்துக் காணலாம்.

311-ல் வினையின் முதலே கெடல் இறுதியே கண்ணென உணர்த்தி, அக் கெடலெனும் முதல் ஓம்பலே கண்ணென விளக்கும் திருக்குறள், இதில் அக் கண்ணெனும் கண்ணுளுக்கு உரியதாகிய இடையே ஊர் அவ்வூரெனும் இடையை அலர் தந்தது என விளக்குவதறிக. இன்னும் இதில் சந்தேகமிருந்தால் அதையும் நிவர்த்திக்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன். தொல்காப்பியம் 106-ல் அந்தமே 'அருமை' என்பதைக் காட்டி 319-ல் 'அருமையே கண்ணெள' உணர்த்தும் திருக்குறள், 165-ல் அந்தமே 'உலகு' எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி புணர்ச்சி மகிழ்தல் 3-ல் 'கண்ணுனுலகு' என உணர்த்துவது கண்டு (301, 302-ல் இல்லை இல்லாரெனவும் இல்லாளெனவும் விளக்குவது போல்) கண்ணையே கண்ணுனெனவும் கண்ணுள் எனவும் விளக்குவதாய் எவ்வித சந்தேகமின்றி ஏற்க. 318-ல் ஊர் எனும் இடை பழுத்துத் தோன்றும் பயனையே அதில் 'உள்' எனக் கூறுகிறதன்றோ? அதையும் கவனிப்போம். இத்தகைய ஆதாரங்களைக் காட்ட முழுப்பாவும் தேவையில்லை என்பதை மறக்க வேண்டாம்.

320. உள்ளறிவான் உள்ளங் கொளல்

—திருக். வினைசெயல் வகை. 7

| | | |
|---|---|---|
| ... | உள்ளம் | உள் |
| | | அறிவான் |

209-ல் இடையே **உள்ளம்** 108-ல் இறுதியை **உள்** 77-ல் இறுதியே **அறிவினள்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 4-ல் இறுதியை **உணர்ந்தோர்** எனத் தொல்காப்பியமே கூறுவதற்கிசைய இதில் "அறிவானுகிய உள்ளெனும் அந்தம் கொளல் உள்ளமெனும் இடையையே" எனல். 318-ல் கண் களவு கொள்ளும் என்பதையே இதில் பெயர்களை மாற்றிக் கூறுவ தறிக.

293-ல் பாலெனும் முதலால் அனுப்பப்பட்ட இறுதியே அறிவு எனவும், 312-ல் அவ் எவ் எனும் இவற்ருேடு உறைந்துள்ளதே அறிவு எனவும் கூறும் திருக்குறள், 320-ல் இவ்வறிவையே அறி

வான் என உணர்த்துவதால் அந்தத்திற்கு அறிவெனும் நாமமும் அறியுந் தன்மையும் உண்டெனத் தெரிகிறதன்றோ? இடைக்கு ஊர்ந்து திரியும் தன்மை உண்டென உணர்த்தி அதற்கு ஊர்ந் தான் எனவும் நாமமுண்டென விளக்கும் திருக்குறள், அந்தத் திற்கு அறிவெனும் நாமமும் அறியுந் தன்மையும் உண்டென உணர்த்தி அறிவான் எனும் நாமமும் உண்டென விளக்குவ தறிக.

77-ல் ஆதியை அறியாத அந்தமே அறிவினள் எனத் தொல் காப்பியம் கூறுவதையே 319, 320-ல் ஆதியை அறியாத அந்தமே அறி வான் எனத் திருக்குறள் விளக்குவதால் தொல்காப்பியம் கூறும் அறிவினளையே திருக்குறள் அறிவான் என விளக்குவதா யேற்க. ஆதியை அந்தம் அறியாதெனத் தொல்காப்பியம் கூறுவதையே திருக்குறள் விளக்குவதாய் ஏற்க இன்னும் சந்தேகித்தால் ஆதி யிடம் அந்தம் போகாதென நன்னூல் கூறுவதையும் திருக்குறள் விளக்குவதை எடுத்துக் காட்டுகிறேன். அதைக் கண்டேனும் தெளிக.

321. அழிவின் றறை போகா தாகி வழிவந்த
வன் கணதுவே படை

—திருக். படைமாட்சி. 4

| | | |
|---|---|---|
| அறை | அது | கண் |
| | படை | |
| வழி | வ,ன் | அழிவில்லாதது |

முதலை 269—ல் அறை குறிப்பு 23—ல் வழி, இடையை 26-ல் அது 130-ல் படை, இறுதியை குறிப்பு 20-ல் அழிவிலாக் கண் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (குறிப்பு 19—ல் தலையினின்று வந்த இறுதியே கண்ணெனத் தொல்காப்பியம் கூறுவது போல்) "வழி எனும் ஆதியினின்று வந்த அழிவிலாக் கண் அவ்வழி எனும் அறையினிடம் போகாது, இடையாகிய படையே அது" எனல். 311-ல் முதலால் தீர்ந்தது இடை, அவ் விடையால் தீர்ந்த இறுதியே கண்ணெனத் திருக்குறள் உணர்த்து வது இக் கண்ணையன்றோ?

ஆதியினின்று வந்த அந்தமே அழிவிலாக் கண்ணெனவும், அக் கண்ணெனும் அந்தம் ஆதியிடத்துச் செல்லா தெனவும் நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே இதில் திருக்குறள் விளக்குவ தறிக.

இச் செய்தியை நன்னூல் தொல்காப்பியத்தைப் போலவே விளக்கும் திருக்குறள், ஆதியை அந்தம் அறியாதென 319-ல்

விளக்குவதும் தொல்காப்பியம் கூறுவதை யன்றே? ஆமெனில், அவ்வாறு விளக்குவதில் காணும் கண்ணுேனே இக் கண்ணென் றேற்க மறுப்போருண்டோ? இக் கண்ணை இன்னும் கவனிப் போம். 38-ல் களவெனும் இடையைக் கொள்ளுமெனவும் 310-ல் வகையாற்றேறிய தெனவும் 311-ல் கெடலெனும் முதலால் ஓம்பப்படுவதெனவும் திருக்குறள் விளக்குவது இக் கண்ணை யன்றே? இக் கண்ணை இன்னும் கவனிப்போம்.

322. பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள

—தொ. உரியியல். 43

| | | |
|---|---|---|
| பை | நோய் | உள் |
| அ | | உம் |
| சிறுமை | | பொருள் |

முதலே 28-ல் **அ** 103-I ல் **சிறுமை,** இறுதியை 28-ல் **உம்** 108-ல் **உள்** 37-ல் **பொருள்** என்பதை இதிற் காட்டி, " இடை யெனும் நோயின் முதலே பை எனும் சிறுமை இறுதியே உள்ளெனும் பொருள் " எனல்.

323. மன்னுப் பொருளு மன்னவியற்றே

—தொ. இளவியாக். 34

| | | |
|---|---|---|
| ஆ | மன் | பொருள் |
| | மன்னன் | |
| | ப் | |

குறிப்பு 2-ல் முதலே ஆ, இடையை 17-ல் **வேந்து** 61-ல் **ப்,** இறுதியை 56-ல் **பொருள்** என்பதை இதில் காட்டி, " ஆ எனும் முதலுக் கிடையாகிய மன்னெனும் மன்ன னியற்றியதே இறுதி யாகிய பொருள்" எனல்.

324. படலாற்ரு பைத லுழக்குங் கடலாற்ருக்
காம நோய் செய்த வென் கண்

திருக். கண்விதுப் பழிதல். 5

| | | |
|---|---|---|
| காமம் | கடல் | படல் |
| தல் | நோய் | |
| வெ | ன் | கண் |
| பை | | |

102-ல் முதலே **காமம்** 2-ல் முதலே **தல்** 322-ல் **பை,** இடையை 158-ல் **கடல்** 322-ல் **நோய்,** இறுதியை 26-ல் **கண்** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, "படலெனும் அந்தத்தாலும்

கடலெனும் இடையாலும் ஆற்றப்படாத துன்புறும் காமமெனும் முதலின் இடையாகிய நோய் செய்த இறுதியே கண் '' எனல்.

முதலே இடையையும் இறுதியையும் ஆற்றுமல்லாது இடையோ இறுதியோ முதலை ஆற்றுதென விளக்குவ தறிக. ஆதிக்குத் துன்பம் எனும் நாமமுண்டென்பது பற்றித் துன்ப முறுதலென நூல்கள் கூறும்.

325\. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பிரிந்துள்ளல்
பைதனோய் செய்தார் கணில்

—திருக். நெஞ்சொடு கிளத்தல். 3

| | | |
|---|---|---|
| பை | நோய் | தன் |
| | | கண் |
| | | இல் |

இதிற் காணும் மேல் வரி 'உள்ளி, நெஞ்சு, உள், அல் என்ப வற்றை இவற்றின் நாமங்களென உணர்த்துவது', இங்கவை தேவையில்லை. 322-ல் முதலே பை இடையே நோய், இறுதியை 30-ல் தன் 26-ல் கண் 13-ல் இல் எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, "பை—தன் எனும் முதலிறுதிக்கு இடையாகிய நோயே இறுதியாகிய கண்ணெனும் இல்லைச் செய்தது '' எனல். 309-ல் சொல்லெனும் முதலே மேலெனும் இறுதியைக் கொள்வது என்று கூறவேண்டியதைத் திருக்குறள் அச் சொல்லைச் சொல்லன் எனக் காட்டி 'சொல்லன் மேற் கொள்பவர்' என உணர்த்துவது போல் மேற் காண்பதில் 'நோய் கண்ணைச் செய்தது' எனக் கூறுவதை இதில் 'நோய் கண்ணைச் செய்தார்' என உணர்த்துவ தறிக.

இவ்விரு பாக்களிலும் பை—நோய்—கண் என்பவற்றைக் காட்டி பை எனும் முதலே காமம் என உணர்த்துவதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க. நிற்க, நோய் செய்த கண்ணென 324-ல் காண்பதில் கூறும் திருக்குறள் இதில் நோய் செய்த கண்ணே இல்லென்ப தறிக.

324-ல் முதலையே காமம் எனத் திருக்குறள் கூறுவதாய் ஏற்க மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன். முதலை 102-ல் காமம் இடையை 300-ல் ஊடல் 13-ல் இன்பம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி ஊடலுவகை 10-ல் 'ஊடுதல் காமத்திற்கின்பம்' (அதாவது) காமத்தின் இடையாகிய ஊடுதலே இன்பம் எனத் திருக்குறள் விளக்குவது கண்டு இக் காமத்தையே 324—ல் எடுத்துக்

காட்டுவதாக ஏற்கலாமன்ருே? நிற்க, 310-ன் விளக்கத்தில் தொல்காப்பியத்திற்கிசைய 'நாணுடைமை மாந்தர் சிறப்பு' என உணர்த்தும் திருக்குறள் 102-ல் முதலே காமம் குறிப்பு 12-ல் இடையே நீர் 288-ல் இறுதியே நாண் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, நாணுத்துறவுரைத்தல் 4-ல் 'காமக் கடும் புன லுய்க்குமே நாண்' எனக் கூறி காமமெனும் முதலின் இடையாகிய புனல் அனுப்புமே நாண் எனும் இறுதியை என உணர்த்துவது கண்டேனும் திருக்குறள் விளக்குவது தொல்காப்பியம் கூறும் முதலெனும் காமத்தையே என்பத றிக. இன்னும் சந்தேகமிருந்தால் படர் மெலிந்திரங்கல் 3-ல் காமமும் நாணும் என உணர்த்துவதையும் இதே நூலில் அடுத்து நாண் என்பதைத் திருக்குறட் பாக்களே விளக்குவதையும் கண்டு நாண் என்பதெது? அதோடு தொடர்பாயுள்ள காமமெது? எனத் தீர்மானிக்க.

326. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து

—திருக். புணர்ச்சி மகிழ்தல். 2

| | | |
|---|---|---|
| மருந்து | பிணி | இழை |
| பிற | மன் | தன் |
| தானே | நோய் | |

முதலே 142-ல் மருந்து 189-ல் பிற 157-ல் தானே, இடையை 323-ல் மன் 322-ல் நோய், இறுதியை 30-ல் தன் எனத் திருமந்திரமும் தொல்காப்பியமும் கூறுவதைக் காட்டி, 184-ன் விளக்கத்தில் பின்னெனும் இறுதியாகிய இலக்கணமே இழை எனத் தொல்காப்பியம் கூறுவதையு முணர்த்தி, 325-ல் 'தன்னோய்' எனக் கூறி 'இடை நோய், இறுதியே தன்' என உணர்த்தும் திருக்குறள், அவற்றையே இதிற் காட்டி "தன்னெனும் இறுதியின் இடையாகிய பிணி எனும் நோய்க்கு உரியது முதலாகிய தானே எனும் மருந்து, அம் மருந்தெனும் பிறவுக் கிடையாகிய நோயே மன், அம் மன்னேயெனும் இடையை அணிவது (கொள்வது) இழையாகிய தன்னெனும் இறுதியே" எனல்.

பசப்பாவது பிரிவாற்ருமையான் வருவதோர் நிற வேறுபாடு, இது தலை மகனைக் காணப் பெருத வழி நிகழ்வது எனக் கொண்டு இதிற்கிசைய காமத்தைப் பொருத்திக் காட்டி இக் காமத்தோடு சேர்த்துக் கூறப்படும் நோயைக் காம மிகுந்து உண்டாகும் நோய்

எனக் கொள்வது உரைமுறைகளுக்கு இசைந்திருக்கலாம். இதை நான் எடுத்துக் காட்டும் கருத்து ஏற்குமா?

இடையாகிய அற்றே பசப்பெனவும், அப் பசப்பே ஊர்வது எனவும், அவ் வூர்வதெனும் பசப்பே ஊர்ந்தானெனும் இடையெனவும் திருக்குறளே தொல்காப்பியத்திற் கிசைய 298, 299, 300-ல் உணர்த்தக் கண்டோமல்லவா? இப் பசப்பைத் தொல்காப்பியத்திற் கிசைய இவ்வாறு உணர்த்தும் திருக்குறள், 324-ல் கண்ணெனும் இறுதியின் இடையே நோய் முதலே காமமெனவும் உணர்த்தும்போது 'இவற்றை பிரிவாற்றாமையால் காமம் மிகுந்து காணும் நோயென்றேற்க இடமுண்டா' என்பது பற்றிச் சிந்தித்துத் தெளிக. இன்னும் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

327. கழிநெடி லடியே கசடற கிளப்பின்

—நன். யாப். உறுபியல். 25

| | | |
|---|---|---|
| ச | க | கழி |
| ற | ட | அடி |
| | நெடில் | |

முதலை ச ற இடையை க, ட என 167, 172-லும், இடையை 257-ல் நெடுமை 174-ல் இறுதியே அடி என்பதை இதிற் காட்டி, 53-ல் 'இடையிறுதியை முதலே கிளப்பும்' என்பது போல் இதில் "ச ற எனும் முதல் கிளப்புவதால் உண்டாகும் இடையே நெடில் இறுதியே அடி" எனல். முதலே வழி இடையே பழி என்பதற் கிசைய இறுதிக்குக் கழி எனும் நாமமுண்டு. முன்னுரையில் சிறப்பின் அடி எனவும் குறிப்பில் ஆசிரியருக்கு உரிய அடி எனவும் கூறுவதை இதில் காட்டுவ தறிக.

328. காணுச் சினத்தான் கழி பெருங் காமத்தான்
பேணமை பேணப்படும்

—திருக். பகைமாட்சி. 6

| | | |
|---|---|---|
| காணுமை | பெரும் | கழி |
| சினத்தான் | | |
| காமத்தான் | | |

முதலை தோன்ற என 84-ல் தொல்காப்பியம் கூறுவதை 86—ல் ஆதியே காணுமை எனத் தாயுமானவரும் 144—ல் முதலே சினம் எனத் திருமந்திரமும், 102-ல் முதலே காமம் இடையை 111-ல் பெரும் இறுதியை 327-ல் கழி என நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, சினத்தை 'சினத்தான்' காமத்தைக்

'காமத்தான்' என்று உணர்த்தி, "பெரும் எனும் இடைக்கு ஆதியாகிய காணுச் சினத்தானென்றும் காமத்தானல் (தன்னைக் கொள்ளாத கழி எனும் அந்தம்) கொள்ளப்படும்" எனல். 307-ல் ஆதியே அந்தத்தைக் கொள்ளுமெனவும் 308-ல் அந்தம் இடையையே கொள்ளுமெனவும் கூறும் திருக்குறள், 'அந்தம் ஆதியைக் கொள்ளாது, அவ்வாறு தன்னைக் கொள்ளாத அந்தத்தையே ஆதி கொள்ளும்' என இதில் உணர்த்துவ தறிக. 291-ல் அந்தத்தைத் தெரிதல் என உணர்த்தும் திருக்குள் இதில் ஆதியை காணுமை என்பதறிக.

இதில் காணுச் சினத்தானே காமத்தான் எனக் கூறுவது 291-ல் அந்தமே தெரிதல் என்பதை நிச்சயிக்கும் நேர்மை காண்க. சினம் காமம் என்பவற்றைப் பல பாக்களில் முதலின் நாமமெனக் கூறும் திருக்குறள் இப் பாவில் சினத்தான் எனவும் காமத்தான் எனவும் உணர்த்தும் விபரம் கண்டு தெளிக. காமத்தைத் தெரிந்ததுபோல் நோயையும் சிறிது கவனிப்போம்.

329. ஏ வவுஞ் செய்கலான் றுன்தேரு னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்

—திருக். புல்லறிவாண்மை. 8

| | | |
|---|---|---|
| ஏ | வ | ஒ |
| அவ் | போ | உம் |
| தேருன் | ஓர் | |
| உயிர் | நோய் | |
| | அளவு | |
| | தான் | |

முதலை குறிப்பு 27-ல் ஏ 42-ல் **உயிர்** 28-ல் **அவ்**, இடையை 29-ல் **வ** 30-ல் **ஓர்** 322-ல் **நோய்** 36-ல் **தான்** 46-ல் **அளவு**, இறுதியை 275-ல் ஒ உம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "முதலாகிய உயிரெனும் தேருனே அவ்வெனும் ஏ, ஏ எனும் முதலால் செய்யப்படும் இடையாகிய வ, போ, ஓர், நோய் அளவு என்பதே தான், இறுதியே ஒ எனும் உம்" எனல். 252-I ல் இடையே **புல்** 11-ல் இறுதியே **அறிவு** 10-ல் முதலே **ஆண்மை** எனத் தொல்காப்பியம் கூறுவதையே மேலே அதிகார நாமமாய் அமைத்துக் காட்டும் திருக்குறள் வேறெதை விளக்கும்? 'காமம்—நோய்' என்பவை எதுவெனத் தெரிந்ததா? 307-ல் ஏ முற்றி இடைவரும் என்பதை இப்பா நிச்சயிப்ப தறிக.

155-ல் இறுதியே தெளிந்தார் எனத் திருமந்திரம் கூறுவதாலும் முதலிறுதிக்குப் பெரும் பாகம் எதிர் மறை நாமங்கள் உண்டென்பது பற்றியும் இப் பாவில் முதலைத் 'தேருன்' என்பது காண்க. இன்னும் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரம் காட்டு கிறேன்.

330. தேறினும் தேருவிடினும் அழிவின்கட்
தேருன் ப கா அ ன் விடல்

—திருக். பகைதிறந்தெரிதல். 6

| | | |
|---|---|---|
| தேருதது | கட் | தேறியது |
| அழிவு | | |
| தேருன் | ப | கா |
| அ | ன் | |

குறிப்பு 19-ல் முதலே அழிவு, இடையை 57-ல் ப 323-ல் ன் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 329-ல் காணும் தேருன் என்பதை இதில்உணர்த்தி, "முதல் தேருவிடினும் இறுதி தேறினும், இவற்றின் கட் எனும் இடையை விடல் (அனுப்புதல்) அழிவெனும் தேருனே" எனல். 318-ல் கூறுவதை இதில் அழிவின் கட் என்பதறிக.

தொல்காப்பியம் 'அழிவெனும் முதலினின்று வந்ததே கண்' ணென குறிப்பு 19-ல் கூறுவதற்கிசைய இதில் அழிவெனும் முதல் அனுப்புவதே இடையென விளக்கும் திருக்குறள் குறிப்பு 23-ல் முதலே வழி எனவும் குறிப்பு 20-ல் அம் முதலின் கண்ணே அழிவிலாதது எனவும் தொல்காப்பியம் கூறுவதை 321-ல் வழியினின்று வந்த கண்ணே அழியாதது என விளக்கும் விபரம் கண்டு திருக்குறள் விளக்குவது தொல்காப்பியக் கருத்தையே என்றேற்க.

இதில் 'தேருன் எனும் முதல் அனுப்பும் இடையே கட் எனவும், 329-ல் 'இத் தேருன் எனும் முதல் செய்வதே நோய்' எனவும் திருக்குறள் உணர்த்துவதைக் கவனித்தீர்களா? ஆமெனில், 324-ல் காம நோய் செய்ததே கண்ணென விளக்குவதை எவ்வா றேற்க வேண்டும். 321-ல் வழியினின்று வந்ததெனக் கூறும் அழிவிலாக் கண்ணையே 322-ல் காம நோய் செய்த கண் ணெனத் திருக்குறள் விளக்குவதாய் எவ்வித சந்தேகமுமின்றி இப் போதேனும் ஏற்கலாமன்றோ? பசப்பு, காமம், நோய் என்ப வற்றை நமதனுபவத்தில் உள்ளனவாகக் கருதலாமா? இன்னும் சந்தேகமிருந்தால் அதையும் களைய மீண்டும் சிறிது ஆராய்வோம்.

331. இலர் பலராகிய காரண நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்

—திருக். தவம். 10

சிலர் இலர் பலர்
காரணம்

8-ல் முதலிறுதியே **சில—பல** 32-ல் இடையே **இல** என நன்னூல் கூறுகிறது. 286-ல் நன்னூல் கூறும் பல எனும் இறுதியைப் 'பலர்' எனத் தொல்காப்பியம் உணர்த்துவதால் சில—இல என்பவற்றை சிலர்—இலர் என்று ஏற்கலாமன்றோ? இவற்றையும் 200-ல் இறுதியே **காரணம்** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி, "அந்தமாகிய காரணமெனும் பலரை இடையெனும் இலரே நோற்பார், சிலரெனும் முதல் அந்தமாகிய காரணம் என்னும் பலரை நோலாதவர்" எனல். இப் பாவின் கருத்தை இவ்வாறே ஏற்கவேண்டுமென்பதற்கு ஆதாரம் காட்டுகிறேன்.

332. மாதர் சான்ற வகையின் கண்ணும்

—தொ. கற்பியல். 6

... மாதர் சான்ற
வகை கண்

குறிப்பு 3-ல் இடையே **வகை** 106-ல் இறுதியே **சான்ற** என்பதை இதிற் காட்டி, 26-ல் இறுதியே **கண்** என்பதையும் உணர்த்தி "இடையெனும் வகையே மாதர், அம் மாதரெனும் வகையின் இறுதியெனும் கண்ணே சான்ற" எனல்.

333. மாதர் காதல்

—தொ. உரியியல். 39

... மாதர் ...
காதல்

268-ல் இடையே **காதல்** 332-ல் இடையே **மாதர்** என்பதை இதிற் காட்டி, "காதலெனும் இடையே மாதர், மாதரே காதல்" எனல்.

334. நெஞ்சின் மூடத்துளே நின்று முத்திதந்தானே

—திருமந்திரம். 2614

மூடம் முத்தி நெஞ்சு

"அந்தமாகிய நெஞ்சின் ஆதியாகிய மூடத்தினின்று வந்த இடையே முத்தி" எனல். 78-ல் முதலே **அறம்** எனும் தொல்காப்பியம் கற்பியல் 6-ல் 'அறம் புரி நெஞ்சு' எனக் கூறுவதையே இதில் திருமந்திரம் விளக்குவ தறிக.

335. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழி யென் னெஞ்சு

—நெஞ்சொடு கிளத்தல். 2

| | | |
|---|---|---|
| அவர் | காதல் | |
| | இலர் | |
| ஆ | க | நீ |
| நோ | வ | து |
| பேதைமை | வாழி | நெஞ்சு |
| | என் | |

18-ல் முதலே **அவர்** இடையை 333-ல் **காதல்** 32-ல் இல 209-I ல் **வாழி** 31-ல் என், இறுதியை 169-ல் **நீ** 234-ல் நெஞ்சு எனத் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதையே காட்டி, "அவரெனும் முதலே பேதைமை, இடையாகிய இலரெனும் வாழியே காதல், நெஞ்செனும் இறுதியே நீ" எனல்.

இதிற் காணும் சொற்களை அடுத்தடுத்து நூல்களே விளக்கும். நிற்க, 'இல' என நன்னூல் கூறும் இடையையே 331 ல் இலர் என உணர்த்தும் திருக்குறள், அதே இலரையும் 333-ல் இடையே 'காதல்' எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதிற் காட்டி 'இலரெனும் இடையே காதல், காதலெனும் இடையே இலர்' என உணர்த்துவது தெளிவாய்த் தெரிகிற தன்றோ? நிற்க, தொல் காப்பியம் இடையெனக் கூறும் 'இவ், ஊர்' என்பவற்றையே 319-ல் காட்டி 'அலர் தந்த இடையே இவ் வெனும் ஊர்' என உணர்த்தும் திருக்குறள் காதற் சிறப்புரைத்தல் 9, 10-ல் 'இலரெனும் இவ்வூர்' என உணர்த்துவது கண்டு, இடையாகிய இவ்வூரெனும் இலரையே இப்பாவில் உணர்த்துவதா யேற்க.

I பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்

—திருக். பேதைமை. 2

| | | |
|---|---|---|
| பேதைமை | கட் | உள் |
| | காதன்மை | எல்லாம் |
| | | தன் |
| | | கை |

335-ல் முதலே பேதைமை, இடையை 335-ல் **காதல்** 318-ல் **கட்**, இறுதியை 318-ல் **உள்** 306-ல் **எல்லாம்** 325-ல் **தன்** எனத் தொல்காப்பியத்திற்கிசைய உணர்த்தும் திருக்குறள் 164-ல் இறுதியே **கை** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி,

" அந்தமாகிய எல்லாமெனும் கையும் இடையாகிய காதன்மையும் பேதைமை எனும் ஆதியல்ல, அப் பேதைமை என்பது இடையாகிய காதன்மை எனும் கட்டென்பதையும் எல்லாமாகிய கை எனும் தன்னையும் செய்யும் ஆதி " எனல். 335-ல் காணும் பேதைமை இதுவே.

காமம், நோய், காதல், மாதர், பசப்பு எனும் சொற்கள் நாம் வழங்குபவையா யிருப்பினும் இவை நமது அனுபவத்திலுள்ளவை களைச் சுட்டுகின்றனவா? நிற்க, 333-ல் இடையே 'காதல்' 13-ல் இடையே 'சிறப்பு' எனத் தொல்காப்பியம் கூறுவதையே 'காதற் சிறப்புரைத்தல்' எனும் அதிகார நாமமாய்ச் சூட்டியிருப்பதும் அறிக. அதிகார நாமங்கள் இவ்வாறும் பாக்களில் காணும் சொற்கள் அவ்வதிகார நாமத்திற்கிசைய இவற்றின் நாமங்களாக வும் அமைந்திருப்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து சில ஆராய்ச்சி யாளர்கள் கலவிச் சுகத்தையும் காதலின் சிறப்பையும் காதலனைப் பிரித்தவள் கலங்கித் தவிப்பதையும் காதலியைப் பிரிந்த கணவன் கவலையுற்று காம நோய்க்களாகித் துடிப்பதையும் வள்ளுவர் வெகு அழகாகக் கூறியிருக்கிறுரென மிகைபடுத்திக் காட்டுவது திருக்குறளைப் புகழ்வதாகுமா? என்பது பற்றித் தீர்மானிக்க.

இடையே 'இவ்வெனும் ஊர்' எனத் தொல்காப்பியம் கூறு வதையே காட்டி காதற் சிறப்புரைத்தலில் இடையாகிய இவ்வெனும் ஊரே இலரெனவும், தொல்காப்பியம் இடையே 'காதல்' என்ப தைக் காட்டி 305-ல் இடையெனும் காதலே இலரென்றும் விளக்கும் திருக்குறள் காதல், இவ், ஊர், எனும் நாமங்களை யுடைய இலரையே 331-ல் காட்டி 'காரணமாகிய பலரெனும் இறுதியைச் செய்யும் இடையே இலரென்று கூறும் போது' இதை மறுத்தற் கிடமுண்டா? இப் பா 'தவம்' எனும் அதிகாரத்தில் காண்பதால் அதிற்கிசைய இப் பாவின் கருத்தை ஏற்கவேண்டும் எனச் சிலர் நினைக்கலாம். ஆகையால் தவம் என்பதைத் திருக் குறளே விளக்குவதைக் காட்டுகிறேன்.

**336.** அறிவிலா நெஞ்சுவந் தீதல் பிரிது யாதும்
இல்லை பெறுவான் தவம்

—திருக். புல்லறிவாண்மை. 2

அறிவிலான் தவம் நெஞ்சு

334-ல் முதலே மூடம் இறுதியே நெஞ்சு எனத் திருமந்திரமும், இடையை 263-ல் ஔவை குறளும் 259-ல் திருமந்திரமும் **தவம்**

என்பதையே இதிற் காட்டி, " அறிவிலான் எனும் ஆதியின் அந்த மாகிய நெஞ்சைத் தருவது இடையாகிய தவமே, இதை நெஞ்சைப் பெறுவது (ஈன்றெடுப்பது) தவமென்றும் ஏற்க " எனல்.

264-ல் அந்தமெனும் அறிவைச் செய்த தவத்தை 'அறிவை ஈன்ற தவம்' என ஔவை குறள் உணர்த்துவது போல் இதில் திருக்குறள் விளக்குவதறிக.

குறிப்பு 12-ல் முதலே தீ குறிப்பு 14-ல் முதலே ஆண்டு, 77-ல் இறுதியே இவள் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, புணர்ச்சி மகிழ்தல் 4-ல் 'தீ யாண்டு பெற்ருளிவள்' இவளெனும் இறுதியைத் தீ யாண்டெனும் முதலீன்றது என்பது போல இதில் நெஞ்சைப் பெறுவது தவம் என்பதறிக.

337. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத் தொடு
தானஞ் செய்வாரிற் றலை

—திருக். வாய்மை. 5

| | | |
|---|---|---|
| மனம் | வாய்மை | இற் |
| தலை | மொழி | |
| தானம் | தவம் | |

முதலை 96-ல் **மனம்** குறிப்பு 24-ல் **தலை** 78-ல் **அறம்,** இடையை 110-ல் **வாய்** 5-ல் **மொழி** 259-ல் **தவம்,** இறுதியை 13-ல் **இல்** எனத் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதையே காட்டி, வாயை வாய்மை என உணர்த்தி, "முதலாகிய மனத்தினுடைய இடையாயுள்ள தவமெனும் மொழியே வாய்மை இறுதியே இல், இடையாகிய வாய்மை எனும் தவத்தினுடைய முதலே மனமெனும் தானம், இத் தவம் செய்யும் இல்லே இறுதி தானமே தலை" எனல். 310-ல் கண்ணெனும் இறுதியைத் தோற்றுவித்த இடையே **வகை** எனவும் 337-ல் மனமெனும் முதலினுடைய இடையே தவமெனும் **வாய்மை** எனவும் உணர்த்துவதை வெவ்வேருய் ஏற்கலாகாதென்று எச்சரிக்கவே குடிமை 3-ல் 'வகை யென்னும் வாய்மை' எனத் திருக்குறள் புகட்டியுள்ள விபரம் இப்போதேனும் தெரிந்ததா ?

மனத்தினுடைய வாய்மை எனவும் தவத்தினுடைய தானம் எனவும் தொடர்பை உணர்த்துவது 'மனத்தினுடைய வாய்மையே தவம், அத் தவத்தினுடைய தானமே மனம்' என்று புகட்டு தற்கே. இத் தானம்—தவம் என்பவைக்கு தலை—மொழி எனவும் நாமமுண்டெனக் காட்டி மொழி எனும் தவமே இல்லெனும் இறுதியைச் செய்யும் என்று இதில் விளக்குவதைக் கவனித் தீர்களா ? **நெஞ்செனும் இறுதியை ஈன்றெடுப்பது அதாவது ஈதல்**

இடையெனும் தவமே என 336-ல் திருக்குறள் உணர்த்துவது இத் தவத்தையே, இதிற் சந்தேகமிருந்தால் அதிற் காணும் நெஞ்சையும் திருக்குறளைக் கொண்டு விளக்குகிறேன், அது கண்டேனும் தெளிக.

338. அவர் நெஞ் சவர்க் காதல் கண்டு மெவனெஞ்சே
நீ எமக் காகா தது

—திருக். நெஞ்சொடு. 1

| | | |
|---|---|---|
| அவர் | எவன் | நெஞ்சு |
| | | நீ |
| | | எமக்கு |

தொல்காப்பியத்திற் கிசைய 291-ல் முதலே அவர் இறுதியை 335-ல் நீ 319-ல் எமக்கு எனக் கூறும் திருக்குறள், 334-ல் இறுதியே நெஞ்சு எனத் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதையும் இதில் உணர்த்தி, (தொல்காப்பியத்திற் கிணங்க 307, 309-ல் 'ஆதி அந்தத்தையே கொள்ளும்' என உணர்த்தும் திருக்குறள் இதில்) "அவரெனும் முதலில் இறுதியாகிய நெஞ்சு அவரெனும் முதலுக்கே உரியதெனக் கண்டு, அந் நெஞ்சாகிய நீ எனும் எமக்கு அவரெனும் முதல் ஆகாததென்றறிக, இவற்றினிடையே எவன்" எனல்.

335-ல் இடையே காதல் எனும் இலர் இவ்விலரின் இறுதியாகிய நெஞ்சே நீ எனத் திருக்குறள் விளக்குவது இதிற் காணும் நீ எனும் நெஞ்சை யன்றோ? (291-ல் சொல்லின் இடையைத் தெரிந்து நன்கெனும் இறுதியை உணர்ந்து சொல்லுக என்றெச்சரிக்கும் பாவில் அச் சொல்லெனும் முதலே அவர் எனத் திருக்குறள் கூறுவது) நெஞ்செனும் இறுதியைக் கொள்ளும் முதலே அவர் என இப் பாவில் உணர்த்துவதை யன்றோ?

337, 338-ல் காணும் 'தவம், நெஞ்சு' என்பவற்றையே 336-ல் காட்டி 'நெஞ்செனும் இறுதியைத் தரும் இடையே தவம்' எனத் திருக்குறள் உணர்த்துவது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? தவம் என்பதை இடையின் நாமமெனத் திருக்குறளே உணர்த்தும் போது 331-ல் 'இலரே பலரை நோற்பார், சிலர் பலரை நோலாதவர்' எனும் பாவின் கருத்தை (அப் பா தவமெனும் அதிகாரத்தில் காண்பதால்) தவம் புரியாததால் நல் கூர்வார் பலரும் புரிந்ததால் செல்வர்கள் சிலருமெனக் கொள்வதெப்படி? உரை முறைகளின் கருத்தாகிய இது ஓர் வகை நன்மை பயப்பதெனினும் நான் காட்டும் கருத்தை நிச்சயிக்க இவ்வாறு எடுத்துக்

காட்ட வேண்டியது அவசியமல்லவா? 338-ல் காணும் நெஞ்சைத் தந்த முதலே 336-ல் அறிவிலான் எனக் கூறுகின்றதல்லவா? அதைக் கவனிப்போம்.

"இடையை 54-ல் **மயங்குதல்** எனவும் 214-ல் **மறை** எனவும் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி புல்லறிவாண்மை 7-ல் 'அறிவிலான் செய்யும் அரு மறை சோரும்' என விளக்கும் திருக்குறள் 336-ல் உணர்த்துவது இதே அறிவிலானையே. மிறக, 309-ல் முதலே **சொல் வல்லது** எனத் தொல்காப்பியத்திற்கிசைய உணர்தும் திருக்குறள் 193-ல் முதலே **அல்** லெனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி சொல் வன்மை 7-ல் சொலல் வல்லன் சோர்விலன் என விளக்குகின்றது. இடை சோரும் முதல் சோர்விலாதது எனத் திருக்குறள் விளக்குவதோடு இச் சோர்வுறும் இடையைச் செய்த முதலே அறிவிலான் எனவும் உணர்த்துவது கண்டு தெளிக."

**339.** கூழை விரித்தல் காதொன்று களைதல்

—தொ. மெய்ப். 14

| | | |
|---|---|---|
| காது | கூழ் | ... |
| ஒன்று | | |

268-ல் முதலே ஒன்று என்பதை இதிற் காட்டி, "ஒன்றெனும் முதலே காது, அக் காதெனும் ஒன்று விரித்துவிடுவதே (செய்தனுப்புதலே) கூழெனும் இடை" எனல்

**340.** ஆ கூழாற் றோன்று மசைவின்மை கைப் பொருள்
போ கூழாற் றோன்று மடி

—திருக் ஊழ். 1

| | | |
|---|---|---|
| ஆ | போ | கை |
| | கூழ் | அசைவிலாதது |
| மடி | | பொருள் |

குறிப்பு 2-ல் முதலே ஆ, இடையை 339-ல் **கூழ்**, இறுதியை 164-ல் கை 56-ல் பொருள் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆ எனும் முதலுக் கிடையாகிய கூழால் தோன்றும் அசைவிலாக் கைப் பொருளே இறுதி, போ எனும் கூழாலேயே முதலாகிய ஆ எனும் மடியும் தோன்றும்" எனல். மடி என்பது அடுத்து விளக்கப்படும். 329-ல் அம்—உம் எனும் முதலிறுதியின் இடையே போ எனக் கூறும் திருக்குறள் இதில் அப் **போ** எனும் இடையே **கூழ்** என்பதறிக.

291-ல் இடை தெரிந்து சொல்லுக எனவும், 295-ல் திறமெனும் இடையைத் தெரிந்தால் தேறலாம் எனவும் கூறும் திருக்குறள்,

இதில் இடையெனும் கூழைத் தெரிந்தால் அதற்கு முதலிறுயாகிய மடியும் அசையாக் கைப் பொருளும் தோன்றும் (காணலாம்) என்பதறிக.

303-ல் அந்தமாகிய ஊக்கத்தை 'அசைவிலா ஊக்கம்' என்பது போல் இதில் 'அந்தமாகிய கை எனும் பொருளை அசைவிலாதது' என உணர்த்துவ தறிக. தெளிவோருக்கு இது போருதா?

239-ல் இடையே கூழ் எனக் கூறும் தொல்காப்பியம் 14-ல் இடையே வினை யெனவும் கூறுகின்ற தன்றோ? இதற்கிசையவே திருக்குறள் 'ஊழ்' எனும் அதிகாரத்தில் இடையை 'கூழ்' என உணர்த்தும் விபரம் காண்க.

தவம் எனும் அதிகாரத்தில் காணும் அப் பாவை 'தவத்திற்கு ஏற்க ஏழைகள் பலரும் செல்வர்கள் சிலரும்' என்பது போல், ஊழ் எனும் அதிகாரத்தில் காணும் இப் பாவை 'செல்வம் மிகும் ஊழ் முயற்சியையும், அது குறையும் ஊழ் மடியையும் தரும்' எனக் கருதப்படுகிறது. இவற்றை ஆழ்ந்து சிந்தித்து பாக்களின் கருத்தைத் தீர்மானிக்கவும். இன்னும் சந்தேகமிருந்தால் கூழ் என்பதைத் திருக்குறளே தெளிவுபடுத்துவதை எடுத்துக் காட்டுகிறேன். அதைக் கண்டேனும் சந்தேகத்தை அடியோ டொழிக்க.

341. கூழுங் குடியு மொருங் கிழக்குங் கோல் கோடிச்
சூழாது செய்யு மரசு

—திருக். செங்கோன்மை 4

| | | |
|---|---|---|
| கோல் | கூழ் | குடி |
| | ஒரு | |
| கிழக்கு | அரசு | கோடி |

முதலை 37-ல் கிழக்கு 70-ல் கோல், இடையை 239-ல் கூழ் 50-ல் ஒரு 17-ல் வேந்து, இறுதியை 269 ல் குடி 267-ல் கோடி எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "முதலெனும் கிழக்கே கோல், இடையெனுங் கூழே ஒரு எனும் அரசு, இறுதி யெனும் கோடியே குடி, கோடி எனும் இறுதியைக் கோலெனும் முதல் நெருங்காமல் செய்வது அரசெனும் இடையே" எனல். தொல்காப்பியத்திற் கிசைய ஆதியை அந்தம் அறியாதென 319-லும் ஆதியை அந்தம் அணுகாதென 321-லும் கூறும் திருக்குறள், 88-ல் ஆதியை அந்தம் அறியாமலும் அணுகாமலும் செய்வது இடையென நன்னூல் கூறுவதையே இதில் 'கோலைக் கோடி சூழாமல் செய்வது அரசே' என விளக்குக்கும் விபரம் காண்க.

296-ல் அந்தணர் எனும் அந்தத்திற்கும் நூல் எனும் இடைக்கும் ஆதியாய் நிற்பதெனத் திருக்குறள் கூறுவது இக் கோலன்றோ ? 240-ல் மடியையும் கைப் பொருளையும் தோன்றச் செய்யுமெனத் திருக் குறள் கூறுவது இக் கூழன்றோ? 296-ல் கோலை மன்னவன் கோல் எனத் திருக்குறள் கூறுவது இவ் வரசை யன்றோ? இவ்வோர் பா எத்தனை பாக்களின் கருத்தை நிச்சியிக்கிற தென்பது தெரிந்ததா?

மற்றோர் செய்தியை இங்கெடுத்துக் காட்டுகிறேன். 265-ல் இடையே பத்து 219-ல் முதலே தீமை 267-ல் இறுதியே கோடி எனக் கூறும் தொல்காப்பியம் 177-ல் முதலிடை யிறுதியைத் 'தலை யடுத்த மடலின் கண்ணும்' என்றும் கூறுகிறது. இது பற்றியே திருக்குறள் பெரியாரைத் துணைக் கோடல் 10-ல் 'பல்லார் பகை கொளலிற் பத்தடுத்த தீமை' அந்தமாகிய இல்லெனும் பல்லாரைக் கொள்வது இடையாகிய பத்தை அடுத்து ஆதியாயுள்ள பகை எனும் தீமையே என்று உணர்த்துகிறது. இதில் இவ்வாறு இடையெனும் பத்தை அடுத்த தீமையென முதலைக் காட்டும் திருக்குறள் தீ நட்பு 7-ல் 'பத்தடுத்த கோடியுறும்' என உணர்த்தி இடையெனும் பத்தை அடுத்த கோடியென்று இறுதியைக் காட்டுகிறது. இக்கோடியை யன்றோ ஆதியாகிய கோலின் அந்தமென 341-ல் திருக்குறள் விளக்குவது ?

இவை அனைத்து மிருக்கட்டும், 'சொல்லின் வகையை அறியார்' எனவும் 'வகை யென்ப வாய்மை' எனவும் திருக்குறள் உணர்த்துவதாக நான் முன்னுரையில் காட்டியது ஞாபக மிருக்க லாம், அதைச் சிறிது கவனிப்போம். 341-ல் 'கோடி எனும் இறுதியே குடி' எனக் கூறும் திருக்குறள் குடிமை 3-ல் 'வகை யென்ப வாய்மைக் குடிக்கு' என உணர்த்தி, இடையாகிய வகை என்னும் வாய்மை அந்தமாகிய குடிக்கே உரியது என விளக்கும் விபரம் காண்க. 310-ல் 'வகையாற் றேறிய கண்' எனவும் 308-ல் அக் கண் களவு எனும் இடையையே கொள்ளும் எனவும் உணர்த்தும் திருக்குறள் அச் செய்தியையே பெயர்களை மாற்றி வகை யெனும் வாய்மை குடிக்கே உரியதென விளக்கும் விபரம் காண்க. நிற்க, கோடியைக் கோல் சூழாமற் செய்வது அரசெனும் கூழ் என 341-ல் உணர்த்தும் திருக்குறள் 340-ல் இக் கூழையே காட்டி 'மடி—பொருள் எனும் ஆதியந்தத்தைத் தோற்றுவிக்கும் இடையே கூழ்' என விளக்கும் போது இக் கூழை ஊழென்று ஏற்கலாமா? இன்னும் சிறிது கூழ் என்பதைக் கவனிப் போம்.

342. அமிழ்தினு மாற்ற வினிதே தம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

—திருக். புதல்வரைப் பெறுதல். 4

| | | |
|---|---|---|
| சிறு | அமிழ்து | கை |
| தம் | இன் | இனிது |
| | கூழ் | மக்கள் |

முதலே 23-I ல் **சிறு தம்**, இடையை 290-II ல் **அமுதம்** 35-ல் **இன்** 239-ல் **கூழ்**, இறுதியை 164-ல் கை 290-III ல் இனிது 222-ல் **மக்கள்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "இன்னுகிய அமிழ்த மெனும் இடை ஆற்றியதே (தம்மெனும் ஆதிக்கு) அந்த மாகிய மக்களெனும் இனிது, இத் தம்—மக்கள் எனும் ஆதியந்த மாகிய சிறு—கை என்பவைக்கு இடையில் இவற்றை அளாவி யுள்ள அமிழ்தே கூழ்" என்பதறிக. 340, 341-ல் காண்பது போல் இதிலும் 'கூழ்' என்பது இடையெனவே திருக்குறள் விளக்கும் விபரம் தெரிந்ததா? இக் கூழை ஊழென் றேற்ப தெப்படி? 'இனிது' என்பதையும் சிறிது கவனிப்போம். மனைவி மக்களைச் சதமென்றெண்ணி உலக வாழ்வில் மூழ்கிக் கிடக்க வள்ளுவர் சர்வ சுதந்திரம் தந்துள்ளதாகத் தீர்மானித்துத் தவிப் போர் விழித்தெழ இவ்வதிகாரத்தில் உள்ள சில பாக்களை விளக்கு கிறேன்.

343. குன்றுவ செய்த விலர்

—திருக். குடிமை. 4

| | | |
|---|---|---|
| ... | இலர் | குன்றுவ |

119-ல் இறுதியே **குன்றுவ** எனத் தொல்காப்பியம் கூறு வதையே காட்டி, (331-ல் பலரைச் செய்யும் இடையே இலரென வும், 335-ல் இலரே காதலெனும் இடையெனவும், அந்த இலரே இவ்வெனும் ஊர் எனவும் உணர்த்தும் திருக்குறள் அவ்விலரையே இதிற் காட்டி) "இலர் எனும் இடையே குன்றுவ எனும் இறுதி யைச் செய்தது" எனல். பாக்களின் தொடர்பு இவ்வாறிருக்க இதைச் சிறிதும் கவனியாததோடு கவனிப்போரையும் குறை கூற லாமா?

344. பெருகலிற் குன்ற லினிது

—திருக். தீ நட்பு. 1

| | | |
|---|---|---|
| பெருகல் | ... | குன்றல் |
| | | இனிது |

104-ல் ஆதியைப் **பெருகல்** எனத் தொல்காப்பியம் கூறு வதையே காட்டி, தொல்காப்பியத்திற்கிசைய 342, 343-ல் இறு

தியை இனிது குன்றுவ எனக் கூறும் திருக்குறள் அவற்றையும் இதில் உணர்த்தி, "ஆதியாகிய பெருகலிற் (தொடர்பாயுள்ள) குன்றலெனும் இறுதியே இனிது" எனல். 'இலரென்னும் இடை செய்த இறுதியே குன்றுவ எனவும், இக்குன்றுவ எனும் இறுதியே ஆதியாகிய பெருகலிற் றேன்றும் குன்றலெனும் இனிது' எனவும் உணர்த்தும் திருக்குறள், இதே இனிதை யன்றோ 342-ல் அமிழ்த மெனும் இடையால் ஆற்றப்பட்ட இனிது என விளக்குகிறது.

343-ல் இடையெனும் இலர் செய்வதே குன்றுவ எனவும், 344-ல் அக்குன்றுவ எனும் இறுதியே இனிது எனவும், 342-ல் அவ் விறுதியாகிய இனிதை ஆற்றிய இடையே அமிழ்தெனும் கூழ் என வும், 341-ல் இக் கூழே கோலும் கோடியும் ஒன்றை யொன்று சூழாது செய்யும் அரசு எனவும், 340-ல் இவ்வரசெனும் கூழே பொருள்—மடி எனும் முதலிறுதியைத் தோற்றுவிக்கும் எனவும் ஒன்றையொன்று தழுவி தொல்காப்பியத்திற் கிசையத் திருக் குறளே விளக்கும்போது இக்கூழை நாம் உண்ணும் கூழ் எனவோ ஊழெனவோ ஏற்பதெப்படி?

நிற்க, 'இடையாகிய பத்தை அடுத்துள்ள முதலே கோல் இறுதியே கோடி' எனத் தொல்காப்பியத்திற் கிசைய 341-ன் விளக்கத்தில் உணர்த்தும் திருக்குறள், அக் 'கோல்—கோடி' என் பவற்றையே காட்டி 341-ல் 'கோலெனும் ஆதி கோடி எனும் அந் தத்தை நெருங்காது செய்யும் இடையாகிய பத்தே கூழெனும் அரசு' என விளக்கும்போது இவ்வரசை நாட்டை ஆளும் மன்னவ னென்றும் கோலை அவன் கைச் செங்கோல் எனவும் தீர்மானிக்க இடமுண்டா?

342-ல் காணும் 'இனிது' என்பதை விளக்கியதுபோல் அதிற் காணும் 'தம்—மக்கள்' என்பவற்றை முதலிறுதியின் நாமங்க ளாகவே ஏற்க வேண்டுமென்பதற்கு ஆதாரங் காட்டுகிறேன்.

345. தம்பொரு ளென்ப தம்மக்கள் அவர்பொரு
டந்தம் வினை யால் வரும்.

—திருக். புதல்வரைப் பெறுதல். 3

| | | |
|---|---|---|
| தம் | வினை | பொருள் |
| அவர் | | மக்கள் |
| | ... | அந்தம் |

தொல்காப்பியத்திற்கிசைய முதலிறுதியைத் 'தம்—மக்கள்' என 342-ல் உணர்த்தும் திருக்குறள், இதில் 'தம்—மக்களே அவர் —பொருள்' எனப் புகட்டி, (311-ல் வினை எனும் இடையின்

முதலே வினையின் இறுதியை ஓம்பல் என உணர்த்தும் திருக்குறள்) அவ் வினையையும் இதில் இடையெனக் காட்டி, "மக்களாகிய பொருளெனும் அந்தம் இடையெனும் வினையால் வரும்" எனல். 296-ல் அறமெனும் சோலே ஆதியெனக் கூறும் திருக்குறள் அவ்வாதிக்கு அந்தம் இதுவெனக் காட்ட வேண்டுமென்பது பற்றி இதில் அந்தமே பொருள் என உணர்த்துவ தறிக. 291-ல் முதலே அவர் 295-ல் இறுதியே பொருள் எனத் தொல்காப்பியத்திற் கிசைய உணர்த்தும் திருக்குறள் அவற்றையே இதிற்காட்டி 'அவரே தம், பொருளே மக்கள்' என்பதறிக. இன்னும் கவனிப்போம்.

I. தம்மிற் றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் னுயிர்க் கெல்லா மினிது

—திருக். புதல்வரைப் பெறுதல். 8

| | | |
|---|---|---|
| தம் | மன் | இற் |
| நிலம் | | மக்கள் |
| உயிர் | | அறிவுடைமை |
| | | மா |
| | | எல்லாம் |
| | | இனிது |

[illegible]-ல் அறமெனும் முதலே உயிர் 302-ல் கிழவனிருப்பே நிலம், 326—ல் நோய் எனும் இடையே மன், இறுதியை 320-ல் அறிவான் 244-ல் குன்றலே இனிது எனத் தொல்காப்பியத்திற் கிசைய உணர்த்தும் திருக்குறள் அவற்றை இதிற்காட்டி, "தம்மெனும் நிலத்து அந்தமாகிய இல்லெனும் மக்களே அறிவுடைமை, மன்னெனும் இடையின் ஆதியாகிய நிலமெனும் உயிருக்கு உரியது அந்தமாகிய எல்லா மென்னும் இனிதே" எனல்.

'எல்லா மென்னும் இனிதே மக்கள், நிலமெனும் உயிரே தம்' என இதில் உணர்த்தும் திருக்குறள் இத் தம்—மக்கள் என்பவற்றையே 345—ல் காட்டித் 'தம்மெனும் ஆதியே அவர் மக்களெனும் அந்தமே பொருள்' என விளக்கும் விபரம் தெரிந்ததா? இதே 'தம்—மக்கள்' என்பவற்றைக் காட்டித் 'தம்மெனும் ஆதியே சிறு, அந்தமாகிய மக்களே இனிதெனும் கை, இச் சிறு—கை எனும் ஆதி யந்தத்தை அளாவியுள்ள அமிழ்தெனும் இடையே கூழ் என 342—ல் திருக்குறள் புகட்டுவதைச் சீர்தூக்கிச் சிந்தித்துத் தெளிந்தால் 'அவரவர் பெற்ற மக்களின் சிறு கை குளப்பிய கூழ் அவரவருக்கு அமுதம்' என வள்ளுவர் உணர்த்துவதாக ஏற்கத் துணிவரோ? இன்னும் சந்தேகமிருந்தால்

திருக்குறளே 'மகன்' என்பதை விளக்கும் விபரத்தை எடுத்துக் காட்டுகிறேன், கண்டேனும் தெளிக.

346. கொல்லே ஐயம்

—தொ. இடையியல். 20

ல் லே கொ

ஐயம்

85-I-ல் முதலே ல் என்பதை இதிற்காட்டி, இடைக்கு லே இறுதிக்கு கொ எனும் எழுத்துக்களை நாமமென உணர்த்தி, "லே எனும் இடையே ஐயம்" எனல். இதை நிச்சயிக்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன். 54-ல் இடையை 'மயங்குதல்' எனக் கூறும் தொல்காப்பியம் களவியக்கம் 23-ல் 'மயக்குற்ற ஐயம்' என்று உணர்த்துவது கண்டு இடையின் நாமமே ஐயமென்றேற்க.

347. இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ் செய்கின்ற குழவி

—திருமந்திரம்.

இரவு பகல் குழவி

குரவன்

163-ல் முதலிடையை இரவு—பகல் இடையை 110-ல் வேலன் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "இரவு—பகல் என்னும் முதலும் இடையும் அல்லாத குழவி எனும் இறுதியைச் செய்வது பகலெனும் குரவனே" எனல். தொல்காப்பியம் வேலன் என்று கூறும் இடையையே திருமந்திரம் குரவன் என்பதறிக. தொல்காப்பியத்திற் கிசைய 242-ல் மன்னனெனும் இடையே 'பரிசு' எனும் திருவாசகம் கீர்த்தித் திருவகவல் 69-ல் 'பாலகனுகிய பரிசு' பரிசெனும் இடையினின்று பாலகனுகியது எனல்.

348. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு

—திருக். பொருள் செயல். 7

... அருள் பொருள்

அன்பு குழவி

செவிலி செல்வம்

இடையை 193-ல் அருள் 89-ல் அன்பு 232-ல் செவிலி, இறுதியை 56-ல் பொருள் 347-ல் குழவி 192.ல் செல்வம் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "இடையாகிய செவிலியா லுண்டான இறுதியாகிய செல்வமே அருளெனும் அன்பு ஈன்ற பொருளெனும் குழவி" எனல்.

316-ல் தூதெனும் இடையே அன்பு எனத் திருக்குறள் கூறுவது இதிற் காண்பதையே. 318-ல் ஊரெனும் அற்று பழுத்துத் தோன்றும் இறுதியே பயனெனும் செல்வம் எனக் கூறுவது இதிற் காண்பதையன்றோ ? 345-ல் வினையால் வரும் இறுதியே பொருள் என்று கூறுவது இதிற் காண்பதையன்றோ? அம்மூன்று பாக்களும் இப்பாவின் கருத்தை நிச்சயிப்பதறிக, இதிற் காணும் குழவி என்பதைக் கவனிப்போம்.

349. மகன் றந்தைக் காற்று முதவி இவன்றந்தை
என் னோற்றான் கொல்லெனுஞ் சொல்

—திருக். புதல்வரைப் பெறுதல் 10

| | | |
|---|---|---|
| தந்தை | என் | மகன் |
| சொல் | | இவன் |
| ல் | | கொ |

முதலை 80-ல் **தந்தை** 49-ல் **சொல்** 346-ல் **ல்**, இடையை 31-ல் **என்**, இறுதியை 222-ல் **மகன்** 77-ல் **இவன்** 346-ல் **கொ** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, ஆதி அந்தத்தையே கொள்ளுமெனத் தொல்காப்பியம் கூறுவதை பல பாக்களில் உணர்த்தும் திருக்குறள் "அந்தமாகிய மகனெனும் இவன் உதவி செய்வது தந்தையாகிய சொல்லெனும் ஆதிக்கே, அச்சொல்லெனும் ஆதி நோற்பதே என்னெனும் இடை" எனல்.

350. ஆதி செவி அறிவோடை அறிவுயிரே.

—ந. உரியியல். 8

| | |
|---|---|
| ஆதி | அறிவு |
| செவி | |
| ஐ | |
| உயிர் | |

முதலை 339-ல் **காது** 26-ல் **ஐ** 40-ல் **உயிர்**, இறுதியை 11-ல் **அறிவு**. எனத்தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, "அந்தமெனும் அறிவினுடைய ஆதியாகிய செவியே ஐ எனும் உயிர்" எனல்.

351. அழிகின்ற ஒருடம்பு ஆகும் செவி கண்

—திருமந்திரம். 2140.

| | | |
|---|---|---|
| அழிகின்ற | ஓர் | உடம்பு |
| செவி | | கண் |

19-ல் முதலே **அழிவு** 350-ல் முதலே **செவி**, இடையை 30-ல் **ஓர்**, இறுதியை 17-ல் **உடல்** 26-ல் **கண்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "ஆதியாகிய அழியும் செவியினின்றே அந்தமாகிய கண்ணெனும் உடம்பாகும்" எனல்.

352. மக்கண் மெய் தீண்டல் உடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட வின்பஞ் செவிக்கு

—திருக். புதல்வரைப். 5.

| | | |
|---|---|---|
| சொற் | மக் | கண் |
| | இன்பம் | மெய் |
| செவி | மற்றவர் | உடல் |

முதலை 49-ல் சொல் 350-ல் செவி, இடையை 16-ல் இன்பம்இறுதியை 26-ல் கண் 40—ல் மெய் 17-ல் உடல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி,"அந்தமாகிய உடற்கு இடையாகியஇன்பமே ஆதியாகிய செவிக்கு இடையாகிய மற்றவர், அம்மற்றவர் எனும் இன்பம் மெய்யெனும் கண்ணைத் தீண்டத்தக்க விதத்திலிருப்பினும் அவ்வின்பம் கேட்பது சொல்லெனும் ஆதியையே" எனல். 76-ல் 'இடைக்கு உரியது ஆதியே' எனத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய இதில் 'இன்பம் கேட்டது சொல்லையே' என விளக்குவதறிக.

இம்மூன்றுள் இது இதற்கு உரியது எனவும், இக்காரணம் பற்றி இது இதைக் கொள்ளுமெனவும் நூல்கள் கூறக் கண்டோமல்லவா? இதை முன்னிட்டு எது எதைக் கொள்ளுமோ அது அதை நினைப்பது, எண்ணுவது, கேட்பது, பாராட்டுவது, தேடுவது என நூல்கள் உணர்த்தும். அம்முறையில் 'இன்பமெனும் இடை கேட்பது சொல்லெனும் முதலையே' என்பதறிக.

342, 345-ல் காணும் பாக்களில் 'மக்கள்' என இறுதியைக் கூறும் திருக்குறள் இதில் 'மக்கண்' என்று கூறுவது, 345 I-ல் இடையைக் காட்டி முதலை உணர்த்த 'மன்னுயிர்' என்பதுபோல 352-ல் இடையைக் காட்டி இறுதியை உணர்த்த 'மக்கண்' என்பதறிக.

இன்பமெனும் இடை கேட்டது சொல்லெனும் ஆதியையே என நான் எடுத்துக்காட்டியிருப்பதில் சந்தேகமிருந்தால் அதற்கும் தக்கதோர் ஆதாரத்தை எடுத்துக் காட்டுகிறேன்.

353. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச் சொற் கேளாதவர்

—திருக். புதல்வரைப். 6

| | | |
|---|---|---|
| தம் | யாழ் | குழல் |
| | மக் | இனிது |
| சொற் | இ | கண் |
| | | மழலை |

முதலிடையிறுதிக்கு கழல்—அழல்—குழல் எனும் நாமங்கள் உண்டு. அவ்விவரத்தை ஔவைகுறள் அங்கிதாரணையில் 'எரியுங்

கழல் போலுள்ளுற நோக்கிற்' எனவும் அங்கியிற் பஞ்சில் 'அசபை அறிந்துள்ளே யழலெழ நோக்கில்'' எனவும் கூறுவதில் காணலாம்.

342–ல் தம்-இனிது 352-ல் சொல்-கண் என முதலிறுதியைக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டி, "தம்மெனும் முதலின் இடையே யாழ் இறுதியே குழலாகிய இனிதெனும் கண், அக் கண்ணாகிய மழலை எனும் இறுதி சொல்லெனும் முதலைக் கேளாது" என்பதறிக. புதல்வரைப் பெறுதலில் உள்ள ஏழு பாக்களை விளக்கியிருப்பதைக் கூர்ந்து கவனித்தால் மாதரை மணந்து மக்களைப் பெற்று மழலைச் சொற் கேட்டு மகிழத்தான் வேண்டும் என்பது பற்றி வள்ளுவர் அணுவும் கூறுகிறார் எனும் உண்மை விளங்கும். 353-ல் காணும் பாவின் கருத்து இதுவே என்பதற்கு ஆதாரமும் காட்டுகிறேன்.

354. அழல் போலு மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல் போலுங் கொல்லும் படை

—திருக். பொழுதுகண்டிரங்கல். 8

| | | |
|---|---|---|
| மாலை | அழல் | குழல் |
| | தூது | |
| கொல்லும் | ஆயன் | |
| | படை | |

முதலை 226-ல் மாலை, இடையை 130-ல் படை 16-ல் தூது 215-ல் ஆயன் எனத் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதையே காட்டி, 353-ல் காணும்'குழல்' என்பதையும் ஔவை குறள் இடையெனக் கூறும் 'அழல்' என்பதையும் இதில் உணர்த்தி, "இடையெனும் தூதே அந்தமாகிய குழலைப்போன்ற படையெனும் ஆயன் அவ்வாய்ன் எனும் அழலைப்போன்ற மாலை எனும் ஆதியே குழலெனும் அந்தத்தைக் கொல்லும்" எனல். இது காரணம் பற்றி முதலுக்குக் கொல்லும் எனவும் நாமம் உண்டு.

அந்தத்தில் ஆதி சேர்ந்தால் அந்தத்தைக் கொன்றுவிடும் என்பதைத் திருக்குறளே விளக்குவதை அடுத்துக் காண்பீர். அது பற்றியே 338–ல் 'ஆதி அந்தத்திற்கு ஆகாதது' எனவும் 353-ல் 'ஆதியை அந்தம் கேளாது' என்வும் உணர்த்தும் விவரம் காண்க. 'மாலைக்கும் குழலுக்கும் இடையாகிய தூதெனும் அழலே ஆயன், என்பதறிக.

அருகக் கடவுளே கடவுளென்பது வள்ளுவரின் கொள்கை எனச் சிலர் நினைக்கலாம். இம் மூன்றையும் மற்ற நூல்

களுக்கிசைய சிவன்—மால்—அயன் என உணர்த்தும் திருக்குறள் இதில் ஆயன் என்பது திருமாலையே. திருக்குறளே ஆதியை இறைவனென உணர்த்துவதையும் காட்டுகிறேன், அதைக் கண்டேனும் இதை நிச்சயிக்க.

355. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது

—திருக். தூது. 10

எஞ்சாத தூது இறுதி
உறுதி
இறைவன்

முதலை 44-ல் எஞ்சாத 230-ல் உறுதி குறிப்பு 21-ல் இறைவன், இடையை 16-ல் தூது எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "முதலாகிய எஞ்சாத இறைவருக்காக தூதெனும் இடை இறுதியைப் பயப்பினும் அத்தூதைப் பயப்பது இறைவனெனும் உறுதியே" எனல்.

185-ல் 'தான் கண்ட விகுதி எனும் முதலுக்காக இலக்கணமெனும் இறுதியை இலக்கியமெனும் இடை செய்தல்' என நன்னூல் கூறுவதையே இதில் 'இறைவருக்காக இறுதியைத் தூதெனும் இடை பயக்கும்' எனத் திருக்குறள் விளக்கும் விபரமறிக.

354-ல் ஆயனெனும் அழிலே தூதெனக் காட்டி, 355-ல் அத்தூதே ஆதிக்காக அந்தத்தைப் பயக்கும் என உணர்த்துவதால் இவ்விரு பாக்களும் ஒன்றையொன்று தழுவி இவற்றின் கருத்தை நிச்சயிப்பதறிக. இதுமாத்திரமா? 315-ல் பண்பெனும் முதலே தூதெனும் இடையையும் 314-ல் அத்தூதே நன்றி எனும் இறுதியையும் செய்யும் என உணர்த்துவது 354, 355-ல் காணும் இரு பாக்களின் கருத்தை நிச்சயிக்கிறதன்றோ? இதில் இறைவனெனச் சிவனைக் கூறும் திருக்குறள் 354-ல் இடையை ஆயன் என உணர்த்துவதா யேற்கச் சந்தேகிக்கலாமா? இறுதியை அயனெனத் திருக்குறளே உணர்த்துவதை எடுத்துக் காட்டுகிறேன்.

I. பயனில பல்லார் முற் சொல்ல னயனில
நட்டார் கட் செய்த லிற்றீது

—திருக் பயனில் சொல்லாமை. 2

நிலன் கட்
முற் பல்லார்
சொல்லன் அயன்
தீது இல்
பயனில

முதலே 302-ல் நிலம் 309-ல் சொல்லன், இடையை 318-ல் கட், இறுதியை 318-ல் பயன் 307-ல் பல்லார் 309-ல் இல் எனத் திருக் குறள் விளக்குவது தொல்காப்பியம் கூறுவதை. அவற்றையே காட்டி இல்லெனும் இறுதியைச் செய்த கட் எனும் இடையை நட்ட (ஆக்கிய) முதலே நிலமெனும் தீது' என்பதைக் கவனித்தீர் களா? அதிருக்கட்டும், 'கட்டெனும் இடையின் முதலிறுதியே பய னில-பல்லார், சொல்லன்-அயன், தீது-இல்' என உணர்த்துவதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க. முதலிறுதிக்கு எதிர்மறை நாமங்கள் உண்டென்பதற் கிசைய இறுதியைப் 'பயன்' எனக் கூறும் திருக் குறள் இதில் முதலேப் 'பயநில' என்பதறிக. 318–I-ல் இக் கட் என் பதையே திருக்குறள் பெருந்தகையான் என விளக்குவது கண்டு தெளிக.

309-ல் முதலிறுதியெனத் திருக்குறள் விளக்குவது இப்பாவிற் காணும் சொல்லன்-இல் என்பவை யன்றோ? நிற்க, 294 'பிற் பயக்கும் பாலே அவை' எனக் கூறும் திருக்குறள் 309-ல் அம் முதலெனும் அவையே சொல்லனென உணர்த்தி, அச் சொல்ல னெனும் முதலே முற்றென இதில் விளக்குவதறிக. இப்பாக் களில் காணும் முற்-பிற் அதாவது முன்—பின் எவை என்பதை ஆராய்ந்தாலே திருக்குறளில் புதைத்துள்ள மற்றோர் கருத்துத் தெளிவாய் விளங்குமே. இறைவனையும் ஆயனையும் முதலிடை யென உணர்த்தும் திருக்குறள் இறுதியே அயன் என்று விளக்கும் விபரம் காண்க. பயனில சொல்லாமை 6-ல் 'பயனில் சொல் பாராட்டு வானை' எனக் கூறி சொல்லெனும் ஆதியால் (உரிய தெனப்) பாராட்டப்படும் அந்தமாகிய இல்லே பயன் எனத் தெரி விக்கும் திருக்குறள் 'பயனில' எனவும் 'அயனில' எனவும் இதில் உணர்த்துவது 'பயனில எனும் நிலத்திறுதியே இல் எனும் அயன்' எனப் புகட்டவே. சந்தேகமிருந்தால் பயனில சொல்லாமை 3-ல் 'நயனில னென்பது சொல்லும் பயனில' நயனெனும் அந்தத்திற் காதியாகிய நிலனே பயனில என விளக்கு வது கண்டு தீர்மானிக்க.

இவை அனைத்து மிருக்கட்டும், 'முதலாகிய சொல்லைக் கேட் டல் இன்பமெனும் இடையே என 352-லும், 'அச் சொல்லெனும் முதலே மழலே எனும் இறுதி கேளாது' என 353-லும் விளக்குவது ஞாபகமிருக்கட்டும்.

356. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோர் எனக் கேட்ட தாய்

—திருக். புதல்வரைப் பெறுதல். 9

| | |
|---|---|
| பொழுது | இல் |
| பெரிது | தன் |
| என | மகன் |
| தாய் | சான்றோ |

இடையை 4-ல் பொழுது 113-ல் பெரிது 231-Iல் தாய் 31-ல் எ 17-ல் ன, இறுதியை 13-ல் இல் தன் 222-ல் மகன் 107-ல் சான்றோர் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி "அந்தமாகிய தன் எனும் மகனை உவக்கும் இடையே பெரிது, இப்பெரிது உவக்கும் மகனே பெரிதெனும் பொழுது ஈன்ற இல்லெனும் சான்றோர், அச் சான்றோரெனும் அந்தமே என எனும் தாயாகிய இடையைக் கேட்டது" எனல்.

I காமம் சான்ற கடைக் கோட் காலை

—தொ. கற்பியல். 51

| | | |
|---|---|---|
| காமம் | கடை | சான்ற |
| | | கோள் |
| | | காலை |

102-ல் முதலே காமம், இறுதியை 106-ல் சான்ற 269-ல் கோள் 181-ல் காலை என்பதையே இதிற் காட்டி, "கடையெனும் இடையின் முதலே காமம் இறுதியே காலையாகிய சான்ற எனும் கோள்" எனல்.

II நன்றாகு மாக்கம் பெரிதெனுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கம் கடை

—திருக். கொல்லாமை. 8

| | | |
|---|---|---|
| கொன்று | ஆக்கம் | நன்று |
| | பெரிது | |
| | கடை | சான்றோர் |

கொன்று எனக் கூறுவது 269-ல் முதலே கொலை எனத் தொல் காப்பியம் கூறுவதையே. இடையை 12-ல் ஆக்கம் 113-ல் பெரிது மேற்காண்பதில் கடை. இறுதியை 113-ல் நன்று 107-ல் சான்றோர் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "கொன்றெனும் முதலால் ஆகும் ஆக்கமெனும் இடையினின்றே நன்றெனும் இறுதி ஆகும், அவ்வாக்கம் பெரிது எனினும் சான்றோ ரெனும் இறுதிக்குரிய அவ்வாக்கம் கடையே" எனல்.

கொன்றெனும் ஆதியால் ஆகும் பெரிது எனும் ஆக்கம் சான் றோர்க்கு என இதில் கூறுவது இடை அந்தத்திற்கு உரியது என்பது பற்றியே. இதற்கிசையவே இதில் காணும் பெரிது—சான்றோர் என்

பவற்றையே 356-ல் காட்டி தாயெனும் பெரிதை மகனெனும் சான்ருேர் கேட்டது ' எனத் திருக்குறள் விளக்கும் விபரம் காண்க.

352-ல் சொல்லெனும் முதலேக் கேட்டது இன்பமெனும் இடையே எனவும் 353-ல் அச் சொல்லெனும் முதலே மழலே எனும் அந்தம் கேளாதெனவும், 356-ல் தாயெனும் இடையைக் கேட்டது சான்ருேரெனும் அந்தமெனவும் திருக்குறள் உணர்துவது காண்க. இவை தொல்காப்பியம் இதை இது உரியதாய்க் கொள்ளும் இது இதைக் கொள்ளாதெனக் கூறுபவையே.

336-ல் ' தீ யாண்டு பெற்ருள் இவள் எனவும் ' ' நெஞ்சைப் பெறுவது தவம் ' எனவும் கூறும் திருக்குறள், 356-ல் இல்லெனும் இறுதியைப் பொழுதெனும் இடை ஈன்றது என விளக்கும் விபரம் காண்க.

ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் காட்டிக் கொண்டே போனல் திருக்குறளில் உள்ள பாக்கள் அனைத்தையுமே விளக்கலாம், அவ் விதத்தில் (தொல்காப்பியச் சூத்திரங்களேப் போல்) தொடர்புடையன. 340-ல் காணும் ' கூழ் ' என்பது ஊழல்ல என எடுத்துக் காட்டப் புகுந்தது தந்தையையும் தாயையும் மக்களேயும் தீர்மானிக்க இவ்வளவு ஆராய நேர்ந்தது. அக் கூழை ஆராய்ந்து தெளிய அவசியம் ஏற்பட்டது 331-ல் ' தவத்திற்கிசைய செல்வம் மிகுவதும் குறைவதுமெனக் கருதும் சிலர்—இவர்—பலர் என்பதை அறியவே. இவற்றை அறிய அவசியம் ஏற்பட்டது 324-ல் ' காம நோய் செய்த கண் ' என்பதைத் தெரிய. இதைக் காண அவசியம் ஏற்பட்டது 321-ல் திருக்குறள் (தொல்காப்பியத்திற் கிசையவே) வழியினின்று வந்ததே அழிவிலாக் கண், அக் கண் அவ்வழியிடம் போகாது என்பதை நிச்சயிக்கவே. இக் கண் அதி முக்கியமானதால் இன்னும் சிறிது கவனிப்போம்.

357\. வழங்குவ துள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலே பிரித லின்று

—திருக். குடிமை. 5

| | | |
|---|---|---|
| வழங்குவது | வீழ்ந்தது | உள் |
| பண்பு | | இல் |
| தலே | | கண் |
| | | பழம் |
| | | குடி |
| | | இன்று |

16-ல் முதலே ஓதல் 20-ல் இடையை வழங்குவது முதலே எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறது இவ்வாறு தொல்காப்பியம் கூறும் 'ஓதல்' என்பதை 306-ல் ஆதியை 'உரைப்பார்' என உணர்த்தும் திருக்குறள் தொல்காப்பியம் கூறும் 'வழங்குவது' என்பதை இதில் முதலென உணர்த்தும் விபரம் காண்க' நிற்க, 152-ல் இடையை மயக்கமெய்தி புரண்டு வீழ்ந்தலரிய மாலே இடையெனத் திருவாசகம் கூறுதற்கிசைய 354-ல் அழலெனும் இடையே ஆயன் எனக் கூறும் திருக்குறள் இதில் இடையை 'வீழ்ந்தது' என உணர்த்துவதறிக. முதலை 12-ல் பண்பு 177-ல் தலை, இறுதியை 108-ல் உள் 13-ல் இல் 26-ல் கண் 166-ல் பழம் 269-ல் குடி 109-ல் இன்று எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டுவதைக் கூர்ந்து கவனிக்க.

தொல்காப்பியத்திற் கிசைய இறுதியை 351-ல் இல் 320'ல் உள் 353-ல் கண் 341-ல் குடி என உணர்த்தும் திருக்குறள் அவற்றையே இதில் இறுதியின் நாமங்களென நிச்சயித்துக் காட்டும் நேர்மை காண்க. இவ்வாறெடுத்துக் காட்டி இல்லுள்ளெனும் கண்ணே குடியென விளக்குவதோடு திருமந்திரம் இறுதியெனக் கூறும் 'பழம்' என்பதையும் இதில் உணர்த்தி, 'கண்ணும் பழங்குடி' என விளக்கும் விபரம் தெரிந்ததா ?

இதில் 'வழங்குவது' எனவும் 306-ல் 'உரைப்பார்' எனவும் திருக்குறள் விளக்குவது தொல்காப்பித்திற் கிசைய முதலின் நாமங்களையே என்பதில் சந்தேகமிருந்தால் முதலிறுதிக்கு எதிர்மறை நாமங்கள் உண்டென்பது பற்றி முதலை 'உரைப்பார்' எனக் கூறும் திருக்குறள் இறுதியைக் 'கூறுன்' எனவும் கூறுகிறது. அதையும் காட்டுகிறேன்.

358. அறங் கூறுனல்ல செயினு மொருவன்
புறங் கூறுனென்ற லினிது

திருக். புறங்கூறுமை. 1

| | | |
|---|---|---|
| அறம் | ஒருவன் | கூறுன் |
| புறம் | | நல்ல |
| | | இனிது |

முதலை 78-ல் அறம் குறிப்பு 5-ல் புறம், இடையை 32-ல் ஒருவன் இறுதியை 113-ல் நன்று 290-III-ல் இனிது எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (229-ல் இடையே 'கொடிது' எனத் தொல்காப்பியம் கூறுவதை நன்குணர்ந்த வள்ளுவர் இதில் கூறுது உணர்த்தும் விபரம் காண்க.) "ஆதியாகிய அறமெனும் புறத்து

அந்தமாகிய கூருனெனும் நல்லதை இடையாகிய (கொடிதெனும்) ஒருவன் செய்தாலும் நல்லதெனும் கூருன் இனிதே" எனல். 'கொடிதெனும் இடையால் செய்யப்படினும் இறுதி இனிதே' என்பதறிக.

304-ல் 'ஆதியாகிய அறம் .எனும் புறத்தால் வருவதே இடையும் இறுதியும்' எனக் கூறும் திருக்குறள், அவ்வறம் புறத்தையே இதில் உணர்த்துவதறிக. 291-ல் இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக என்றெச்சரிக்கும் நன்கே இதில் நல்ல என்று உணர்த்தப்படுவது காண்க. 342-ல் கூழாகிய அமிழ்தெனும் இடையால் ஆற்றப்படும் இறுதியே 'இனிது' எனவும் 341-ல் கோல்—கோடி எனும் முதலிறுதியின் இடையே கூழெனும் 'ஒரு' எனவும் கூறும் திருக்குறள், ஒரு எனும் இடையை (32-ல் ஒருவன் என நன்ஞல் கூறுவது போல்) ஒருவன் என உணர்த்தி, 'ஒருவனெனும் இடையால் செய்யப்பட்ட இறுதியே இனிது' என விளக்குவதறிக. முதலிறுதிக்கு உரைப்பார்—உரையார் கூறுவோன்—கூருன் எனும் நாமங்கள் உண்டென்பதறிக.

காம நோய் செய்த கண்ணென்றும், வகையாற் றேறியதே கண்ணென்றும், வினையால் தீர்ந்ததே கண்ணென்றும், வழியினின்று வந்து அவ்வழியினிடம் போகாத கண்ணே அழிவிலாத தெனவும் கண்ணை உணர்த்தும் திருக்குறள், 311-ல் கோடி எனும் அந்தமே குடி எனவும் அறிவிக்கிறதன்ருே? இவற்ருேடு திருமந்திரம் கூறும் 'பழம்' என்பதையும் சேர்த்து 'கண்ணும் பழங் குடி' எனப் புகட்டியிருக்கும்போது இக் கண், பழம். குடி என்பவற்றை வெவ்வேருய் ஏற்க இடமுண்டா? நிற்க, 310-ல் கண்ணைத் தேற்றுவித்த 'வகை' யெனவும் 337-ல் 'மனத்தொடு வாய்மை' எனவும் கூறி மனம்—கண் என்னும் முதலிறுதியின் இடையே வகை எனும் வாய்மை என இரு பாக்களைக் கொண்டு உணர்த்தும் திருக்குறள் குடிமை 3-ல் 'வகை யென்ப வாய்மை குடிக்கு' எனவும் கூறுகிறது. இவ்வாறிருக்க இவ் வகையையும் வாய்மையையும் அவரவர் கொள்கைக் கிசைய வெவ்வேருய் ஏற்க இடமுண்டா? நிற்க, 308-ல் 'கண் களவு கொள்ளும் எனக் கூறும் திருக்குறள் அதையே 'வகை எனும் வாய்மை குடிக்கு' என உணர்த்துவது தெளிவாய்த் தெரிகிறதன்ருே? இவற்ருல், 'கண்ணெனும் குடி தனக்குரிய களவாகிய வகை எனும் வாய்மையைக் கொள்ளும்' என்று உணர்த்துவதாகவே ஏற்க வேண்டுமன்ருே? பாக்கள் ஒன்றையொன்று விளக்குவதைத் தள்ளிவிட்டு ஏனை உரைகளையே ஏற்க வேண்டுமென்பது பொருந்துமா? கண்ணை இன்னும் கவனிப்போம்.

359. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

—நன். பொதுவியல், 70

| | | |
|---|---|---|
| பழையன | புதியன | வழுவல |
| காலம் | வகை | |
| ஆ | னே | |

முதலே 54-ல் காலம் 290-ல் இறப்பு 31-ல் ஆ, இடையை 158-ல் னே குறிப்பு 3-ல் வகை 103-Iல் புதுமை எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, முதலிறுதிக்கு எதிர்மறை நாமங்கள் உண்டென்பதுபற்றி 182-ல் முதலே குற்றம் எனத் தொல்காப்பியம் கூறுவதால் இதில் இறுதியைக் குற்றமற்றது என உணர்த்த வேண்டியதை 'வழுவல' எனக் காட்டி, 209-Iல் 'அந்தணன் எனும் இறுதி உளமெனும் இடையில் புகுந்தானே' எனத் திருமந்திரம் கூறுவதுபோல் இதில் "பழைய எனும் இறந்த முதலே காலம், புதியன எனும் வகையே இடை, அவ்விடையில் வந்து புகும் இறுதியே வழுவல" எனல். குறிப்பு 19-ல் முதலே தலை எனக் கூறும் தொல்காப்பியம் அகத்திணையியல் 15—ல் 'தலைக் கழிதலும்' என்று உணர்த்தியிருப்பதையும் காண்க' 180-ல் முதலை 'வழுவே' என்று கூறும் நன்னூல் இதில் இறுதியை 'வழுவல' என்பதறிக.

360. பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள

—திரு. சுற்றந். 1

| | | |
|---|---|---|
| பழைமை | சுற்றத்தார் | கண் |
| | | பற்றற்றது |

359-ல் முதலே பழைமை, 78-ல் இடையே சுற்றம், இறுதியை 26—ல் கண் 246-ல் துறந்த 228-ல் நீத்த எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுவதையே காட்டி, (ஆதிக்கு அந்தம் கொள்ள உரியதென்பதுபற்றி) பண்பெனும் முதலால் பாராட்டப்படும் இறுதியே உலகு என 313-ல் விளக்கும் திருக்குறள் இதில் "பழைமை எனும் ஆதியாய் பாராட்டப்படும் அந்தமே பற்றற்ற கண். சுற்றத்தாரெனும் இடை அக் கண்ணை அடுத்து உள" எனல்.

தொல்காப்பியம் குற்றமெனத் தெரிவிப்பதற்கிசைய இறுதியை குற்றமில்லாதென உணர்த்த வழுவல என நன்னூல் விளக்குவதாக நான் எடுத்துக் காட்டினேன். 269-ல் குடியெனும் அந்தமே கோள் எனத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய இன்னா செய்யாமை I-ல் 'மாசற்றார் கோள்' அந்தமாகிய கோளே மாசற்றார்

என விளக்கும் திருக்குறள் முதலே 'மாசு' எனக் கூறுவதையும் காட்டுகிறேன்.

361. பால் நின்று கெடுத்தற் கண்ணும்

—தொ. கற்பியல். 9

பால் ... கண்

12-ல் முதலே பால் 26-ல் இறுதியே கண் என்பதை இதிற் காட்டி, " அந்தமாகிய கண்ணைக்கெடுப்பது பாலெனும் ஆதியே" எனல்.

362. குடியென்னும் குன்று விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

—திருக். மடியின்மை. 1

மாசு ... குடி
அ
மடி விளக்கு

182-ல் முதலே குற்றம் 269-ல் இறுதியே குடி எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 322-ல் 'நோயின் பொருள்' என்று கூறாமல் 'நோயின் பொருள' எனத் தொல்காப்பியம் கூறுவது 'அ எனும் முதலுக்கும் பொருளெனும் இறுதிக்கும் இடையே நோய்' என்று உணர்த்தற்கே. அதுபோல் இதில் விளக்கமடி' என்று கூறுவது 'விளக்கு எனும் இறுதியின் அ எனும் முதலே மடி' என்று உணர்த்தற்கே. தொல்காப்பியம் கூறும் குற்றம் என்பதை இதில் மாசு எனக் காட்டி, " மடியாகிய மாசெனும் ஆதி சேர்ந்தால் அந்தம் கெடும்" எனல். தொல்காப்பியம் 361-ல் கூறு வதையே இதில் திருக்குறள் விளக்கும் விவரம் காண்க. 354-ல் மாலை எனும் ஆதி குழல் எனும் அந்தத்தைக் கொல்லும் எனத் திருக்குறள் உணர்த்துவது இதில் காண்பதையே.

341-ல் இறுதியே 'குடி' 340-ல் முதலே 'மடி' எனத் திருக் குறள் கூறுவது இதிற் காண்பவையன்றோ? அவ்விரு பாக்களின் கருத்தை இப்பாவும், இப்பாவின் கருத்தை அவையும் நிச்சயிக்கும் நேர்மை தெரிந்ததா? இவ்வாறிருக்க ஒருவனுக்குக் கைப்பொருள் போகும் ஊழால் மடி தோன்றும் என்பதெப்படி?

182-ல் முதலே குற்றம் குறிப்பு 12-ல் இடையே விசும்பு, இறுதியை 269-ல் குடி 85-ல் பிறப்பு குறிப்பு 19-ல் கண் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, குடிமை 7-ல் குடிப் பிறந் தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின்' (அதாவது முதலிடை யாகிய குற்றம்—விசும்பின் இறுதி இம்முதலிடையினின்றே விளங்

கும் என உணர்த்தும் திருக்குறள் இக்குற்றம்—குடி என்பவற்றையே 362-ல் மாசு குடி என விளக்கும் விவரம் காண்க. திருக்குறள் விளக்குவது தொல்காப்பியம் கூறுவதையே என்றேற்க இப்பா போருதா ?

363. நூலது வேதாந்தம் நுன் சிகை ஞானமாம்
பாலொன்று அந்தணர் பாப்பார் பரமுயிர்

—திருமந்திரம், 1665.

| | | |
|---|---|---|
| பால் | நூல் | அந்தணர் |
| ஒன்று | அது | |
| உயிர் | வேதாந்தம் | |
| | நுன் | |
| | சிகை | |
| | ஞானம் | |
| | பார்ப்பார் | |
| | பரம் | |

முதலே 12–ல் **பால்** 265-ல் **ஒன்று** 42-ல் **உயிர்**, இடையை 122-ல் நூல் குறிப்பு 3-ல் **அது** 233-ல் **பார்ப்பான்**, இறுதியை 273-ல் **அந்தணன்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, " இடையாகிய பார்ப்பார் எனும் நூலதே வேதாந்தமாகிய ஞான்மெனும் சிகை " எனல். இடையை 'வேதாந்தம்' எனக் கூறும் திருமந்திரம் முதலேச் 'சித்தாந்தம்' எனவும் இறுதியை 'நாதாந்தம்' எனவும் உணர்த்துகிறது.

364. தலேயினிழிந்த மயிரனேயர் மாந்தர்
நிலேனிழிந்த கடை

—திருக். மானம். 4

| | | |
|---|---|---|
| தலே | மயிர் | நிலே |
| | மாந்தர் | |
| | கடை | அனேயர் |

மொழி மரபு 14-ல் 'மெய்ந்நிலே மயக்கம் மானமில்லே' எனக் கூறி அந்தமாகிய மெய்யெனும் நிலேயும் மயக்கமெனும் இடையும் மானமெனும் ஆதியில்லே எனத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. இதில் காணும் 'மானம்' என்பதையே திருக்குறள் அதிகார நாமமாய்ச் சூட்டியிருப்பதறிக.

குறிப்பு 19-ல் முதலே **தலே** இடையை 222-ல் **மாந்தர்** 356 I-ல் **கடை**, இறுதியை 3-ல் **நிலே** 280-ல் **அனேயர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 368-ல் இடையை சிகை எனத் திருமந்திரம் கூறுவதை இதில் 'மயிர்' என உணர்த்தி, " முதலெனும் தலேயைப்

பிரிந்துள்ள மயிரெனும் மாந்தரே இறுதியெனும் நிலையைப் பிரிந் துள்ள " கடை எனல்.

310-லும் அதன் விளக்கத்திலும் திருக்குறளும் தொல்காப்பிய மும் ஒன்றையொன்று தழுவி இடையே மாந்தர் என விளக்கு வதையே இதில் திருக்குறள் எடுத்துக் காட்டி 'மாந்தரே மயி ரெனும் கடை' என உணர்த்துவதறிக.

357-ல் 'முதலெனும் தலையினின்று பிரியும் இறுதியே இன் றெனும் இல்' எனக் கூறும் திருக்குறள், இதில் 'தலையைப் பிரிந்த இடையே மாந்தர்' என உணர்த்துவதறிக. 2-ல் எல்லாம் எனக் கூறும் இறுதியை 280-ல் அணையர் எனத் தொல்காப்பியம் உணர்த்து வதுபோல் 306-ல் இறுதியே எல்லாம் எனக் கூறும் திருக்குறள் 364-ல் அவ்விறுதியையே அணையர் என உணர்த்துவதறிக. இப் பாவிற்கு நான் எடுத்துக் காட்டும் கருத்து இருக்கட்டும், நம தனுபவக் கருத்தைச் சிறிது கவனிப்போம்.

331-ல் காணும் பாவில் தவத்திற்கிசைய செல்வரும் ஏழையும் மிகுந்தும் குறைந்து மிருப்பதாய்க் கூறி, அதற்கிசைய 340-ல் காணும் பாவில் பொருள் பெருக முயற்சியும் அது குறைய மடியும் உண்டாகும் எனவும் உணர்ர்தும் வள்ளுவர், உயர் நிலையினின்றும் ஒருவன் தாழ்வுற்ருல் அவன் ஊழ் அவனைத் தாழ்த்தியது என்று கூறவேண்டியதை விட்டு தாழ்ந்தவனை தலையினின்று உதிர்ந்த மயி ருக்கு ஒப்பாவான் என்று கூறுவாரா? இதினும் வன்சொல் வேறுண்டோ? இனியவை கூறல் 9-ல் 'இன்சொலினிது ஈன்றல்' எனும் பாவை நமக்குப் புகட்டுமவர் இத்தகைய வன்சொல் வழங்கு வாரா? இதுபற்றிச் சிந்தித்துத் தெளிக. அப்பாவிலுள்ள 'இன் சொலினிதீன்றல்' என்பதையும் சிறிது கவனிப்போம்.

முதலை 49-ல் சொல் இடையை 35-ல் இன் 290-III-ல் இறுதியே இனிது எனத் தொல்காப்பியம் கூறுதையே 316-ல் முதலே 'சொல்' 342-ல் இடையே 'இன்' இறுதியே 'இனிது' என உணர்த்தும் திருக்குறள் அவற்றையே காட்டி 'இன்னெனும் இடையும் சொல் லெனும் முதலும் ஈன்றதே இனிதெனும் இறுதி' என்பதறிக. இவ் வினிது 258-ல் திருக்குறள் கூருன் எனும் இறுதியே இனிது என்ப தன்றே? இனிது எனும் சொல் அங்கங்கும் இறுதியின் நாமமா யமைந்து அவ்வப் பாவையும் விளக்கும் விவரம் தெரிந்ததா? நிற்க, 364-ல் திருக்குறள் கூறும் 'தலையினிழிந்த' என்பதைச் சிறிது கவனிப்போம்.

365. ஊனைக் குறித்தது உயிரெல்லா நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு

—திருக். நாணுடைமை. 3.

| | | |
|---|---|---|
| உயிர் | ஊன் | எல்லாம் |
| | சால்பு | நாண் |
| | | நன்மை |

குறிப்பு 3-ல் இடையே அது 277-ல் இறுதியே குறிப்பு எனக் கூறும் தொல்காப்பியம் களவியல் 4-ல் 'குறிப்பைக் குறித்தது அது' எனக் கூறி செய்ததென்பதைக் குறித்தது என உணர்த்துகிறது. அவ்வாறே குறித்ததென்பதை இதில் திருக்குறள் கூறுகிறது.

முதலே 42-ல் உயிர், இடையை 5-ல் இறைச்சி, இறுதியை 2-ல் எல்லாம் 288-ல் நாண் 113-ல் நன்று எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "எல்லாமென்னும் இறுதியாகிய நாணெனும் நன்மையைக் குறித்தது (செய்தது) சால்பு, அச் சால்பாகிய ஊனெனும் இடையைக் குறித்தது (செய்தது) உயிரெனும் முதலே" எனல்.

(56-ல் முதலே ஐந்து எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி) 'வாய்மையயோ டைந்து சால்பூன்றிய தூண்' என சான்றாண்மை 3-ல் கூறி வாய்மை எனும் இடையின் முதலாகிய ஐந்தே அவ் வாய்மை எனும் சால்பை ஊன்றிய (செய்த) தூண் என உணர்த்தும் திருக்குறள் இச் சால்பையே காட்டி 365-ல் சால்பே ஊன் என்பதறிக.

291-ல் நன்மை எனும் நன்கை உணர்ந்து சொல்லுக எனவும் 304-ல் அறத்தால் வருவதே இன்பமும் எல்லாமென்னும் இறுதியு மெனவும் கூறும் திருக்குறள் அவற்றையே தழுவி 'எல்லா மெனும் இறுதியாகிய நன்மையே நாண்' என இதில் விளக்குவதறிக.

366. செயிரிற் றலை பிரிந்த காட்சியா ருண்ணார்
உயிரிற் றலை பிரித்த வூன்

—புலான் மறுத்தல், 8

| | | |
|---|---|---|
| உயிர் | ஊன் | காட்சியார் |
| தலை | | செயிர் |
| | | நாண் |

288-ல் 'முதலே உயிர், இறுதியே செயிர் எனும் நாண்' எனத் தொல்காப்பியம் கூறுவதையே இவ்விரு பாக்களிலும் காட்டி, 365-ல் 'உயிரின் இறுதியாகிய நாணே எல்லாமெனும் நன்மை' எனவும், இப்பாவில் 'உயிரின் இறுதியாகிய நாணே செயிர்' எனவும் திருக்குறள் உணர்த்துவதை முதலில் கவனிக்க. உயிரில் செயிரும் செயிரில் உயிரும் தொடர்புடையன என்பதறிக.

309-ல் அவை எனும் முதலே சொல்லன் எனவும் 292-ல் அவை எனும் முதலின் இடையே எளியர் எனவும் கூறும் திருக்குறள் (85-ல் இறுதியே 'காட்சி' எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி) இறைமாட்சி 6-ல் 'காட்சிக் கெளியன் கடுஞ் சொல்லன்' அந்தமெனும் காட்சிக்கு இடையே எளியன் ஆதியே சொல்லன் என உணர்த்துகிறது. இக் காட்சியையே இப்பாவில் 'காட்சியார்' என உணர்த்துவ தறிக.

முதலிடையிறுதியை 365-ல் உயிர்-ஊன்-நாண் எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டியிருக்கும் விபரத்தைக் கவனித்தீர்களா? இத்தகைய இரு பாக்களின் கருத்தை வெவ்வேரு யேற்பதெப்படி?

364-ல் முதலே தலை என்பதையும் இதில் உணர்த்தி, அதில் தலையினின்று பிரிந்த இடையிறுதியே கடையும் நிலையும் என்பது போல் இதில் தலையினின்று பிரிந்த இடையே ஊன் இறுதியாகிய நாணே காட்சியார் என்பதறிக. இனி இப்பாவின் கருத்தைக் கவனிப்போம்.

குறிப்பு 19-ல் தலை வந்த சிந்தைக் கண்ணும் 89-ல் அன்பு தலை பிரிந்த கிளவி எனவும் உணர்த்தி 'தலையினின்று தோன்றி அத் தலையை விட்டுப் பிரிந்த சிந்தை யெனும் இடையே அன்பு கண் ணெனும் இறுதியே கிளவி எனத் தொல்காப்பியம் விளக்குவது போல், இதில் திருக்குறள் "முதலெனும் தலையைப் பிரித்துள்ள இடையெனும் ஊனே அத்தலையைப் பிரிந்துள்ள இறுதியாகிய காட்சியார் உண்ணூர்" எனல். 'நாணெனும் இறுதியைக் குறித்தது ஊன், அவ்வூனைக் குறித்தது உயிர்' என 355-ல் கூறி, இதில் அவ் வுயிரெனும் தலையைப் பிரித்ததே ஊனும் நாணெனும் செயிரும் என உணர்த்தும்போது இவ்விரு பாக்களின் கருத்தை வெவ்வேருய் ஏற்ப தெப்படி?

இப்பாவில் தலையைப் பிரிந்துள்ள இடையிறுதியே ஊன்—நாண் எனக் கூறும் திருக்குறள் 364-ல் தலையினிழிந்த இடை யிறுதியே கடையும் நிலையும் என விளக்கும் விபரம் தெரிந்ததா? தொல்காப்பியத்திற் கிசைய 'பகை என்னும் பண்பு' 'பண்பே தலை' என்றெடுத்துக் காட்டி எச்சரிக்கும் திருக்குறள் இத்தலையை அவரவர் கொள்கைக் கேற்கக் கொள்ள இடந்தருமா? இடங் கொடா தென்பது இவ்விரு பாக்களிற் காணும் தலை முதலின் நாமமாகவே அமைந்து அந்தந்தப் பாவையும் விளக்குவதாலேயே தெரிகிறதன்ரே?

நிற்க, புலான் மறுத்தல் எனும் அதிகாரத்தில் உள்ள பாவின் கருத்தைக் கவனித்தீர்களா ? இவ்வாறு நான் எடுத்துக் காட்டுவது வியப்பாய்த் தோன்றினும் தோன்றலாம். ஆகையால் இச் செய்தியை இன்னும் சிறிது கவனிப்போம்.

367\. வைத்தனர் வாய் சான்ற பெரும் பொருள் [அஃதுண்ணுன்
செத்தான் செயக் கிடந்த தில்

—திருக். நன்றியிற் செல்வம். 1

| | | |
|---|---|---|
| வைத்தனர் | வாய் | சான்ற |
| | அது | பொருள் |
| செத்தான் | பெரும் | இல் |

முதலை 277-Iல் வகுத்தனர் 290-ல் இறப்பு, இடையை 110-ல் வாய் குறிப்பு 3-ல் அது 111-ல் பெரும், இறுதியை 106-ல் சான்ற 111-ல் பொருள் 13-ல் இல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, வகுத்தனர் என்பதை வைத்தனர் எனவும் இறப்பு என்பதைச் செத்தான் எனவும் உணர்த்தி, " அந்தமாகிய சான்ற எனும் பொருளையும் இடையாகிய பெரும் வாயெனுமிவ் விரண்டையும் வைத்தனர் (செய்தவர்) ஆதியே, பெரிது எனும் இடையை பொருளெனும் அந்தம் உண்ணுன், வைத்தனர் எனும் செத்தானுல்செய்யப் பட்டுக்கிடந்த அந்தமெனும் பொருளே இல் " எனல். கிடந்த என்பது திரியாது நிற்றலென்பதை உணர்த்தற்கே. 366-ல் ஊனெனும் இடையைக் காட்சியாருண்ணுர் எனக் கூறும் திருக்குறள் அச் செய்தியையே இதில் நாமங்களை மாற்றி ' அதைப் பொருள் உண்ணுது ' என உணர்த்துவ தறிக.

292-ல் அவை எனும் முதலே ' சாவார் ' எனக் கூறும் திருக்குறள், இதில் இடையிறுதியை வைத்த (செய்த) முதலே 'செத்தான்' என உணர்த்துவ தறிக. இதிற் காணும் ' சான்ற ' என்பதையே 356-IIல் இடையைக் கொள்ளும் இறுதியே சான்ருேர் என உணர்த்தி, 356-ல் அச் சான்ருேரே இடையைக் கேட்டது எனவும் விளக்கும் விபரம் கண்டு தெளிக. இவற்றின் பெயர்கள் செய்தியையும் செய்தி பெயர்களையும் நிச்சயிப்ப தறிக. 166—ல் இடையிறுதியை சிவன் எனும் அவன் செய்தான் என்பதைத் திருமந்திரம் சிவனவன் வைத்தான் என்பது போல் இதில் வைத்தனர் என்ப தறிக.

368\. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்

—திருக். மருந்து. 7

| | | |
|---|---|---|
| தீ | இன் | இன்றி |
| தெரியான் | அளவு | |
| அன்றி | பெரிது | |
| | நோய் | |

முதலே குறிப்பு 12-ல் **தீ** 84-ல் **தோன்று** 246-ல் **அன்று**, இடையை 35-ல் **இன்** 46-ல் **அளவு** 113-ல் **பெரிது** 322-ல் **நோய்**, இறுதியை 109-ல் **இன்று** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "தீ எனும் முதலே அன்றி எனும் தெரியான், அத்தெரியானெனும் முதலே பெரிதெனும் இடையை உண்ணி (உண்பது), அப் பெரிதாகிய நோயெனும் அளவினின்றே இன்றி எனும் இறுதி தோன்றும்" எனல்.

357-ல் தலையினின்று பிரிதலே இன்றெனும் இறுதி எனக் கூறும் திருக்குறள் இதிலும் அவ்வின்று என்பதை இன்றி யென உணர்த்துவதறிக.

தொல்காப்பியத்திற்கிசைய 291-ல் **இறுதியைத் தெரிதல்** எனக் கூறும் திருக்குறள், இதில் முதலைத் தெரியான் என உணர்த்தி, அத் தெரியான் எனும் முதலே பெரிதெனும் இடையை உண்பதெனவும் விளக்குவதறிக. 'தெரியனே பெரிதுண்ணி' என்பதை நன்கு கவனிக்க.

367-ல் பெரும் எனும் இடையை இறுதி உண்ணுது எனவும், 368-ல் பெரிது என்னும் இடையை முதலே உண்ணுமெனவும் உணர்த்தும் விபரம் கண்டு தெளிக,

(நோய் என்பதை) 342-ல் இடையே இன் 329-ல் இடையே **அளவு** எனக் கூறும் திருக்குறள் அவ்விரண்டையும் இதிற் காட்டி அவற்றின் இடையில் அமைத்து 'இன்னோயளவு' என்று உணர்த்துவது கண்டு தெளிக. இப்போதேனும் இடையின் நாமமே 'நோய்' என முழுமனதோடு ஏற்கலாமன்றோ? இன்னும் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

365-ல் நாணெனும் நன்மையே எல்லாம் எனக் கூறும் திருக்குறள், இன்னா செய்யாமை 10-ல் 'நோயெல்லா நோய் செய்தார் மேலவா நோய் செய்யார்' (பொதுப் பாயிரம் 31-ல் அழுக்கெனும் ஆதியே **அவா** எனக் கூறும் நன்னூல் இதே நூல் 32-ல் அந்தமே **மேல்** எனவும் உணர்த்துகிறது.) இவற்றையே மேற்காணும் பாவிற் காட்டி, 'மேலாகிய எல்லா மென்னும் இறுதியை நோய் செய்தது அன்றி அவா எனும் முதலே நோய் செய்யாது' என்பதறிக. இவ்வளவு ஆதாரம் காட்டி நோய் என்பதை நிச்சயிக்கக் காரணம்

324-ல் 'காம நோய் செய்த கண்' எனத் திருக்குறள் கூறுவதை 'நோயெனும் இடை செய்த இறுதியே கண்' ணென்றேற்கவே. நிற்க, 366, 367-ல் இடையெனும் ஊனை இறுதி உண்ணுதெனவும் 368-ல் அவ்விடையை ஆதியே உண்ணும் எனவும் திருக்குறள் உணர்த்தக் கண்டோமல்லவா? இதை இன்னும் சிறிது கவனிப்போம்.

369. கொல்லான் பொய் கூறான் கனவிலா னெண்குன
னல்லன் அடக்க முடையான் கட்காம மிலான்

—திருமந்திரம். 554

| | | |
|---|---|---|
| காமம் | கட் | கொல்லான் |
| | | பொய்கூறான் |
| எண்குணன் | கனவு | அடக்கமுடையான் |

102-ல் முதலே காமம், 274-ல் இடையே கட், எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "காமமெனும் எண்குணனும் கட்டெனும் கனவும் அல்லாத இவற்றின் இறுதியே கொல்லானெனும் பொய் கூறானுகிய அடக்க முடையான்" எனல். தொல்காப்பியம் கூறும் காமம் என்பதை திருக்குறள் மட்டும் விளக்குவதா யெண்ணுமல் திருமந்திரமும் இதில் விளக்கும் விபரமறிக.

370. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே

—தொ. உவமவியல். 36

| | | |
|---|---|---|
| பண்பு | தோற்றம் | ... |

13-ல் 'தன் வயின் எனும் இடையிறுதியை வகுத்த முதலே பண்பு' எனக் கூறும் தொல்காப்பியம், அப்பண்பே இடையிறுதியை அடுக்கிய முதலென்று இதில் உணர்த்தி, "பண்பெனும் ஆதி அடுக்கி அனுப்பும் இடையே தோற்றம்" எனல்.

371. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது

—திருக். அடக்கமுடைமை. 4

| | | |
|---|---|---|
| ... | தோற்றம் | நிலை |
| | | இல் |
| | பெரிது | திரியாதது |
| | | அடங்கியான் |
| ண | ப் | மா |
| | | மலை |

167-ல் முதலே ண 61-ல் இடையே ப் என நன்னூல் கூறுவதையும், 370-ல் இடையே தோற்றம் இறுதியை 13-ல் இல் லெனத் தொல்காப்பியம் கூறுவதையும், இறுதியை அடக்கமுடையான் என

369-ல் திருமந்திரம் கூறுவதையும் 75-ல் இறுதியே மலை என நன்னூல் கூறுவதையும் இதில் உணர்த்தி, " அந்தமாகிய நிலை எனும் இல்லே திரியா தடங்கியான், இவ்வடங்கியானெனும் மலையைவிடத் தோற்றமெனும் இடை பெரிதே" எனல். இவ்விடையாகிய பெரிதையே முதலுண்ணும் இறுதி உண்ணுமெதன 367, 368-ல் திருக்குறள் உணர்த்துவது கண்டும் தெளியாதது நூலின் குற்றமா ?

370-ல் பண்பு அடுக்கிய தோற்றம் எனத் தொல்காப்பியம் கூறுவதையும் 369-ல் கட்காம மல்லாத அந்தமே அடக்கமுடையான் எனத் திருமந்திரம் கூறுவதை அடக்கியான் எனவும் திருக்குறள் இப்பாவில் விளக்கும் விபரம் காண்க.

372. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்

—திருக். இடுக்கணழியாமை. 5

| | | |
|---|---|---|
| இடுக்கண் | உற்ற கட் | அழிவிலான் |

முதலை 104-ல் இடும்பை 6-ல் கெடுதல் 219-ல் தீமை, இடையை 274-ல் கட், இறுதியை குறிப்பு 20-ல் அழிவில்லாதது எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (370 ல் இடையிறுதியை அடுக்கியது முதலெனத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய) இதில் திருக்குறள் " இடுக்கண் எனும் ஆதியால் அடுக்கப்பட்டு வரினும் அது தந்த கட் எனும் இடையிலே தோன்றும் அந்தமே அழிவிலான் " எனல்.

இடையூறு முற்றி அதினின்று தோன்றும் முடிவே பயன் என 317-ல் கூறும் திருக்குறள், அதிற் காணும் இடையூறையே இதில் இடுக்கண் எனக் காட்டி அம் முடிவெனும் பயனையே இதில் அழிவிலான் என விளக்குவ தறிக. நிற்க, ' இடுக்கண் எனும் முதலினின்று வரும் இறுதியே அழிவிலான்' என இதில் கூறுவதையே 321-ல் 'வழி எனும் முதலினின்று வந்த இறுதியே அழிவிலாக் கண் ' என விளக்கும் விபரம் கண்டு தெளிக.

தோற்றம் எனும் இடையை அடுக்கிய முதலே பண்பு என 370-ல் தொல்காப்பியம் கூறுவதை 371-ல் இடையே தோற்றமென வும் 372-ல் முதலால் அடுக்கப்பட்டு வருவதே இறுதி எனவும் திருக்குறள் உணர்த்துவது கண்டு தொல்காப்பியத்திற் கிசைய அடுக்குவதிது அடுக்கப்படுவதிது என விளக்கும் விபரமறிந்தோர் எவரும் இவ்விரு நூல்களின் கருத்தை வெவ்வேறாய்க் கனவிலும் கருதுவாரோ ?

373. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிர் உண்ணுங் கூற்று
—திருக். கொல்லாமை. 6

| | | |
|---|---|---|
| உயிர் | வாழ் | நாண் |
| | | மேல் |
| கூற்று | | கொல்லாமை |

முதலை 42-ல் உயிர் 277-ல் கூற்று, இறுதியை 288-ல் நாண் 32-ல் மேல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 369-ல் இறுதியே 'கொல்லான்' எனத் திருமந்திரம் கூறுவதைக் கொல்லாமை என உணர்த்தி, ஆதி அந்தத்தையே கொள்ளும் எனும் கருத்தையும் இதிலமைத்து "கொல்லாமையாகிய மேலெனும் அந்தத்தைக் கொண்டொழுகும் ஆதியே வாழ் எனும் இடையை உண்ணும் உயிரெனும் கூற்று" எனல்.

ஊனெனும் இடைக்கே 'பெரிது' எனும் நாமம் உண்டென்பது பற்றி 368-ல் 'தெரியான் எனும் முதலே பெரிதுண்ணி' என உணர்த்துவதுபோல் (வாழ்வான், வாழ்பவன், வாழ் எனும் நாமங்கள் இடைக்கு உண்டென்பதுபற்றி) 'வாழ் எனும் இடையை உண்ணும் முதலே உயிரெனும் கூற்று' எனத் திருக்குறள் விளக்குவதறிக. இப்பாவின் கருத்தை இவ்வாறே ஏற்க இதில் ஓர் தக்க ஆதாரமிருக்கிறது, அதையும் காட்டுகிறேன்.

ஆதி அந்தத்திடம் போகாதென 341-லும், 321-ல் அந்தம் ஆதியினிடம் போகாதெனவும் கூறும் திருக்குறள், இப்பாவில் 'அந்தமாகிய நாணெனும் மேலிடத்துச் செல்லாத உயிரெனும் ஆதியே இடையை உண்ணும் கூற்று' என விளக்குவது கண்டு இப்பாவின் கருத்தை வேறெதுவாகவும் ஏற்க இடமில்லை என்பதறிக.

369-ல் அந்தத்தின் நாமங்களெனத் திருமந்திரம் கூறும் அடக்கமுடையான் என்பதை 371-ல் 'அடங்கியான்' எனவும், கொல்லான் என்பதை 373-ல் 'கொல்லாமை' எனவும் உணர்த்தும் திருக்குறள், இக்கொல்லான் அடக்கமுடையான் எனும் அந்தத்தின் ஆதியே காமம் என தொல்காப்பியத்திற் கிசைய 369-ல் திருமந்திரம் கூறுவதையே திருக்குறள் விளக்குகின்றதென்பது இப்போதேனும் தெரிந்ததா ?

உலகில் உலாவித் திரியும் உயிர்களைக் கொன்று உண்பது உத்தமர்க்குகந்ததல்ல என்பதை உணர்த்த இப்பாக்கள் உதவுவதாய்த் தோன்றினும், 'இவற்றுள் உயிர் எனும் ஆதியே அவ்வுயிரா

லா்ன ஊனை உண்ணும் அவ்வூனை அந்தம் உண்ணுது' எனும் கருத்தை மற்ற நூல்களுக்கு இசைய திருக்குறள் விளக்குவதை முக்கியமெனக் காட்டாதிருக்க முடியுமா ?"

365–ல் உயிர் எனும் முதல் ஊனையும் அவ்வூன் நாண் எனும் இறுதியையும் உண்டாக்கியதாகக் கூறும் திருக்குறள், இதிற்காணும் உயிர்–ஊண்-நாண் என்பவற்றையே 366–ல் காட்டி ஊனெனும் இடையை நாண் எனும் இறுதி உண்ணுது என உணர்த்துகிறது. அதே உயிர்-ஊன்-நாண் என்பவற்றில் ஊன் என்பதை 'வாழ்' எனக் காட்டி, உயிர்-வாழ்-நாண் என உணர்த்தி, 373–ல் இடையை உண்ணும் முதலே உயிர் என விளக்கும் விபரம் கண்டு 'ஊனை உண்பது முதல், உண்ணுதலே இறுதி' என்பதை எவ்வித சந்தேகமுமின்றி ஏற்க. இத்தகை உயிர், ஊன, நாண் என்பவற்றை அவரவர் கொள்கைக்கிசைய ஏற்பதெப்படி?

318-I-ல் 'மருந்தெனும் முதலினின் ருகிய மரமெனும் அற்ருல் ஆன இறுதியே செல்வம்' என உணர்த்தும் திருக்குறள், 373–ல் இடையை உண்ணும் முதலே கூற்று எனப் புகட்டுவதால் முதலின் நாமங்களே 'மருந்து கூற்று' எனத் தெரிகிறதன்ருே? இவ்வாறு அங்கங்கும் தனித் தனியாய்க் கூறியிருப்பதை நிச்சயிக்கவே 'மருந்து 10-ல் கூற்றே மருந்து' எனத் திருக்குறள் எச்சரிப்பதைக்கண்டு தெளியாதது நூலின் குற்றமா ?

அதுபோல் 292-ல் முதலே பகை 313-ல் முதலே பண்பு 357-ல் முதலே தலை 341-ல் முதலே கிழக்கு எனக் கூறும் திருக்குறள் 'பகை எனும் பண்பு' 'பண்பே தலை' 'கிழக்காந்தலை' என எச்சரிப்பதைக் கண்டு இச்சொற்களை எப்பாவில் காண்கினும் அங்கங்கும் அதனையும் முதலின் நாமமாய் ஏற்காதது நமது குறையன்ருே ?

366–ல் தலையைப் பிரிந்த ஊன் என்பதையே 264–ல் தலையினிழிந்த மயிரெனவும் நிலையினிழிந்த கடையெனவும் விளக்குவதாய் இப்போதேனும் ஏற்கலாமன்ருே ? 366-ல் உயிர்-ஊன்–செயிர் என முதலிடையிறுதியைத் திருக்குறள் உணர்த்துவதாக நான் எடுத்துக் காட்டியிருப்பதில் இன்னும் சந்தேகமிருந்தால் அதைப் போக்க ஓர் ஆதாரம் காட்டுகிறேன். அதில் 'உயிரில் செயிர் செயிரில் உயிர்' என்பது ஞாபகமிருக்கட்டும்.

374. விஞ்சு முடலுயிர் வேறுபடுத்திட
வஞ்சித் திருந்த வகையறிந்தேனே

—திருமந்திரம்.

உயிர் . வகை உடல்

165-ல் முதலிறுதியே உயிர்-உடம்பு, 106-ல் இடையே வகை எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "உயிர், உடல் எனும் முதலிறுதியை வஞ்சித்து இவற்றை வேறு பிரித்த இடையே வகை என்று அறிந்தேன்" எனல்.

375. உயிருடம்பினீக்கி யாரென்ப செயிருடம்பிற்
செல்லாத் தீ வாழ்க்கை யவர்

—திருக். கொல்லாமை. 10

உயிருடம்பு இன் செயிருடம்பு
தீ
வாழ்க்கை
அவர்

366-ல் கூறும் உயிர்-செயிரையே உயிருடம்பு—செயிருடம்பு என இதிற்காட்டி. 368-ல் இடையாகிய அளவெனும் நோயே இன் என்பதையும் திருக்குறள் இதிலுணர்த்தியிருக்கும் விவரம் காண்க.

I குடம்பை தனித் தொழியப் புட் பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு

—திருக். நிலையாமை. 8

| | | |
|---|---|---|
| பை | புட் | குடம் |
| ற | ப | ந் |
| உயிர் | நட்பு | உடம்பு |
| | அற்று | |

111-ல் முதலே 'சீர்' என்று தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி பொதுப்பாயிரம் 32-ன் அந்தமெனும் 'குடத்தின் சீரே' என நன்னூல் உணர்த்துகிறது. அக்குடத்தையும் தொல்காப்பியத்திற் கிசைய 375-ல் முதலிறுதியே உயிர்-உடம்பு 324-ல் முதலே பை 318-ல் இடையே அற்று என உணர்த்தும் திருக்குறள் அவற்றையும் 57-ல் இடையே ப 235-ல் இறுதியே ந் எனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி, 209-I ல் இடையே உறவு எனத் திருமந்திரம் கூறுவதை 'நட்பு' என உணர்த்தி, (374-ல் உயிர்-உடலை வேறு படுத்தியது இடை எனத் திருமந்திரம் கூறுவதுபோல்) "உயிராகிய பை எனும் முதலையும் உடம்பாகிய குடமெனும் இறுதியையும் தனித்திருக்கச் செய்த (வேறு படுத்திய) இடையாகிய அற்றே நட்பு" எனல். 292-ல் முதலே பகை இப்பாவில் இடையே நட்பு என்பதால் எதற்கிவை பகையும் உறவும் எனும் சங்கைக்கு இடமுண்டன்றோ? அதற்கிசைய அந்தம் ஆதியைச் சேராது இடையையே சேரும் என நூல்கள் விளக்குவதறிக 375-ல் காணும் பாவைக் கவனிப்போம்.

முதலிறுதியை வஞ்சித்து வேறு பிரித்தது இடையெனத் திருமந்திரம் கூறுதற்கிசையத் திருக்குறள் 375-ல் "உயிருடம்பு-செயிருடம்பு எனும் முதலிறுதியை (தனித் தனியாக) நீக்கியது இடையாகிய இன்னொன்பதே, இது காரணம் பற்றி செயிருடம்பெனும் இறுதியினிடத்து உயிருடம்பெனும் முதல் செல்லாது, அவ்வாறு செல்லா முதலெனும் தீயே வாழ்க்கை எனும் அவர்" எனல். 'இல்' என்பதை இறுதியின் நாமமெனப் பல பாக்களில் உணர்த்தும் திருக்குறள் இதில் முதலே 'வாழ்க்கை' என விளக்குவதை மறக்கவேண்டாம்.

336-ன் விளக்கத்தில் இவளெனும் இறுதியைப் பெற்றெடுத்த முதலெனும் ஆண் டே தீ எனவும் 338-ல் நெஞ்செனும் இறுதியைக் கொள்ளும் முதலே அவர் எனவும் கூறும் திருக்குறள், அவற்றையே 375-ல் காட்டி உயிருடம்பாகிய தீ எனும் அவரே வாழ்க்கை என்பதறிக.

288 ல் முதலே உயிர் இறுதியே செயிர் எனும் நாண் எனத் தொல்காப்பியம் கூறுவதில் 'உயிர்—நாண்' என்பவற்றை 373-ல் காட்டி நாணெனும் இறுதியினிடம் உயிர் செல்லாதெனவும், உயிர் செயிர் என்பவற்றை 375-ல் காட்டி செயிரிற் உயிர் செல்லாதெனவும் விளக்கும் விவரம் காண்க.

இவ்வாறு தொல்காப்பியம் கூறும் முப்பொருள்களை விளக்கும் திருக்குறள் 'இல்வாழ்க்கை' என்பவற்றை முதலிறுதியின் நாமங்களென பல பாக்களைக்கொண்டு விளக்கும்போது வள்ளுவர் நமது குடும்ப வாழ்வைப் பற்றி விரிவாய்ப் புகட்டுவதா யேற்பதெப்படி? இன்னும் சந்தேகமிருந்தால் அந்தமெனும் பின்னே இல் எனத் திருக்குறளே விளக்குவதையும் காட்டுகிறேன்.

376. ஆற்றுவா ராற்றல் பசியற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்

—திருக். ஈகை. 5

| | | |
|---|---|---|
| பசி | ... | இற் |
| ஆற்றுவார் | | பின் |

(306-ல் உரைப்பாரே முதல் உரைக்கப்படுவை இடையெனவும், 367-ல் முதலே வைத்தனன் எனவும் கூறும் திருக்குறள்) இதில் "பசி எனும் முதலே ஆற்றுபவர் (செய்பவர்), அப் பசியாலாற்றப்படும் இடையே அப் பசி எனும் முதலின் பசியை மாற்றுபவர், அவ்வாறு மாற்றுவோரெனும் இடை ஆற்றலே இற்

றெனும் பின்" எனல். பசி என்பது முதலின் நாமமென் றேற்கப் பல ஆதாரங்கள் காட்டலாம். அப்படியே ஒவ்வொன் றுக்கும் ஆதாரம் காட்டப் புகுந்தால் எடுத்த செய்தி தடைபடும், ஆயினும் ஒன்றெடுத்துக் காட்டுகிறேன். 298-ல் இடையெனும் பசப்பே அற்று எனக் கூறும் திருக்குறள், அவ்வற்று என்பதை அற்ருரெனக் காட்டி, ஈகை 6-ல் அற்ருரெனும் அழியாகிய இடையை பசி எனும் முதலே தீர்த்தல் (முடித்தல்) என்பது கண்டு தெளிக. 'அந்தமாகிய பின்னே இல்' என்பது தெளி வாய்த் தெரிந்ததா? இனியேனும் இல்—வாழ்க்கை என்பவற்றை ஆதியந்தப் பெயர்களென் றேற்க.

திருக்குறள் இடையை ஆறி உண்ணும் என விளக்குவது 144-ல் 'நஞ்சுண்ட பிரான்' எனத் திருமந்திரமும், 148-ல் 'நஞ்சுண் மழை' எனத் திருவாசகமும், 151-ல் 'இடையை உண்டு வந்த முதலே இரி' என ஔவை குறளும் கூறுவதையே அல்லவா?

376-ல் முதலே உயிருடம்பாகிய தீ எனும் அவரே வாழ்க்கை என்பதை ஏற்கவும் அவ்வாறு முதலே வாழ்க்கை எனக் கூறும் திருக்குறள் 373-ல் இடையை 'வாழ்' என்பது வாழ்வான் என்பதையே என நான் எடுத்துக் காட்டியதை ஏற்கவும் இரண் டோர் ஆதாரம் காட்டுகிறேன்.

377. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து

—திருக். பெருமை. 8

| | | |
|---|---|---|
| மருந்து | ஊன் | ... |
| வாழ்க்கை | பெரும் | |
| ற் | தகைமை | |
| | ம | |

கீழ் வரி இங்கு தேவை யில்லை. திருமந்திரத்திற்கிசைய முதலே 318-I ல் மருந்து எனக் கூறும் திருக்குறள் அதையும் தொல்காப்பியத்திற்கிசைய 365-ல் ஊன் 328-ல் பெரும் என்பவற் றையும் இதில் உணர்த்தி 108-ல் இடை யெனத் தொல்காப்பியம் கூறும் தகை என்பதையும் இதிற் காட்டி யிருப்பதறிக.

311-ல் 'இடையாகிய வினையின் கெடல் எனும் முதல் அவ் வினையின் கண்ணெனும் இறுதியை ஓம்பல்' எனக் கூறும் திருக் குறள், 76-ல் இடைக்கு உரியது முதலே' என்று தொல்காப்பியம் கூறுவதற்கிசைய இதில் "இடையாகிய பெருந்தகைமை எனும் ஊன் ஓம்பும் மருந்தோ வாழ்க்கை" என்பதறிக.

நிற்க, முதலே 292-ல் **சாவார்** 367-ல் **செத்தான்** எனத் தொல் காப்பியத்திற் கிசையக்கூறும் திருக்குறள், 310-ல் கண்ணைத் தேற்றுவித்த இடையே 'வகை' 377-ல் இடையே 'தகை' என்று உணர்த்துவதையும் காட்டி, பெரியாரைப் பிழையாமை 7-ல் 'வகை மாண்ட வாழ்க்கையும் தகை மாண்ட தக்கார்' எனக் கூறி 'இடையாகிய வகையெனும், தகையின் முதலே மாண்ட வாழ்க்கை எனும் தக்கார்' என விளக்கும் விபரம் காண்க.

மருந்தெனும் முதலே வாழ்க்கை எனவும் மாண்ட எனும் முதலே வாழ்க்கை எனவும் கூறுவதையே 375-ல் தீ வாழ்க்கை யவர் என உணத்தும் விபரம் காண்க. இவ்வாறு பல பாக்களைக் கொண்டு ஆதியே 'வாழ்க்கை' எனக் கூறும் திருக்குறள் 376-ல் அந்தமெனும் பின்னே 'இல்' லென்றும் உணர்த்தி யிருப்பதால் 'இல் வாழ்க்கை' என்பவை ஆதியந்தத்தின் நாமங்களெனத் தெரிகிற தன்றோ? இன்னும் சிறிது கவனிப்போம்.

378. அன்பு மறனு முடைத்தாயி னில் வாழ்க்கை
பண்பும் பயனு மது

—திருக்- இல்வாழ்க்கை. 5

| | | |
|---|---|---|
| அறன் | அன்பு | இல் |
| வாழ்க்கை | | |
| பண்பு | அது | பயன் |

முதலே 29்–ல் **அறம்** 375-ல் **வாழ்க்கை** 315-ல் **பண்பு**, இடையை 316-ல் **அன்பு** 367-ல் **அது**, இறுதியை 371–ல் **இல்** 318-ல் **பயன்** எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டி, "வாழ்க்கை—இல் எனும் முதலிறுதியின் இடையே அன்பு, அவ்வன்பை இடையாகவும் வாழ்க்கை எனும் அறத்தை முதலாகவும் உடைத்தாயுள்ள இல்லே இறுதி, இவ் வறன் என்னும் முதலே பண்பு அன்பெனும் இடையே அது இல்லெனும் இறுதியே பயன்" எனல். 'அன்பறனை உடைத்தாயுள்ளதே இல்' என்பதை மறக்காதீர்.

379. பழி யஞ்சிப் பாத்தூ ணுடைத் தாயின் வாழ்க்கை
வழி யெஞ்சல் எஞ்ஞான்று மில்

—திருக். இல்வாழ்க்கை. 4

| | | |
|---|---|---|
| வழி | பழி | எஞ்சல் |
| தூண் | | அஞ்சி |
| வாழ்க்கை | | இல் |
| எஞ்ஞான்று | | |
| பா. | | |

குறிப்பு 23-ல் வழி என முதலையும், இடையை 246-ல் பழி, இறுதியை 43-ல் எஞ்சிய 56-ல் அச்சம் 13-ல் இல் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 'வழி யெஞ்சலே பழி யஞ்சி' என்பதறிக.

"பழி—அஞ்சி எனும் இடையிறுதியின் முதலே பா தூண் எனும் வாழ்க்கை, இம் முதலெனும் வாழ்க்கை, பழி எனும் இடையையும் அஞ்சி எனும் இறுதியையும் உடைத்தா யுள்ளது" என்பதறிக. 365-ன் விளக்கத்தில் இடையே 'சால்பு' எனவும் அச் சால்பை ஊன்றிய (உண்டாக்கிய) முதலே தூண் என உணர்த்தும் திருக்குறள் இதில் அத் தூணே வாழ்க்கை என்பதறிக.

378 ல் 'அன்பு—அறன் எனும் முதலிடையை உடைத்தாயுள்ள இறுதியே இல்' எனவும், 379-ல் 'பழி—அஞ்சி எனும் இடையிறுதியை உடைத்தாயுள்ள முதலே வாழ்க்கை' எனவும் விளக்கும் விபரம் காண்க. இவ்விரு பாக்களிலும் 'உடைத்தாயின் இல், உடைத்தாயின் வாழ்க்கை' என உணர்த்துவதை ஊன்றி நோக்கின் உண்மை விளங்கும். இத்தகைய இல்—வாழ்க்கை என்பதைக் குடும்ப வாழ்க்கை எனக் கொள்வதோடு முதலிடையிறுதியின் நாமங்களெனக் கூறும் தந்தை—தாய்—மகன் என்பவற்றையும் கணவன் மனைவி மக்களெனத் தீர்மானிக்கலாமா?

369-ல் அஞ்சி எனும் இறுதியே எஞ்சல் எனக் கூறும் திருக்குறள் (முதலிறுதிக்கு எதிர் மறை நாமங்கள் உண்டென்பது பற்றி) 355-ல் முதலே 'எஞ்சாத' என உணர்த்துவது கண்டு எஞ்சாத எனும் முதலே அஞ்சாத என் றேற்கலா மன்றோ? இன்னும் இதில் சந்தேகமிருந்தால் அதையுமகற்ற ஆதாரம் காட்டுகிறேன்.

380. அஞ்சாமை ஈகை அறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு

—திருக். இறைமாட்சி 2

| | | |
|---|---|---|
| எஞ்சாமை | வேந்தர் | அறிவு |
| | ஈகை | ஊக்கம் |
| அஞ்சாமை | நான்கு | இயல்பு |
| | இ | ந் |

முதலே 355-ல் 'எஞ்சாத' 292-ல் 'அஞ்சாதவர்' எனக் கூறும் திருக்குறள் இதில் அவற்றை எஞ்சாமை எனவும் அஞ்சாமை எனவும் எடுத்துக் காட்டி, 296-ல் இடையே மன்னவன் இறுதியை

301-ல் **ஊக்கம்** 312 ல் *அறிவு* எனக் கூறுவதையும் இதில் உணர்த்தி, அவ்வைந்து சூத்திரங்களின் கருத்தை இப் பாவாலும் இப் பாவின் கருத்தை அவ்வைந்து பாக்களாலும் நிச்சயிக்கும் நேர்மை காண்க.

4-ல் முதலே நிலம் 61-ல் இடையே இனம் 4-ல் இறுதியே **இயல்பு** எனத் தொல்காப்பியம் கூறுவதையே சிற்றினஞ் சேராமை 2-ல் 'நிலத்தியல்பே இனத்தியல்பு' என விளக்கும் திருக்குறள் இதே இயல்பை 380-ல் இறுதி என உணர்த்துவ தறிக.

"அஞ்சாமை—வேந்தர் எனும் முதலிடைக்கு இறுதியே இயல்பு, இவ் வஞ்சாமை—வேந்தர்—இயல்பே எஞ்சாமை—ஈகை —அறிவெனும் ஊக்கம்" எனல். இதில் முதலே '**எஞ்சாமை எனும் அஞ்சாமை**' **எனக் கூறும் திருக்குறள் 379-ல் இறுதியே 'அஞ்சி எனும் எஞ்சல்' என உணர்த்தும் விபரம் காண்க.**

இடையின் நாமமே வேந்தர் என்பது இப்போதேனும் தெளிவாய்த் தெரிந்ததா? இன்னும் சந்தேகமிருந்தால் அதையும் களைய ஓர் ஆதாரம் காட்டுகிறேன்.

381. வென்றி தருவது மன்னவன்

—திருக். செங்கோண்மை. 6

... மன்னவன் வென்றி

மேற் காணும் வேந்தரை இதில் **மன்னவன்** எனக் காட்டி, 272-ல் இறுதியே **வென்றி** எனத் தொல்காப்பியம் கூறுவதையும் உணர்த்தி, "வென்றி எனும் இறுதியைத் தரும் இடையே மன்னவன்" எனல்.

382. வென்றி வினை யுரைப்பான் பண்பு

—திருக். தூது. 3

பண்பு வினை வென்றி

357-ல் முதலே **பண்பு** 345-ல் இடையே **வினை** 381-ல் இறுதியே வென்றி எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டி, "வென்றி எனும் இறுதியையும் வினை எனும் இடையையும் உரைப்பது (செய்வது) பண்பெனும் முதலே" எனல்.

314, 315-ல் 'நன்றி எனும் இறுதியைப் பயப்பது தூதெனும் இடை, அத்தூதை உரைப்பது (செய்வது) பண்பெனும் முதல்' எனக் கூறும் திருக்குறள் 381, 382-ல் 'வென்றி எனும் இறுதியைத் தரும் இடையே மன்னவன், அம் மன்னவனெனும் வினையையும்

வென்றி எனும் இறுதியையும் உரைப்பது (செய்வது) பண்பெனும் முதலே ' என விளக்கும் விபரமறிக.

380-ல் எஞ்சாமை—இயல்பு எனும் ஆதியந்தத்தின் இடையே ' வேந்தர் ' எனவும், 341-ல் கோல்—கோடி எனும் ஆதியந்தத்தின் இடையே ' அரசு ' எனவும், 296-ல் அறம்—அந்தணர் எனும் ஆதியந்தத்தின் இடையே ' மன்னவன் ' எனவும் உணர்த்துவதையே 281-ல் வென்றியைத் தருவது மன்னவன் எனத் திருக்குறள் விளக்கும் நேர்மை கண்டு தெளிக.

296-ல் அறமெனும் கோலுக்கும் அந்தணருக்கும் இடையே நூலெனும் மன்னவன் எனக் காட்டியதில் மன்னவன் என்பதை ஆராய்ந் தறிந்தது போல் ' நூல் ' என்பதையும் சிறிது கவனிப்போம்.

383. விலங்கொடு மக்க ளனைய ரிலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்

—திருக். கல்லாமை. 10

| | | |
|---|---|---|
| விலங்கு | நூல் | மக்கள் |
| ஏனை | | அனையர் |
| அவர் | | கற்றார் |

முதலே 158-ல் **விலங்கு** 54-ல் **ஏனை** 20-ல் **அவர்**, இடையை **122-ல் நூல்,** இறுதியை 222-ல் **மக்கள்** 280-ல் **அனையர் புலவர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே இதிற் காட்டி, " நூலெனும் இடையின் முதலே விலங்காகிய அவரெனும ஏனை, இறுதியே மக்களாகிய கற்றாரெனும் அனையர் " எனல். தொல்காப்பியம் கூறும் புலவரையே இதில் கற்றார் என்பதறிக.

20-ல் அந்தத்தைக் காட்டி ஆதியை உணர்த்த ' அகத்தவர் ' எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல் 282-ல் ' அகத்துப் பகை ' என விளக்கும் திருக்குறள், இப்பாவில் ' விலங்கொடு மக்கள் ' என ஆதியைக்காட்டி அந்தத்தையும் ' கற்றாரோ டேனை ' என அந்தத்தைக் காட்டி ஆதியையும் (தொடர்பைக் காட்டி) விளக்குவ தறிக.

I நிலவரை நீள் புகழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு

—திருக். புகழ். 4

| | | |
|---|---|---|
| நிலம் | வரை | புகழ் |
| ஏ | ள் | நீ |
| தாது | | உலகு |
| புத்து | | புலவர் |

15-ல் இறுதியே **பல்** குறிப்பு 2-ல் இடையே **வகை** என்பதைக் காட்டி, பெயரியல் 11-ல் ' பல் வகைத் தாது ' என நன்னூல் கூறி முதலைத் தாது என்பதறிக.

முதலை 4-ல் **நிலம்** 168-ல் ஏ, இடையை 12-ல் **வரை**, இறுதியை 108-ல் **புகழ்** 163-ல் **நீ** 165-ல் **உலகு** 280-ல் **புலவர்** எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி, " வரை எனும் இடையால் ஆற் றப்பட்ட இறுதியாகிய புலவரெனும் புகழே உலகு. இவ்வுல கெனும் புலவரைப் போன்ற முதலாகிய நிலமெனும் புத்தே தாது" என்க.

முதலை 267—ல் **ஒன்று** 9—ல் **பொன்** எனத் தொல்காப்பியமும் பெயரியல் 11-ல் **தாது** என நன்னூலும் கூறுவதைக் காட்டி புகழ் 3-ல் ' பொன்ருது நிற்ப தொன்றில், என உணர்த்தும் திருக்குறள் இத் தாதையே 383-Iல் முதலென விளக்கும் விபரமறிக. இப் புலவரையே 383-ல் ' கற்ருர் ' என உணர்த்தும் விபரம் கண்டு தெளிக.

384. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடற
சொற் றெரிதல் வல்லா ரகத்து

—திருக். அவை யறிதல். 7

| | | |
|---|---|---|
| சொல் | கல்வி | கற்றறிந்தார் |
| ச, ற | க, ட | தெரிதல் |
| வல்லார் | | அகம் |

• முதலை 49—ல் **சொல்** 277-ன் I—ல் **வல்லோர்**, குறிப்பு 14-ல் இடையே **கல்வி**, இறுதியை 85-ல் **தெரிதல்** 20-ல் **அகம்** 280-ல் **புலவர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 327—ல் முதலே **ச, ற** இடையே க, ட என நன்னூல் கூறுவதையும் இதிலுணர்த்தி, " கற்றறிந்தா ரெனும் இறுதியும் கல்வி எனும் இடையும் விளங்கு வது சொல்லெனும் முதலினின்றே, அச்சொல்லெனும் வல்லார் தெரிதலெனும் அகத்து முதலே " எனல். 'அகத்துப் பகை' எனவும், ' கற்ருரோ டேனை ' எனவும் அந்தத்தைக் காட்டி ஆதியை உணர்த்தும் திருக்குறள் இதில் ' தெரிதலெனும் அகத்துக் காதி யாகிய சொல்லே வல்லார் ' என்பதறிக. இக் கல்வி தொல்காப் பியம் கூறும் இறவாக் கல்வியன்ருே ?

I கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்

—திருக். புல்லறி. 6

| | | |
|---|---|---|
| கல்லாத | | மேல் |
| வல்லது | | |
| ஊ | ஐயம் | உம் |
| ச | க | |
| ற | ட | |

309-ல் 'ஊ எனும் முதலே வல்லது, உம்மெனும் இறுதியே மேல் எனக் கூறி இடையே வகை' என விளக்கும் திருக்குறள் (முன்னுரையில் பல சூத்திரங்களைக் கொண்டு இடையே சிறப் பென உணர்த்தும் தொல்காப்பியம் இடையியல் 7-ல் 'சிறப்பே ஐயம்' எனப் புகட்டுவதையும் இதில்) அம் முதலிறுதியையே காட்டி "ஐயமெனும் இடையைத் தரும் ஊ ஆகிய வல்லது எனும் முதலே கல்லாதது" என்பதறிக. அதில் 'மேல் எனும் அந்தத் தைக் கொள்ளும் ஆதியே வல்லது எனும் அவை' எனக் கூறும் திருக்குறள் இதில் மேலெனும் அந்தத்தைக் கொள்ளும் ஆதியே வல்லது எனும் கல்லாதது என்பதறிக.

384–ல் அந்தத்தைக் கற்றறிந்தார் என்பதற் கிசைய இதில் ஆதியைக் **கல்லாதது** என்பது கண்டு தெளிக. அதில் முதலிடைக் குக் கூறும் ச ற, க ட என்பவற்றை இதிலும் உணர்த்தும் விபரம் காண்க.

309-ல் சொல்லனெனும் சொல்லே வல்லது எனக் கூறும் திருக்குறள் 384-ல் 'சொல்லே-வல்லார்' என்பதறிக. அச் 'சொல் லன்' என்பதையும் முதலின் நாமமெனத் திருக்குறள் உணர்த்து வதையும் காட்டுகிறேன்.

385. கடுஞ் சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்

—திருக். வெருவந்த செய்யாமை. 6

| | | |
|---|---|---|
| சொல்லன் | நெடும் | செல்வம் |
| | நீடு | கண் |

309-ல் முதலே **சொல்லன்** இறுதியை 318-ல் **செல்வம்** 325-ல் **கண்** எனக் கூறும் திருக்குறள், இடையை 99-ல் **நீடு** 257-ல் நெடுமை எனத் தொல்காப்பியம் கூறுவதையும் காட்டி, "கண் ணெனும் அந்தம் இல்லாவிடில் சொல்லன் எனும் ஆதியும், நெடும் நீடு எனும் இடை இல்லாவிடில் கண்ணாகிய செல்வமெனும் அந்த மும் கெடும்" எனல். 308-ல் 'பல்லாரைப் பகையே கொள்ளும்' எனவும், 309-ல் 'கண்ணே களவைக் கொள்ளும்' எனவும் கூறி 'முதல் இறுதியையும் இறுதி இடையையும் கொள்ளும்' என

உணர்த்தும் திருக்குறள் அவற்றிற் கிசைய இப்பாவில் 'அந்தத் தோடு சேராவிடில் ஆதியும் இடையோடு சேராவிடில் அந்தமும் கெடும்' எனவும் விளக்கும் விபரம் கண்டு, பாக்கள் ஒன்றை யொன்று தழுவி உணர்த்தும் செய்திகளைக் கொண்டு அவ்வப் பாவிற் காணும் பெயர்களையும் அப்பெயர்களைக் கொண்டு அவ்வச் செய்தியையும் தீர்மானித்துக் கொள்ள. இவ்வாறு 'இதில் இது சேராவிடில் கெடும்' என எச்சரிப்பது இவற்றை உண்பதற்குகந்த பக்குவப்படுத்தும் முறை என்பதறிக. 'நீடு' என்பதைத் திருக் குறளே தெளிவுபடுத்தும் விபரத்தையும் எடுத்துக் காட்டுகிறேன்.

386. பொறி வாயில் ஐந்தவித்தான் பொய் தீரொழுக்க
நெறி நின்றார் நீடு வாழ் வார்

—திருக். கடவுள் வாழ்த்து. 6

| | | |
|---|---|---|
| பொய் | ஒழுக்கம் | நெறி |
| | நீடு | |
| | வாழ்வார் | |

21-ல் இடையே 'புலன்' எனத் தொல்காப்பியம் கூறுதற் கிசைய இதில் முதலைப் 'பொறி' எனக் காட்டி, 110-ல் இடையே **வாய்** 13-ல் இறுதியே **இல்** 37-ல் முதலே ஐந்து எனத் தொல் காப்பியம் கூறுவதையே உணர்த்தி, முதலாகிய ஐந்தெனும் பொறியின் இடையே வாயெனும் அவித்தான் இறுதியே இல் லெனல். ('மாய்கைத் தாயாக மாமாயை ஈன்றிட, வாய பரசிவன் தந்தையாய் நிற்கவே' எனத் திருமந்திரம் 2268-வது பாடலில் கூறி மாயை யாகிய சிவனே தாயாகிய இடையை ஈன்றிடத் தந்தையாய் நின்றார் எனக் கூறுகிறது.) இவ்வாறு ஆதிக்கு மாயை இடைக்கு அவித்தை இறுதிக்குத் தத்துவம் எனும் நாமங்கள் உண்டென்பது பற்றி அவித்தை எனும் இடையை அவித்தான் எனத் திருக்குறள் உணர்த்துவதறிக. இதில் சந்தேகமிருந்தால் நீத்தார் பெருமை 5-ல் 'ஐந்து, அகல், இந்திரன், கரி எனும் ஆதியால் ஆற்றப்படும் இடையே அவித்தான், விசும்பு, கோமான் எனும் சால்' என விளக்குவது கண்டு தெளிக. இதிற் காணும் 'கரி' என்பதையே கூடாவொழுக்கம் 7-ல் **கரியர்ன்** எனவும் 'சால்' என்பதையே நாணுடைமை 3-ல் **சால்பு** எனவும் திருக்குறள் உணர்த்துவதறிக. இவை இங்கு அவசியமில்லை என்றாலும் மற்றதை நான் எடுத்துக் காட்டுவதில் சந்தேகிக்க இடமில்லாதிருக்க ஓர் சிறிது விளக் கினேன். மற்றதைக் கவனிப்போம்.

48-ல் முதலே **பொய்**, இடையை 246-ல் **ஒழுக்கம் 99-ல் நீடு**, இறுதியை 38-ல் **நின்ற நெறி** என்ற நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதையே காட்டி, " பொய்யெனும் ஆதி தீர்க்கும் (முடிக்கும்) இடையெனும் ஒழுக்கமே நீடெனும் வாழ்வார் இறுதியே நின்ற நெறி " எனல்.

269-ல் இறுதியே **கோள்** இடையை 15-ல் **குணம்** 32-ல் **இல** என நன்னூல் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, கடவுள் வாழ்த்து 9-ல் ' கோளில் பொறியிற் குணமிலவே ' பொறி—கோள் எனும் முதலிறுதியின் இடையாயுள்ள இலவே குணம் என உணர்த்தும் திருக்குறள் 386-ல் கூறும் பொறி இதுவே.

373-ல் ' வாழ் ' எனத் திருக்குறள் கூறுவது இதிற் காணும் வாழ்வார் எனும் இடையையே என்பது தெரிந்ததா ? இதில் இன்னும் சந்தேகமிருந்தால் மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

387. வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்

—திருக். இல்வாழ்க்கை. 10

| | | |
|---|---|---|
| வான் | வையம் | வாழ்வு |
| | வாழ்பவன் | |
| | தெய்வம் | |

261-ல் முதலே **வான்** எனக் கூறும் திருவாசகம் போற்றித் திருவகல் 121-ல் ' வாழ்வே போற்றி யென் வைப்பே போற்றி ' எனக் கூறுகிறது. இதிற் காணும் 'வைப்பு' என்பதை நீத்தார் பெருமை 4-ல் ' வரனென்னும் வைப்பிற் கோர் வித்து ' முதலாகிய வரனென்னும் வைப்பின் இடையே ஓரெனும் வித்து என உணர்த்துவதோடு திருவாசகம் கூறும் ' வாழ்வு ' என்பதை இப்பாவில் இறுதியெனக் காட்டுவதறிக.

திருக்குறள் இடையெனக் கூறும் வித்து என்பதைத்தான் திருவாசகம் விட்டதா ? இல்லை யில்லை. திருத்தெள்ளேணம் 19-ல் ' விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து ' முழுதெனும் முதலுக்கும் பாதாளத்தார் எனும் இறுதிக்கும் இடையாகிய விண்ணோரே வித்து எனவும் உணர்த்துகிறது. இவ்வாறு திருவாசகம் விளக்கும் ' வான்—வாழ்வு ' என்பவை இதில் திருக்குறள் கூறுவதையன்றோ ?

இறுதியை 292-ல் ' அரியர் ' எனவும் 319-ல் 'அருமை' எனவும் கூறும் திருக்குறள் செய்ந்நன்றியறிதல் 1-ல் ' வையகமும் வானக

மும் ஆற்ற லரிது' அரிதெனும் இறுதியை ஆற்றிய முதலுமிடை யுமே வையகமும் வானகமும் என்று விளக்குவது கண்டு இவ் வானகம் வையகம் என்பவற்றையே 387-ல் 'வான்—வையம்' என்று உணர்த்துவதறிக. 312-ல் 'அவ் எவ் எனும் முதலிடையோ டுறையும் இறுதியே உலகு' என்பதுபோல் இதில் 'வானுறையுந் தெய்வம்' என விளக்கும் விபரம் காண்க.

165-ல் இடையே **தெய்வம்** 55-ல் இறுதியே கு எனத் தொல் காப்பியம் கூறுவதையே காட்டி (164-ல் பொழுது தலை வைத்த கை அதாவது முதலிடையாகிய தலையும் பொழுதும் வைத்த ஆக் கிய கை எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல்) "வானோ டுறைந்துள்ள வையமெனும் வாழ்பவனே தெய்வம், அத்தெய்வ மென்னும் இடையால் வைக்கப்படும் (செய்யப்படும்) இறுதியே வாழ்வு" எனல்.

385-ல் இடையே நீடு எனவும், 386-ல் நீடே வாழ்வா ரெனவும், 387-ல் வாழ்வாரே தெய்வம் எனவும் திருக்குறள் விளக்குவதைக் கவனித்தீர்களா? இவ்வாறு உணர்த்தும் **வாழ்வான்** என்பதையும் 352-ல் இடையே **மற்றவர்** என்பதையும் இடையின் நாமங்க ளெனக் காட்டி 367-ல் முதலே **செத்தான்** என்பதையும் உணர்த்தி ஒப்புரவறிதல் 4-ல் 'இடையாகிய வாழ்வானெனும் மற்றையான் ஆதியாகிய செத்தாருள் வைக்கப்படும் (செத்தாரால் ஆக்கப்படும்) என்பதறிக.

தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதுபோல் திருக் குறளும் இடையே தெய்வம் என விளக்குவதைக் கூர்ந்து கவனிக்க வும். 377, 378, 379-ல் இடை எனும் ஊனே ஓம்பும் ஆதியாகிய அறமெனும் பண்பே **வாழ்க்கை** எனவும் முன் 387-ல் இடையே **வாழ்பவன்** இறுதியே **வாழ்வு** எனவும் திருக்குறள் விளக்கும் விபரம் காண்க.

386-ல் காணும் பா கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில் இருப்பதாலும் இவ்வதிகாரத்தைப் பற்றியும் வான் சிறப்பைப் பற்றியும் பெருஞ் சச்சரவுகள் நிகழ்வதாலும் இவ்வதிகாரங்களி லுள்ள சில பாக்களை எடுத்துக் காட்டுகிறேன்.

I. மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

—திருக். கடவுள் வாழ்த்து. 3

| | | |
|---|---|---|
| நிலம் | மலர் | அடி |
| | மாண் | |
| | நீடு | |
| | வாழ்வார் | |

4–ல் முதலே **நிலம்**, இடையை 131-ல் **மலர்** 99-ல் **நீடு**, இறுதியை 173-ல் **அடி** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 45–ல் முதலே **ஆண்** 288-ல் இறுதியே **தாண்** எனத் தொல்காப்பியம் கூறுவதற்கிசைய இடைக்கு **மாண்** எனும் நாமம் உண்டென உணர்த்தி, (215-ல் 'அலர் மிசை ஆயன்' எனத் திருமந்திரம் கூறுவதுபோல்) "முதலெனும் நிலத்தின் மேலுள்ள இடையாகிய நீடே வாழ்வாரெனும் மலர், அம்மலருக்கு மேலே மலர் எனும் மாணினின்று சென்ற இறுதியாகிய அடி இடையாகிய மாண் எனும் மலரைச் சேர்ந்திருக்கும்" எனல்.

324, 325-ல் கண்ணே நோய் செய்தது எனவும் கண்ணே நோய் செய்தார் எனவும் அஃறிணையாகவும் உயர்திணையாகவும் கூறும் திருக்குறள், இதில் மாணே அடி சேர்ந்திருக்கும் என்பதை மாணே அடி சேர்ந்திருப்பார் என உணர்த்துவது கண்டு தெளிக. 386-ல் நின்ற நெறி எனும் அந்தத்தின் இடையே நீடெனும் வாழ்வார் எனக் கூறும் திருக்குறள், இதில் நிலமெனும் ஆதிக்கு மேல் உள்ள இடையே நீடெனும் வாழ்வார் என விளக்கும் விபரம் தெரிந்ததா? இதில் ஆதியந்தம் எனக் காட்டும் 'நிலம்—அடி' என்பவையும் 386-ல் ஆதியந்தம் எனக் காட்டும் 'பொய்—நெறி' என்பவையும் தொல்காப்பியம் கூறுபவை யன்றோ? அவற்றையே இவ்விரண்டு பாக்களிலும் காட்டி இடையே நீடெனும் வாழ்வார் என விளக்கும் விபரம் காண்க. இப்பாவை இவ்வாறே ஏற்க வேண்டுமென்பதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன்.

II. பிறவிப் பெருங் கடனீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர்

—திருக். கடவுள் வாழ்த்து. 10.

| | | |
|---|---|---|
| இறைவன் | பெருங் | பிறவி |
| | கடல் | அடி |

குறிப்பு 21-ல் முதலே **இறைவன்** இடையை 111–ல் **பெரும்** 158-ல் **கடல்**, இறுதியை 85-ல் **பிறப்பு** 173-ல் **அடி** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டியிருக்கும் விபரம் காண்க. தொல்காப்பியத்திற் கிசைய 355-ல் முதலே 'இறைவன்' 315-ல் இறுதியே 'குடி எனு: பிறத்தல்' என விளக்கும் திருக்குறள் அவற்றை

இதிலும் காட்டி, "அந்தமாகிய பிறவியின் பெருங்கடலெனும் இடையே நீந்துவார், அப்பிறவி எனும் அடியைச் சேராமல் (பிரிந்துள்ள) ஆதியாகிய இறைவன் நீந்தார்" எனல். 263-ல் இறுதியே பிறவி என ஔவை கூறுவதையே இதிலுணர்த்துவதறிக.

இப்பாவில் அந்தமாகிய அடியைச் சேர்ந்தில்லா முதலே இறைவன் எனவும், 387-I ல் அந்தமாகிய அடியைச் சேர்ந்துள்ள இடையே மாணுகிய நீடெனும் வாழ்வா ரெனவும் விளக்குவதை ஊன்றி நோக்கவும்.

இதில் முதலே இறைவன் எனக் கூறும் திருக்குறள், 302-ல் இவ் விறைவன் இருப்பு நிலம் எனவும், 371-ல் அந்தமாகிய அயன் இருப்பு மலை எனவும், இப்பாவில் இடையாகிய மாலின் இருப்பு கடல் எனவும் உணர்த்துகிறது.

இவ்வாறு இருப்பதுபற்றி நிலத்திலிருக்கும் இறைவனும் மலையிலிருக்கும் அயனும் நீந்த வேண்டிய அவசியமில்லை. கடலில் இருக்கும் மால் நீந்தியே ஆகவேண்டு மல்லவா? அது பற்றியே பெருங்கடல் எனும் இடை நீந்துவார் எனவும் இறைவனெனும் ஆதி நீந்தாரென்பது மறிக. இன்னுமிதில் சந்தேக மிருந்தால் அதையும் களைய மற்றோர் ஆதாரம் காட்டுகிறேன்.

III. அற வாழி அந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லாற்
பிற வாழி நீந்த லரிது

—திருக். கடவுள் வாழ்த்து. 8

| | | |
|---|---|---|
| அறம் | வாழி | அந்தணன் |
| | | தாள் |
| பிற | | அரிது |

முதலே 78-ல் **அறம்** 76-ல் **பிற**, இறுதியை 273-ல் **அந்தணர்** 191-ல் **தாள்** 106-ல் அருமை எனத் தொல்காப்பியமும், 209-Iல் முதலிடையிறுதியை அற—வாழி—அந்தணன் எனத் திருமந்திரமும் கூறுவதையே காட்டி, "அந்தமாகிய அந்தணரெனும் அரிதே தாள், அத்தாளைச் சேர்ந்துள்ள வாழி எனும் இடை அல்லாத அறமெனும் ஆதியே பிற' அப் பிறவுக்கும் அந்தணருக்கும் இடையாகிய வாழியே நீந்தல்" எனல்.

இவை அனைத்து மிருக்கட்டும், 292-ல் சாவா ரெளியர் எனும் முதலிடையின் இறுதியே **அரியர்** எனவும், 319-ல் அலரெனும் ஆதியை அறியாத அந்தமே அருமை எனவும், செய்நன்றி யறிதல் 1-ல் வையகம் வானகம் எனும் முதலிடையால் ஆற்றப்பட்ட

இறுதியே அரிது எனவும் கூறி அரியர் அருமை எனும் அந்தமே அரிது என உணர்த்தும் திருக்குறள் அதே 'அரிது' என்பதை இதிற் காட்டி அரிதே அந்தணனெனும் தாள் என விளக்கும் விபரம் காண்க. இதே தாள் என்பதைத் திருக்குறளே விளக்கு வதை அடுத்தும் காணலாம்.

296-ல் 'ஆதியாகிய கோலே அறம் அந்தமாகிய இல்லே அந்த ணர்' எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டி, அற மெனும் ஆதியே பிற அந்தண ரெனும் அந்தமே தாள் என விளக்குவதறிக.

IV. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென் றுணரற் பாற்று

—திருக். வான்சிறப்பு. 1

| | | |
|---|---|---|
| வான் | தான் | உலகம் |
| ற் | று | |
| பாற் | அமிழ்தம் | |

தொல்காப்பியத்திற் கிசைய 387-ல் முதலே வான், 329-ல் இடையே தான், 312-ல் இறுதியே உலகு 342-ல் இடையே அமிழ்தம் 293-ல் முதலே பால் என உணர்த்தும் திருக்குறள், இவற்றையும் முதலே 228-ல் ற் இடையைக் குறிப்பு 9-ல் று எனத் தொல்காப் பியம் கூறுவதையும் இதிற் காட்டி, "ஆதியாகிய வானின்று அந்த மெனும் உலகம் வழங்கப்பட்டு வருவதால் இடையாகிய தானெனும் அமிழ்தமும் வானெனும் பாலாலேயே ஆகுமென்றுணர, ற் றெனும் முதலே பால் று எனும் இடையே அமிழ்தம்" எனல்.

இதிற்காணும் சொற்களே இப்பாவில் காண்பதுபோல் அதததற்கே நாமமாக அமைத்து அந்தந்தப் பாவையும் விளக்கும் விபர மறிக. ஙிற்க, 228-ல் கணவன் எனும் முதலே ற் எனத் தொலகாப்பியம் கூறுவதையே இப்பாவில் திருக்குறள் உணர்த்து வதாக நான் எடுத்துக் காட்டியிருப்பதை ஏற்க தொல்காப்பியம் 'ற் எனும் முதலேகணவன்' எனக் கூறுகிறதல்லவா? அக் கணவனை யும் திருக்குறள் விளக்குவதைக் காட்டுகிறன், கண்டு தெளிக.

V. மாலே நோய் செய்தன் மணந்தா ரகலாத
காலே யறிந்ததிலேன்

—திருக். பொழுது கண். 6

| | | |
|---|---|---|
| மாலே | நோய் | காலே |
| மணந்தார் | | தன் |

முதலே 226-ல் மாலை 228-ல் கணவர், இடையை 322-ல் நோய், இறுதியை 181-ல் காலை 30-ல் தன் எனத் தொல்காப்பியம் கூறுவதில், 354-ல் முதலே மாலே யென்றும் 325-ல் இடையே நோயென்றும் இறுதியே தன்னென்றும் உணர்த்தும் திருக்குறள், இதில் " மாலை எனும் முதலின் இடையாகிய நோய் செய்த இறுதியாகிய காலை எனும் தன்னை மாலையாகிய மணந்தாரெனும் முதல் அறிந்தாணில்லை " எனல்.

319-ல் 'அருமை எனும் அந்தம் அறியாத அலரே ஆதி,' எனக் கூறும் திருக்குறள் இதில் காலை எனும் அந்தத்தை மாலை எனும் ஆதி அறியாதெனை விளக்குவது காண்க.

தொல்காப்பியம் கூறும் கணவர் என்பதை இதில் மணந்தார் என்வும், கணவரே ற் றெனத் தொல்காப்பியம் கூறுவதை முன் IV-ல் முதலெனும் பாலே ற் றெனவும் திருக்குறள் விளக்குவது கண்டேனும் அப்பாவில் இடையெனும் அமிழ்தமே று எனத் திருக்குறள் உணர்த்துவது தொல்காப்பியம் கூறுவதையே என்று ஏற்கலா மன்றோ ?

365-ல் இடையே ' சால்பு ' எனக் கூறும் திருக்குறள் 365-ன் விளக்கத்தில் இடையெனும் சால்பை ஊன்றிய (ஆக்கிய) முதலே தூண் எனவும், 379-ல் அத் தூணே பழி—அஞ்சி எனும் இடையிறுதியின் முதலாகிய வாழ்க்கை எனவும், 375-ல் அவ்வாழ்க்கையே அவர் எனவும் விளக்குவதைத் தயவு செய்து ஊன்றி நோக்கவும். இவ்வாறு உணர்த்தும் திருக்குறள் 335-Iல் காதன்மை எனும் இடை கை எனும் அந்தமில்லை எனவும். 340-ல் அக் கையே அந்தமாகிய அசைவிலாப்பொருள் எனவும் விளக்குகிறதன்றோ ? இப்படி 'முதலெனும் வாழ்க்கையே தூண் எனும் அவர், இறுதியே கை ' என பல பாக்களைக் கொண்டு விளக்கும் திருக்குறள் உழவு 5-ல் ' இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது, கை செய்தூண் மாலையவர்' எனக்கூறி (இரப்பாரெனும் அந்தத்திற்காக இடையைத் தரும் இரவாரெனும் ஆதியே அவ்விரப்பாரெனும் கையையும் செய்யும் தூணாகிய மாலை எனும் அவர்) என்று விளக்கும் விவரம் காண்க.

தூண் என்பதையும் அவர் என்பதையும் பல பாக்களில் முதலின் நாமங்களெனத் தனித்தனியே உணர்த்தியிருக்கும் திருக்குறள் இவ்விரண்டிற்கும் இடையில் ' மாலை ' என்பதை அமைத்துக் காட்டி இப்பாவில் ' தூண் மாலை யவர் ' என விளக்கும்போது இம்

மாலையை வேறெதுவுமாக ஏற்கலாமா? முன் V–ல் மணந்தார் எனக் கூறும் மாலை இதுவன்றோ?

375, 377, 378, 379-ல் முதலே **வாழக்கை**, 386, 387–ல் இடையே **வாழ்வார்**, 387-ல் இறுதியே **வாழ்வு** என விளக்குவது தெரிந்ததா? இவற்றை ஆராயப்புகுந்ததில் 'இடையே மன்னவன்' 'இறுதியே இல்' என்பதும் தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இவை அனைத்து மிருக்கட்டும், 'கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு' எனும் அதிகாரங்களில் காணும் பாக்களில் பல அபிப்பிராய பேதங்கள் கிளப்புவது பற்றி அதைக் களைய சில பாக்களை விளக்கியது ஞாபகமிருக்கலாம். இன்னும் தெளிவடைய கடவுள் வாழ்த்து என்பது என்ன? அதிற் காணும் முதற் பாவின் கருத்தென்ன என்பதையும் சிறிது கவனிப்போம்.

388. காலம் மூன்றொடு கண்ணிய வருமே

—தொ. புறத். 36

காலம் கண்ணிய மூன்று

54-ல் முதலே **காலம்** 39-ல் இறுதியே **மூன்று** என்பதை இதிற் காட்டி, "காலம்—மூறுன் எனும் முதலிறுதியின் இடையாய் கண்ணிய என்பது வரும்" எனல். குறிப்பு 13-ல் ஆ—வயின் என்பவை இறுதியாகிய மூன்றொடு முதலிடை என்பதுபோல் இதில் காலம்—மூன்றொடு கண்ணிய என்பதறிக.

389-ல் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

—தொ. புறத். 33

வாழ்த்து கண்ணிய கடவுள்

மேற்காணும் **கண்ணிய** என்பதை இதிற் காட்டி, "கண்ணிய எனும் இடையின் முதலே வாழ்த்து இறுதியே கடவுள்" எனல். 'காலம்—மூன்று என்பவற்றொடு கண்ணிய' என மேலே கூறு வதையே இதில் 'கடவுள்—வாழ்த்து என்பவற்றொடு கண்ணிய' என்று உணர்த்துவதறிக.

390. காமப் பகுதி கடவுளும் வரையார்.

—தொ. புறத். 28

காமம் பகுதி கடவுள்

வரையார்

102-ல் முதலே **காமம்** இடையை 118-ல் **பகுதி** 2-ல் **வரையார்** இறுதியை 389-ல் **கடவுள்** என்பதை இதிற் காட்டி, "காமம்—கடவுள் எனும் முதலிறுதியின் இடையாகிய பகுதியே வரையார்"

எனல். ஆதியாகிய காமத்தின் பகுதியே அந்தமாகிய கடவுளின் வரையார் என்பதறிக.

389-ல் 'முதலே வாழ்த்து இறுதியே கடவுள்' எனத் தொல்காப்பியம் கூறுவதையே திருக்குறள் 'கடவுள் வாழ்த்து' என அதிகார நாமமாய்ச் சூட்டியிருக்கும் விவரம் காண்க.

I எண்ணுங் காலும் அது அதன் மரபே

—தொ. களவி, 47.

| | | |
|---|---|---|
| எண் | கால் | தன் |
| அ | அது | மரபு |

32-ல் முதலே எண் குறிப்பு 3-ல் இடையே அது இறுதியை 30-ல் தன் என்பதை இதிற்காட்டி, (தொ. மரபியல் 1) சிறப்பின் மரபியல் கிளப்பின் (அதாவது) இடை எனும் சிறப்பையும் அச்சிறப்பின் இறுதியாகிய மரபு என்பதையும் கிளப்பும் (ஆக்கும்) முதலே இயல்) என்பதற்கிசைய இதில் இறுதியே மரபு எனக் காட்டி, "எண்-மரபு எனும் முதலிறுதியின் இடையாகிய அதுவே கால்" என்பதறிக.

குறிப்பு 14-ல் இறவாக் கல்வி எனக் கூறும் இடையையே இதில் கால் என உணர்த்துவதால் இக்காலும் இறவாக்கால் ஆன்றோகுமன்றோ? இதையே சாகாக்கால் எனப் பல நூல்கள் விளக்கும் விவரம் காண்க.

II காற்பத மொன்றி லொடுக்கி நிற்பாரெங் கடவுளரே

—அருட்பா. திருவருட் வழக்க விளக்கம். 10

| | | |
|---|---|---|
| ஒன்று | கால் | பதம் |
| | | கடவுள் |

காற்-பதம் எனும் இடையிறுதியின் முதலாகிய ஒன்றில் (343-ல் குன்றுவ என் இதியைத் தொல்காப்பியம் கூறுதற்கிசைய) ஒடுக்கி பதமெனும் இறுதியாய் நிற்பது கடவுளரே" எனல். தொல்காப்பியம் கூறுவதுபோல் இறுதியே கடவுள் என இதில் விளக்குவதறிக. இவர் இவற்றைக் கண்டது தொல்காப்பியத்திலன்றோ?

391. குடத்தின் சீரே

—ந. பொதுப்பாயிரம். 32

| | | |
|---|---|---|
| சீர் | ... | குடம் |

111-ல் முதலே சீர் எனத் தொல்காப்பியம் கூறுவதைக் காட்டி, "அந்தமெனும் குடத்து ஆதியே சீர்" எனல். இக்குடத்தைக் கடமென்றும் கூறலாமன்றோ? ஆமெனில், இதிற் காணும்

'கடம்' என்பதையும் 322-ல் இறுதியே 'உள்' என்பதையும் ஒன்று சேர்த்தால் கடம்+உள் கடவுள் என்றாயிற்றல்லவா ?

392. முதல நிலன்

—ந. பெயரியல், 19

| | | |
|---|---|---|
| முதல் | ... | ... |
| ல | | |
| நிலன் | | |

குறிப்பு 28–ல் முதலே ல 4-ல் முதலே நிலம் என்பதை இதிற் காட்டி, "முதலுக்கு ல எனும் எழுத்தும் நிலன் எனும் சொல்லும் நாமங்கள்" எனல்.

393. இடைநிலை நகரம் இரண்டென் எண்ணிற்கு"

—தொ. குற். 34

| | | |
|---|---|---|
| எண் | இடை | நிலை |
| | இரண்டு | ரகரம் |
| | என் | |

32–ல் முதலே எண் இடையை 43-ல் இரண்டு இறுதியை 3-ல் நிலை என்பதை இதிற் காட்டி, "எண்ணெனும் முதலுக்கு இடையே இரண்டு, இறுதியெனும் நிலையே ரகரம்" எனல்.

இச்சூத்திரத்தில் காணும் மற்றோர் வரியாகிய 'நடை மருங் கின்றே பொருள் வயினான' என்பதை இதுவரை இந்த நூலை ஆராய்ந்ததைக் கொண்டே எவரும் எளிதில் விளக்க முடியும். இனித் திருக்குறள் முதற் பாவைக் கவனிப்போம்.

394. அகர முதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு.

—திருக்குறள். கடவுள் வாழ்த்து. 1

| | | |
|---|---|---|
| அ | க | ர |
| ல | | றே |
| முதல் | எழுத்து | எல்லாம் |
| ஆதி | பகவன் | உலகு |

முதலை 28-ல் அ குறிப்பு 28-ல் ல, இடையை 52-ல் எழுத்து, 57-ல் ப 167-ல் க 57-ல் வ 59-ல் ன் இறுதியை 393-ல் ர 227-ல் றே 2-ல் எல்லாம் 165-ல் உலகு எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (அததற்கு நாமமாயுள்ள எழுத்துக்களை இரண்டு மூன்று சேர்த்து ஓர் சொல்லாக்கி அததற்கே நாமமாய்ச் சூட்டியிருப்பதற்கிசைய இடைக்குரிய நான்கு எழுத்துக்களை ஒன்று சேர்த்து பகவன் என

உணர்த்தி) "அகர மெனும் முதலே ஆதி, ககரமெனும் இடையே எழுத்தெனும் பகவன், ரகரமெனும் இறுதியே எல்லாமெனும் உலகு" எனல்.

392-ல் 'முதல' என நன்னூலும் 227-ல் 'முதற்றே' எனத் தொல்காப்பியமும் கூறுவதைக் காட்டி, 'முதலே ல, இறுதியே றே' என உணர்த்தும்போதே இவற்றிற்கு எழுத்தாயுள்ள நாமங்களையும் திருக்குறள் விளக்கும் விவரம் தெரிகிறதன்றோ? அததற் கேற்பட்ட எழுத்துக்களை ஒன்று சேர்த்து அததற்கே நாமமாய்ச் சூட்டியிருப்பதில் சந்தேகித்தால் 166—ல் 'பவன்' எனத் திரு மந்திரம் கூறும் இடையையே க எனும் எழுத்தையும் சேர்த்து 'பகவன்' என உணர்த்துவது கண்டு தெளிக. 387 IV-ல் முதலே ற் இடையே று எனக் கூறும் திருக்குறள் இதில் இறுதியை றே என்பதறிக.

389-ல் ஆதியந்தத்தின் நாமங்களெனத் தொல்காப்பியம் கூறும் 'கடவுள் வாழ்த்து' என்பதையே அதிகார நாமமாய்ச் சூட்டி அவ்வதிகாரத்தில் காணும் முதற் பாவின் கருத்து இதுவே என்பதை நாம் இதுவரை ஆராய்ந்த பாக்களே நிச்சயிக்கப் போது மான ஆதாரம் என நினைக்கிறேன்.

## (21) பிறப்பறுத்தல்

395. இருளென் வெயிலில் நிலையும்

—தொ. புள். மயல். 107

| | | |
|---|---|---|
| இருள் | என்<br>வெயில் | கிளவி |

32-ல் மழை-என்-கிளவி எனக் கூறுவதை இதில் இருள்—என்-கிளவி என உணர்த்தி, "என்னெனும் இடையே வெயில்" எனல்.

396. பற்றற்று நின்ற பழம் பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு

—ஔவை குறள்.

| | | |
|---|---|---|
| ... | .. | பற்றற்றது<br>பழம்<br>பொருள் |

இறுதியை 360—ல் பற்றற்றது 357-ல் பழம் 367-ல் பொருள் எனத் திருக்குறள் கூறுவதையே இதிற் காட்டி, "இறுதியாகிய பற்றற்ற பழம் பொருளைச் சிந்தித்தால் உடல் அழியாது"

எனல். பிறப்பைத் தவிர்ப்பது இப்பொருள்களைக்கொண்டே என் பதுதெளிவாய்த் தெரிகிறதன்றோ ?

397. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப்படும்

—திருக். துறவு. 9.

| | | |
|---|---|---|
| ... | அற்று | கண் |
| | நிலையாமை | பற்றற்றது |

தொல்காப்பியத்திற்கிசைய 298, 299, 300-ல் 'ஊர்ந்து திரியும் அற்றே இடை' எனக் கூறும் திருக்குறள், அதையே இதில் 'நிலையாமை எனும் அற்று' எனக் காட்டி, தொல்காப்பியத்திற்கிசைய 360-ல் ஆதியால் பாராட்டப்படும் அந்தமே 'பற்றற்ற கண்' எனத் திருக்குறளே கூறுவதையும் இதில் உணர்த்தி, "பற்றற்றது எனும் அந்தமாகிய கண்ணே பிறப்பைத் தவிர்க்கும், இத்தகைய கண்ணை அடுத்து இடையாயுள்ள நிலையா அற்று காணப்படும்" என்பதறிக.

தொல்காப்பியம் கூறும் 'பெருந்துறை' என்பதையே காட்டி 143-ல் 'பெருந்துறையே என்று பிறப்பறுத்தே னில்லை' எனத் திருவாசகம் கூறுவதுபோல் இதில் 'அந்தமாகிய கண்ணே பிறப்பைத் தவிர்க்கும்' எனத் திருக்குறள் விளக்குவதறிக. இது காரணம் பற்றியே இக் கண்ணைப் பல நூல்களும் வெகு முக்கியமாய்க் கருதி நமக்குப் புகட்டும் விபரம் காண்க.

360-ல் ஆதியால் பாராட்டப்படும் அந்தமே பற்றற்ற கண் எனக் கூறுவதையே மேற் காண்பதில் பிறப்பறுக்கும் பற்றற்ற கண்ணெனத் திருக்குறள் உணர்த்துவதாக ஏற்க ஓர் முக்கிய ஆதாரம் இவற்றுள் அமைந்திருக்கிறது. அதென்னவெனில், இதில் பற்றற்ற கண்ணை அடுத்து இடையாகிய நிலையா அற்று காணப்படும் எனவும், அதில் பற்றற்ற கண்ணை அடுத்து இடையாகிய சுற்றத்தார் உள எனவும் உணர்த்துவதே தெளிவாய் விளக்குகிற தன்றோ ?

398. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவ ரென்பா ரில்

—திருக். பசப்புறுபருவரல். 8

| | | |
|---|---|---|
| ச | ப | ந் |
| | | தாள் |
| | | இவள் |
| | | இல் |
| அவர் | | துறந்தார் |

167-ல் முதலே ச 57-ல் இடையே ய 235-ல் இறுதியே ந் எனவும், இறுதியை 191-ல் தாள் 77-ல் இவள் 13-ல் இல் 246-ல் துறந்த எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, 20-ல் முதலே அவர் எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதில் உணர்த்தி, "ஆதியாகிய அவரென்பாரின் தாளெனும் அந்தமே இல்லெனு மிவள், இவ்வந்தமாகிய இவளே துறந்தா ரெனவு மறிக" எனல்.

'தீ யாண்டு பெற்றுளிவள்' எனத் திருக்குறள் கூறுவதும் இதிற் காணும் இவளையே என்பதறிக. 387-III-ல் அந்தணனே தாள் எனக் கூறும் திருக்குறள் இதில் இவளே தாளென்ப தறிக.

இவ்விபரங்களையும் ஊர்ந்து திரியும் இடையே பசப்பு எனத் திருக்குறள் கூறுவதையும் அறிந்த எவரும் 'என்னைப் பசந்தாளென்று குறைகூறுதல்லாமல் இவளை அவர் துறந்து போயினு ரென்று அவரைக் குறை கூறுவா ரில்லையே' என இப்பா கூறுவதாகக் கருதுவார்களா ? துறந்தார் என்பதையும் கவனிப்போம்.

399 துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில் வாழ்வான் துணை

—இல்வாழ்க்கை. 2

| | | |
|---|---|---|
| இறந்தார் | துவ்வாத | துறந்தார் |
| | வாழ்வான் | |
| அவர் | துணை | இல் |

367-ல் முதலே செத்தார் 398-ல் முதலே அவர், 398-ல் இறுதியே இல் எனும் துறந்தார் இடையை 386, 387-ல் வாழ்வார் எனக் கூறும் திருக்குறள் அவற்றையும் 142-ல் இடையே துணை எனத் திருமந்திரம் கூறுவதையும் உணர்த்தி, "அந்தமாகிய துறந்தார்க்கும் ஆதியாகிய இறந்தாரெனும் அவர்க்கும் இடையாகிய துவ்வாத எனும் வாழ்வானே துணை" எனல்.

291-ல் நன்கு 294-ல் நற் எனக் கூறும் திருக்குறள் இல் வாழ்க்கை 1-ல் 'நல்லாற்றி னின்ற துணை' எனக் கூறுகிறது. இத் துணையையே மேற் காண்பதில் உணர்த்துவ தறிக.

இனியவை கூறல் 4-ல் 'துவ்வாமை இல்லாகும்' (மேற் காணும் துவ்வாத—இல் என்பவற்றையே இதிற் காட்டி) 'துவ்வாத எனும் இடையினின்று இல்லெனும் இறுதியாகும்' என உணர்த்தும் திருக்குறள், 36-ல் இடையே தான் எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி நன்றியில் செல்வம் 1-ல் 'தான்றுவ்

வான்' எனவும் கூறுகிறது. இத் துவ்வா னெனும் துவ்வாமை யையே 399-ல் காண்பதில் 'துவ்வாத' என விளக்கும் விபரம் காண்க. 398, 399-ல் துறந்தார் எனக் கூறுவதையே 397-ல் பற் றற்றது என விளக்குவதா யேற்க. மற்ருேர் செய்தியைக் கவனிப்போம்.

400. உப்ப காரம் ஒன்றென மொழிய
—தொ. மொழிமரபு. 43

அகாரம் ... உப்பு
ஒன்று

20-ல் ஆதியை 'அகத்தவர்' என்பதுபோல் இதில் 28-ல் முதலே அகாரம் என்பதைக் காட்டி, "அந்தமாகிய உப்பின் முத லாகிய அகாரமே ஒன்று" எனல்.

401. சுவைப் புளி முன் இனம் மென்மையுந் தோன்றும்
— ந. உயிரீற். 25

புளி சுவை மென்மை
முன் இனம்

61-ல் காணும் முன்—இனம் என்பவற்றையே இதிற் காட்டி, "முன்னெனும் முதலே புளி இனமெனும் இடையே சுவை இவற்றி னின்றும் தோன்றும் இறுதியே மென்மை" எனல்.

402. துப்புரவில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.
—திருக். நல்குரவு. 10

துப்புரவில்லார் துவர் உப்பு
துறவாமை
கூற்று காடி
அ

277-ல் முதலே கூற்று 400-ல் இறுதியே உப்பு எனத் தொல் காப்பியம் கூறுவதையே இதிற்காட்டி, "ஆதியாகிய அகரமெனும் கூற்றே துப்புரவில்லாத் துறவாமை, இடையே துவர்ப்பான காடி, இறுதியே உப்பு" எனல். 292-ல் முதலே அஞ்சாதவர் 339-ல் இடையை துணை எனக் கூறும் திருக்குறள், தூது 8-ல் 'தூய்மை துணைமை—துணிவுடைமை' எனக் கூறி அந்தத்தைத் 'தூய்மை' எனவும் 399-ல் 'துறந்தார்' எனவும் கூறுதற்கிசைய ஆதியைத் 'துப்புரவில்லாத் துறவாமை' என இப் பாவில் உணர்த்துவதறிக.

403. இயல் புளிக் கோலோச்சு மன்னவனுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு

—திருக். செங்கோன்மை. 5

| | | |
|---|---|---|
| இயல் | மன்னவன் | தொக்கு |
| கோல் | | |
| புளி | விளைவு | உள் |
| பெயல் | | |

முதலே 3-ல் **இயல்** 71—ல் **கோல்** 401-ல் **புளி** 48-ல் **பெயல்,** இடையை 17-ல் **வேந்து**, இறுதியை 165-ல் **உடல்** எனத் தொல்காப்பியமும், இடையை 220-ல் **விளைவு** என ஔவை குறளும் கூறு வதையே காட்டி, "இயல் புளியாகிய கோலெனும் ஆதி அனுப்பும் மன்னவனெனும் இடையே (மழையாகிய ஆதிபெய்து விளைந்த விளைவு) அவ்விளைவெனும் மன்னவன் நாட்டியதே (செய்ததே) தொக்கெனும் இறுதி" எனல்.

403, 402-ல் முதலே **புளி** இறுதியே **உப்பு** எனத் திருக்குறள் விளக்குவது 400, 401-ல் நன்னூலும் தொல்காப்பியமும் கூறுவதை யன்றோ? 22-ல் முதலே **மழை** 111-ல் இடையே **பெரும்** 26-ல் இறுதியே **கண்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி உறுப்பு நவனழிதல் 9-ல் 'பெருமழைக்கண்' எனக் கூறி மழையே முதலென்பதால் அம்மழையெனும் முதலே மேற்காண்பதில் பெயல் என உணர்த்துவதறிக.

404. மறவாமல் காணும் வகை யுணர்வாருக்
கிறவா திருக்கலு மாம்

—ஔவை குறள்.

| | | |
|---|---|---|
| ... | வகை | ... |

குறிப்பு 3-ல் தொல்காப்பியமும் 374-ல் திருமந்திரமும் 310-ல் திருக்குறளும் இடையெனக் கூறும் **வகை** என்பதை இதிற் காட்டி, "இடையாகிய வகையை அறிந்தால் இறவாதிருக்கலாம்" எனல். அந்தமெனும் கண்ணே பிறப்பறுக்கும் என்று திருக்குறள் 397-ல் உணர்த்துவதை 396-ல் அந்தமாகிய பற்றற்ற பழம் பொருளே உடலே அழியாது செய்யும் என உணர்த்தும் ஔவை குறள் இதில் இடைக்கும் அத்தன்மை உண்டென விளக்குவது கண்டு, இம் முப்பொருள்களுக்குமே நம் பிறப்பிறப்பைத் தவிர்க்கும் தன்மை உண்டென்பதறிக.

405. இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயமே.

—திருநாவுக்கரசு.

| | | |
|---|---|---|
| சொல் | ... | இல் |
| இருள் | | பல் |
| | | நல் |
| | | அகம் |
| | | பலர் |
| | | காண்பது |
| | | விளக்கு |
| | | நமச்சிவாயம் |

முதலை 49-ல் **சொல்** 395-ல் **இருள்**, இறுதியை 13—ல் **இல்** 15-ல் **பல்** 48—ல் **நல்** 20-ல் **அகம்** 286-ல் **பலர்** 85-ல் **தெரிதல்** எனத் தொல்காப்பியமும் 362-ல் இறுதியே **விளக்கு** எனத் திருக்குறளும் கூறுவதையே காட்டி, (362-ல் குடி என்னும் விளக்கில் மடி எனும் முதல் சேர்ந்தால் கெடும் எனத் திருக்குறள் கூறுவதுபோல்) இதில் இறுதி எனும் விளக்கைக் கெடுப்பது இருளெனும் முதலே என உணர்த்துவதறிக. 220—ல் ஒளியில் ஒளியாயுறும் என அந்தத்தை ஔவை குறளும் 223-I அந்தமெனும் மகன் ஒளித்துவளர எனத் திருப்பாவையும் கூறுதற்கிசைய இதில் விளக்கெனும் அந்தம் சோதியுள்ளது என விளக்குவது காண்க.

தொல்காப்பியத்தின் மூலம் இப்பெயர்களை முதலிடையிறுதியினுடையவை எனத் தெரியாவிடில் "சொல்லெனும் ஆதியின் அந்தமே இல், பல், நல், அகம், பலர், காண்பது எனும் விளக்கு. அவ்விளக்கெனும் அந்தத்தின் ஆதியே சொல் என்பதைத் தெரிவதெப்படி?" இதைத் தெரிந்தாலன்றோ சொல்லின் அந்தமாகிய அகமே நமச்சிவாயமெனக் காணலாம்.

406. நற்றவத் தவருள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே

—அருட்பா 2-வது திருமுறை. நமச்சிவாய சங்கீர்த்தன லகிரி.

| | | |
|---|---|---|
| அவர் | தவம் | நற் |
| | | நமச்சிவாயம் |

முதலை 20—ல் **அவர்** எனத் தொல்காப்பியமும், இடையை 264-ல் **தவம்** எனத் திருக்குறளும் 102—ல் இறுதியை **நற்** எனத்

தொல்காப்பியமும் அவ்விறுதியே நமச்சிவாயம் என 405-ல் தேவாரமும் கூறுவதையே காட்டி, "முதலே அவர் இடையே தவம் இவற்றுள்ளிருந்து ஓங்கும் இறுதியாகிய நமச்சிவாயத்தை நான் மறவேனே" எனல். தவம் என்பதை நிச்சயிக்கும் நேர்மை காண்க.

407. நன்று கண்டீ ரிது நமச்சிவாயப் பழம்
தின்றுகண் டார்க்கிது தித்தித்தவாறே

—திருமந்திரம்.

| | | |
|---|---|---|
| ... | ... | நன்று |
| | | பழம் |
| | | நமச்சிவாயம் |

405-ல் 'நல்லக விளக்கே நமச்சிவாயம்' எனத் தேவாரமும் 406-ல் அருட்பாவும் 357-ல் இறுதியே **பழம்** எனத் திருக்குறளும் கூறுவதை இதிற் காட்டி, "நன்றெனும் அந்தமே நமச்சிவாயப் பழம், அதைத் தின்று கண்டோர் தித்தித்ததென்றாரே" எனல்.

இம்முப்பொருள்களை சிந்தித்தால் பார்த்தால் பிறப்பறும் என நூல்கள் கூறினும் சிந்தித்துப் பார்த்து அவற்றைத் தின்றாலே பிறப்பறும் என்பதறிக. இவ்வாறு இவை உண்ணும் பொருள்களாயிருப்பதால் இவற்றைப் பக்குவப்படுத்தவேண்டிய அவசியமுண்டன்றோ? அப்படிப் பக்குவம் செய்யும் முறையையே 'ஆதி அந்தத்தைக் கொள்ளும், அந்தம் இடையைக் கொள்ளும், இடை ஆதியைக் கொள்ளும்' என நூல்கள் உணர்த்தும் விவரம் காண்க.

## (22) ஆதி நூல்

408. உடலுயிரும் பூரணமும் அடிமுடியு முச்சி
உலகத்தோர் அறியாமல் மயங்கிப் போனார்
உடலுயிரும் பூரணமும் கண்வாய் மூக்கு
உடலுயிரும் பூரணமும் அயன்மா லீசன்

—சில். கோர்வை. அகத்தியர் ஞானச் சுருக்கம். 16

| | | |
|---|---|---|
| உயிர் | பூரணம் | உடல் |
| மூக்கு | வாய் | கண் |
| ஈசன் | மால் | அயன் |
| முடி | உச்சி | அடி |

165-ல் முதலிறுதியே **உயிர்—உடல்** எனத் தொல்காப்பியமும், 172-ல் முதலிறுதியே **முடி—அடி** என நன்னூலும், இறுதியே

கண்ணென 26-லும் இடையே வாயென 110-லும் இறுதியை மூக்கென 283-Iலும் தொல்காப்பியமும் விளக்குவது அகத்தியர் இதில் கூறுவதையன்றோ' இது அற்ப நூலா?

409. போற்றுவது யாரை யென்றால் மைந்தா மைந்தா
புதுமையுள்ள பூரணமே தெய்வந் தெய்வம்

—அகத்தியர் அமுத கலைக்ஞானம். 255

... புதுமை ...
பூரணம்
தெய்வம்

408-ல் இடையே **பூரணம்** என்பதையே இதிற்காட்டி "பூரணம் எனும் புதுமையே தெய்வம்" எனல். **திருமந்திரமும் தொல்காப்பிய மும் இடையே தெய்வம் என 165, 166-ல் விளக்குவது இதில் காண் பதை யன்றோ ?** இவ்வகத்தியர் யாரெனச் சிந்தித்துப் பார்க்க.

410. ஆதி தொடுத் தந்தம் பார்த்தால்
போக்குவரத் தானதொரு புதுமை தோணும்

—அகத்தியர் பரிபூரணம். 1200, 94

ஆதி புதுமை அந்தம்

408–ல் **உயிர் - உடல்** எனும் முதலிறுதியின் இடையே பூரணம் எனக் கூறி, 409-ல் அப்பூரணமே புதுமையென **உணர்த்தி**. இதில் அப் புதுமை எனுமிடை போக்குவரத்தாய் திரியும் என்ப தறிக.

**இதில் இடை போக்குவரத்தாய் திரியும் என்பதையே தொல் காப்பியம் திருக்குறள் முதலிய நூல்கள் விளக்கும் விபரம் காண்க.** இவரது மாணுக்கரே தொல்காப்பியர் என ஏற்கலாமன்றோ.

411. மகத்தான பாசமது பசுவை யறியாது

—அகத்தியர் பரிபூரணம். 1200—42

பசு ... பாசம்

169-ல் முதலிறுதியே **பசு—பாசம்** எனத் திருமந்திரம் விளக்கு வது இதில் காண்பதையே. "**பாசமெனும் அந்தம் பசு எனும் ஆதியை அறியாது" என இதில் கூறுவதையே 77-ல் தொல்காப்பிய மும் 319-ல் திருக்குறளும் விளக்கும் விபரம் காண்க.**

412. அந்தமென்ற பரதேசி என்று சொன்னேன்

—அகத். பரிபூ. 1200-94

| | | |
|---|---|---|
| ... | ... | அந்தம் |
| | | பரதேசி |

**இதில் அந்தமே பரதேசி எனக் கூறுவதையே தொல்காப்பியம் திருக்குறள் முதலிய நூல்கள் துறந்தார் நீத்தார் பற்றற்றது என விளக்கும் விபரம் காண்க.**

413. அவை யடக்கம் சொல்லுகிறேன் ஆதியந்தம்

—அகத். பரிபூ. 1200—185

| | | |
|---|---|---|
| அவை | ... | அடக்கம் |
| ஆதி | | அந்தம் |

முதலே 5-ல் தொல்காப்பியமும் 292-ல் திருக்குறளும் அவை எனவும், 369, 371-ல் அந்தத்தைத் திருக்குறள் அடங்கியான் எனவும் திருமந்திரம் அடக்கமுடையான் எனவும் விளக்குவது அகத்தியர் இதில் கூறுவதை யன்றோ? இவ்வாறிருக்கத் திருக்குறள் விளக்கும் அவை என்பது இதிற் காண்பதையே என்று ஏற்காமல் சபை என்று கொள்ளலாமா?

414. காரப்பா ஐம்பூத மாதர மொன்றாய்க்
கண்டுங் காணும லெங்கும் பிரமமாச்சே

—அகத் பரி. பூர. 1200 665, 248

| | | |
|---|---|---|
| ஐந்து | ஆதாரம் | பிரமம் |
| பூதம் | | |
| காணுமை | | காண்பது |

முதலே குறிப்பு 12-ல் ஐந்து 165-ல் பூதம், 84, 85-ல் காணுமை —காண்பது என முதலிறுதியைத் தொல்காப்பியமும் இடையை 206-ல் ஆதாரம் எனத் திருவாசகமும் விளக்குவது இதில் அகத்தியர் கூறுவதை யன்றோ?

415. இல்லறமே சுழினை மூலம்

—அகத் பரி. 1200, 180

| | | |
|---|---|---|
| அறம் | சுழினை | இல் |
| மூலம் | | |

அந்தமே இல் ஆதியே அறம் எனத் தொல்காப்பியமும் திருக்குறளும் விளக்குவது இதில் காண்பதை யன்றோ?

416. நீரப்பா நிலையறிந்து கொள்ளமாட்டார்
நின்றநிலை காணார்கள் மடையர் வாழ்வே

—அகத். பரி. 1200, 139

| | | |
|---|---|---|
| மடையர் | நீர் | நிலை |
| | | வாழ்வு |

334, 336-ல் திருமந்திரமும் திருக்குறளும் மூடம் அறிவிலான் எனவும், குறிப்பு 12-ல் நீர் என இடையையும், இறுதியை 3-ல் நிலை எனத் தொல்காப்பியமும், இறுதியை 287-ல் வாழ்வு எனத் திருக்குறளும் விளக்குவது இதில் காண்பதை யன்றோ ? " அந்த மாகிய நிலையை யறிந்து அந்நிலையின் இடையாகிய நீரை அருந்த மாட்டாரே " என்பதறிக.

417. வாழ்வான வாழ்க்கையிலே நிற்கவேணும்
மார்க்கமுடன் குருபதத்தைக் காண வேணும்

—அகத். பரி. 1200, 140

| | | |
|---|---|---|
| வாழ்க்கை | | வாழ்வு |
| மார்க்கம் | குரு | பதம் |

415-ல் முதலிறுதியை ' இல்—அறம் ', இதில் முதலிறுதியை ' வாழ்க்கை—வாழ்வு ' எனக் கூறுவதையே ' இல்லறம் எனவும், இல் வாழ்க்கை ' எனவும் திருக்குறள் விளக்கும் விபரம் காண்க. இவ்வாறிருக்க, மனைவி மக்களோடு வாழ்வதே சிறந்ததென வள்ளுவர் வற்புறுத்துவதாக வாதிடல் உசிதமா ?

418. பேரான விண்ணும் மண்ணும் கடமதாச்சு
சீரான கடமதுவும் நசிப்பதில்லை

—அகத். பரிபூ. 1200, 542

| | | |
|---|---|---|
| மண் | விண் | கடம் |
| சீர் | | பேர் |

முதலை 201-ல் மண் 111-ல் சீர், இறுதியை 291-ல் குடம் 266-ல் பேர் எனத் தொல்காப்பியம் நன்னூல் விளக்குவது இதிற் காண்பதையன்றோ ? நிற்க, " மண்—விண் எனும் முதலிடையினின்று கடமெனும் இறுதி ஆகும், அக்கடம் நசிப்பதில்லை " என்பதறிக. அந்தம் சிதைவிலாதது அழியாதது எனத் திருமந்திரம் தொல் காப்பியம் திருக்குறள் முதலியவை விளக்குவது இதிற் நசிப்பதில்லை என்பதையே 415-ல் அந்தமே இல் ஆதியே அறம் என அகத்தியர் கூறுவதையே "இல்லறமென திருக்குறள் விளக்குதற்கு மற்றோர் ஆதாரம் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

I உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகை யா வைக்கப்படும்

—திருக். புல்லறிவாண்மை. 10

| | | |
|---|---|---|
| யா | வையம் | அலகை |
| | உண்டு | இல்லென்பான் |
| | அத்தார் | உலகு |

30-ல் முதலே **யாம்**, இடையைக் குறிப்பு 18-ல் **அத்து** குறிப்பு 11-ல் **தொழில்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, நிறை யழிதல் 2–ல் 'யாமத்து மாளுந் தொழில்' 'யாமெனும் முதலே ஆளும் தொழிலெனும் இடையே அத்து' என உணர்த்தும் திருக் குறள், இதிற் காணும் அத்தையே மேற் காண்பதில் 'அத்தார்' என்பதறிக. நிற்க, 53-I ல் முதலே **யா** இடையை 230-ல் **உண்டு** குறிப்பு 18-ல் **அத்து** இறுதியை 312-ல் **உலகு** 13-ல் **இல்**லெனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, (387-ல் இறுதியை ஆக்கு வது இடையே என்பதை இடையால் வைக்கப்படுவது இறுதி எனத் தொல்காப்பியத்திற்கு இசையக் கூறுவது போல்) "உண் டென்பதும் இல்லென்பானும் அத்தாரும் உலகுமே, இவையே வையமும் அலகையும், இவ் விடையையும் இறுதியையும் வைப்பது (உண்டாக்குவது) யா எனும் முதலே" எனல்.

இப் பாவில் காணும் யா—உலகு என்பவற்றையே காட்டி புல்லறிவாண்மை 1–ல் 'யா வையாதுலகு' எனத் திருக்குறள் கூறுகிறது. முதலினின்றே இடையும் இறுதியும் வரினும் முதல் இடையையும் அவ் விடை இறுதியையுமே செய்யும் என நூல்கள் கூறக் கண்டோமல்லவா? அதற்கிசைய மேற் காண்பதில் இடை யிறுதியை யா எனும் முதல் வைக்கு மெனவும் இதில் யா எனும் முதல் (நேராக) இறுதியை வைக்காது எனவும் திருக்குறள் உணர்த்தும் விபரம் காண்க.

387-ல் இடையே **வையம்** இறுதியை 398-ல் **இல்** 312, 313-ல் **உலகு** எனக் கூறும் திருக்குறள் அவற்றையே இதிற் காட்டி, வையமெனும் இடையே 'அத்தார்' உலகெனும் இறுதியே 'இல் லென்பான்' என உணர்த்தும் விபரம் காண்க.

295-ல் முதலே **அறம்** மேற் காண்பவற்றில் இடையே அத்தாரெனும் **அத்து** 348-ல் இறுதியே **பொருள்** 324-ல் முதலே **காமம்** என விளக்குவது தொல்காப்பியம் கூறுவதை யன்றோ? இவ்வாறு தொல்காப்பியம் கூறும் முதலே அற

மெனும் காமம் இடையே அத்து இறுதியே பொருள் என உணர்த்தும் திருக்குறள், (முதலிடை யிறுதியின் நாமங் களாகிய சொல்—எழுத்து—பொருள் என்பவற்றையே சூட்டி 'சொல்லதிகாரம்—எழுத்ததிகாரம்-பொருளதிகாரம் என அதிகார நாமங்களைத் தொல்காப்பியம் அமைத்திருப்பது போல்) 'அறத்துப் பால், காமமெனும் முதலின் இடையாகிய அத்துப்பால் பொருட் பால்' என முப்பாலாக வகுத்துக் காட்டி அவற் றில் இம் முப் பொருள்களைத் திருக்குறள் விளக்கும் விபரம் காண்க. 'காமத்துப் பால்' என்பதை இவ்வாறே ஏற்க வேண்டும் என்பதற்கு ஆதாரமும் காரணமும் என்னவெனில், 'உயிர்—அச்சம் எனும் முதலும் இறுதியுமே அறமும் பொருளும் என 295-லும் படல், கடல் எனும் இடை அந்தத்தால் செய்யப்படாத தும் துன்பமெனும் நாமத்திற்கிணங்கத் துன்பமுறுவதுமான ஆதியே காமம் என 324-லும் உணர்த்தி 'ஆதியே அறமெனும் காமம்' எனப் புகட்டும் திருக்குறள் கூறும் அறத்துப் பாலென்பது முதலையும் காம அத்துப்பால் என்பது இடையையுமே. ஆகையால், காமமெனும் முதலின் இடையாகிய அத்துப் பால் என்றேற்க.

II. ஐ வகை அடியும் விரிக்குங் காலை
மெய் வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறு நூற் றிருபத் தைந்தா கும்மே

—தொ. செய்யுளியல். 49

| | | |
|---|---|---|
| ஐ | வகை | அடி |
| நிலம் | | காலை |
| பதினேழு | | மெய் |
| அ | று | உம் |
| நூறு | இருபத்தைந்து | எழுபது |
| | மே | வழுவில |

பதினேழு—இருபத்தைந்து—எழுபது என்பவை நீங்கலாக மீதி முன்னமே பல சூத்திரங்களில் காட்டப்பட்டிருப்பவையே. அவற்றையே இதிற் காட்டி, "ஐ—வகை எனும் முதலிடை விரிக் கும் (செய்யும்) இறுதியாகிய அடியும் காலையே, ஐயாகிய பதினேழு எனும் நிலத்தில் அமைந்த இடையிறுதியே வகையும் மெய்யும், அந் நிலமெனும் நூறு வகையெனும் இருபத்தைந்து இவற் றுலாகும் இறுதியே வழுவில எனும் எழுபது" எனல்.

III. அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திற மிருபத் தைந்தாற் றெளிய

—திருவள்ளுவமாலை மதுரைப் பெருமருதனார்.

| | | |
|---|---|---|
| அறம் | இன்பம் | பொருள் |
| | திறம் | |
| முப்பத்தெட்டு | இருபத்தைந்து | எழுபது |

295-ல் அறம்—பொருள் எனும் ஆதியந்தத்தின் இடையே இன்பமெனும் திறம் எனத் திருக்குறள் கூறுவதையே காட்டி "திருக்குறள் விளக்குவது முதலாகிய முப்பத்தெட்டு எனும் அறத்தையும் இடையாகிய இருபத்தைந்து திறமெனும் இன்பத்தையும் இறுதியாகிய எழுபதெனும் பொருளையுமே" என்பதறிக. இதை இவ்வாறே ஏற்க வேண்டுமென்பதற்கு ஆதாரமொன்றும் காட்டுகிறேன். ஐந்து—ஆறு—ஏழு எனும் முதலிடையிறுதிக்கு ஐம்பது—அறுபது—எழுவது எனும் நாமங்களுண்டு.

IV. பாயிர நான்கி லறமிருபான் பன்மூன்றே
தூய துறவற மொன் றாழாக—ஆய
அறத்துப்பா னுல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து

—திருவள்ளுவமாலை எறிச்சலூர் மலாடனார்.

| | | |
|---|---|---|
| | பதிமூன்று | |
| பாயிரம் | நான்கு | தூய |
| அறம் | இருபது | இல் |
| | இன் | |
| ஒன்று | ஊழ் | துறவறம் |
| | வகை | |
| | நூல் | |
| அறத்துப்பால் | திறத்துப்பால் | |

நன்னூல் சிறப்புப் பாயிரம் 5-ல் 'பாயிரம் இயம்புதல் கடனே' எனவும் சிறப்புப் பாயிரம் 1-ல் 'பாயிரத் தியல்பே' எனவும் கூறி 'பாயிரம் எனும் முதல் இயல்புதல் (செய்தல்) இடை கடனே இறுதி இயல்பே' என உணர்த்துகிறது. அப்பாயிரத்தையும் மேற் காணும் அறம்—திறம் என்பவற்றையும் இதிற் காட்டி "பாயிரமாகிய ஒன்றெனும் அறத்துப் பாலையும் நூழினுகிய இன்பமெனும் திறத்துப் பாலையும் ஆய்ந்துரைத்தார்" என்பதறிக. இதில் பாயிரத்துத் திறத்துப் பால் எனக் கூறுவதையே காமத்து அத்துப் பால் என வள்ளுவர் உணர்த்துவதாக ஏற்கத் தடையுண்டோ.

419. விண்ணவன் ருளெனும் விரிநிலா மண்டபத்தில்
தண்ணீ ரருந்தித் தளர்வொழிவ தெக்காலம்
—தாயுமானவர். எந்நாட்கன்னி. 11

| | | |
|---|---|---|
| அவன் | விண் | தாள் |
| | தண்ணீர் | நிலாமண்டபம் |

முதலை 18-ல் **அவன்**, இறுதியை 191-ல் **தாள்** 2-ல் **நிலவு** என்றும், இடையை குறிப்பு 12-ல் **நீர்** எனத் தொல்காப்பியம் கூறுவதையே காட்டி, "அவன் எனும் ஆதிக்கும் தாளெனும் நிலாமண்டபத்திற்கும் இடையாகிய தண்ணீரை அருந்தி தளர் வொழிவதெக்காலம்" எனல்.

420. மதியமுத மென்ற தொரு வகையை மைந்தா
யார்க்கமுடன் கோடியிலே ஒருவன் காண்பான்
—அகத்தியர். அமுத கலைக்ஞானம். 844.

| | | |
|---|---|---|
| ... | மதி | .... |
| | அமுதம் | |
| | வகை | |

**158-ல் மதி 290-II-ல் அமுதம் குறிப்பு 3-ல் வகை என இடையைத் தெளிவாகத் தொல்காப்பியமும் சொல்லின் வகை அறியார் எனத் திருக்குறளும், உயிர்—உடல் எனும் ஆதியந்தத் திடையாகிய வகையைக் கண்டு கொண்டேன் எனத் திருமந்திரமும், வகையைக் கண்டால் இறவாதிருக்கலாம் என ஔவை குறளும் விளக்குவது இதில் அகத்தியர் 'மதியமுதமென்ற வகையை கோடிக் கொருவனே காண்பான்' என்பதை யன்றோ?**

இம் மதியமுதமென்ற வகையையே 416-ல் நீரெனக் காட்டி அந்நீரை அருந்தா திருக்கின்றனரே என அகத்தியர் புலம்புவதை அறிந்த தாயுமானவர் 419-ல் அந்நீரை அருந்தி தளர்வொழிவ தெக்காலம் என்றேங்கித் தவிப்பதையுமறிக.

இவ்வகத்தியரும் இவரது மரபைச் சார்ந்த சித்தர்களும் இயற்றிய நூல்கள் தமிழ் நாட்டில் ஏராளமாயிருந்தது ஓர் காலம். மற்ற நூல்களை அவமதித்த மருத்துவர்கள் மருத்துவ நூல்களை மாத்திரம் ஆராய்ந்து அதிற் காணும் மருந்துகளைச் செய்து பூரண பயனைக் காணாது சலிப்புற்று நூல்கள் கூறும் மருந்துகளை செய்ய முடியாதெனும் தீர்மானத்திற்கு வந்துவிட்டனர். இவ்வா றிருப்பதுபற்றி இந்த நூல்களில் உள்ள சந்தேக நிவர்த்திக்காகப் புலவர்

களிடம் சென்ருல் தமிழென்றே கூறுதற் கியலாத விதத்தில் சில பாடல்களை இயற்றிக்கொண்டு அவற்றை அகத்தியர் அருளினுர் போகர் புகட்டினுர் என்று சில நூல்களை நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் வயிற்றுப் பிழைப்பிற்காகச் சிலர் வெளியிட்டிருப்பதாகக் கூறி இகழ்ந்து எறிகின்றனர். இவ்விரு வகையாலும் மருத்துவ நூல்களை விற்போரும் வாங்குவோரும் மிகக் குறைந்து நூல்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது.

மருத்துவ நூல்களை அலட்சியம் செய்து மற்ற பிரபல நூல்களைக் கையாளுவோரும், மற்ற நூல்களை ஆராய்ந்து உண்மையைக் காணுமல் மருத்துவ நூல்களை மாத்திரம் கையாளுவோரும் நூல்கள் கூறும் பெரும் பயனை அடைய முடியாதென்பது தெளிவாய்த் தெரிகிறதன்றே ?

421. செங்கமலக் கண்ணுன உப்பு தன்னை
சிவசிவா அமிர்தரசத் தேனினுலே
அங்கமுடன் தானுட்டி உறங்கப் பன்னி
அதன்பிறகு காமரசப் பாலை யூட்டே

—அகத். பரிபூ. 1200, 408

| | | |
|---|---|---|
| பால் | தேன் | உப்பு |
| | | கண் |
| | | தன்னை |

12-ல் முதலே **பால்**, 129-ல் இடையே **தேன்**. இறுதியை 400-ல் **உப்பு** 26-ல் **கண்** 80-ல் **தன்னை** எனத் தொல்காப்பியம் கூறுவது இதில் காண்பதை யன்றே ? தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம் முதலியவைக்கு ஆதியாயுள்ள இத்தகைய நூல்களை அலட்சியம் செய்யலாமா ?

422. நெறியிது கற்பம் அமுரியு மாதல்
நிகழ்த்திடப் புளியுப் பிரண்டும்
நிசசத்தி சிவமாம் இது உடலுயிர்தான்

—புலஸ்தியர் கற்பம். 300—17—12.

| | | |
|---|---|---|
| சிவம் | அமுரி | சத்தி |
| உயிர் | | உடல் |
| புளி | | உப்பு |
| கற்பம் | | நெறி |

குறிப்பு 21-ல் முதலே **இறைவன்** எனக் கூறும் தொல்காப்பியம் 82-ல் முதலும் இறுதியுமே **ஆணும் பெண்ணும்** எனக் கூறுவ

தால் முதலே ஆணெனும் இறைவன் இறுதியே பெண்ணெனும் சக்தி என்முயிற்றல்லவா ? 165-ல் முதலிறுதியே **உயிர்—உடல்** எனவும் தொல்காப்பியம் விளக்குவது இதில் காணும் உயிர்—உடல் ஆகிய சிவம்—சத்தியை யன்றோ ? நன்னூல் தொல்காப்பியம் திருக்குறள் விளக்கும் புளியும் உப்பும் இதில் முதலே புளி இறுதியே உப்பு எனப் புலத்தியர் கூறுவதையல்லவா ? 38, 39-ல் நன்னூல் தொல்காப்பியம் விளக்கும் நெறி இதுவன்றோ ?

இப் புளியையும் உப்பையும் தெரிந்து இவற்றைக் கண்டு உண்டே அளவிடற்கரிய சக்தியையும் நெடுங்கால வாழ்வையும் பெற்று அங்கு அவர்களுக்குள்ள நூதன அறிவிற்கும் தெய்வத் தன்மைக்கும் தோன்றும் உயர் நிலையை அடைந்துள்ள இவர்களை நம் மதாசிரியர்களெனவும் இவர்கள் இயற்றியவைதான் நமது வேதமென்றும் எல்லோரும் ஏகமனதா யேற்கத் தயங்கலாமா ? இதை ஆராய்ந்தறிந்து அவர்கள் அடைந்த பயனைப் பெற முயற்சிப்பதன்றோ நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு இதைச் செய்யாவிடினும் அவர்கள் நூல்களையும் அவர்களையும் குறை கூறிக்கொண்டு அவரவர் கொள்கைகளை நிலைநாட்ட முயலலாமா ?

I. வழி யறியார் வழலைப் பெருமைதான்
அழிவதில்லை அகார உகாரமாம்

—புலத்தியர் கற்பம். 300—97—58

| | | |
|---|---|---|
| வழி | வழலை | பெருமை |
| அகாரம் | | உகாரம் |

குறிப்பு 7-ல் முதலிறுதியே **அகாரம்—உகாரம்** குறிப்பு 23-ல் முதலே **வழி** 106-ல் இறுதியே **பெருமை** எனத் தொல்காப்பியம் விளக்குவது இதில் காண்பதை யன்றோ? அந்தம் அழிவில்லாதது என பல நூல்கள் விளக்குவது இதில் உகாரமாகிய பெருமை எனும் அந்தம் அழிவதில்லை எனக் கூறுவதை யன்றோ ?

பிரபல நூல்களில் அவற்றின் ஆசிரியர்கள் அனைவரும் சிறிதும் மாறுதலின்றி நமக்குப் புகட்டுவது இம் முப் பொருள்களையே என்பது ஒருவாறு தெளிவாய்த் தெரிந்தாலும். நமது அனுபவத்திலிருக்கும் மற்றோர் கருத்தையும் அவர்கள் நூல்களில் புகுத்தியிருக்கின்றனர் என நான் கூறியது ஞாபகமிருக்கலாம், அதை நிச்சயிக்க இரண்டோர் செய்தியை எடுத்துக் காட்டுகிறேன்.

18-ல் முதலே **அவன்** 283-Iல் முதலே **மூக்கு** எனத் தொல்காப்பியம் கூறுவதை ஒன்று சேர்த்தால் (அவன் + நாசி) 'அவனாசி' என்

ருயிற் றன்றோ ? 240-ல் இடை திரு எனவும் 170-ல் இடையே பதி எனவும் தொல்காப்பியமும் திருமந்திரமும் கூறுவதை ஒன்று சேர்த்தால் (திரு + பதி) 'திருப்பதி' என்ருயிற்று. இறுதியை 357-பழம் எனக் கூறும் திருக்குறள் 338-ல் இறுதியே நீ எனவும் கூறுகிறது, இவற்றை ஒன்று சேர்த்தால் (பழம் + நீ) 'பழனீ' என்ருயிற்று. நாம் புண்ணியத் தலங்களெனக் கருதும் அவனுசி, திருப்பதி, பழனீ எனும் ஊர்களுக்கு இத்தகைய நாமங்களைச் சூட்டியது யார்?

குறிப்பு 21-ல் முதலே இறைவன் எனத் தொல்காப்பியமும் 355-ல் முதலே இறைவன் எனத் திருக்குறளும் கூறுவது 166-ல் திருமந்திரம் சிவன் எனக் கூறும் முதலையன்றோ? இவ்வாறு முதலைச் சிவனெனக் கூறும் தொல்காப்பியம் 163-ல் முதலே 'இரவு' எனவும் கூறுகிறது. இவற்றை ஒன்று சேர்த்தால் (சிவன் + ராத்திரி) 'சிவன் ராத்திரி' என்ருயிற் றன்றோ? இதுபோன்ற உற்சவங்களை நடத்தச் செய்தது யார்? இதில் முதலை இறைவன் எனவும் 109-ல் இடையே 'களவு' என்றும் கூறும் தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 8-ல் 'கள்வர்தம் இறை' எனக் கூறி இறைவன் எனும் இறையின் இடையே களவெனும் கள்வர் என உணர்த்துகிறது. இதில் களவைக் கள்வர் என உணர்த்தும்போது 198-ல் அழகு எனத் தொல்காப்பியம் கூறும் இடையை அழகர் என ஏற்கலாமல்லவா? இக் (கள்வர் + அழகு) என்பதைக் கள்ள அழகர் எனக் காட்டி, மதுரைக்குப் பத்து மைல் தூரத்தில் அமர்ந்து வருடத்திற்கு ஒருமுறை வைகை ஆற்றில் வந்து தெரிசனந் தரும் பெருமாளுக்கு கள்ள அழகர் எனும் நாமத்தைச் சூட்டியது யார்?

முற்காலத்து அரசர்களைக் கொண்டு ஆலயங்களைக் கட்டுவித்து ஆங்காங்கும் அததில் அமைக்கும் விக்கிரகங்களுக்கு (வரும் பக்தர்களின் குறையைத் தீர்ப்பதற்குகந்த சக்திகளையும் கொடுத்து) ஆலய வழிபாட்டிற்கு ஆன மார்க்கத்தையும் நமக்குப் புகட்டியது நமது அனுபவத்திலுள்ள நூல்களின் ஆசிரியர்களே என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இவற்றையும் இம் முறையில் பழகி முதிர்ச்சியடைந்து பிராசை வாய்த்தபின் அறியவேண்டிய முப்பொருள்களையும் இவற்ருல் விளையும் பயனையும் ஒரே நூலில் அவரவரும் விளக்கி யிருக்கும் விபரம் இப்போது தெளிவாய்த் தெரிந்ததா?

423. குழையுந் தோடும் அணிந்த திருக் காதனை

—சுந்தரமூர்த்தி நாயனர்.

காதன் தோடு குழை

முதல் என்பதைக் குறிப்பு 20—ல் 'முதல்வன்' எனத் தொல்காப்பியம் கூறுவதுபோல் காது எனும் முதலைக் 'காதன்' என உணர்த்துவ தறிக.

350-ல் செவி எனவும் 339—ல் காது எனவும் நன்னூலும் தொல்காப்பியமும் கூறும் ஆதியையும் 178-ல் இடையே தோடு எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதிற் காட்டி, "குழை எனும் அந்தத்தையும் தோடெனும் இடையையும் அணியும் ஆதியே காதன்" என்பதறிக.

முதலிடையைக் காது எனவும் தோடு எனவும் உணர்த்தும் நன்னூலும் தொல்காப்பியமும் இறுதியைக் குழை எனக் கூறு திருக்குமா? இவை நமது அனுபவத்தில் உள்ளவை அன்றெனத் தெரிந்ததா?

424. காதில் வெண்குழை தோடு கலந்து தோன்றும்

—திருநாவுக்கரசு நாயனர்.

காது தோடு குழை

மேற் காணும் காதன்—தோடு—குழை என்பவற்றையே இதிற் காட்டி, "முதலிடையிறுதியாகிய காது—தோடு—குழை எனும் மூன்றும் ஒரே தொடர்பாய்த் தோன்றும்" எனல். இதிற் காணும் காது என்பதையே மேற் காண்பதில் காதன் என உணர்த்துவது கண்டு தெளிக.

425. குழையுஞ் சுருள்தோடும்

—திருவாசகம். திருத்தெள். 18

சுருள் தோடு குழை

மேல் இரண்டிலும் காணும் தோடு குழை என்பவற்றை இதிற் காட்டி, குழை—தோடு எனும் இடையிறுதியின் முதலே சுருள்" எனல்

426. தோடுண்ட சுருளுந் தூங்கும் குழைகளும்

—கம்பர் ராமாயணம்

சுருள் தோடு குழை
தூங்கும்

425-ல் திருவாசகம் கூறும் சுருள்—தோடு—குழை என்பவற்றையே இதிற் காட்டி, 128-ல் ஆதியே தூங்கல் எனத் தொல்காப்பியம் கூறுவதையும் இதில் உணர்த்தி, "குழை—தோடு எனும் இடையிறுதியின் முதலே தூங்கும் சுருள்" என விளக்குவதறிக.

நிற்க, ஆதியை 127-ல் சுழுத்தி எனவும் 144-ல் இவ்வாதியைப் பிரான் இடையை நஞ்சு எனவும் கூறி 'சுழுத்தியாகிய ஆதிப் பிரானே நஞ்செனும் இடையை உண்டது' என உணர்த்துவதை இதில் தோடெனும் இடையை உண்ட சுருளெனும் ஆதியே தூங் கும் என விளக்கும் விபரமறிக. இவற்றால் 'நஞ்செனும் இடையே தோடு தூங்கும் சுருளே ஆதிப் பிரான்'' என்பது தெளிவாய்த் தெரிகிறதன்றோ? இவற்றின் நாமங்களை மாற்றிக் கூறுவது பற்றி இப்பெயர்களைக் கொண்டு விளக்கும் செய்திகளை மாற்றிக்கொள்ள லாகாது என்பதற்கோர் ஆதாரம் காட்டுகிறேன். தொல்காப்பியம் இடையெனக் கூறும் 'நோய், அளவு, பெரிது' என்பவற்றையும் முதலெனக் கூறும் 'தீ, தெரியான்' என்பவற்றையுமே காட்டி 366–ல் திருக்குறள் 'இடையாகிய நோயளவென்னும் பெரிதுண்ணி தீ எனும் தெரியான்' அதாவது 'பெரிதெனும் இடையை உண்பது முதலாகிய தீ எனும் தெரியானே' என உணர்த்துகிறது. இது போலவே 148–ல் நஞ்செனும் இடையை உண்ட முதலே மழை எனத் திருவாசகம் கூறுகிறது.

இவற்றால், இடையை முதலே உண்ணும் என்பதைத் திருமந் திரம் 'நஞ்சை உண்ட பிரான்' எனவும், திருவாசகம் 'நஞ்சை யுண்ட மழை' எனவும், திருக்குறள் 'பெரிதை உண்ட தெரியான்' எனவும் உணர்த்துவது போல் 426-ல் 'தோடுண்ட சுருள்' என ராமாயணம் விளக்கும் விபரம் காண்க.

ஒழுக்கமடைய உணர்த்தும் ஓர் கருத்தையே பிரபல நூல்கள் புகட்டுவதாய்த் தீர்மானித்து, அவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ள கொள்கையை நிலை நாட்ட வாதிட்டலைவது (ஒழுக்கம் அடைந் தோர்க் குதவும் மற்றோர் கருத்தை எல்லா நூல்களும் ஒன்றை யொன்று தழுவி விளக்குவதைக் காணும் வரை) ஓயாது எனத் தெரிந்தே அதைப் போக்க இந்த நூலை இயற்றினேன். இவ்விரு கருத்துக்களைப்பற்றிக் கைவல்லியம் எச்சரிப்பதுபோல் மற்ற நூல் கள் உணர்த்துவதையும் ஓர் சிறிது காட்டுகிறேன்.

427. பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம்

—ஔவை குறள்.

பல பிறவிகளில் அரனை வழிபடும் ஒருவனுக்குக் கிட்டுவது மோட்சமெனவும் கைலாச மெனவும் கற்றும் கேட்டு மிருக்கிறோம். அப்படியிருக்க, பல பிறவிகளில் அவனைத் தொழுதால் நல்

லறிவைப் பெறலாம்' என இதில் கூறும் காரணம் என்னவெனச் சிறிது கவனிப்போம்.

428. ஆசையற்ற இடம் அகப்பேய்
ஆசாரம் கண்டாயே

—அகப்பேய்ச் சித்தர்.

நீராடல், மடி உடுத்தல், சின்னங்கள் தரித்தல் முதலியவற்றை ஆலய வழிபாட்டிற்கு ஏற்ற ஆசாரமென்று கருதுகிறோம். அது போல் உயர்நிலையைப் பெறுதற்கு ஆசாரம் ஆசையற்ற நிலையென இதில் கூறுவதையே நல்லுணர்வென ஔவையார் 420—ல் உணர்த்துவது தெரிகிறதன்றோ ?

ஆலய வழிபாட்டால் சித்த சுத்தியும் சித்த சுத்தியால் நிராசையும், நிராசை யுடையோருக்கே இம் முப்பொருள்களில் நாட்டமும் வாய்க்கும் என்பது பற்றியே சித்த சுத்தி வாய்த்தற்கு ஏதுவான மார்க்கத்தையும் சித்த சுத்தியைப் பெற்றோர் அடையும் உயர் நிலைக்கான மார்க்கத்தையும் நம் முன்னோர் ஒன்றிலேயே அமைத்துக் காட்டும் அற்புதமறிக.

பக்தி, மெஸ்மரிசம், ஐந்தெழுத்து உருசெபித்தல், அப்பியாசங்களைச் செய்தல் முதலியவற்றால் ஏற்படும் மனோ சக்தியால் வாய்க்கும் சில அரிய காரியங்களைச் சிலர் செய்து காட்டுவதுண்டு அவையே மேல் நிலையை அடையப் போதுமெனத் தீர்மானிப்பதென்றால் நம் முன்னோர்கள் அனைவரும் இம்முப்பொருள்களை நமக்கு வெகு பாடுபட்டு உணர்த்த அவசியமில்லை என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவும். நிற்க, நமது அநுபவத்திலுள்ள சில நூல்களைக் காட்டி முத்திக்கு வழி இதுதானெனப் பலரை நம்பும்படி செய்து அவர்களிடம் உள்ள பொருள்களைப் பல விதத்தில் சூறையிடச் செய்துவிட்டு தன் வரையில் சுகம் அனுபவிக்கும் சிலரின் வலையில் சிக்கி துன்புறும் குடும்பங்கள் பல உண்டு. அத்தகைய வஞ்சகர் மக்களை ஏமாற்றுவது பிரபல நூல்களில் ஏதேனும் ஒன்றிரண்டைக் காட்டியே. அவர்கள் வஞ்சக வலையில் சிக்காதிருக்க இந்நூல் வேகு முக்கிய மென்பதறிக.

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய மிக முக்கியச் செய்தி ஒன்றுண்டு, அதைத் தெரிவிக்கிறேன். நான் பல பெரும் புலவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களில் ஓர் சிலர் 'தமிழை உயிரினும் மேலாய் மதித்து வளர்க்கவேண்டும் எனவும், கற்றது கைம்மண்ணளவு கல்லாதது மலை அளவு'

எனவும் பிறருக்குப் புகட்டுவதை மறந்து நேர் மாருக என்னிடம் நடந்துகொண்டனர். தானும் திருந்தி இகபர இன்பத்திற்குஏற்ற வாழ்க்கை நடத்த எல்லோருக்கும் வழிகாட்டவே புலவர் பட்டம் பெற்றிருப்பதை மறந்து இவர்கள் வார்த்தையாடுவது கண்டு வாட்டமுருமலும் அவர்களோடு வாதிட்டு வெற்றிபெறுதற்கு முயலாமலும் அவர்கள் கூறியதைச் சரியென்று ஏற்றுக்கொண்டே வந்தேன். அவர்களில் ஒருவர் என் நூலைப் பற்றி வார்த்தை யாடும்போது வெகு சாமர்த்தியமாக, பித்தால் நான் பிதற்றுவதாகப் பொருள்படப் பேசினர். அப்போதும் நான் புன்னகையுடன், எரிக்கவே ஏற்பட்டதென நெடுங்கால அனுபவத்திலுள்ள நிலக் கரியில் உயர்ந்த அத்தர், மிகத் தித்திப்புள்ள சாக்ரின் முதலியவற் றைக் கண்டுபிடித்த ஒருவன் இதைக் கூறுவாஞகில் இது பிதற்ற லெனப் பிறர் நினைப்பது குற்றமற்றதே. ஆனல், இவ்விவரத்தை எல்லோரும் அறிந்து ஏற்கும்போது எது பிதற்றலாகுமோ எல்லாம் இறைவன் செயல்' என்று கூறி வந்தவனுன்.

வீண் சச்சரவு ஒடுங்கி ஒற்றுமையாய் வாழ உதவு மெனும் பேரவா மிகுதியால் நான் எழுதிய இந்த நூலை அவமதிப் போரிடம் மேற்காணும் சம்பவங்களில் நான் பொறுமையாய் நடந்துகொண்டதுபோல் நடந்தாலே போதும், என் நூலே அவர்கள் மனத்தை நாளடைவில் மாற்றுவது நிச்சயம். நிற்க, உரைமுறை களின் கருத்தால் விளையும் நன்மைகள் இவையென நான்உணர்த்து வதைக் கவனியாமல் நான் எடுத்துக்காட்டும் கருத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்டு உரைமுறைகளின் கருத்தை அவமதித்தால் அதனல் விளையும் கேட்டிற்குக் காரணம் நாஞகும் என்பதை ஞாப கப்படுத்திக்கொண்டு, பிறர் நகைத்திகழ இடந்தராமல்நாம் ஒற்று மையாய் கடவுள் சிந்தனையோடு வாழ்க்கை நடத்தும் மார்க்கத்தைத் தேட அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் சந்தித்த மற்ரேர் பெரும் புலவர் எனக்கு நல்லதோர் உபதேசம் செய்தார், அது மிக்க அவசியமாகையால் இங்கெடுத்துக் காட்டுகிறேன். தெய்வம், தெய்வ வழிபாடு, வேதம் முதலியவற் றைக் கட்டியழுதே நம் நாடும் நாமும் பிறர் அவமதிக்கத்தக்க கேவல நிலையிலிருப்பதை ஆராய்ந்தறிந்து, இவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு மேல்நாட்டினரைப்போல் நாடும் மக்கள் வாழ்க்கையும் உயரும் மார்க்கத்தைக்கவனிப்பதே விவேகம் என்ருர்.

மேல் நாட்டினருக்குக் கடவுள் பக்தியும் வேதமும் இல்லை யென்று கூற முடியுமா? உயர்நிலைக்காகப் பாடுபடுவோருக்கு வேத

விதிப்படி நடக்கப் போதுமான ஏற்பாட்டைச் செய்து அவர்களை வேறுபடுத்திவிட்டு, மற்ருேருக்கு நாளிருமுறை அல்லது ஓர் முறை ஆலயங்களிலோ வீட்டிலோ பிரார்த்திக்கத் தக்கது இதுதானென வேத விதிப்படியே தீர்மானித்திருக்கின்றனர். இவ்விரு பிரிவின ரையும் கடவுள் பக்தியோடு ஒற்றுமையாய் வாழச் செய்வதும் அவ ரவர் காரியங்களைத் தளர்வின்றி ஊக்கத்தோடு நடத்தத் தூண்டு வதும் வேதமன்ருே? அவ்வாறே நமக்கும் 'இதுதான் வேதம்' என்று தெரிந்தால்தான் இவ்விரு பிரிவினரும் (ஒன்றில் மற்ருெரு வர் பிரவேசித்து வீணில் பிதற்றிக்கொண்டு வாழுளைக் கெடுக் காமல்) அவரவர் கடமைகளையே செய்துகொண்டு தெய்வச் சிந்தனையோடு ஒற்றுமையாய் மேல்நாட்டாரைப்போல வாழ முடியு மென்பது எனது இறுதித் தீர்மானம்.

இச்சிறந்த மார்க்கத்திற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே தலையிட்டு தத்தம் மதத்தைச் சீர்திருத்தியிருப்பதாக அனுபவத்தில் தெரிகிறதன்ருே? ஆகையால் இந்து மதத்திற்கு இன்றியமையாத இக்காரியங்களில் நமது சர்க்காரும் தலையிடல் நலம். தமிழ்க் கலையை ஆராயப் பல கல்லூரிகளில் வெகு புலவர்கள் இருப்பதாக நினைக்கலாம். மாணவர்களுக்குக் கற்பிக்கவும் அதற்கான ஆதா ரத்தை ஆராய்வதற்குமே இப்புலவர்களுக்கு நேரம் போருதென் றிருக்கும்போது இவர்களை மற்ற காரியங்களுக்கு எதிர்பார்க்க லாமா? ஆகையால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் மடத்து நிர்வாகம் நடை பெறுவதுபோல் ஓர் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஏற்பட்டு உள்ளத் தெளிவுடைய உத்தமத் தியாகிகள் சிலரால் ஏற்பட முயற்சி செய்தல் நலம். இதனுல் விளையும் நன்மைகளையும் இவ்வாறு இல்லாததால் இப்போதுள்ள கெடுதல்களையும் எழுதி முடியாது அவரவர் நாளடைவில் அறியலாம்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 30 | ளாறு | இறு |
| 5 | 2 | வகை | வரை |
| ,, | 21 | உகரமென | உகரமெனும் |
| 13 | 30 | எண் | என் |
| 44 | 3 | அவர் | அலர் |
| ,, | 5 | அவர் | அலர் |
| 52 | 26 | பிறத்தேன் | பிறத்தேனென் |
| 53 | 1 | தேனை | என்னெனும் தேனை |
| 54 | 6 | இதையே | இடையே |
| 55 | 11 | 141, 142-ல் | 140-ல் |
| 61 | 33 | நான் | நாண் |
| ,, | 2 | 1165 | திருமந்திரம் 1165 |
| 66 | 1 | அடக்கு | அடிக்கு |
| 72 | 12 | இறுதியே'' நிலை | இறுதியே நிலை'' |
| 79 | 8 | மணி மணி | அணி மணி |
| 86 | 30 | 331 | 231 |
| 100 | 14 | வெற்றி | வென்றி |
| 111 | 12 | 390-Iல் | 20-ல் |
| ,, | 13 | 227-ல் | 272-ல் |
| 113 | 33 | 302 | 287 |
| 115 | 4 | புகேழனும் | புகழெனும் |
| 130 | 25 | எனக்கு | எமக்கு |
| ,, | 29 | அவரெனும் | அலரெனும் |
| ,, | ,, | தமக் | எமக் |
| 131 | 1 | கைக் | கொள்கைக் |
| 137 | 2 | னென்லும் | னென்னும் |
| 140 | 24 | இவரையே | இலரையே |
| 155 | 10 | பயநில | பயனில |
| 158 | 13 | 351 | 337 |
| 160 | 31 | ஆதியாய் | ஆதியால் |
| 163 | 2 | துள்ள'' கடை | துள்ளகடை'' |
| 182 | 2 | என்ற | என்று |
| 188 | 17 | மூறுன் | மூன்று |
| 191 | 20 | இருளென் வெயிலில் | இருளென் கிளவி வெயி [லியல் |
| 210 | 9 | 420 | 427 |
| ,, | 30 | வேகு | வெகு |